
# யோக-வல்லீ



பதஞ்சலி யோக சூத்திரத்திற்கு
கிருஷ்ணமாசார்யரின் உரை

பதஞ்சலியின்

# யோக ஸூத்ரம்

## ஸமாதி பாதம்

யோகாசார்ய ஸ்ரீ தி. கிருஷ்ணமாசார்யருடைய
ஸம்ஸ்கிருத விளக்கவுரை

## யோக வல்லீ

**டாக்டர்: வே. வரதாசார்யர்**
இயற்றிய தொகுப்பு மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பு

**கிருஷ்ணமாச்சார்யா யோகமந்திரம்**
31, 4வது குறுக்குத் தெரு, ஆர்.கே. நகர், சென்னை - 600 028

Copyright © 1988

All rights reserved. No part of this book may be reproduced or utilized in any form or by any means, electronic or mechanical, including photocopying, or by any information storage and retrieval system, without permission in writing from the Krishnamacharya Yoga Mandiram.

First Edition : 1988

Reprinted : January 2016

ISBN 978-81-87847-45-8

*Translated into Tamil by*

Dr. V. Varadachari

*Printed at :*
Vignesha Printers
Chennai

*Published by :*

KRISHNAMACHARYA YOGA MANDIRAM
31, IV Cross Street, R.K. Nagar,
Chennai - 600 028. INDIA
www.kym.org

# Preface

It was some 25 years ago I received my first lessons on the Yogasutras of Patanjali from my father Sri T. Krishnamacharya. His elucidation done with great pain and patience hardy made sense to me then. I managed to go throug h the classes anyway,because being a Yoga teacher I felt compelled to learn them. And I dare not stop the classes out of respect for my father.

Soon I was requested by my Western students to explain the Yogasutras. Even thoug h I managed the classes with the help of my notes,I was caug ht making contradictory statements by the vigilant and sharp students. Besides I could not answer aft their questions.

I went back to my father for further studies. This went on for many years. Gradually I could see the cogency of the Yogasutras as well as the original ideas of my fader. I also noticed the difference between his interpretation and the known commentates such as Vyasa and Vachaspati. He often used to quote Yogi Nathamuni.

In 1984 I requested father to present his commentaries in Sanskrit. He was then past 90. Without hesitation he began his dictation on the sutras. He would close his eyes and dictate slowly in Sanskrit and we would take down. After each class we would read his dictation for his approval.

After 34 years and some 1000 sittings he completely dictated his commentary on the 195 sutras. When we planned to have it translated to English and Tamil, we did not know whom to approach. Here we were again blessed by the contact wish Dr. V. Varadachari. When he met our teacher, he was very much impressed by his scholarshi p and personality. When we suggested if he could edit the Sanskrit text and do the translation, he wondered if he was adequate to the task. Finally he agreed to try. We also requested him to write an introduction and prepare the appendix.

Because of the extent of the commentary, we deiced that we publish the work in parts. The first part covets the Samadhi pads. It is our hope that the readers will be able to appreciate the masterly text as well as the efforts and dedication of Dr. V. Varadachari in translating the same to Tamil and providing an introduction in Sanskrit (Bhoomika) and in Tamil.

Madras 18-6-1988

TKV DESIKACHAR
MANAGING TRUSTEE
KRISHNAMACHARYA YOGA MANDIRAM

Pathanjali Yoga Sutras

Samadhi Padam
Sanskrit Commentary
By
Yogacharya Sri T. Krishnamacharya

"YOGAVALLI"

Tamil Translation by Dr. V. Varadachari

# Acknowledgements

Our deep appreciation to the following for their invaluable contributions:

Dr. R. Krishnamurthy Sastrigal and S. Rajagopalan for overseeing the script for proof.

R. Prabhakar and Dr. Pattammal for writing the Sanskrit script.

S. Sridharan, J. Srinivasan and E.R. Ramaswamy Iyengar for their assistance.

P.V. Parthasarathy of Kumudam Printers for arranging to print the book.

And last but not the least Madame Rolande Bijjason from Belgium for her generosity.

# பொருளடக்கம்

1. முன்னுரை

டி. கே.வி. தேசிகாசார் 1

டாக்டர் ரா. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் 3

2. ஸ்ரீ தி. கிருஷ்ணமாசார்யருடைய வாழ்க்கை வரலாறு 5

3. பூமிகா (ஸம்ஸ்கிருதம்) 9

4. நாதமுனி (ஸம்ஸ்கிருதம்) 28

5. பதஞ்சலி யோக சூத்திரங்கள் (மூலம்) - சமாதி பாதம் (ஸம்ஸ்கிருதம்) 35

6. ஸூத்ர பாஷ்யம் 39

7. டிப்பணீ (ஸம்ஸ்கிருதம்) 96

8. குறிப்பு 104

9. நாதமுனி (தமிழ்) 115

10. டாக்டர் வே. வரதாசார்யருடைய வாழ்க்கைக் குறிப்பு 123

11. முகவுரை (பூமிகா) - தமிழ் 125

12. ஸூத்ர பாஷ்யம் (தமிழ் மொழிபெயர்ப்பு) 148

13. அடிக்குறிப்பு 222

# முன்னுரை

சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு என்னுடைய தகப்பனாரிடமிருந்து பதஞ்சலியின் ஸூத்திரங்களின் உட்கருத்தைக் கற்றுக்கொள்ள ஆரம்பித்தேன். மிகுந்த பிரயாசையுடனும், பொறுமையுடனும் மேற்கோள்களுடன் தெளிவுடன் அவர் விளக்கிய தன்மையை அச்சமயம் நான் புரிந்துகொள்ள இயலவில்லை. யோக ஆசிரியராக இருந்த காரணத்தால் அதைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற கட்டாய நிலையில் ஒருவாறு படித்துக்கொண்டிருந்தேன். தகப்பனாரிடம் கொண்டுள்ள மரியாதை காரணமாகவும் படிப்பதை நிறுத்தவும் எனக்குத் துணிவு வரவில்லை.

யோக ஸூத்திரங்களுக்கு விளக்கம் அளிக்கும்படி என்னுடைய மேற்கத்திய (அயல் நாட்டு) மாணவர்கள் வேண்டிக் கொண்டனர். என்னிடமிருந்த குறிப்புகளின் உதவி கொண்டு பாடங்களை நடத்தினாலும் புத்தி கூர்மையும், விழிப்புமுள்ள மாணவர்களிடம் நான் முரண்பட்ட கருத்துக்களைக் கூறி மாட்டிக்கொண்டதுண்டு. தவிரவும் அவர்களது எல்லா கேள்விகளுக்கும் விடை அளிக்க முடியவில்லை. மேற்கொண்டு படிப்பதற்கு என் தகப்பனாரிடமே சென்றேன். இப்படியே பல ஆண்டுகள் யோகஸூத்திரம் படிப்பதில் சென்றன. படிப்படியாக யோகஸூத்திரத்தின் உட்கருத்துக்களும், என் தகப்பனாரின் தனிப்பட்ட கருத்துக்களுடன் ஒத்துப்போவதைக் காண முடிந்தது. எல்லோருக்குமே தெரிந்த வியாசர் மற்றும் வாசஸ்பதி இயற்றிய விளக்கவுரைகளுக்கும் அவருடைய பொருள் விளக்கும் திறனுக்கும் மாறுபாடு கண்டேன். அவர் யோகி நாதமுனியை அடிக்கடி மேற்கோளாகக் காட்டுவார். 1984ஆம் ஆண்டு என் தகப்பனாரிடம் விளக்கவுரைகளை ஸம்ஸ்கிருதத்தில் ஆற்றுமாறு விருப்பம் தெரிவித்தேன். அவருக்கு அப்பொழுது வயது 90க்கு மேற்பட்டிருந்தது. எவ்விதத் தயக்கமும் இன்றி ஸூத்திரங்களுக்கு ஸம்ஸ்கிருதத்தில் விளக்கம் கொடுக்க ஆரம்பித்தார். அவர் கண்களை மூடிக்கொண்டு ஸம்ஸ்கிருதத்தில் நிதானமாகச் சொல்லும் பொழுது நாங்கள் அதை எழுதுவோம். வகுப்பு முடிந்தவுடன், அவருடைய ஒப்புதலுக்காகத் திரும்ப அவரிடம் படிப்போம்.

மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு சுமார் 1000 தடவைகளில் 195 ஸூத்திரங்களுடைய விளக்கவுரைகளை நிறைவுறச் செய்தார். அதை ஆங்கிலத்திலும், தமிழிலும் மொழிபெயர்க்கத் திட்டமிட்ட பொழுது யாரை அணுகுவது என்ற பிரச்சினை எழுந்தது. டாக்டர் வே. வரதாசார்யரின் தொடர்பு ஒரு சுமுகமான தீர்வுக்கு வழி வகுத்தது. எங்கள் ஆசிரியரை அவர் சந்தித்தபொழுது அவரது மேதா விலாசம் அவரைக் கவர்ந்தது. ஸம்ஸ்கிருத உரைகளைப் பதிப்பித்து, அதன் மொழிபெயர்ப்பையும் வெளியிட அணுகிய பொழுது இத்தகைய பொறுப்பை வகிக்கும் தன்மை தன்னிடம் உள்ளதா என வியந்தார். முடிவாக அம் முயற்சியில் ஈடுபடச் சம்மதித்தார். அவரையே இதற்கு ஒரு முகவுரையும் எழுதி, அனுபந்தமும் தயாரிக்கக் கேட்டுக் கொண்டோம்.

விளக்கவுரை விரிவாக உள்ள காரணத்தால் இதை பகுதிகளாகப் பிரித்து வெளியிடத் தீர்மானித்தோம். 'ஸமாதி பாதம்' என்பது முதற் பகுதி ஆகும்.

பேராசிரியர் வே. வரதாசார்யரின் ஆற்றல் திறன் மற்றும் அன்னார் மேற்கொண்ட பெருமுயற்சி, பிரயாசை காரணமாக வெளியிடப்படவிருக்கும் மிகச் சிறந்த புத்தகத்தைப் படிக்கும் வாசகர்கள் அதன் தரத்தை சரியாக மதிப்பிடுவார்கள் என்பது எங்கள் நம்பிக்கை.

பெருவாரியான நண்பர்களின் முயற்சியும், ஒத்துழைப்பும் இன்றி இப்பணி இந்நிலை எய்தி நிறைவு பெற்றிருக்காது. ஆயினும் குறிப்பாக மைலாப்பூர் ஸம்ஸ்கிருத கல்லூரியைச் சார்ந்த பிரம்மஸ்ரீ டாக்டர் ரா. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், சென்னை எதிராஜ் கல்லூரி ஸம்ஸ்கிருத பேராசிரியை ஸ்ரீமதி பட்டம்மாள், கிருஷ்ணமாசார்ய யோகமந்திரத்தைச் சார்ந்த ஸ்ரீ ஆர். பிரபாகர் மற்றும் ஸ்ரீ எஸ். ஸ்ரீதரன் அவர்களுக்கும், குமுதம் அச்சகப் பதிப்பாளர், ஸ்ரீ பி.வி. பார்த்தசாரதி அவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

டி.கே.வி. தேசிகாசார்
நிர்வாக டிரஸ்டி,
கிருஷ்ணமாசார்ய யோக மந்திரம்

## முன்னுரை

'''வல்லீயம் யோகவ்ருக்ஷஸ்ய ஸாரமாதாய யச்சதி''

*(யோக சாஸ்திரமாகிய மரத்தின் ஸாரங்களை வழங்கும் கொடி.)*

*சிறந்த யோகியாக விளங்கும் பூஜ்யஸ்ரீ தி. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமிகளுடன் நெருங்கி அவரது அமோகமான ஆசிகளைப் பெறும் பாக்கியம் எனக்கு 5 மாதங்களாகத்தான் ஏற்பட்டது. இவரைப் பார்த்ததும் 'ராமனைப் பார்க்காத அல்லது ராமனால் பார்க்கப்படாத மனிதன் பிறராலும் தன்னாலும்கூட நிந்திக்கப்படுகிறான்' என்ற ராமாயண ச்லோகம்தான் எனக்கு நினைவுக்கு வந்தது. கடவுளின் க்ருபையால் இந்த நிந்தனை விலகியதற்கு நான் மிகவும் பெருமிதமடைகிறேன். எம்பெருமானுடைய ப்ரதான குணமான 'ஸௌசீல்யம்' என்பதை முழுமையாக இவரிடம் என்னால் காண முடிகிறது. இத்தகைய மகானின் வாழ்நாள் முழுவதுமே உலக நன்மைக்காக அமைந்து வந்துள்ளது என்பது அன்னாரது நூற்றுக் கணக்கான யோகப் பயிற்சி பெற்ற சிஷ்யர்கள் மூலம் வெளியாகிறது. மனம், வாக்கு, காயம்—என்று கூறப்படும் த்ரிகரணங்களையும் மேம்படச் செய்யும் சிறந்த உபாயமான யோகாப்யாஸத்தை தற்காலத்திற்கு, தற்கால மனிதர்களின் தனிப்பட்ட தன்மைகளுக்கும், சூழ்நிலைகளுக்கும் ஏற்ப, தனது உள்நோக்கு (Insight) மூலம் கண்டுபிடிக்கப்பட்ட பல நூதனமான உபாயங்கள் மூலம் நன்கு கற்பித்துக் கற்பித்து, அதன் முழுமையான பழுத்த அனுபவங்களை வைத்து பாமரருக்கும் புரியும்படியாக எழுதப்பட்ட நூல்தான்* **''யோகவல்லீ'' என்ற இப்பெரும் பொக்கிஷம்.**

*ஸ்ரீபதஞ்சலி மகரிஷியின் யோக ஸூத்ரத்திற்கு வேதவியாஸர் முதற்கொண்டு பல பல பெரியோர்களுடைய பாஷ்யம், வ்யாக்யானங்கள் ஸம்ஸ்கிருதத்தில் தோன்றி ப்ரஸித்தமாக இருக்கின்றன. ஆனால் ஸமுத்ரம் போன்ற அந்தப் பெரிய, விரிவான நூல்களில் மூழ்கி முத்துக்கள் போன்ற ஸாரமான கருத்துக்களை எடுத்து வழங்கிய பெருமை* **'யோகரஹஸ்யம்'** *என்ற நூலை இயற்றிய ஸ்ரீ நாதமுனி* **அவர்களையே** *சேரும். அத்தகைய ஸ்ரீ நாதமுனி அவர்களின் பரம்பரையிலேயே அவதரித்தவராக விளங்கும் நமது ஸ்வாமி தி. கிருஷ்ணமாசார்யர் அவர்கள், ஸ்ரீ நாதமுனிகளினால் முத்துக்குளித்து எடுக்கப்பட்ட முத்துக்களை (யோக ஸாரங்களை) தமது பழுத்த அனுபவம், சுமார் 75 வருடங்களின்*

யோக ஸாதனைகள், போதனைகளின் சிறப்பு என்கிற நூலில் கோர்த்து ஓர் அரிய, பெரிய முத்துமாலையை தயார் செய்து. அனைத்து ஜனங்களின் நன்மைக்காக வடிவமைத்ததுதான் யோகவல்லீ என்ற இந்த நூல் என்பதில் ஸந்தேகமில்லை.

இந்த நூலின் முதல் பாகம் இப்பொழுது அன்னாரது நூற்றாண்டு விழாவின் துவக்கத்தில் வெளியாவது நம் அனைவரின் பெரும் பாக்கியமாகும். இந்நூலின் Proof Correction செய்யும் பெரும் வாய்ப்பு எனக்கு அன்னாரது ஆசியால் ஏற்பட்டதால் இந்நூலின் முழுப் பெருமை எனக்குத் தெரியவந்தது. பெரிய பெரிய மகரிஷிகளான வியாஸர் போன்றவர்களின் சிறந்த பாஷ்யங்களிலும் காண முடியாத சில அரிய விஷயங்கள் ஸ்ரீஸ்வாமிகளால் சுருக்கமாக கூறப்படும்போது இதன் விளக்கம் ஸ்ரீ நாதமுனியவர்களின் யோகரஹஸ்யத்தில் உள்ளது என்று ஆங்காங்கே காட்டப்பட்டிருக்கிறது யாவரின் உள்ளத்தையும் பரவசமடையச் செய்கிறது. சுருங்கக்கூறி விளங்க வைக்கும் ஆற்றல் இந்நூலாசிரியரின் தனிப்பட்ட கலையாக விளங்கு கிறது. இதற்கு முக்கியமாக காரணங்கள் இரண்டு. (1) அன்னாரது பல சாஸ்திரங்களிலும் (ந்யாய; வியாகரண, வேதாந்தங்கள்) தெளிவான அறிவாற்றலும் (2) பெரும்பா லும் யாருக்கும் கிடைக்காததான பற்பல ஆண்டுகளின் ஸ்வானுபவமும் ஆகும். இந்த தனது 100வது வயதிலும்கூட ப்ரதிதினம் வேத சாஸ்திரங்களையும், யோக ரஹஸ்யங்களை யும் அயராது போதிக்கும் ஆற்றலைப் பார்க்கும்போதும், அன்னாரது ஸம்ஸ்க்ருத மொழிக் கவிதை புனையும் திறமையைக் காணும்போதும் யோகப் பயிற்சியின் மூலம் நூற்றுக் கணக்கான ஆண்டுகள் ஆற்றலுடன் விளங்க முடியும் என்ற யோகப் பயனை நிரூபித்துக் காட்டி யோகசாஸ்திரத்தில் யாவருக்கும் திடமான நம்பிக்கையை ஏற்படுத்துகிறார். அன்னாரது பொன்னான இந்நூலை யாவரும் பெற்றுப் பயின்று குறைவற்ற, நோயற்ற பரிபூர்ண வாழ்வைப் பெற வேண்டும் என்றும், மாபெரும் பயனைத்தரும் இம் மகான் மேலும் பலபல ஆண்டுகள் நமக்கு ஆசிபுரிந்து கொண்டு வாழ வேண்டும் என்றும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

**டாக்டர். ஆர். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் M.A., Ph.D.**

''மீமாம்ஸா, வேதாந்த சிரோமணி, வேத பாஷ்ய ரத்னம்''

வேதாந்த ப்ரொபஸர், ஸம்ஸ்கிருத காலேஜ், மயிலாப்பூர், சென்னை-4

# ஸ்ரீ தி. கிருஷ்ணமாசார்யருடைய வாழ்க்கை வரலாறு

### சிறு குறிப்பு:

## பிறப்பும் குடும்ப விவரமும்:

வேதம், சாஸ்திரம், சம்பிரதாயம் ஆகியவற்றில் தேர்ந்து யோகத்தில் மிகச் சிறந்த நிபுணராக, மகானுக, மதிக்கப்பட்டு வாழ்ந்துவரும் ஸ்ரீ தி. கிருஷ்ணமாசார்யர் 1888-ஆம் ஆண்டு மைசூர் சமஸ்தானத்தைச் சார்ந்த முசுகுந்தே என்ற சிற்றூரில் பிறந்தார். அவர் கி.பி. 9-ஆம் நூற்றுண்டில் வசித்த யோகி நாதமுனி என்ற தென் இந்திய வைஷ்ணவ ஸ்வாமிகளின் வம்சத்தில் வந்தவர். அவருடைய தகப்பனுர் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ தாத்தாசார்யரிடம் பல மாணவர்கள் வேதமும், மத சம்பந்தமான நூல்களையும் குருகுல முறையில் கற்று வந்தனர். ஸ்ரீ கிருஷ்ணமாசார்யரும் முதலில் தம் தகப்பனுரிடம் கல்வி பயின்றுர்.

## சம்பிரதாயமான கல்வி:

ஸ்ரீ கிருஷ்ணமாசார்ய தனது 12-ஆம் வயதில் மைசூருக்குச் சென்று அங்குள்ள ஸம்ஸ்கிருத கல்லூரியில் ஸ்ரீ கிருஷ்ண பிரம்மதந்திர ஸ்வாமி என்பவரிடம் ஸம்ஸ்கிருத இலக்கணமும், தர்க்கமும் கற்றுக்கொண்டார். அதைத் தொடர்ந்து வாரணுசியில் வாமாசரண பட்டாசார்யர், கங்கநாத் ஜா உள்ளிட்ட பல பண்டிதர்களிடம் ஸம்ஸ்கிருதம் கற்றுக்கொண்டார்.

## பல்வேறு துறைகளில் புலமை:

அடுத்த 15 ஆண்டுகளில் அவர் இந்திய தத்துவத்தைச் சார்ந்த பல துறைகளில் பல கலாசாலைகளிலிருந்து பட்டங்கள் பெற்றுர். அவை வருமாறு:

1. சாங்க்ய யோக சிகாமணி
2. மீமாம்ஸா தீர்த்த
3. ந்யாயாசார்ய
4. வேதாந்த வாகீச
5. ந்யாய ரத்ன
6. வேதாந்த கேசரீ

## படிப்பு ஆர்வம் மேலிட இமாலயத்திலுள்ள திபெத்துக்குச் செல்லுதல்:

1917—ஆம் ஆண்டு மேற்கு திபெத்தில் உள்ள மானசரோவர் என்ற ஏரிக்கு அருகே யோகி ராம மோஹன பிரம்மச்சாரியை சந்தித்து அவருடைய சீடரானுர். குருவின் பாது காப்புக்குட்பட்டு வைத்திய சிகித்சை உள்ளிட்ட எல்லாவித மான யோகாப்யாசங்களேயும், உடம்பில் ஏற்படும் அனிச்சைச் செயல்களைக் கட்டுப்படுத்தும் திறன்களேயும் ஐயம் திரிபு அறக் கற்றுக்கொள்வதில் தன்னை ஈடுபடுத்தினுர். ஸம்ஸ்கிருதத்தில் மிகுந்த பாண்டித்யமும், பல பல்கலைக் கழகங்களில் பட்டமும் பெற்றுள்ள இந்தப் பேரறிஞர் திபெத்தில் ஏழு ஆண்டுகள் யோக சாஸ்திரத்தைப் பயின்றுர்.

## திருமணமும் அதன் பின்னரும்:

அவருடைய குருவின் கட்டளேப்படி 1924—ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டு வாழ்க்கை நடத்தினுர். யோகத்தை பிறர்க்கு கற்றுத்தர வேண்டும் என்ற ஒரே தீர்மானத்துடன் விடாப்பிடியாக செயலாற்றினுர். அவருக்கு ஸம்ஸ்கிருதத்தில் இருந்த புலமையையும், அடைந்த பல்வேறு பட்டங்களேயும் கருத்திற் கொண்டு அவரைக் கௌரவிக்கும் வகையில் பல்வேறு சர்வகலாசாலைகளிலிருந்து தத்தம் இடங்களில் தத்துவம் மற்றும் மதம் என்ற துறைகளுக்கு தலைமை தாங்கும்படி வந்த அழைப்புகளை ஏற்றுக்கொள்ளவில்லை. இதன் காரணமாக உற்றுர், உறவினர், நண்பர்கள் நேர்முகமாக இடித்துரைத்ததை யும் சகித்துக் கொண்டார். பிறகு அவர்களே இவருடைய யாராலும் எதிர்க்க ஒண்ணுத புலமையை வியந்து சீடர்கள் ஆயினர்.

## மைசூர் அரண்மனையில் யோக சாலை அமைத்தல்:

யோகத்தை அவர் பரப்பியபொழுது அவருடைய கீர்த்தியும் பரவிற்று. 1930—ஆம் ஆண்டு மைசூர் மஹாராஜா அவருடைய சீடரானுர். அவருடைய ஆலோசனையின் பேரில் அரண்மனையி லேயே ஒரு யோக சாலையை ஏற்படுத்தினுர். ஸ்ரீ கிருஷ்ணமாசார்யர் யோகம் கற்பிப்பதை 20 வருடங்களுக்குத் தொடர்ந்து நடத்தினுர். அவர் இந்தியாவில் எல்லாப் பாகங்களுக்கும் சென்று யோக வித்தையைப் பரப்பினுர். இதனுல் அக்காலத்தில் இருந்த மஹாராஜாக்களில் பலர் அவருடைய சீடர்கள் ஆயினர். அவர்கள் தம் மக்களேயும் இப் பழமையான யோகப் பயிற்சியில் ஈடுபாடு

கொள்ளும் வகையில் ஈடுபடுத்தினர். இதனுல் ஸ்ரீ கிருஷ்ணமாசார்யருக்கு மக்கள் மத்தியில் கீர்த்தி ஏற்பட்டது.

## மேற்கத்திய மேதைகளுடன் தொடர்பும், தன் தனித் திறமை விளக்கமும்:

மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகளும், மருத்துவர்களும் இந்திய யோகிகளின் சிறந்த சித்திகளைக் கண்டறிவதில் ஆர்வம் காட்டினர். அம்மாதிரி யோக சித்தர்களின் திறமைகளை தாங்களே நேரில் பரிசோதிக்க வேண்டும் என்ற நோக்குடன் பலர் இந்தியாவுக்கு வந்தனர். ஸ்ரீ கிருஷ்ணமாசார்யர் இம்மாதிரி முறையான விஞ்ஞான எழுச்சிகளுக்கு உண்மையை வெளிப்படுத்த தாமே விருப்பத்துடன் உட்படுத்திக் கொண்டார். கலிபோர்னியாவைச் சார்ந்த பேராசிரியர் வென்ஹர், பாரிஸைச் சார்ந்த டாக்டர் தெரெஸி பிராஸே இந்தியாவுக்கு வந்தனர். அவர்களுக்கு ஹிருதயத்தின் இயங்கும் மற்றும் மின் ஆற்றல்களை நம் விருப்பப்படி மாற்றிச் செயல்படுத்த முடியும் என ஸ்ரீ கிருஷ்ணமாச்சார்ய செய்து காட்டினுர். மற்றுமுள்ளோருக்கு இரண்டு நிமிஷங்களுக்கு மேல் நாடித் துடிப்பை நிறுத்திக் காட்டினுர்.

## யோகத்தைக் கொண்டு நோய் தீர்த்தல்:

யோகாஸனங்களைச் செய்யும் பொழுது மூச்சு விடும் முறை, ஒவ்வொரு நபருக்கும் ஏற்ற வகையில் இந்த ஆஸனங்களை மாற்றம் செய்வது, உடல்–மனம்–சுவாசம் இவற்றிற்கு இடையே உள்ள நெருங்கிய தொடர்பின் சிறப்புகள், என்பவை ஸ்ரீ கிருஷ்ணமாசார்யரின் போதனைகளின் விசேஷ அம்சங்களாகும். யோகத்தின் உதவி கொண்டு பலவித நோய்களுக்கு சிகித்ஸை அளித்து. குணம் அடையச் செய்துள்ளார். இந் நோய்களுள் டயபெடிஸ், ஆஸ்துமா, பெராலிஸிஸ், தீராத தலைவலி, இன்ஸோம்னியா, பெண்களின் மலட்டுத் தன்மை, பலவிதமான முதுகு மற்றும் ஹிருதய நோய்கள் அடங்கும். மற்ற விதமான மருத்துவ முறைகளைக் கையாண்டு நோய் தீராத நிலையில், அவரை அழைத்து நோயாளியைப் பரிசோதிக்கச் செய்வதுண்டு. 80 வருடத்திய யோகப் பயிற்சியின் மூலம் ஸ்ரீ கிருஷ்ணமாசார்யர் ஆயிரக் கணக்கான மக்களுக்கு நன்மையடையச் செய்திருக்கின்றுர்.

### அவருடைய நூல்கள்:

அவர் இயற்றிய நூல்களில் கீழ்க்கண்டவை ஒருசில:

1. யோக மகரந்தம்
2. யோகாஸனங்கள்
3. யோகாஞ்சலி
4. சாஸ்திரீய யக்ஞம்
5. ஆன்ஹிக பாஸ்கரம்
6. ப்ரௌட விவாஹம்
7. விவாஹம்
8. மந்த்ர பதார்த்த தத்துவ நிர்ணயம்

### பல முக்கிய பிரமுகர்களுடன் தொடர்பு:

1952–ஆம் ஆண்டு பிரபல அரசியல் சட்ட வழக்கறிஞரான ஸ்ரீ அல்லாடி கிருஷ்ணஸ்வாமி என்பவர் தம்முடைய சில நோய்களைக் குணப்படுத்தும் பொருட்டு ஸ்ரீ. கிருஷ்ணமாசார்யரை தமிழ்நாட்டுக்கு வரவழைத்தார். அவரது சிகித்ஸை முறை மூலம் நோய்களிலிருந்தும் குணம் அடைந்தார். நன்மை விழையும் பலருள், முதல் இந்திய தலைமை நீதிபதி ஸ்ரீ பதஞ்சலி சாஸ்திரி, சமூக நலத் தொண்டில் ஈடுபாடு கொண்ட திருமதி அம்மு ஸ்வாமிநாதன் மற்றும் ஏனைய விசேஷ பிரமுகர்களின் வேண்டுகோளுக்கிணங்க தமிழ்நாட்டில் தங்கினர்.

### நூறுவது ஆண்டு நிறைவு விழா சென்னையில் கொண்டாட இருப்பது தமிழ்நாடு செய்த தவப் பயன்:

பதஞ்சலி யோக சூத்திரம், நாதமுனிகளின் யோக ரகஸ்யம் போன்ற யோக சாஸ்திரங்கள் கூறும் முறைப்படி பயின்றும், பயிற்றுவித்தும் வரும் பெரியவர் தற்போது நூறுவது ஆண்டு நிறைவு விழா கொண்டாடும் நிலையில் உள்ளார். இவருடைய பெயரில் ''கிருஷ்ணமாசார்ய யோக மந்திரம்'' என்ற பொது அறக்கொடை அமைப்பு நடைபெற்று வருகிறது. இங்கு ஸ்ரீ கிருஷ்ணமாசார்யர் போதித்த முறையைப் பின்பற்றி பிணி அகலவும், மற்றும் தேக ஆரோக்கியத்திற்கும், யோகப் பயிற்சியும், மற்றபடி இந்தியக் கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்ட படிப்புகளும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. தமிழ்நாடு செய்த தவப்பயனால் கடந்த 35 ஆண்டுகளாக, அபூர்வத்திலும் அபூர்வமான ஒரு யோகாசார்யருக்கு சென்னை இருப்பிடமாக அமைந்திருப்பது அந்நகரத்திற்கும், குறிப்பாகத் தமிழ் நாட்டிற்கும் பெருமை தருவதாக அமைந்துள்ளது.

# நாதமுனி

**நாதேந முனிநா தேந பவேயம் நாதவாநஹம் /**
**யஸ்ய நைகமிகம் தத்வம் ஹஸ்தாமலகதாம் கதம் //**

**யதிராஜ சப்ததி–5**

*வேதத்தின் மெய் இயல்புகளை தெளிந்த உள்நோக்குடன் அறிந்த நாதமுனியை என்னை ரக்ஷிப்பவராக அடைவேனாக.*

மூன்றாவது பிரம்மதந்த்ரஸ்வதந்த்ர ஸ்வாமியினுடைய குருபரம்பராபிரபாவம் என்ற நூலில் கையாளப்பட்டிருக்கும் வரலாறு இதற்கு ஆதாரமாகும். ஷடமர்ஷண கோத்ரத்தைச் சார்ந்த ஈஸ்வர முனி திருமலையில் வசித்தார். ஸ்ரீ ஸ்ரீநிவாஸப்பெருமாளிடத்தில் அளவில்லாத ஈடுபாடு உண்டு. ஒரு சமயம் வடக்கிலும், தெற்கிலுமுள்ள புனிதத் தலங்களுக்குச் செல்லவேண்டுமென்னும் அவா எழுந்தது. பல மேம்பட்ட பக்தர்களுடன் திருமலையை விட்டுப் புறப்பட்டார். யாத்திரை முடிந்தவுடன் தமிழ்நாட்டில் தென்ஆற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம், காட்டுமன்னார்கோவில் என்ற ஊரை இருப்பிடமாகக் கொண்டார்.

அவருக்கு கி.பி. 823ஆம் ஆண்டு ஆண் மகவு பிறந்து ரங்கநாதன் எனப் பெயரிடப்பட்டார். வேத விஹிதமான கர்மாக்கள் யாவும் அவருடைய தகப்பனாரால் செய்விக்கப் பட்டன. அவருக்குத் தரமான கல்வி போதனை அளிக்கப் பட்டது. அவருடைய தகப்பனாரால் யோகப் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டு அப்பயிற்சிகளை இறை வணக்கத்திற்கு உபயோகப்படுத்திக் கொண்டார். இதன் விளைவாக 'முனி' எனும் பட்டப் பெயர் பெற்றார். அவரை ரங்கநாதமுனி என்றும், அதன் சுருக்கத் தொடராக நாதமுனி என்றும் அழைத்தனர்.

அவர் அங்கு தங்கியிருந்த பொழுது காட்டுமன்னார் கோவிலில் உள்ள தெய்வத்தினை வணங்க, திருநெல்வேலி மாவட்டம், ஆழ்வார் திருநகரி என்ற ஊரிலிருந்து சில நபர்கள் வந்தனர். அவர்கள் 'ஆராவமுதே' என்ற

பதத்துடன் தொடங்கும் ஒரு பதிகத்தைப் பாடினார்கள். இந்தப் பதிகம் நாதமுனியை வசீகரித்த பொழுது அதைப் பற்றிக் கூறும்படி கேட்டுக் கொண்டார். அவர்கள், அப்பதிகம் நம்மாழ்வார் இயற்றிய ஆயிரம் பாட்டுக்களின் ஒரு பகுதி ஆகும் என்றனர். அவர்களும் கும்பகோணத்திலுள்ள ஓதுவார்கள் மூலம் அப்பதிகத்தை கற்றுக் கொண்டதாகவும், நம்மாழ்வார் இயற்றிய 1000 பாடல்களைக் கொண்ட திருவாய்மொழியின் மற்ற பதிகங்களைப் பற்றி அவர்களுக்கு தெரியாது என்றும் கூறினர். இதனை நன்கு அறிவதற்காக கும்பகோணம் சென்றார். அங்குள்ள இறைவனைப் பூஜித்து விட்டு அங்கு பதிகங்கள் ஓதுபவருடன் நம்மாழ்வார் இயற்றிய பதிகங்களைக் கற்றுத் தருமாறு கேட்டார். அங்கும் திருவாய்மொழி இல்லாதிருப்பதை அறிந்து அவர் ஆழ்வார் திருநகரி சென்றார். அங்கு தெய்வத்தையும் நம்மாழ்வாரை யும் பூஜித்துவிட்டு பராங்குச தாசர் என்பவரைச் சந்தித்தார். இப்பதிகம் (5.8) தவிர, அவர் பதிகங்கள் யாவும் காணமல் போய்விட்டதாகக் கூறினார். அவருடைய கட்டளைப்படி ''கண்ணி நுண் சிறுத்தாம்பு'' என்ற பதிகத்தை 12,000 தடவைகள் திரும்பத் திரும்ப ஜபித்தார். இப்பதிகம் நம்மாழ்வாரைத் தோத்திரம் செய்யும் வகையில் நம்மாழ்வாரின் சீடர் மதுரகவி ஆழ்வாரால் இயற்றப் பட்டது. இந்த ஜபத்தினால் அடைந்த மெய்மறந்த நிலையில் நாதமுனிக்கு நம்மாழ்வாரின் தர்சனம் ஏற்பட்டது. நாதமுனியின் விருப்பத்தின் பேரில் ஆழ்வார் அவருக்கு மறைபொருளான மந்திரங்களையும், திருவாய்மொழி உள்ளிட்ட ஆழ்வார்களின் நாலாயிர திவ்யப் பிரபந்தங்களை யும் மற்றும் பிரம்மசூத்திரங்களை வியாக்யானங்களுடன் கற்பித்தார். ஆழ்வாரின் தர்சனம் மறைந்த பின்பு நாதமுனி, ஆழ்வார் திருநகரியில் இருந்து கொண்டே தெய்வத்திற்கு ஆராதனைகளைச் செய்து கொண்டு ஆழ்வார் கற்றுக் கொடுத்தவைகளைச் சிந்தித்துத் தியானித்துக் கொண்டிருந்தார்.

அங்கு தங்கியிருந்த பொழுது, அவ்விடத்தைச் சார்ந்த குடிமக்கள், நம்மாழ்வாரின் விக்ரஹத்தை திருமங்கை

ஆழ்வார் திருவரங்கத்திற்கு எடுத்துச் சென்று அங்கு தனுர் மாதத்தில் (டிசம்பர் 15 முதல் ஜனவரி 15 வரை) 20 நாட்கள் வருடந்தோறும் அத்யயனத் திருவிழாவைக் கொண்டாடினர். திருமங்கை ஆழ்வார் இறையடி எய்திய பிறகு அத்திருவிழா தொடர்ந்து நடைபெறவில்லை. நம்மாழ்வாரின் விக்ரஹம் ஆழ்வார் திருநகரியிலேயே இருந்தது என்ற இம்மாதிரியான விவரங்களைக் கேட்டு அறிந்த நாதமுனி திருவரங்கத்தில் நம்மாழ்வாரின் விக்ரஹத்தைப் பிரதிஷ்டை செய்து அத்யயனத் திருவிழா நடத்த ஏற்பாடு செய்தார். இம்மாதிரியே கும்பகோணத்திலும் நம்மாழ்வாரைப் பிரதிஷ்டை செய்து அத்திருவிழாவை நடைபெறச் செய்தார்.

பிறகு, அவர் காட்டுமன்னார் கோவிலுக்குத் திரும்ப வந்து அவருடைய சீடர்களான கிருஷ்ணமாசார்யர் (மேலயகத்தாழ்வான்), வரதாசார்யர் (கீழயகத்தாழ்வான்) மற்றும் பலருக்கும் நாலாயிர திவ்யப் பிரபந்தங்களைக் கற்பித்து காலவரையறையுடன் கூடிய இசைப் பாணியில் ஓதும் வகையில் பயிற்சி அளித்தார். அவருடைய உத்தரவின்படி அவர்களுள் சிலர் திருவரங்கத் திற்குச் சென்று அங்கேயே தங்கி இறைவனுக்குச் சேவை செய்தனர். மற்றவர்கள் காட்டுமன்னார்கோவிலிலேயே தங்கினர்.

இந்தக் காலத்தில் கங்கைகொண்ட சோழபுரத்தில் சோழ அரசரின் முன்னிலையில் இரண்டு நாட்டியக் கலைப் பெண்கள் போட்டியில் கலந்து கொண்டனர். அவர்களுள் ஒருவள் தெய்வத் துதிப் பாடல்களில் சிறந்த தேர்ச்சி பெற்றவளாகவும், மற்றவள் உலகத்தைச் சேர்ந்த இசைக் கலையில் வல்லுநளாகவும் இருந்தனர். உலகத்தைச் சேர்ந்த இசைக் கலை வல்லுநப் பெண்ணை அரசர் மரியாதைக்குத் தகுந்தவளாகத் தேர்ந்தெடுத்தார். மற்றொரு நாட்டியப் பெண் அவள் சென்ற புண்ணியத் தலங்களுக்கெல்லாம் தெய்விக வழியில் இறைவனைப் பற்றிப் பாடிக் கொண்டு யாத்திரை சென்று காட்டுமன்னார்கோவிலுக்கு வந்தாள். அவளுடைய பக்திப் பாடல்களில் தம்மை ஈடுபடுத்தி அதன் திறனை வியந்து நாதமுனி அவளுடைய உயர்வான திறமைகளைப்

பாராட்டிப் பேசினர். அவள் கங்கைகொண்டசோழ புரத்திற்குச் சென்று சோழ அரசரிடம் இசையின் கலைப் பண்புத் திறன்களை நன்கறிந்த நாதமுனியின் பெருமையை தெரிவித்தாள். அரசருடைய அழைப்பின் பேரில் நாதமுனி, நாட்டியப் பெண் மூலமாக பக்திரஸப் பாடல்களின் மேலான தன்மையை எடுத்துக் காட்டினர். இதை அரசருக்கு மேலும் திருப்திபடுத்தும் வகையில் நாட்டியப் பெண்ணை அங்குள்ள ஒரு தூணில் இசைக் கால நிர்ணயங்களை அமைக்கச் சொன்னர். அவள் அம்மாதிரி செய்கையில் தூண் உருகியது. அதே இசைக் கால நிர்ணயங்களில் நாட்டியப் பெண்ணைப் பாடச் செய்து அத்தூணைப் பழைய நிலைக்கே கொண்டு வரும்படி செய்தார். பிறகு, அவர் அவளிடம் 400 பக்தி இசைக் கால நிர்ணயங்களை ஒரே சமயத்தில் உபயோகிக்கச் செய்தார். அப்பொழுது ஏற்பட்ட நாத ஒலிகளைக் கேட்டுக்கொண்டே நாதமுனி ஒவ்வொரு இசைக் கால நிர்ணயங்களுக்கும் உண்டான கால அளவைக் காட்டினர். நாதமுனியின் அற்புதமான திறமையைக் கண்டு திகைப்புற்று அரசர் தன் நிலைமறந்து பரவசமானர். அரசரது வெகுமதியை ஏற்க மறுத்து நாதமுனி காட்டுமன்னர்கோவிலுக்குத் திரும்பினர்.

நாதமுனிக்கு 8 சீடர்கள் உண்டு. புண்டரீகாக்ஷர், குருகைகாவலப்பன், நம்பி கருணகரதாசர், ஏறுதிருவுடையார், திருக்கண்ணமங்கையாண்டாள் வானமாதேவியாண்டான், உருப்பட்டூர் ஆச்சான்பிள்ளை, சோகத்தூராழ்வான். எல்லோருக்கும் வைணவக் கோட்பாடுகளும், மந்திரங்களும், ஆழ்வார்களின் 4000 திவ்யப் பிரபந்தங்களும் கற்பிக்கப்பட்டன. அவர் நியாய தத்துவம், யோக ரஹஸ்யம் என்ற நூல்களை இயற்றினர். முதற் குறிப்பிட்ட நூல் சுருக்கமாகவும், தெளிவாகவும் ஆதாரபூர்வமான முறையில் தத்துவங்களை வைணவ சம்பிரதாயத்திற்கேற்ப அமைக்கப் பட்டது. இந்தப் படைப்பு காணப்படவில்லை. எனினும் சிற்சில இடங்களில் வேதாந்த தேசிகர் இந்தப் படைப் பினையே கையாண்டுள்ளார். இப்படைப்பு வைணவத்தின் உட்பொருள் ஆய்வுக் கோட்பாட்டைச் சார்ந்ததாகும் எனக் கொள்ளலாம்.

யோகரஹஸ்யம் நமக்குக் கிடைக்கவில்லை. பிற்பட்ட எழுத்தாளர்களும் அவர்களது படைப்புகளில் இதிலுள்ள விஷயங்களைக் கையாளவுமில்லை மேலயகத் தாழ்வான் மற்றும் கீழையகத்தாழ்வான் என்ற நாதமுனியின் இரு உறவினர்கள் (உடன் பிறந்தார் மகன்) யோக ரஹஸ்யத்தை அவரிடமிருந்து கற்றுக்கொண்டு ஸ்ரீதர யோகபதி மற்றும் ஸ்ரீதர யோக கல்பதரு என்ற தங்களுடைய இரு நூல்களில் யோகம் எவ்வகையில் வைணவ சம்பிரதாயக் கோட்பாடுகளின் அடிப்படையில் 'உள்ளது என ஒத்திட்டுப் பார்த்தனர். இவ்விரு படைப்புக்களும் காணுமற் போயின. நாதமுனி, யோக ரஹஸ்யத்தைக் கற்பித்தார் எனவும் ஒருவேளை அதன் மூலம் யோகப் பயிற்சியை அவருடைய சீடரில் ஒருவரான குருகைகாவலப்பன் என்பாருக்கு கற்பித்திருக்கலாமென்று தோன்றுகிறது. பிறகு நாதமுனியின் பேரன், ஆளவந்தார் இந்த யோகியிடமிருந்து யோகத்தைப் பற்றி அறிந்துகொள்ள இம்மியளவு தவறிவிட்டார். யோக ரஹஸ்யத்தில் வரையறுத்துள்ளபடி யோகத்தை பாரம்பரியமாகத் தெரிந்துகொள்வது நல்ல முறையாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஈச்வரமுனி என்பார் நாதமுனியின் மகன். அவருக்கு கி.பி. 916–ஆம் ஆண்டு ஒரு மகன் பிறந்து யாமுனர் எனப் பெயரிடப்பட்டு பிற்காலத்தில் ஆளவந்தார் என்று கீர்த்திமானுக விளங்கினுர். நாதமுனி அப்பொழுது ஜீவித தசையில் இருந்த போதிலும், அவருடைய 8 வயதுடைய பேரனுக்கு வைணவ சமய கொள்கைகளில் ஈடுபடுத்த முன்வரவில்லை. தான் தன் மூத்த ஆசார்யர்களிடமிருந்து கற்றுக்கொண்டது போலவே தனக்கு உபதேச குருவினுடைய புத்திரன் மற்றும் அவனுடைய குடும்ப அங்கத்தினர்களுக்கும் கற்றுத்தர வேண்டுமென்பது கடமை என்று அவருக்குத் தோன்றியது.

கி.பி. 924–ஆம் ஆண்டு நாதமுனி காலைக் கடன்களை செய்துகொண்டு இருந்த போது சில மக்கள் அவரிடம் இரண்டு வேடர்கள், ஒரு வேடுவப் பெண், ஒரு குரங்கு அவர்கள் சென்ற வழியே சென்றதைப் பார்த்ததாகவும், அவர்கள் நாதமுனியைப் பற்றி விசாரித்து அவரை விரைவிலே பார்ப்பதற்கு விரும்புவதாகவும் தெரிவித்தனர். நாத

முனிக்கு, அவர்கள் ராமன், லக்ஷ்மணன், ஸீதை, ஹனுமான் என்று நிதர்சனமாக விளங்கியது. உடனே இந்த விஷயம் யாரிடமிருந்து வந்ததோ அவர்கள் காட்டிய திசையை நோக்கி ஓடினர். கடைசியாக யோகதிருஷ்டியில் அந்த தெய்வங்களைத் தர்சனம் செய்துவிட்டு கங்கைகொண்ட சோழபுரத்தில் இறை அடி எய்தினர்.

நாதமுனி வாழ்ந்த காலத்தைப் பற்றிக் கருத்து வேற்றுமை உள்ளது. குரு பரம்பரை என்ற விவரப்படி அவர் கலி அப்தம் 3685–ஆம் ஆண்டு சோபகிருது வருஷம், ஆனி மாதம், சுக்ல பக்ஷம், திரயோதசி, புதன் கிழமை, அனுஷ நக்ஷத்திரத்தில் அவதரித்தார். இது கி.பி. 584–ஆம் ஆண்டுக்கு நிகராகும். அவர் 340 ஆண்டுகள் வாழ்ந்தார். இங்ஙனம் ஒரு மனிதர் 340 ஆண்டுகள் வாழ்ந் தார் என்று ஒப்புக்கொள்வது நவீன காலத்திய அறிஞர்களின் புத்திக்கு ஒவ்வாதது. குரு பரம்பரை விவரங்களும் நிராகரிக்கப்படுவதோடு, ஆழ்வார்கள் பிறந்த தேதிகளும் ஏற்றுக்கொள்ளப் படாத நிலை வந்துவிடும். இந்த விவரப் பிரகாரம் ஆழ்வார்கள் துவாபர யுகக் கடைசியிலும், அவர்களுட் சிலர் கலியுகம் ஆரம்பமான பின்பும் பிறந்துள்ளனர். அவர்களது பிறந்த தேதி கி.மு. 6139 முதல் கி.மு. 2803 வரை ஆகும். நவீன அறிஞர் கள் கருத்துப்படி கி.பி. 719 முதல் கி.பி. 883 வரை வசித்தனர். இக் கருத்தினை வலியுறுத்த கீழ்க்கண்ட வாதங்களை அவர்கள் செய்கிறார்கள். அத்யயன விழா கொண்டாடப்பட வில்லை என நாதமுனியிடம் தெரிவித்த பொழுது திருமங்கை ஆழ்வார் (776–881) ஜீவித்திருக்கவில்லை. நம்மாழ்வார் கி.பி. 798 முதல் கி.பி. 833 வரை ஜீவித்திருந்தார்.மதுர கவி ஆழ்வார் கி.பி. 883–ஆம் ஆண்டு இறை அடி எய்தினர். நாலாயிர திவ்யப் பிரபந்தங்கள் கி.பி. 883 ஆம் ஆண்டுக்குப் பிறகு காணமற் போய் 9–ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கலாம். இதற்கு முன்பு இருக்கமுடியாது. ஏனென்றால் அத்யயனத் திருவிழா கி.பி. 881–ஆம் ஆண்டுக்குப் பிறகு சில ஆண்டுகள் நடைபெற வில்லை. இம்முடிவு குரு பரம்பரையில் கண்டுள்ள தேதிகளை வைத்துக் கணக்கிடும்பொழுது சரியாகத் தோன்றலாம்.

ஆனால் கீழ்க்கண்ட சாட்சியங்களை கருத்தில் கொள்ளும்போது மேற்கூறிய விஷயங்கள் உண்மையான நிலையைத் தெரிவிக்க வில்லை எனத் தெளிவாகத் தோன்றுகிறது.

காஞ்சீபுரத்திலுள்ள வைகுந்தப் பெருமாள் கோவிலுக்கு பரமேச்வர விண்ணகரம் எனப் பெயர். கி.பி. 660–680 இல் ஆண்ட பரமேச்வர வர்மன் என்ற பல்லவ அரசனால் கட்டப்பட்டதால் அதனை அப்பெயரால் அழைக்கப் படலாயிற்று. ஸ்தலசயனப் பெருமாள் கோவில் மஹாபலிபுரம் என வழங்கும் மாமல்லையில் உள்ளது. கி.பி. 630–665–இல் ஆண்ட முதலாவது நரசிம்மவர்மன் என்ற பல்லவ அரசனின் மனைவியாகிய மஹா மல்லா என்பவளின் பெயரால் மஹாபலிபுரம் என்னும் இடம் மாமல்லை என அழைக்கப்பட்டது. பொய்கை, பூதத்தார், பேயாழ்வார் என்பவர்கள் முதன் மூன்று ஆழ்வார்கள் ஆவர். அவர்கள் சித்தார்த்தி ஆண்டில் (கி.பி. 719). பிறந்தார்கள். அவர்கள் தாங் கள் அருளிய பாட்டுக்களில்–முதல் திருவந்தாதி 77, இரண்டாம் திருவந்தாதி 70 மற்றும் மூன்றும் திருவந்தாதி 61 & 62–விண்ணகரம், மாமல்லர் இவற்றைக் குறிப்பிட்டுள்ளனர். முதற் குறிப்பிட்டுள்ளது பரமேஸ்வர விண்ணகரத்தைக் குறிப்பதாகக் கொள்ள வேண்டும். இந்த ஆழ்வார்கள் கி.பி. 8–ஆம் நூற்றாண்டில் விண்ணகரம், மாமல்லை சிறப்புற்றிருந்த பொழுது வாழ்ந்தார்கள் என அறுதியிட்டுக்கூற முடிகிறது. நம்மாழ்வார் 9–ஆம் நூற்றாண்டில் சிறப்புற்று வாழ்ந்திருந்தார். கி.பி. 754–ஆம் ஆண்டில் வாழ்ந்த பல்லவ அரசன் தந்திவர்மன், வைரமேகன் எனச் சிறப்புப் பட்டம் பெற்றதைக் கடைசி ஆழ்வாரான திருமங்கை ஆழ்வார் குறிப்பிட்டுள்ளார். இக்குறிப்பு (2.8.10) பெரிய திருமொழியில் காணப்படுகிறது. ஆதலால் அவர் அவ்வரசர் காஞ்சியில் அஷ்டபுஜப் பெருமாளைத் துதிசெய்து வந்ததாக நிகழ்காலத்தில் குறிப்பிட் டுள்ளதால் தந்திவர்மனுடைய ஆட்சிக் காலத்தி லேயே அவர் வசித்திருக்கலாம். ஆழ்வார்கள் அந்தந்தக் காலத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கும் குறிப்பிட்ட தேதிகளுக்கும் முறைமைத் தகுதி

உள்ளதாக இருத்தலால் இதனை ஒத்துக்கொள்ளலாம். இந்த விவரங்களின்படி நாதமுனி கி.பி. 823 முதல் 101 ஆண்டுகள் வாழ்ந்தார் எனக் கொள்ள வேணுமே தவிர, கி.பி. 584 முதல் 340 ஆண்டுகள் வாழ்ந்தார் என்பதல்ல.

இதற்கு மாறாக நாதமுனி கி.பி. 584ல் பிறந்ததாகக் கொண்டால் அவர் கும்பகோணம் கோவிலுக்கு விஜயம் செய்து 'ஆராவமுதே' எனத் தொடங்கும் பதிகத்தைக் கற்றுக் கொண்டதை மறுக்க ஒருவித ஆதாரமுமில்லை. நாதமுனி பிறந்த (கி.பி. 584) ஆண்டு முதல் அதன் பிறகு 135 ஆண்டுகள் ஆழ்வார்கள் சிறப்புற்று இருந்தமையால், அவர் எப்படி ஆழ்வார்களைப்பற்றியும், அவர்கள் இயற்றிய பாசுரங்களை பற்றியும் அறியாதிருக்க முடியும் என்பது விளங்கவில்லை. ஆதலால் நாதமுனியின் பிறந்த தேதி கி.பி. 823–இல்தான் இருக்கவேண்டும்.

## டாக்டர் வே. வரதாசார்யரின் வாழ்க்கைக் குறிப்பு

வியாகரணம், வேதாந்தம் மற்றும் ஆகமத்தில் தலைசிறந்த பண்டிதரும், ஸம்ஸ்கிருத புலமைக்காக ஜனாதிபதி விருது பெற்றவருமான திருமலை நல்லான் சக்ரவர்த்தி வெங்கடாத்ரி அகரம் பண்டித கிருஷ்ணமாசார்யருடைய மூத்த மகனை 1914-ம் ஆண்டு, ஜூலை மாதம் 11-ம் தேதி வெங்கடாத்ரி அகரம் வரதாசார்யர் பிறந்தார். சென்னையிலுள்ள முத்தியாலு பேட்டை உயர்நிலைப் பள்ளி, பச்சையப்பன் கல்லூரி மற்றும் மாநிலக் கல்லூரியில் பயின்றார். 1936-ஆம் ஆண்டு சென்னை பல்கலைக்கழக பி.ஏ. (ஹானர்ஸ்) [பிறகு எம்.ஏ. என மாற்றப்பட்டது] பட்டப் படிப்பில் ஸம்ஸ்கிருத மொழியும் இலக்கியமும் என்ற பாடம் பயின்று முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றமை காரணமாக மூன்று தங்கப் பதக்கங்களைப் பரிசாகப் பெற்றார். அதே பல்கலைக் கழகத்தில் பிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய மொழிகளில் பட்டப் படிப்புத் தேர்வு எழுதித் தேர்ச்சி பெற்றார்.

மாநிலக் கல்லூரியில் மஹா மஹோபாத்யாய எஸ். குப்புஸ்வாமி சாஸ்திரி என்பாரின் மாணாக்கராக இருந்தார். தன்னுடைய தகப்பனாரிடமிருந்து வியாகரணம், நியாயம், வேதாந்தம் மற்றும் ஸாஹித்யமும் கற்றுக்கொண்டார். ''உதயனனது படைப்புகளின் கூறாய்வு'' என்ற தலைப்பில் சென்னை பல்கலைக் கழக ஸமஸகிருத துறையைச் சார்ந்த டாக்டர் சி. குன்ஹன் ராஜா என்பாரது போதனையின் கீழ் பணி மேற்கொண்டார். அவருக்கு 1958-ஆம் ஆண்டு இத் திறன் ஆய்வுக்காக டாக்டர் பட்டம் (பி.எச்.டி.) வழங்கப்பட்டது.

1940 முதல் 1959-ஆம் ஆண்டு வரை இலயோலா கல்லூரியில் ஸம்ஸ்கிருத விரிவுரையாளராகவும், 1959 முதல் 1974-ஆம் ஆண்டு வரை முதலில் ஸம்ஸ்கிருத விரிவுரையாளராகவும், பிறகு ஸம்ஸ்கிருத உயர் விரிவுரையாளராகவும் திருப்பதி, ஸ்ரீ வெங்கடேஸ்வர பல்கலைக் கழகத்தில் பணியாற்றினார். 1975 முதல்·1978 ஆம் ஆண்டு வரை பல்கலைக் கழக மான்யக் குழு உதவியுடன்

திருப்பதியில் வரதராஜர் இயற்றிய தார்கிகரக்ஷா என்ற நூல் சம்பந்தமாகப் பணிபுரிந்தார். 1979–ஆம் ஆண்டு முதல் பாண்டிச்சேரியிலுள்ள ''பிரெஞ்சு இன்ஸ்டிடியூட் ஆப் இண்டோலஜி''–ல் ஸம்ஸ்கிருதத்தில் உள்ள கையெழுத்துப் பிரதிகளின் விளக்கமான நூல்களின் பெயர்ப் பட்டியலைத் தயாரித்து வருகிறார்.

அவர் திருப்பதியில் இருந்த பொழுது, அங்குள்ள ஸம்ஸ்கிருத கேந்திரீய பீடத்தில் சிக்ஷாசாஸ்திரி படிக்கும் மாணவர்களுக்கு ஸம்ஸ்கிருதத்தை போதன மொழியாகக் கொண்டு இயற்பியல் கற்பித்தார். அவர் ஆங்கிலத்தில் எட்டு (8) புத்தகங்களும், இலக்கியம், மதம், ஆகமம் சார்ந்த இரண்டு (2) புத்தகங்களை ஸம்ஸ்கிருதத்திலும் இயற்றியுள்ளார். அவர் நூற்றுக்கும் மேற்பட்ட ஆராய்ச்சி ஏடுகளை ஆங்கிலம், ஸம்ஸ்கிருதம் மற்றும் தமிழ் மொழியில் எழுதியுள்ளார். அமெரிக்க ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த பேராசிரியர் கார்ல் பாட்டர் பதிப்பித்த தத்துவ கலைக் களஞ்சியத்தில் காணப்படும் நியாயக் கோட்பாடு (நியாயக் கொள்கை) பற்றி 100 திறனாய்வு சுருக்கக் கட்டுரைகளை வழங்கியுள்ளார்.

# முகவுரை

இவ்வுலகினில் வாழ்க்கை துன்பம் நிறைந்தது. இன்பத்தை அனுபவித்தாலும் அது எப்போதும் நிலைபெற்றிருப்பதில்லை. அது மட்டுமல்ல, துன்பத்தையே இறுதியில் கொண்டு வந்து விடுகிறது. துன்பமும் இன்பமும் ஒன்றுக்கொன்று பின்னியிருப்பதால் துன்பம் ஒன்றுதான் மிகுதியாய் நிற்கின்றது. இவ்விதம் துயர் ஏன் உண்டாகிறது? எப்படி இதனை அறவே நீக்குவது என்பதனை முனிவர்கள் ஆலோசித்து சில முடிவுகளைக் கண்டனர். பல பலவிடங்களில், வெவ்வேறு காலங்களில் இவைகள் அறியப்பட்டன. இவைகள் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு தர்சனம் என்ற பெயரைப் பெற்றன.

தர்சனங்கள் பல உள்ளன. ஆயினும் முக்கியமாக அவை சார்வாகம், ஜைனம், பௌத்தம், நியாயம், வைசேஷிகம், ஸாங்க்யம், யோகம், மீமாம்ஸை, வேதாந்தம் என்ற பெயர்களுடன் விளங்குகின்றன. இறைவன், மறு உலகம், வேதங்கள் பிரமாணங்கள் என்ற மூன்று கருத்துக்கள் நியாய, வேதாந்த தர்சனங்களால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. சார்வாகமதம் இவை மூன்றையும் ஒப்புக் கொள்ளவில்லை. பௌத்த மதமும் ஒப்புக் கொள்ளவில்லை. ஜைனதர்சனம் பரலோகத்தை மட்டும் ஏதோ ஒரு வகையில் ஒப்புக் கொண்டுள்ளது. வைசேஷிக மதம் மூன்றையும் வெளிப்படையாக ஒப்புக் கொள்ளவில்லை. சாங்க்யதர்சனத்தில் வேதங்களின் ப்ராமாண்யம் மாத்திரம் ஒப்புக் கொள்ளப் பட்டுள்ளது. மீமாம்ஸா தர்சனத்தில் வேதப்ராமாண்யம் ஒன்றுக்குத்தான் இடம் தரப்பட்டுள்ளது. யோகதர்சனத்தில் பர லோகத்திற்கு இடம் அளிக்கப்படவில்லை. ஆஸ்திக நாஸ்திக என்ற இரு சொற்களும் பரலோகம் உண்டு என்பவரையும், பரலோகம் இல்லை என்பவரையும் குறிக்கும் என்று பாணினி என்ற வியாகரண சாஸ்த்திரத்தின் மூலபுருஷர் கூறியுள்ளார்[1]. இக்குறிப்பை ஏற்றுக்கொண்டால் நாஸ்திக என்று கூறப்படும் ஜைனம் ஆஸ்திகம் ஆகிவிடும். ஆஸ்திகம் என்று கூறப்படும் ஸாங்க்யமும், யோகமும், மீமாம்ஸையும் நாஸ்திகமாகிவிடும். ஆகையால் பின்னர் இறைவனை ஒப்புக் கொள்ளுபவர் ஆஸ்திகர், ஒப்புக் கொள்ளாதவர் நாஸ்திகர் என்று இச் சொற்களுக்குப் பொருள்

கூறப்பட்டது. இதை ஏற்ருல், ஸாங்க்யமும் மீமாம்ஸையும் நாஸ்திகமாகிவிடும். ஆகையால் வேதங்களை பிரமாணங்களாக ஒப்புக்கொள்ளுபவர்கள் ஆஸ்திகர்கள். இதனை ஏற்றுக் கொள்ளாதவர்கள் நாஸ்திகர் என்று முடிவு எடுக்கப்பட்டது. இதனுல் சார்வாக ஜைன பௌத்த மதங்கள் நாஸ்திகம் என்ற பெயரை அடைந்தன. மற்றவை ஆஸ்திகம் என்று குறிப்பிடப் பட்டன. ஆயினும் ஸாங்க்ய வைசேஷிக மதங்களில் வேதங்கள் பிரமாணங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டன என்று வெளிப்படை யாகக் கூறப்படவில்லை.

நியாய ஸூத்திரங்களை கௌதமரும், வைசேஷிக ஸூத்திரங் களை கணுதரும், யோகத்திற்கு பதஞ்சலியும், மீமாம்ஸைக்கு ஜைமினியும், வேதாந்தத்திற்கு பாதராயணரும் ஸூத்திரங்களை இயற்றிஞர்கள். ஸாங்க்யத்திற்கு ஸூத்திரங்கள் இல்லை.

ஸாங்க்ய மதம் மிகவும் தொன்மையானது. இதனைப் பற்றிய குறிப்புக்கள் பழைய நூல்களில் கிடைக்கின்றன. முக்கியமாக ச்வேதாச்வதரம்[2], மகாபாரதம்[3], பகவத் கீதை[4], போன்ற நூல்களில் ஸாங்க்யமதத் தத்துவங்கள் விசாரிக்கப்பட்டுள்ளன. பாரத தர்சனங்களில் தத்துவங்கள் உயிருள்ளவை உயிரற்றவை என்று பிரித்துக் காண்பிக்கப்பட்டுள்ள முதன்மையான தர்சனம் ஸாங்கியம்தான்.

உயிரற்ற பொருள்கள் மூலப்ரக்ருதியும் அதனிடமிருந்து உண்டானவைகளும். உயிருள்ளது ஆத்மா. பல ஆத்மாக்கள் ஏற்கப்பட்டுள்ளன. பிரகிருதியினிடமிருந்து புத்தி, அஹங்காரம் மனதுடன் சேர்த்து பதிஞெரு இந்திரியங்கள், ஐந்து தன்மாத் திரைகள், ஐந்து பூதங்கள் ஆக 24 தத்துவங்கள். புருஷன் என்ற ஆத்மாவைச் சேர்த்து 25 தத்துவங்கள் உள்ளன. பத்து இந்திரியங்கள் மூலமாகவும் மனத்தின் மூலமாகவும் உண்டாகும் புறப்பொருள்களின் தோற்றங்கள் மனது அஹங்காரம் இவைகளால் அமைக்கப்பட்டு புத்தியில் பதிந்துவிடுகின்றன. புருஷன் என்ற ஆத்மா இவைகளைக் கண்டு இவை தன்னுடையதாகவே எண்ணி விடுகிருன். அதனுல் இன்பமயமா யும் துன்பமயமாயுமுள்ள இத்தோற்றங்கள் ஆத்மாவுக்கு இன்பம், துன்பம் போன்ற உணர்ச்சிகளை உண்டாக்குகின்றன. ஆகையால் ஆத்மா இவைகளை அனுபவிக்கிருன். உண்மையில் இவை உயிரற்ற பிரகிருதியைச் சேர்ந்தவையே. பிரகிருதியானது

ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களை உடையது. இங்கு குணம் என்ற சொல் உருவம், ரஸம், மணம் போன்ற குணங்களைக் குறிக்க மாட்டா. இவைகள் த்ரவ்யங்களே. பிரகிருதியானது இவைகளினின்றும் மாறுபட்டதல்ல. இக் குணங்களால்தான் இன்பம் முதலியவை உண்டாகின்றன என்று தெரிந்து கொண்டு, பிரகிருதி வேறு ஆத்மா வேறு என்று அறிய வேண்டும். இந்த அறிவு ஆத்மாவுக்கு அதன் நிலையையும், தன் நிலையையும் உணர்த்தும். இந்த விவேகஞானத்தை அடைந்த ஆத்மா பிரகிருதியின் பிடியிலிருந்து விலகிவிடுகிறான். தான் தனிப்பட்டவன் என்று உணரும் நிலைதான் மோக்ஷம்.

ஸாங்க்யதர்சனம் முதலில் இறைவனை தத்துவமாக ஏற்றுக் கொண்டு இருந்ததாகத் தெரிகின்றது. கபிலர் இம்மதத்தை முதன் முதலில் ஆஸுரி என்பவருக்கு உபதேசித்தார். ஆஸுரியிடமிருந்து பஞ்சசிகர் என்பவர் இதனை அறிந்தார். பிறகு விந்த்யவாஸி. வார்ஷகண்யர், ஜைகீஷவ்யர், தேவலர் என்பவர்கள் இதனைப் பரவச் செய்தார்கள் என்று அறியப்படுகின்றது. இவ்விவரங்கள் மகாபாரதத்தில்[5] கிடைக்கின்றன.

பின்னர் தோன்றிய ஈசுவரகிருஷ்ணர் (கி.பி. 200) என்பவரால் இயற்றப்பட்ட ஸாங்க்யகாரிகையில் இம்மதம் விவரமாகக் கூறப்பட்டுள்ளது. இவரால் இயற்றப்பட்டுள்ள 70 ச்லோகங்களுள்ள இந்த நூலில் கடைசியில் இந்த மதம் ஆஸுரிக்கு முனிவரால் (கபிலரால்) கூறப்பட்டது. ஆஸுரியும், இதனை பஞ்சசிகருக்குக் கூறினர். அவர் இந்நூலை விரிவாக எழுதியுள்ளார். சீடபரம்பரையில் இது ஈசுவரகிருஷ்ணருக்குக் கிடைத்தது. ஈசுவரகிருஷ்ணர் இதனை 70 ச்லோகங்களில் சுருக்கி வெளியிட்டார். ஷஷ்டிதந்திரம் என்ற முழு நூலின் கருத்தை சுருக்கி எழுதியுள்ளார். ஷஷ்டிதந்திரம் என்ற நூல் இப்போது கிடைக்கவில்லை. தந்த்ரம் என்ற சொல்லுக்கு விஷயம் என்று பொருள் கொள்ளலாம். இதிலடங்கிய விஷயங்கள் 60 என்றும் ஒவ்வொரு விஷயத்தின் பெயரையும் அஹிர்புத்ந்யஸம்ஹிதை[6] என்ற பாஞ்சராத்ர நூல் கூறுகின்றது.

ஸாங்க்ய ஸூத்திரம் என்ற நூல் கபிலர் இயற்றியதாகக் கிடைக்கின்றது. இது ஆறு அத்தியாயங்களில் 526 ஸூத்திரங்களைக் கொண்டது. கடவுள் இல்லை என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

அநிருத்தர் என்பவரும், பிரமதபூஷண் என்பவரும் இந்த ஸூத்திரங்களுக்கு உரை எழுதியுள்ளார்கள். விக்ஞானபிக்ஷு என்பவருடைய உரை மிகவும் பிரஸித்தி பெற்றது. ஸாங்க்ய காரிகைக்கு வாசஸ்பதிமிச்ரருடைய ஸாங்க்யதத்வகௌமுதீயும், மாடரர் என்பவரால் இயற்றப் பெற்ற மாடரவ்ருத்தியும் பிரஸித்தி பெற்றவை. ஸாங்க்யஸாரம் என்ற ஏழு அத்தியாயங்களைக் கொண்ட நூல் விக்ஞானபிக்ஷுவால் இயற்றப்பட்டது. 25 ஸூத்திரங்கள் கொண்ட தத்துவஸமாஸம் என்ற நூல் ஸாங்க்ய மதத் தத்துவங்களைச் சுருக்கமாக எழுதப்பட்டு பாவாகணேசர் என்பவருடைய உரையுடன் கூடியது. பாவாகணேசர் விக்ஞான பிக்ஷுவின் மாணவர்.

ஸாங்க்ய மதத்தில் புருஷன், மூலப்பிரகிருதி, (அதனிட மிருந்து தோன்றிய பொருள்கள்) இவைகட்கு உள்ள வித்தியாஸத்தை நன்கு அறிந்தால், புருஷனுக்கு பிரகிருதியிட மிருந்து ஸம்பந்தம் விடுபடும். பிரகிருதியில் உண்டாகும் உணர்ச்சிகளால் புருஷன் பாதிக்கப்படமாட்டான் என்று இம் மதம் கூறுகின்றது. இது எல்லோருக்கும் ஸாத்தியமா? பிரகிருதியிடமிருந்து தான் வேறுபட்டவன் என்று உணர்ந்த பிறகும் பிரகிருதியால் ஈர்க்கப்பட்டு புருஷன் துன்பத்தில் ஆழ்ந்து விடுகிறான். ஆகையால் இதை நன்கு அறிவதற்காக யோக மதம் தோன்றியது.

மகிழ்ச்சி, ஸுகம், நம்பிக்கை, சாந்தி, பொறுமை, அஹிம்ஸை போன்ற உணர்ச்சிகள் மூலம், மனிதன் மனத்தில் உயர்ந்ததாயும் துன்பமற்றதாயுமான மனநிலையை எய்துகிறான். இது ஸத்வகுணத்தின் பண்புகள். கொடூரம், பழி சொல்லுதல், கர்வம், குறுகிய மனப்பான்மை, கோபம், தாபம், வெறுப்பு, பொறுமை போன்றவைகள் ரஜோகுணத்தால் உண்டாகின்றன. மதி மயக்கம், சாப்பாட்டிலேயே நிறைவு காண்பது, சச்சரவுகளில் ஈடுபாடு இவை தமோகுணத்தால் உண்டாகும். ஆகவே குணங்கள் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்பவை இவைகளால் பிரகிருதியானது நிறைந்துள்ளது. அதாவது, இம் மூன்று குணங்களைத் தவிர்த்து பிரகிருதியென்பது இல்லை. மூன்று நான்கு பிரிகளால் பின்னப்பட்ட கயிற்றைப் போல இம் மூன்று குணங்களால் பிரகிருதி பின்னப்பட்டு உள்ளது. ஆகையால் உருவம், ரஸம், மணம் போல் இவை குணங்கள் அல்ல. திரவ்யத்தை அடைந்து அண்டியிருப்பது குணம். இவை

எதையும் ஆதாரமாகக் கொண்டவை அல்ல. ஆகையால் இவை திரவ்யங்களே. ஆயினும் புருஷனுக்கு அடிமைப்பட்டதாய் விளங்குவதால் இவைகட்கு குணம் என்று பெயர் வந்துள்ளது. குணம் என்ற சொல்லுக்கு முக்கியமானதல்ல, மற்றொன்றுக்கு வசப்பட்டது என்று பொருள்.

ஸாங்க்ய மதத்தில் கூறப்பட்டுள்ள 25 தத்துவங்களையும் யோகதர்சனம் ஒப்புக் கொண்டுள்ளது. ஸாங்க்ய மதத்தில் புத்தி என்னும் தத்துவம் மூலபிரகிருதியிலிருந்து உண்டானது. இந்திரியங்கள் மூலமாய் புறப் பொருள்களினின்றும் உண்டாகும் உணர்ச்சிகளுடன் கூடிய தோற்றங்கள் மனது, அஹங்காரம் இவை மூலம், புத்தியில் பதிந்து விடுகின்றன. மனது உடலில் உள்ளிருக்கும் இந்திரியம். இது புறப்பொருள்களினின்றும் உண்டாகும் உணர்ச்சிகளின் தன்மைகளை உறுதிப்படுத்து கின்றது. அஹங்காரம் என்பது புத்தியினின்றும் உண்டான தத்துவம். இது "இவ்வுணர்ச்சிகள் என்னிடம் உண்டாகியுள்ளன" என்பதைத் தெரிவிக்கின்றது. இவை இரண்டாலும் ஓர் நிலையை அடைந்துள்ள உணர்ச்சிகள் புத்தி தத்துவத்தில் பதிந்த பிறகு புத்தியால் இவைகளின் உண்மையான ஸ்வரூபம் நிச்சயிக்கப்படுகின்றது. யோகமதத்தில் இந்த மூன்று தத்துவங்களும் தனித்தனியாகப் பிரிக்கப்படாமல் சித்தம் என்ற ஒரே பெயரால் குறிக்கப்படுகின்றது. மூலபிரகிருதி யில் போல், பிரகிருதியின் கார்யங்களான சித்தம் இந்திரியங்கள் யாவற்றிலும் மூன்று குணங்களும் உள்ளன. ஆனால் சித்தத்தில் ஸத்வகுணம் மிகுந்து உள்ளது. ஸத்வ குணத்தின் ஸ்வரூபம் வெளிச்சம், பிரகாசம் இவைகளின் ஸ்வரூபத்தை ஒத்தது. பிரகாசமானது, மற்ற பொருட்களையும் தன்னையும் காண்பிக் கிறது. புத்தியில் பதியும் உணர்ச்சிகளுடன் கூடிய காண்பிக்கிறது. புத்தியில் பதியும் உணர்ச்சிகளுடன் கூடிய தோற்றங்களை அறிவதற்கு அவை பிரகாசமுள்ளவைகளாக இருக்கவேண்டும். இதற்கு சித்தத்தின் ஸத்வகுணம் மிகவும் உதவி செய்கிறது. ரஜோகுணம் உணர்ச்சிகளை எழச்செய்து கலவரத்தை உண்டு பண்ணும். ஆகையால் அதன் மூலமாக புத்தியில் உண்டாகும் எந்த உணர்ச்சியும் தென்படாது. தமோ குணம் தூக்கம், அறியாமை இவைகளுடன் கூடியது. ஆகையால் இதன் மூலம் உணர்ச்சிகள் எதையும் காண முடியாது. ஆகையால் சித்தம் ஸத்வ குணம் நிறைந்தது. ரஜோ குணமும்

தமோ குணமும் புத்தியில் உள்ளன. ஆனால் ஸத்வத்திற்கு அடங்கி சிறிதளவிலேயே உள்ளன.

பிரகிருதியினின்றும் உண்டாகும் பொருள்கள் பல வகையானவை. மூன்று குணங்களும் ஒன்றுக்கொன்று பின்னி இருப்பதால் எந்த குணமும் ஒரே ஸமமான நிலையில் இருக்காது. ஆகையால் ஒரேவகையான பொருள்கள் ஒரே விதமாகக் காணப்படமாட்டா. அது மட்டுமல்ல, ஒரே பொருளும் பல விதமாக சிறிது ஏற்றத்தாழ்வுடன் தோற்றமளிக்கும். இவ்விதம் புறப்பொருள்கள் பலவகைகளாக இருக்க, குறிப்பிட்ட உடலில் பொருந்தப்பட்டுள்ள இந்திரியங்களும் ஒரே மாதிரி இருக்கா. ஐந்து இந்திரியங்களும் ஒரே மாதிரி இயங்க மாட்டா. இவ்விதமே சித்தமும் ஒரே மாதிரியாக இருக்காது. ஸத்வ குணம் மேலோங்கி இருப்பினும் அங்கும் தாரதம்யம் உண்டு. மூன்று குணங்களும் எப்போதும் மாறி மாறிக் கொண்டே இருக்கும். இந்த மாறுபாட்டுக்கு வ்ருத்தி என்று பெயர். இந்த வ்ருத்தியானது இந்திரியங்கள் மூலம் உடலினின்றும் வெளியில் பரவி, வெளியிலுள்ள குறிப்பிட்டபொருளுடன் சேர்ந்து அப் பொருளின் உருவத்தை இந்திரியத்தின் வாயிலாக உள்ளே கொண்டு வருகிறது. அப்போது சித்தத்தில் அவ்வுருவம் பதிந்து விடுகிறது. புறப்பொருள் எவ்விதம் உள்ளதோ அவ்விதமே சித்தத்தில் அது பதிந்து விடுகிறது என்று எண்ண வேண்டா. இந்திரியத்தின் மாறுபாடுகளால், அப்பொருளின் உருவமும் மாறுபாட்டை அடைகிறது. புத்தியில் பதியும் உருவம், புறப்பொருளினின்றும் மாறுபட்டு பதிந்து கிடக்கும். புருஷன் என்ற சொல் ஆத்மாவைக் குறிக்கும். ஆத்மா ஸ்வயம் ஞானமயன். ஞானத்தை உடையதல்ல இது. ஸ்வயமாகவே பிரகாசிக்கின்றது. சித்தமும் பிரகாசிக்கிறது. ஆகையால் ஆத்மா தன்னைப் போன்ற சித்தத்தை காண்கின்றான். சித்தத்தில் உண்டான புறப் பொருட்களின் உருவத்தையும் காண்கிறான். தான் வேறு, ஒளிமயமாக இருப்பினும் சித்தம் தன்னை விட மாறுபட்டது என்று அறியமுடியாத நிலையில் இருக்கிறான். அப்போது மூன்று குணங்களின் தன்மையுடன் கூடிய புறப் பொருள் இன்பமாகவோ, வெறுப்புள்ளதாகவோ, மோக மயமாகவோ தோற்றமளிக்கிறது. இதனால் இவ்வுணர்ச்சிகள் மூன்று குணங்களின் சக்தியால் உண்டாகும் புறப்பொருளின்

நிலை பலவிதமாக ஸத்வகுணம் மேலோங்கிய சித்தத்தில் தோன்றுகிறது. இந்தத் தோற்றங்கள் தன்னுடையவை என்று அறியும் ஆத்மாவை பாதிக்கின்றன. ஆகையால் புருஷன் (ஆத்மா) துயரத்தை அடைகின்றான். இந்நிலை மாறி, புருஷன் தன்னுடைய நிலையை அடைய வேண்டும் என்று ஸாங்க்ய மதம் கூறுகின்றது. இது இயலாது என்று கருதி யோகதர்சனம் சித்தத்தின் மாறுதல்களை அடக்கினால்தான், புருஷன் சித்தத்தைப் பார்த்தாலும் அங்கு தன்னை பாதிக்கக் கூடியது ஒன்றும் இல்லை என்று அறிவான். இதுதான் யோகதர்சனத்தின் முக்கிய ப்ரயோஜனம்.

யோகம் என்ற சொல் யுஜிர் என்று தாதுவிலிருந்து உண்டாகியிருக்கிறது. ஸாங்க்யம் என்ற சொல்லுக்கு சர்ச்சை, எண், விசாரணை என்ற பொருள்கள் உண்டு[7]. தத்துவங்களின் எண்ணிக்கை 24 என்று கூறப்படுவதால் இதற்கு ஸாங்க்யம் என்ற பெயர் வந்துள்ளது. ஸாங்க்ய மதத்தில் விளக்கப்பட்டுள்ளதைப் போன்ற ஞானம் கிடையாது. யோகத்தில் கூறப்பட்டுள்ளதைப் போன்ற பலமும் இல்லை என்று மகாபாரதத்தில் வியாஸர் கூறுகின்றார்.

யோக ஸம்பிரதாயமானது மிகவும் தொன்மையானது. இந்த்ரியங்கள் குதிரைகள் போல் வேகமாக ஓடிக் கொண்டே யிருக்கும் என்று உபநிடதங்களில் கூறப்பட்டுள்ளது.[9] இரண்டாவது அத்தியாயத்தில் யோக ஸூத்திரம் 29ல் கூறப்பட்டுள்ள எட்டு யோகாங்கங்களில் யமம், நியமம், ஆஸனம், பிராணாயாமம், பிரத்யாஹாரம் இவை ஐந்தும் யோக ஸூத்திரங்கள் ஏற்படுவதற்கு முன்னரே பல பேர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டு அனுஷ்டிக்கப்பட்டு வந்துள்ளன. இவைகள் த்யானம் செய்வதற்கு அடிப்படையானவை என்று கருதப்பட்டன. இவைகள் அனுஷ்டிக்கப்பட்டால், சித்தத்தை அடக்கி விடலாம். வேதாந்ததர்சனத்தில் பலவிடங்களில் கூறப்பட்டுள்ள ஸாயுஜ்யம் என்ற மோக்ஷநிலைக்கும் இந்த அனுஷ்டானத்திற்கும் ஒருவிததொடர்பும் இருந்ததில்லை. ஆகையால் ஜைனம், பௌத்தம் போன்ற மதத்தினர்கள் யோகாப்யாஸத்திற்கு இவைகளை ஏற்றுக் கொண்டு கடைபிடித்தனர்.

ஸாதாரணமாக யோகம் நான்கு வகைப்படும். மந்த்ர, லய, ஹட, ராஜ என்ற பெயரில் இவை உள்ளன. த்வாதசாக்ஷரம், ந்ருஸிம்மமந்த்ரம், போன்ற மந்த்ரங்களை மந்த்ர யோகத்தை அனுஷ்டிப்பவர்கள் த்யானம் செய்தனர். கார்யத்தை காரணத்தில் மறையும்படி தியானம் செய்வது லய யோகம். அனேகமாக சைவ சமயத்தில் இந்த யோகம் கடைபிடிக்கப்பட்டிருந்தது. ஹடயோகம் என்பது மேற்கூறிய யம நியமாதிகளைக் கடைப்பிடித்து, உடலையும் மனதையும் நல்வழிக்குத் திருப்பி வசப்படுத்தவேண்டுமென்பதை வற்புறுத்துகிறது. இந்த யோகமானது ராஜயோகம் செய்வதற்கு மிகவும் பயன்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. இவைகளைப் பற்றிய குறிப்புக்கள் சில உபநிடதங்களிலும்[10], ஸ்வாத்மாராமயோகீந்த்ரரால் எழுதப்பட்ட ஹடயோகப்ரதீபிகையிலும், நரஹரி என்பவரால் இயற்றப்பெற்ற போதஸாரம் என்ற நூலிலும் நன்றாக விளக்கம் செய்யப் பட்டுள்ளன.

ராஜயோகம் என்பது பதஞ்சலி முனிவரால் இயற்றப்பட்ட யோக ஸூத்திரங்களில் கூறப்பட்டுள்ள யோகமுறைகளைக் குறிக்கின்றது. விஷ்ணுபுராணம்[12], பாகவதம்[13], பகவத்கீதை[14], அஹிர்புத்ந்யஸம்ஹிதை[15], ஸனத்குமாரஸம்ஹிதை[16] போன்ற நூல்களில் இம்முறை விளக்கம் பெற்றுள்ளது. இவைகளில் சிலவற்றில் தாரணை[17]வும், சிலவற்றில் ப்ராணாயாமமும் ப்ரத்யாஹாரமும்[18] முக்கியத்துவம் பெற்றுள்ளன.

கலியுகத்தில் ஞானம், பலம், வீர்யம், தன்மை இவை வெகுவாக குறைந்து கொண்டு வருவதால் சித்தத்தை அடக்குவது என்பது முடியாத காரியம். ஆகையால் பதஞ்சலி முனிவர், ஈச்வரனைத் த்யானம் செய்வதால்[19] சித்தத்தின் போக்கைத் தடுத்துவிடமுடியும் என்று கூறுகின்றார். பகவானைத் த்யானம் செய்வதும் எளிதல்ல. ஆகையால் வேறு ஆறு உபாயங்களைக் கூறுகிறார்.

யோக தர்சனத்திற்கு ஆதாரமான நூல் பதஞ்சலி முனிவர் இயற்றிய ''யோக ஸூத்திரம்''. பாரத தேசத்தில் தொன்று தொட்டு, இந்த ஸூத்திரங்களை இயற்றியவர் பதஞ்சலி முனிவர் என்றும் அவரே வியாகரண சாஸ்த்திரத்தில் பாணினி என்பவரால் இயற்றப்பட்ட அஷ்டாத்யாயீ என்ற நூலுக்கு

மகாபாஷ்யம் என்ற சிறந்த உரையையும்; சரகஸம்ஹிதை என்ற வைத்திய நூலையும் இயற்றினர் என்ற கொள்கை பரவியுள்ளது. யோக ஸூத்திரத்திற்கு உரையிட்டவர்களும், வியாகரணநூல்களை பின்னர் இயற்றியவர்களும், சக்ரபாணிதத்தர் என்ற சரக ஸம்ஹிதைக்கு உரையிட்டவரும் இக்கொள்கைக்குப் போதிய சான்றுகளைத் தங்கள் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். வெளி நாட்டில் உள்ள ஆராய்ச்சியாளர்களும் அவர்கள் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு தங்கள் கருத்துக்களை வெளிநாட்டவர்களின் கொள்கைகளுக்கு ஸாதகமாக வெளிப்படுத்துபவர்களும் பதஞ்சலி என்ற பெயருள்ள ஒரே ஆசிரியர் வெவ்வேறு விஷயங்களைப் பற்றிய மூன்று நூல்களை எழுதியிருக்கமுடியாது என்று வாதாடுகின்றனர். சரக ஸம்ஹிதைக்கும் பதஞ்சலிக்கும் ஒருவிதத் தொடர்பும் இல்லை என்றும் இம்மூன்று நூல்களை இயற்றியவர்கள் தனிப்பட்டவர்களே என்றும் கூறுகின்றனர். மேலும் ஒரே ஒருவர் மூன்று நூல்களுக்கும் ஆசிரியராக இருந்தால் ஒரு நூலில் மற்ற இரண்டு நூல்களின் பெயரையோ, அங்குள்ள கருத்துக்களையோ குறிப்பிட்டிருக்க வேண்டும். இதற்கு ஸாதகமாக குறிப்புக்கள் கிடைக்காததால் மூன்று நூல்களுக்கும் ஆசிரியர்கள் வேறானவர்களே என்று தங்கள் முடிவை உறுதிப்படுத்துகின்றனர்.

ஒரே ஆசிரியர், ஒரே விஷயத்தைப் பற்றியோ, இரண்டு மூன்று விஷயங்களுள் தொடர்பு இருந்தால் அவைகளில் ஒன்றினையோ, எல்லாவற்றையுமோ, தன்னால் இவ்விதம் எழுதப்பட்ட நூல்களில், ஒன்றைப் பற்றியோ, கருத்துக்களைப் பற்றியோ குறிப்பிடுவார் என்பது நமக்குத் தெரிந்த தெளிவு. உதாரணமாக வாசஸ்பதிமிச்ரர், உதயனர், வேதாந்த தேசிகர், அப்பய்ய தீக்ஷிதர் முதலானோர் தங்களுடைய சில நூல்களில் மட்டும் தங்களுடைய வேறு நூல்களின் பெயரையோ கருத்துக்களையோ குறிப்பிட்டு தந்துள்ளனர். இவ்விதம் குறிப்புக்கள் சிறிதுமில்லாமல் இவர்களால் இயற்றப்பட்டவை என்று ஏற்கப்படும் நூல்கள் இவர்களால் இயற்றப்படவேயில்லை என்று எந்த ஆதாரத்தைக் கொண்டு வாதிடலாம்? ஆகையால் மேலும் மேலும் ஆராய்ச்சி வளர வளர, புதிய சான்றுகள் கிடைப்பின் இம் மூன்று நூல்களும் ஒரே ஒருவரால் இயற்றப்பட்டனவா, வெவ்வேறு ஆசிரியர்களால் இயற்றப்

பட்டனவா என்று தீர்மானிக்க முடியும். அதுவரை பிரமாணமில்லாமல் வாதம் செய்யாமல் இருப்பது சிறந்தது.

யோக ஸூத்திரங்கள் 195. ஸமாதிபாதம் என்ற முதல் பகுதியில் 51 ஸூத்திரங்களும், ஸாதனபாதம் என்ற இரண்டில் 55 ஸூத்திரங்களும், விபூதிபாதம் என்ற மூன்றுவதில் 55 ஸூத்திரங்களும், கைவல்யபாதம் என்ற நான்காவதில் 34 ஸூத்திரங்களும் உள்ளன. சில பிரதிகளில் மூன்றுவது பாதத்தின் முடிவில் இதி என்ற சொல் காண்கின்றது. இது ஒரு காரணம். இரண்டாவதாக நான்காவது பாதத்தில் 34 ஸூத்திரங்களே உள்ளன. ஆகையால் யோக ஸூத்திரம் மூன்று பாதங்களையே கொண்டது. நான்காவது பாதம் பின்னர் சேர்க்கப்பட்டது என்று சிலர் கூறலாம். இந்த வாதம் ஸரியல்ல. இதி என்ற சொல் சில பிரதிகளில் உள்ளது. மற்றவைகளில் இல்லை என்பதால், இருப்பதைக் காரணமாகக் காட்டலாகாது. ஒரு பகுதியில் விளக்கம் செய்யப்படும் விஷயங்கள் முக்கியமா? ஸூத்திரங்களின் எண்ணிக்கை முக்கியமா என்பதைக்கவனிக்க வேண்டும். எண்ணிக்கை முக்கியமாயின் முதல் பாதத்தில் 51 ஸூத்திரங்களே உள்ளபடியால் இதனை பதஞ்சலி எழுதியிருக்க முடியாது. 2வது 3வது பாதங்களில் 55 ஸூத்திரங்கள் உள்ளபடியால் இவையே பதஞ்சலியால் எழுதப்பட்டவை என்று வாதிடலாம். ஆகையால் ஸூத்திரங்களின் எண்ணிக்கை ஒன்றுக்கே முக்கியத்துவம் கொடுக்கமுடியாது. நான்காவது பாதத்தில் விஷயங்களுக்கு விளக்கம் அதிகமாக அவசியமில்லை. ஆகையால் அவைகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது.

ந்யாயம், வைசேஷிகம் என்ற இரண்டு ஸூத்திரங்களும் தொடக்கத்திலேயே தத்துவ ஞானத்தால் மோக்ஷத்தைப் பெறலாம் என்று கூறுகின்றன. பூர்வமீமாம்ஸை, வேதாந்தம் இவ்விரண்டுஸூத்திரங்களிலும் ஆரம்பத்தில் தர்மம், பிரம்மம் இவைகளை அறிந்துகொள்ள விரும்ப வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இவ்விரண்டு வகைகளுக்கும் மாறுபட்டதாக யோகஸூத்திரத்தில் தொடக்கம் அத யோகானுசாஸனம்[20] என்று இருக்கிறது. முன்சொன்ன இருவகை நூல்களிலும் ஞானத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டுள்ளது. அதற்கு மாறுக யோகத்தைப் பற்றிய வழிகள் கூறப்படுகின்றன என்று ஆரம்பமாகிறது. ஏற்கனவே

பழக்கத்தில் வந்து கொண்டுள்ளவைகளைக் கூறுகின்றேன் என்று பொருள் இங்கு உள்ளது. இதனால் பதஞ்சலி முனிவர் தானாக எதையும் புதியதாகச் சொல்லவில்லை. இருப்பவைகளையே கூறுகின்றார் என்று கொள்ள வேண்டும். ஆகையால்தான் இந்நூலில் பிறமதக்கருத்துக்களைப் பற்றிப் பெயரோ, வாதமோ இல்லை. மீமாம்ஸை வேதாந்தம் என்ற ஸூத்திரங்களைப்போல் அத்யாயம் என்று பிரிக்கப்படா விட்டாலும், பாதம் என்ற பிரிவு இந்த ஸூத்திரங்கள் உள்ளன.

பிரம்ம ஸூத்திரத்தில்[21] யோக மதமானது கண்டிக்கப் பட்டுள்ளது. வேதங்கள் மூலமாக பிரம்மத்தை அறிய வேண்டும். இதற்கு மாறாக, பிரம்மத்தைத் தவிர மற்ற எதையும் உலகிற்குக் காரணமாக ஏற்றுக் கொள்ளலாகாது. யோகத்தை முதன் முதலாகப் பிரசாரம் செய்தவர் ஹிரண்யகர்பர். அவர் பிரம்மம் அல்ல. ஆகையால் யோகசாஸ்த்ரம் பிராமணமல்ல என்ற நோக்குடன் யோகமதம் கண்டிக்கப்பட்டுள்ளது. இதைப் பற்றிய விசாரத்தை இங்கு எடுத்துக் கொள்ள வேண்டா.

யோக ஸூத்திரத்திற்கு முதலில் எழுதப்பட்ட உரை பாஷ்யம். இது வியாஸரால் இயற்றப்பட்டது. வியாஸர் யார்? வேதவியாஸர் அல்லது வியாஸர் என்ற பெயருள்ள மற்றவர்களா?[22] இதை நிர்ணயிக்கப் போதுமான ஆதாரம் கிடைக்கவில்லை. இதற்கு விவரணம் என்ற பாஷ்யத்தின் உரை சங்கரால் எழுதப்பட்டுள்ளது. இவ்வுரையில் வியாஸரால் கூறப்பட்டுள்ளது என்று கூறி ஒரு ச்லோகம் ஆதாரமாக எடுக்கப்பட்டுள்ளது. வியாஸரே பாஷ்யத்தை எழுதியவர் என்றால் விவரணம் எழுதியவர் பாஷ்யம் செய்தவரால் கூறப்பட்டுள்ளது என்று எழுதியிருப்பார். ஆகையால் பாஷ்யம் எழுதியவர் வேத வியாசரைக் காட்டிலும் வேறுபட்டவர் என்று விளங்குகிறது. எந்த வியாஸரால் எழுதப்பட்டிருப்பினும், இந்த பாஷ்யத்தில் சில அம்சங்கள் உள்ளன: 1. ஸூத்திரம் எழுதியவர் யோகம் என்பது சித்தத்தின் மாறுதல்களை அடக்குவதாகும் என்று எழுதி யுள்ளார். பாஷ்யத்தில் யோகம் என்பது ஸமாதி என்று கூறப்பட்டுள்ளது. ஸமாதி என்பது யோகத்தின் எட்டு அங்கங்களில் கடைசியானது. ஸமாதி யோகாப்யாசத்திற்கு

ஸாதனமேயொழிய யோகமாகாது. 2. யோகம் ஸம்ப்ரஞாதம் அஸம்ப்ரஞாதம் என்று இரு வகைகளாகப் பிரித்து, பின்னர் ஸபீஜம், நிர்பீஜம் என்று ஸமாதியை இரு வகைகளாகப் பிரித்துள்ளார். பாஷ்யத்தில் இந்த வித்தியாசம் கவனிக்கப்படவில்லை. மேற்கூறிய பெயர்கள் ஒருவித நியமும் இல்லாமல் ஸமாதிக்கே உரியனவாக எழுதப்பட்டுள்ளன. 3. விசோகா வா ஜ்யோதிஷ்மதீ என்ற ஸூத்திரத்தை வியாஸர் இரண்டாகப் பிரித்து, விசோகாவ்ருத்தி என்றும் ஜ்யோதிஷ்மதீ என்றும் வெவ்வேறு காரணங்களாகக் காட்டியுள்ளார். 4. 43வது ஸூத்திரத்தை விவரணம் செய்யும்போது வியாஸர் பழைய நூலிலிருந்து ஒரு பகுதியை மேற்கோளாகக் காட்டுகிறார். இது எந்த நூலில் உள்ளது என்பதை அறிய முடியவில்லை.

வியாஸருடைய பாஷ்யத்திற்கு மூன்று உரைகள் உள்ளன. முதலாவது சங்கரரால் இயற்றப்பட்ட விவரணம். இரண்டாவது வாசஸ்பதிமிச்ரர் இயற்றிய தத்வவைசாரதீ. மூன்றுவது விக்ஞான பிக்ஷுவால் இயற்றப்பட்ட யோக வார்த்திகம்.

விவரணம் என்ற உரை சங்கரால் இயற்றப்பட்டது என்பதற்கு யாதொரு பிரமாணமும் கிடைக்கவில்லை. ந்யாய வைசேஷிக ஸாங்க்ய மீமாம்ஸா தர்சனங்களில் உள்ள எந்த நூலுக்கும் சங்கரர் உரை இயற்றவில்லை. பிரம்ம ஸூத்திரத்திற்கு சங்கரபகவத்பாதரால் இயற்றப்பட்ட பாஷ்யத்திற்கு வாசஸ்பதிமிச்ரர் பாமதீ என்ற உரையை எழுதியுள்ளார். விவரணம் என்னும் உரையை சங்கர பகவத்பாதர் எழுதியிருந்தால் வாசஸ்பதிமிச்ரர் இவ் விவரணத்திற்கு உரையை எழுதியிருப்பார். அதற்கு மாறுக வியாஸ பாஷ்யத்திற்கு உரை எழுதியிருக்க மாட்டார். மேலும், தத்வ சைவசாரதியில் சங்கரருடைய விவரணத்திலிருந்து சில வரிகளையாவது மேற்கோளாக எடுத்திருப்பார். ஆகையால் விவரணம் எழுதியவர் சங்கர பகவத் பாதராக இருக்க முடியாது.

வாசஸ்பதிமிச்ரர் ஈச்வரப்பரணிதானம் என்னும் ஸூத்திரத்தில் ஈச்வரனை உபாஸிப்பது மனத்தால் வாயால், உடலால் என்று மூன்று விதம் என்று கூறுகிறுர். 32 வது ஸூத்திரத்தில் ஏக தத்துவம் என்பது ஈச்வரனைக் குறிக்கும் என்கிறுர்.

தன்னுடைய யோக வார்த்திகத்தில் விக்ஞான பிக்ஷு நிரோதம் என்பதை வ்ருத்திகளின் லயம் என்று கூறுகிறார். இதற்கு முன் தெரியாததை அறிவிப்பது பிரமாணம் என்று பிரமாணத்திற்கு லக்ஷணத்தைக் குறித்திருப்பதால் மீமாம்ஸா தர்சனத்தின் லக்ஷணத்தை பின்பற்றியுள்ளார் என்று தெரிகிறது. அக்ஷரப்ரணிதானம் என்பது க்ரியாயோகத்தில்[23] கூறப்பட்ட ப்ரணிதானமல்ல. அஸம்ப்ரஞாத யோகத்தை அளிக்கக் கூடிய த்யானமென்று கூறுகிறார். 23 முதல் 27 வரை உள்ள ஸூத்திரங்களின் கருத்தை லிங்க புராணத்திலிருந்து $18\frac{1}{2}$ ச்லோகங்களை மேற்கோளாகக்காட்டியுள்ளார். 1.32ல உள்ள ஏகதத்துவம் என்ற சொல் ஏதேனும் ஒரு ஸ்தூலப் பொருளைக் குறிக்கும். ஈச்வரனைக் குறிக்காது. ஈச்வரனைக் குறிக்குமானால் ஸூத்திரகாரர் ஈச்வரன் என்ற சொல்லை உபயோகப்படுத்தியிருப்பார். ஸாதாரண மான ஏகதத்துவம் என்று கூறியிருக்கமாட்டார் என்று கூறி வாசஸ்பதிமிச்ரரின் பொருளைக் கண்டித்துள்ளார். 41வது ஸூத்திரத்தில் ஸமாபத்தி என்ற சொல்லை விளக்கும் போது பிற உரையாசிரியர்கள் தரும் அத்வைதத்தைச் சார்ந்த உரையைக் கண்டிக்கிறார்.

யோக ஸூத்திரத்திற்கு மேலும் 6 உரைகள் உள்ளன. அவைகளுள் முதலாவது போஜராஜன் எழுதிய ராஜமார்த் தாண்டம் என்பது. இதனில் ஒரே பதஞ்சலி முனிவர் யோகம் வியாகரணம் வைத்தியம் இம் மூன்றுசாஸ்திரங்களிலும் நூல்கள் இயற்றியதாகக் குறிப்பிடுகிறார். ஆறுவது ஸூத்திரத்தில் உள்ள ப்ரமாணம் என்ற சொல், ப்ரத்யக்ஷம், அனுமானம், சப்தம் என்ற மூன்று ப்ரமாணங்களும் சித்தத்தின் வ்ருத்திகளே என்று நிரூபித்துள்ளார். ஈச்வரப்ரணிதானம் என்ற ஸூத்திரத்தில் உள்ள ப்ரணிதானம்என்பது ஈச்வரனிடத்தில் நாம் செலுத்தும் பக்தியையும் நாம் செய்யும் செயல்களுக்கு பலனை எதிர்பாராமல் அவனிடத்தில் எல்லாவற்றையும் ஸமர்பிக்க வேண்டும் என்று பகவத் கீதையின் தத்துவத்தை எடுத்து உரைத்துள்ளார். குரு என்ற சொல் கற்பிப்பவர் என்ற பொருளைக் குறிக்கும். துயரங்களை நீக்குவதற்கு இவைகளின் எதிர் தட்டானவைகளை த்யானம் செய்ய வேண்டும் என்று சொல்லும்போது, கணித சாஸ்திரத்திலிருந்து சில மேற்கோள்

களைக் குறிப்பிடுகிறுர். 39 வது ஸூத்திரத்தில் தனக்கு விருப்பமுள்ளதை த்யானம் செய்யலாம் என்பதற்கு சந்திரனை புறப் பொருளாகவும் நாடீசக்கிரத்தை உட்பொருளாகவும் குறிப்பிட்டு இவைகளைத் த்யானம் செய்யலாம் என்று எழுதுகின்றுர். 42வது ஸூத்திரத்தில் உள்ள சப்த என்ற சொல் ஸ்போடம் என்ற பொருளைக் குறிக்கும் என்கிறுர்.

இரண்டாவது உரையாசிரியர் விக்ஞான பிக்ஷுவின் மாணவர் பாவாகணேசர். இவருடைய உரைக்கு யோகஸூத்திரதீபிகை என்று பெயர். 8வது ஸூத்திரத்தில் ஞானத்தில் ஏற்படும் தவறு ஸாங்க்யமதத்தில் பிரகிருதி புருஷன் இவர்களை பற்றிய விவேகமற்ற ஞானம் என்றும், யோகதர்சனத்தில் அந்ய தாக்யாதி[24] ஏற்கப்பட்டுள்ளது என்றும் கூறுகின்றுர். 15வது ஸூத்திரத்தில் வைராக்யம் முக்கியமானது முக்ய மல்லாதது என்று கூறி, முக்யமல்லாதது யதமான ஸம்ஞா, வ்யதிரேகஸம்ஞா, ஏகேந்த்ரிய ஸம்ஞா, வசீகார ஸம்ஞா என்று நான்கு வகைப்படும் என்று கூறப்பட்டுள்ளது. 17வது ஸூத்திரத்தில் ஸம்ப்ரஞாதம் என்பது யோகம் என்று குறிக்கின்றுர். குரு என்ற சொல் ஞானம் என்ற கண்ணைக் கொடுப்பவர் என்று குறிக்கின்றுர். ஈச்வரன் அந்தர்யாமியாக இருப்பதால் இது ஸாத்தியமாகிறது. ஸநகர், ஸநந்தனர் முதலியவர்களைத் த்யானம் செய்யவேண்டும் என்று 37வது ஸூத்திரத்தின் உரையில் குறிப்பிடுகிறுர். 39வது ஸூத்திரத்தில் உள்ள அபிமத என்ற சொல் விஷ்ணு அல்லது சிவன் இவர்களுடைய ப்ரதிமையைக் குறிக்கும் என்கிறுர்.

நாகேசபட்டர் என்ற வியாகரணத்தில் மிக்க புலமை வாய்ந்தவர் யோக ஸூத்திரங்களுக்கு வ்ருத்தி என்ற உரையை எழுதியுள்ளார். 45 வது ஸூத்திரத்தை விளக்கும்போது ஈச்வரன் உலகத்திற்கு உபாதான காரணமல்ல[25]. ஆனுல் படைக்கப்படும் உலகிற்கு ஆதாரமானவன் என்று கூறுகின்றுர். சில ஸூத்திரங்கள் அத்வைதமதஅடிப்படையில் விளக்கப் பட்டுள்ளன. 50 வது ஸூத்திரத்தில் ஜீவன்முக்தி கூறப்பட்டதாக எழுதுகின்றுர்.

ராமானந்த ஸரஸ்வதீ என்பவரால் மணிப்ரபா என்ற உரை இயற்றப்பட்டுள்ளது. பிரதமகல்பித, மதுபூமிக, பரக்ஞாஜ்யோதி,

அதிக்ராந்தபாவனீய என்ற நான்கு வித யோகிகள் உண்டு என்று குறிப்பிடுகிறார். ஈச்வரனுக்கு ஸத்வகுணம் ஒன்றே நிறைந்த சித்தம் உண்டு என்றும் இதனைக் கொண்டு ஈச்வரன் பிறருக்கு ஞானத்தை அளிக்கிறான் என்று எழுதுகிறார்.

அனந்ததேவர் என்பவரால் இயற்றப்பட்டது சந்த்ரிகை என்ற உரை. இது மிகவும் சுருக்கமானது.

ஸதாசிவ பிரம்மேந்திரஸரஸ்வதீ என்ற யோகாப்யாஸத்தில் ஸித்தி பெற்றவர் யோகசந்த்ரிகை என்ற உரையை எழுதியுள்ளார். பல ஸூத்திரங்களை அத்வைதமதநோக்கில் விளக்கியுள்ளார். ரிதம்பராப்ரக்ஞா என்பது தர்மமேகஸமாதி என்பதனைக் குறிக்கும் என்று குறிப்பிடுகிறார்.

க்ருஷ்ண வல்லபர் என்பவர் தன்னுடைய உரையில் பல ப்ரமாணங்களை வேதம், இதிகாசம், புராணங்கள் இவைகளிலிருந்து எடுத்துக்காட்டி யோக ஸித்திக்கும் ஈச்வரனுடைய அனுக்ரஹம் தேவை என்றும் ஈச்வரன் வாஸுதேவனே என்றும் குறிப்பிடுகிறார்.

மேலே கூறப்பட்டுள்ள உரைகளைத் தவிர, தனிப்பட்ட முறையில் யோக தர்சன தத்துவத்தை விளக்கும் நூல்கள் பல உள்ளன. அவைகளில் முக்கியமானவை: 1. நாத அகோரானந்தர் இயற்றிய யோககர்ணிகை. 18 அத்யாயங்களில் ஆஸனம் முதலிய அங்கங்களும் தத்துவங்களும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. 2. பகவான் நாராயணனால் பரத்வாஜருக்கு உபதேசிக்கப்பட்ட யோகதீபிகை. ஹம்ஸயோகி என்பவருடைய உரையுடன் கூடியது. இது சைவ சமயத்திற்கு உபயோகமான நூல். 3. யோகபாதம் மாத்திரம் உள்ள வாஸிஷ்டஸம்ஹிதை, யோக ஸூத்திரத்தின் விஷயங்களையும் ஹடயோகத்தின் விஷயங்களையும் வர்ணிக்கிறது. 4. விக்ஞான பிக்ஷுவின் யோகஸாரஸங்கிரகம், யோகம் அதற்கு ஸாதனம், ஸித்தி, கைவல்யம் இவற்றை இந்நூல் விளக்குகின்றது. 5. சிவானந்த ஸரஸ்வதியின் யோகசிந்தாமணியில் பிரத்யாஹாரம், தாரணை, ஹடயோகம், ஸித்தாந்தரஹஸ்யம் முதலிய விஷயங்கள் வர்ணிக்கப்பட்டுள்ளன.

அச்சிடப்படாமல் சுவடிகளிலேயே கிடைக்கும் நூல்களில் முக்கியமானவை: 1. யோகரஹஸ்யம், பரமேச்வர யோகீந்தரரால் இயற்றப்பட்டது. சைவ சமயத்தைச் சார்ந்தது. 2. யோக

ரஹஸ்யம்[27] —பிரம்மாண்ட புராணத்தில் உள்ள ஹஸ்தி கிரிமாகாத்ம்யத்தில் உள்ளது. வைஷ்ணவத்தைத் தழுவியது. 3. அஷ்டாங்க யோக நிரூபணம்[28] 4. அஷ்டாங்க யோக விவரணம்[29]. 5. பரமஹம்ஸ நாராயண தீர்த்தரால் இயற்றப்பட்ட யோக ஸூத்திரத்தின் உரை[30]

இந்த யோக ஸூத்திரப் பதிப்பில் முதல் அத்யாயம் மட்டும் உள்ளது. இதற்கு யோகிவர்யர் தி. கிருஷ்ணமாசார்யருடைய உரை உள்ளது. அது இத்துடன் பதிப்பிடப்பட்டுள்ளது. யோகிவர்யர் திருமலை கிருஷ்ணமாசாரியர் இப்போது சென்னையில் வஸிக்கிறார். மீமாம்ஸா, வியாகரணம் என்ற இரண்டு சாஸ்த்திரங்களிலும் நல்ல தேர்ச்சியைப் பெற்று வட நாட்டில் ராம்மோகன் பிரம்மசாரி என்பவரிடமிருந்து யோகாப்யாஸமுறைகளை நன்கு கற்று தேர்ச்சியடைந்துள்ளார். இப்போதும் யோகாப்யாஸத்தை தினந்தோறும் பயிலுகிறார். யோக சாஸ்த்திரத்தின் தன்மைகள் அனைத்தையும் நன்கு அறிந்துள்ளார்.

இவர் இயற்றியுள்ள யோக ஸூத்திரங்களின் உரை யோகவல்லீ என்பது. வியாஸர் இயற்றிய யோக பாஷ்யம், மற்றும் ஹடயோக நூல்களையும் நன்றாகக் கற்று யோகஞானத்தைப் பெற்றுள்ள இவர் யோக ஸூத்திரங்களுக்கு ஸம்பிரதாயத்திற்கு விரோதமில்லாமலும், ஒருவித முரண்பாடு இல்லாமலும், யோக சாஸ்த்ரத்திற்குத் தக்க முறையில் உரை எழுதி தன்னுடைய திறமையை நன்கு விளக்கியுள்ளார்.

இவ்வுரையில் பல அம்சங்கள் சிறப்புடன் விளங்குகின்றன. இவைகளில் முக்கியமானவை: முதலாவது ஈச்வரனைப் பற்றியது. ஈச்வரப்ரணிதானம் என்ற ஸூத்திரமானது, யோகாப்யாஸத்தால் மனதின் மாறுதல்களை அடக்க முடியாதவர்கள் ஈச்வரனைத் த்யானம் செய்யலாம் என்று பதஞ்சலியின் அபிப்பிராயம் என்று உரையாசிரியர்கள் கருதுகின்றனர். யோகவல்லீ ஆசிரியர் இதற்குத் தக்கதான மற்றொரு காரணத்தைக் கூறுகின்றார். கலியுகத்தில் மனிதர் களுக்கு எல்லா சக்திகளும் குறைந்து கொண்டே வருகின்றன. அவர்களால் யோகாப்யாஸம் செய்ய முடியாது. ஆகையால் ஈச்வரப்ரணிதானம் ஒன்றுதான் உபாயம் என்று கூறி, ''வா'' என்ற சொல்லுக்கு உறுதி என்ற பொருளைக் குறிப்பிடு கின்றார். இப்பொருள்தான் ஏற்றது என்பதற்கு மேற் கோளை[31] யும் காட்டுகிறார். ஈச்வர என்ற சொல்லுக்கு

எல்லோரையும் அடக்கியாளக் கூடிய சக்தியுள்ளவன் என்று பொருள். பலவித பிரமாணங்களைக் கொண்டு, ஈச்வரன் திருமகளோடு கூடிய நாராயணன்தான் என்று வைஷ்ணவர்கள் போல் யோகவல்லிகாரர் ஈச்வரன் என்ற சொல் இங்கு புருஷோத்தமனையே குறிக்கும் என்று புருஷஸூக்தம் பகவத்கீதை முதலிய நூல்களிலிருந்து மேற்கோள்களைக் காட்டியுள்ளார். 25வது ஸூத்திரத்தில் எல்லாவற்றையும் அறிந்திருப்பதற்கு விதைபோன்றவன் ஈச்வரன் என்று கூறப்பட்டுள்ளது. இதனுல் படைத்தல், காத்தல் முதலிய காரியங்களுக்கும் அவனே விதை போன்றவன் என்று உரையாசிரியர் கூறுகின்ருர். விதை போன்றவனேயொழிய விதையல்ல. விதையாயிருப்பின் அவன் உபாதானகாரணமேயாவான். யோகமதத்தில் பிரகிருதிதான் உபாதானகாரணம். ஆகையால் பீஜம் என்ற சொல்லுக்கு உலகத்திற்கு மூலமானவற்றை நன்கு அறிந்தவன் என்று பொருள் கொள்ள வேண்டும். 26வது ஸூத்திரத்தில் வாசக என்ற சொல் ஜனங்களுக்கு ஞானத்தைக் கொடுப்பவன் என்று பொருள் கூறப்பட்டுள்ளது. ஆனுல் இந்த ஸூத்திரத்தில் பிரணவமானது அவனைக் குறிப்பிடும் என்று கூறுகின்றது. ப்ரணவம் என்பது எல்லா ஒலிகளுக்கும் மூலமானது. ஆகையால் இது உச்சரிக்கப் படும்போது, ப்ரணவத்தை த்யானம் செய்பவர்கள் இவ்வொலியால் குறிக்கப்படும் எல்லா ஒலிகளையும் ஒலிமயமான எல்லா கல்விகளையும் அறிவார்கள். அவனைக் குறிப்பதென்ருல், அவன் மூலமாகத்தான் மற்றவைகளைக்குறிக்கும். ஆகையால் அவனே எல்லோருக்கும் (ப்ரணவத்தை த்யானம் செய்பவர் களுக்கு) ஞானத்தை அளிக்கிருன் என்று கூறப்பட்டுள்ளது.

ஈச்வரனைத் த்யானம் செய்வதால் வேருெரு பயனும் கிடைக்கும். சித்தத்தில் உண்டாகும் மாறுதல்களை தடுக்க முடியாதவாறு உண்டாகும் தடங்கல்கள் ஈச்வரத்யானத்தால் நீங்கிவிடும். இது எப்படி ஸாத்யமாகும் என்பது விளக்கப்படுகிறது. சித்தத்தில் உள்ள மலங்கள் நீங்கினுல் தான் பக்தி உண்டாகும். த்யானம் செய்வதற்கு உடல் நல்ல நிலையில் இருக்கவேண்டும். யோகாப்யாஸத்தால் இந்நிலை ஏற்படும். யோகாப்யாஸம் செய்வதற்கு யம நியம ஆஸன பிராணுயாமம் இவைகள் அனுஷ்டிக்கப்பட வேண்டும். திடமான உடலுடன் நல்வாழ்க்கை நடத்துவதற்கு பிரம்மசர்யமும் பாதிவ்ரத்யமும் அவசியம் தேவைப்படுகின்றன. இவை இரண்டும் ஸாதாரணமாக எல்லோரிடத்திலும் இருக்க வேண்டும்.

ஈச்வரனைத் த்யானம் செய்வதற்கு ப்ரதிமை அவசியம் வேண்டும். மண் அல்லது உலோகத்தால் இது செய்யப்பட வேண்டும். மண், உலோகம் இவ்விரண்டும் பிரகிருதியினின்றும் உண்டானவை. இவைகளால் செய்யப்பட்ட ப்ரதிமை பிரகிருதி ஸம்பந்தப்பட்டதாகி விடும்.அப்போது இப்பிரதிமையில் பிரதிஷ்டை செய்யப்பட்டு இருக்கும் ஈசுவரனுக்கு பிரக்ருதியின் ஸம்பந்தம் ஏற்பட்டுவிடாதா? இதற்கு வைஷ்ணவ ஸம்ப்ரதாயக் கருத்து ஒன்று உரையாசிரியரால் கையாளப்பட்டுள்ளது. ஈசுவரனுக்கு ஸ்தூலம், ஸூக்ஷ்மம் என்று இரு உருவங்கள் உண்டு. அவதாரங்களிலும் ப்ரதிமைகளிலும் உள்ள ஈச்வரனுடைய உருவம் ஸ்தூலம். அந்தர்யாமியாய் உள்ள ஈச்வரன் ஸூக்ஷ்ம உருவத்தையுடையவனாக இருக்கிறான். இவ்வுருவங்களை தன்னடி யார்களுக்கு அனுக்ரஹம் பண்ணுவதற்காகவே எடுத்துக் கொள்ளுகிறான். சுத்த ஸத்வமயமான அவனை எவ்வுருவமும் பாதிக்காது. பாதிக்காமலிருப்பதற்குக்காரணம் இவ்வுருவங்கள் சுத்த ஸத்துவத்தால் உண்டானவை[32]. இந்தப் பிரதிஷ்டையை பாஞ்சராத்ர முறைப்படி செய்யவேண்டுமென்று விவரமாக உரையாசிரியர் விளக்கியுள்ளார்.

மற்றொரு அம்சமாவது ஸ்ரீமந்நாதமுனிகள் அருளிச் செய்த யோகரஹஸ்யம் என்னும் நூலின் பெயரும் அதனின்றும் கிடைத்துள்ள யோக விஷயங்களும். இவைகளை இவ்வுரையாசிரியர் அடிக்கடி குறிப்பிடுகிறார். இங்கு ஓர் ஆக்ஷேபனை எழக்கூடும்— யோகரஹஸ்யம் என்ற நூல் வெகு காலமாகவே கிடைக்கவில்லை. எந்த ஆசிரியரும் அதனில் உள்ள விஷயங்களையோ, அதனின்றும் வாக்கியங்களையோ மேற்கோளாக இதுவரை எடுத்ததில்லை. யோகவல்லீகாரருக்கு இது கிடைத்ததா? அவரிடத்தில் உள்ளதா? மறைந்துவிட்டநூலிலிருந்து மேற்கோள் களாக வாக்கியங்களை இவர் எப்படி எடுத்துக்காட்ட முடியும்?.

இதற்குச் ஸமாதானம் கீழ்வருமாறு கூறப்படுகிறது. பதஞ்சலி முனிவர் யோகஸூத்திரம் 3வது பாதத்தில் யோகாப்யாஸத்தால் பெறக் கூடிய ஸித்திகளை விவரிக்கிறார். யோகாப்யாஸத்தால் இறந்தகாலம் வருங்காலம் இவ்விரண்டிலும் நடைபெறக் கூடியவைகளையும் பிறருடைய சித்தத்தையும் அறிய முடியும் என்று கூறப்பட்டுள்ளது[33]. யோகம் செய்யாதவர்களுக்கு இது முடியாதகாரியம் என்றும், இவ்விதம் செய்பவர்கள் பிறரை

ஏமாற்றுவதற்காகவோ, தன்னுடைய நிலையை உலகினில் உயர்த்திக்கொள்ளுவதற்கோ இவ்விதம் ஸித்தி பெற்றதாக பாவனை செய்கிறார்கள். உண்மையில் இது ஸாத்தியமல்ல என்று பகிரங்கமாகவே, தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கின்றனர். இவ்வாசிரியருக்கு யோக ஸித்தி உண்டு என்பதை ஒப்புக்கொண்டு, யோகரஹஸ்யத்தின் தத்துவத்தை அறிய வாய்ப்பு இவருக்குக் கிட்டியுள்ளது. ஆகையால் அந்நூலின் ஸாரம்சத்தை விளக்குகின்றார் என்று ஒப்புக்கொள்ள வேண்டும்.

யோகரஹஸ்யத்தின் ஸாராம்சத்தை எதற்காக எழுதினார் என்பதற்கு முக்கியமான காரணம் உள்ளது. நாதமுனிகள் யோகாப்யாஸம் செய்து நம்மாழ்வாரை நேரில் கண்டு அவரிடமிருந்து ஆழ்வார்கள் பாசுரங்கள் 4000ஐயும் கற்றார். விஷ்ணுவின் பெருமையை உணர்த்தும் இப்பாசுரங்களை இயற்றிய நம்மாழ்வார் முதலானோர் யோகம் செய்தவர்கள். பகவானை நேரில் கண்டு களித்தனர். நாதமுனிகள் இவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி யோகமுறைகளையும் யோக தத்துவங்களையும் விளக்கமாக யோகரஹஸ்யம் என்ற நூலில் அருளிச் செய்தார். விஷ்ணுவை பூஜிக்க வேண்டும். அவனையே யோகத்தால் காணவேண்டும் என்ற கொள்கையை இந்நூல் மூலம் பரவச் செய்தார் என்பதற்குச் சான்று உள்ளது. நாதமுனிகளுக்குக் கீழையகத்தாழ்வான் மேலையகத்தாழ்வான் என்று இரு மருமகன்கள் இருந்தனர். இவர்கட்கு நாதமுனிகளே குரு. குருவின் மூலம் யோக முறைகளைக் கற்ற இவ்விருவரும் ஸ்ரீதரயோகபதி, ஸ்ரீதர யோககல்பதரு என்ற பெயரில் யோகத்தைப் பற்றிய நூல்களை இயற்றினார்கள். ஸ்ரீதரயோக என்ற சொல் ஸ்ரீதரன் அதாவது நாராயணனைப் பற்றிய யோகத்தைக் குறிக்கின்றது. இந்த ஸ்ரீதரயோகம் நாதமுனிகளால் யோக ரஹஸ்யத்தில் விளக்கப்பட்டிருக்க வேண்டும் என்று ஊகிக்க இடம் உள்ளது. ஸ்ரீமந்நாதமுனிகளின் வம்சத்தில் தோன்றிய யோகவல்லீகாரருக்கு யோகாப்யாஸமுறைகளால் யோக ரஹஸ்யத்தை அருளிய நாதமுனிகளின் சித்தம் நன்கு விளங்கியிருக்கவேண்டும். நாதமுனிகளால் வகுக்கப்பட்ட யோக முறைகளும் இவருக்குப் பிரத்யக்ஷமாகத் தெரிந்து இருக்க வேண்டும். ஆகையால் இவருக்கு யோக ரஹஸ்யத்தின் ஸாராம்சமும் முறைகளும் தெரிந்தவையே என்று எடுத்துக் கொள்ளலாம்.

மூன்றுவதாக, யோகவல்லீகாரர் அஹம்க்ர ஹோபாஸனையைச்

செய்யவேண்டும் என்று குறிப்பிடுகிறுர். அஹம்க்ரஹோபாஸனு என்பதற்கு அஹம் = நான், க்ரஹ = அறிதல், உபாஸனு = உபாஸிப்பது என்று பொருள். நான் என்பதை விஷயமாகப் பெற்றுள்ள உபாஸனே என்று கொள்ள வேண்டும். நான் என்பது அஹங்காரத்தைக் குறிக்குமே. அதனே த்யானம் அல்லது உபாஸனே செய்தால், பிரகிருதியை உபாஸித்ததாக ஆகாதோ. இது எப்படி இங்கு யோகத்தில் பொருந்தும் என்ற கேள்விக்கு விடை இதுதான். அஹம் என்ற சொல்லுக்கு ஆத்மா என்று பொருள். ஆத்மாவுக்கும் அந்தர்யாமியாக உள்ள ஈச்வரனேயே இச்சொல் குறிக்கும். அஹம் என்ற சொல்லுக்கு ஆத்மா, ஈச்வரன் என்ற இரண்டு பொருள்கள் இருக்க, ஈச்வரனேத்தான் அது குறிக்கும் என்று எப்படி இதற்குப் பொருள் ஆகும்? என்றுல் அந்தர்யாமியான பரமாத்மாவை ஆத்மாவுடைய, அதாவது அவனுக்குச் சரீரமான ஜீவாத்மாவை த்யானம் செய்ய வேண்டும் என்று பொருள். ஏன் இவ்விதம் பொருள்பட அஹம் என்ற சொல்லுக்கு அர்த்தம் கூறவேண்டுமெனில், அஹம் என்ற சொல்லிற்கு ஜீவாத்மாதான் பொருள். பரபிரம்மத்தின் ஸங்கல்பத்தைக் குறிக்கும்போது, அஹம் என்ற சொல் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.[31] ஆகையால் அஹம் என்ற சொல் பிரம்மத்தையே குறிக்கும். தனக்கு ஆத்மாவான பிரம்மத்தைத்தான் அஹம்க்ரஹஉபாஸனே குறிக்கும்.*[1]

யோகவல்லீகாரர் ஸமாதிபாதமாகிய முதல் பாதத்தை இரண்டாகப் பிரித்து முதற் பிரிவில் 1–22 ஸூத்திரங்கள் இரண்டாவதில் 23–51 ஸூத்திரங்கள் உள்ளதாகக் காட்டியுள்ளார். முதல் பிரிவில் யோகத்தையும் இரண்டாவதில் ஸமாதியையும் விளக்கியுள்ளார். உரையாசிரியர் ஆரம்பத்திலேயே யோகாப்யாஸம் செய்து உடலே ஆரோக்கியமான நிலேயில் வைத்திருப்பவனுக்கு வேதாந்தத்தைக் கற்பது எளிது என்று கூறியுள்ளார். சித்தத்தின் மாறுதல்களே ஈச்வரனுடைய அனுக்ரஹம் மூலமாகத்தான் அடக்க முடியும். ஈச்வரனுடைய அனுக்ரஹமும் அவனே உபாஸிப்பதால் தான் கிடைக்கும். சித்த

*வேதாந்த நூல்களில் ப்ரம்மத்தை உபாஸிக்கச் சொல்லப்பட்டுள்ளது. இதுதான் நேரான முறை. விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தில் ஈச்வரனுக்கு அதாவது ப்ரம்மத்திற்கு உயிருள்ள ஆத்மாக்களும் உயிரற்ற பொருள்களும் உடல்கள், தான் யார் என்பதை அறிந்துகொண்டு, தனக்கு ஆத்மாவான பிரம்மத்தை த்யானம் செய் என்ற வேதாந்தக்கருத்துக்கு அஹம்க்ரஹ உபாஸனே மிகவும் ஒத்திருக்கிறது. இதற்கு ஆதாரம் பிரதர்தன வித்தையில் காட்டப்பட்டுள்ளது. ஜடாயுஸ், சரபங்கர், சபரீ, த்ருவன், ஸுதாமா போன்றவர்கள் அஹம்க்ரஹோபாஸனேயை அனுஷ்டித்ததாக உரையாசிரியர் கூறுகின்றுர்.

வ்ருத்திகள் க்லிஷ்டம் அக்லிஷ்டம்[35] என்று இரண்டு பிரிவுகளாக உள்ளன என்ற ஸூத்திரத்தை விளக்கும்போது, ஜீவன்கள் செய்யும் கர்மாவிற்குத் தக்கவாறு ஈச்வரனுடைய ஸங்கல்பம் மாறுகிறது. நற்காரியமோ கெட்டகாரியமோ செய்வதற்கு ஈச்வரன் உத்தரவு இடமாட்டான். ஆனால் அனுமதியைக் கொடுக்கிறான். வாத்ஸ்ய வரதாசார்யர் என்ற நடாதூர் அம்மாள் இவ்வர்த்தத்தை தத்துவஸாரம் என்ற தன்னுடைய நூலில் நன்கு விளக்குகிறார்[36] தனக்கு உடல் போன்று இருந்தாலும் தனக்கு ஆட்பட்டிருந்தாலும், ஜீவாத்மாக்களுக்கு ஈச்வரன் அவரவர்களுடைய ஞானத்திற்குத் தக்கவாறு செய்கைகளைச்செய்ய சுதந்திரம் கொடுத்துள்ளான். விவேகத்தை அடைந்திருப்பதால் ஜீவாத்மாக்கள் நல்லதோ அல்லது கெட்டதே , ஓர் காரியத்தைச் செய்யலாம். முதலில் ஈச்வரன் இதற்கு அனுமதி அளிக்கிறான். இதே காரியத்தை இரண்டாவது தரம் செய்யும்போது ஈச்வரன் இதனில் பிரவேசிக்காமல் உதாஸீனமாக இருக்கிறான். பிறகு நற்காரியங்களுக்கும் கெட்ட கார்யங்களுக்கும் தக்கவாறு அனுக்ரஹமோ நிக்ரஹமோ செய்கிறான்.

குணங்கள் மூன்றாக இருப்பினும், ஸத்வ குணம் மேலோங்கினால் தத்துவங்கள் தெளிவாகப் புலப்படும். யோக மதத்தில் பிரமாணங்கள் மூன்று என்று கூறப் பட்டுள்ளது. ஆயினும் சப்தம் அதாவது வேதம் ஒன்றுதான் முக்கிய பிரமாணம் என்று வேதாந்தமதரீதியில் விளக்கப்பட்டுள்ளது. 19வது ஸூத்திரத்தில் உள்ள விதேஹ என்ற சொல் ஆறு கோசங்களை உடைய உடலற்றவர்கள் என்று வர்ணிக்கப்பட்டுள்ளது. 39வது ஸூத்திரத்தில் உள்ள அபிமத என்ற சொல் விரும்பப்பட்ட பொருளைக் குறிக்கும். 32வது ஸூத்திரத்தில் உள்ள ஏகதத்துவ என்ற சொல் ஏதோ ஓர் தத்துவத்தைக் குறிக்கும். எக்காலத்திலும் எவ்விடத்திலும் சிறிதும் மாறுதலையடையாத பொருள் அல்லது தத்துவம் ஈச்வரனாகத்தான் இருக்க முடியும். அவன் ஒருவனே நம்மால் விரும்பத்தக்கவன். சீதளீ, சீத்காரீ போன்ற கும்பக வகைகளை[37] அனுஷ்டித்தால் உடலில் உள்ள ரோகங்கள் அனைத்தையும் போக்கிவிடமுடியும் என்று யோகவல்லீகாரர் கூறுகின்றார். யோகாப்யாஸம் செய்வதற்கு ஆரோக்யம் அவசியம். ஆரோக்யத்தை நிலைத்திருக்குமாறு செய்வதற்கு ஆஹாரநியமங்கள் தேவை.

35வது ஸூத்திரத்தில் சித்தத்தை அடக்குவதற்கு அனேக உபாயங்களில் ஏதோ ஒரு விஷயத்தைத் த்யானம் செய்யலாம் என்று கூறப்பட்டுள்ளது. இங்கு விஷயம் என்ற சொல் பிரகிருதியால் ஆன பொருளைத்தான் குறிக்கும் இவ்விதப் பொருளைத் த்யானம் செய்தால் எவ்விதம் சித்தத்தின் மாறுதல் அடக்கப்படும்? ஆகையால் தன்னுடைய குருவான ராம்மோகன் ப்ரம்மசாரியின் அபிப்பிராயப்படி இந்தச் ஸூத்திரம் விடத் தக்கது என்று யோகவல்லீகாரர் கூறுகின்றார். 36வது ஸூத்திரத்தில் ஜ்யோதிஷ்மதீ என்ற சொல் ஹ்ருதயத்தில் பிரகாசிக்கும் பகவானைக்குறிக்கும் மற்ற எந்த ஒளியுள்ள பொருளையும் குறிக்காது என்று காட்டப்பட்டுள்ளது. இந்த த்யானம் த்ராடகம் என்ற கும்பகத்தின் வகையால்[38] வெளிச்சமும் காற்றுமற்ற பிரதேசத்தில் செய்யப்பட வேண்டும் என்று உரையாசிரியர் குறிப்பிடுகின்றார். 37 வது ஸூத்திரத்தில் பற்றுதலற்ற சித்தத்தை த்யானம் செய்யவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மற்ற உரையாசிரியர்கள் இச்சொல்லுக்கு சுகர் போன்றவர்களின் சித்தம் என்று உரையிட்டுள்ளனர். யோகவல்லீகாரர் தரும் விளக்கம் மிகவும் ஏற்கக்கூடியதாக உள்ளது. யாத்திரையாக பல இடங்களுக்குச் சென்று திரும்பியவர் அங்கங்கு பற்றற்ற பெரியோர்களுடன் சேர்ந்து பழகி, பின்னர் அவர்களைப் பற்றி நினைத்து, அவர்களுடைய பரிசுத்தமாக்கப்பட்ட மனத்தை த்யானம் செய்யலாம் என்று கூறப்பட்டுள்ளது.

ஸ்வப்நம், நித்ரை போன்ற சொற்கள் கௌஷீதகிப்ராம்மண உபநிஷத், சாந்தோக்ய உபநிஷத் போன்ற நூல்களிலிருந்து மேற்கோள்களாக எடுத்துக் கொண்டு விவரிக்கப்பட்டுள்ளன. தூங்கும்போது, பிரம்மத்தில் லயித்து விடுகிறான் என்று ஆத்மாவுக்கு இந் நிலையில் அபீதி என்ற பெயர் உண்டு என்று காட்டப்பட்டுள்ளது. விகல்ப என்ற சொல் 6வது ஸூத்திரத்திலும் 42வது ஸூத்திரத்திலும் உள்ளன. 6வது ஸூத்திரத்தில் விகல்பம் என்பது பொருளற்றதாயும் சொற்களை மாத்திரம் ஆதாரமாகக் கொண்டதாயும் உள்ளதைக் குறிக்கும். 42வது ஸூத்திரத்தில் இச்சொல்லுக்கு பிரமாணத்துக்கு உட்பட்டது என்று பொருள்.

த்யானத்திற்கு விஷயங்கள் பிரகிருதியைச் சேர்ந்ததாயும் அல்லாமலும் இருக்கலாம். ஸ்தூலமான இவை ஸவிதர்க, ஸமாதியில் தெரிகின்றன. நிர்விதர்க நிர்விசாரஸமாதியில் இப் பொருள்கள் பிரகிருதிஸம்பந்தம் அற்றவையே.

பிம்பங்களைத் த்யானம் செய்வது நேராகவே பார்ப்பதற்கு சமானமான நினைவுதான். இது ஸ்திரமானது. மாறாது. இவ்வர்த்தம் பகவத்ராமானுஜருடைய ஸ்ரீபாஷ்யத்தில் விளக்கப் பட்டுள்ளது. இதனை ஏற்று யோகவல்லீகாரர் விளக்கம் தந்துள்ளார். இதை வர்ணிக்க த்யானம் செய்பவனாலும் முடியாததால் இந்த த்யானத்திற்கு நிர்விதர்கா என்ற பெயர் அளிக்கப்பட்டுள்ளது என்று இவ்வுரையாசிரியரின் கருத்து.

ரிதம்பரா ப்ரக்ஞா என்ற சொல்லை விளக்கும்போது உரையாசிரியர் ப்ரக்ஞா மூன்று விதம் என்றும், ஸாதாரண விஷயத்தைப் பற்றியது ரிதம்பரா, சாஸ்திர விஷயங்களைப் பற்றியது ச்ருதா, தர்க்க விஷயத்தைப் பற்றியது அனுமானம் என்றும் விளக்கியுள்ளார்.

ஈச்வரத்யான என்ற விஷயத்தில் யோகவல்லீகாரர் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தை அனுஸரித்து சில விவரங்களைக் கொடுத்துள்ளார். லக்ஷ்மியுடன் கூடிய நாராயணன்தான் ஈச்வரன். பரம், வ்யூஹம், விபவம், அர்ச்சை, அந்தர்யாமீ என்று ஐந்து விதமான உருவங்கள் ஈச்வரனுக்கு உண்டு. ஆயினும் த்யானம் செய்வதற்கு அர்ச்சைதான் ஏற்றது. இம்மூர்த்தி அப்பிராக்ருதமானது என்று ஏற்கனவே கூறப்பட்டுள்ளது.

சில உரையாசிரியர்கள் அத்வைதமதத்திற்கு ஏற்றவாறு யோக ஸூத்திரங்களுக்கு விளக்கம்தந்துள்ளனர்.நாகோஜி பட்டர், ஸதாசிவேந்திரர் போன்றவர்களுடைய உரைகளில் இப்போக்கைக் காணலாம். பதஞ்சலி ஓரிடத்திலும் உலகம் பொய்யானது, மாயை என்றும் கூறவில்லை. பதஞ்ஜலியின் மதம் பேதம்தான். யோகாப்யாஸம் அவசியம் என்ற கருத்து ஒன்றுதான் யோக ஸூத்திரங்களில் காண்கிறது. ஈச்வரனைத் த்யானம் செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. அவ்வீச்வரன் சிவன்தான் விஷ்ணுவல்ல என்று பதஞ்சலி கூறவில்லை. பிரம்ம ஸூத்திரங்களுக்கு விஷயம் ஸகுணபிரம்மமாகிய லக்ஷ்மீ நாராயணன்தான் என்று விசிஷ்டாத்வைதிகள் ஏற்றுக் கொள்ளுவதுபோல், இங்கும் அதனையே ஏற்றுக் கொள்ளுவதில் பாதகம் ஏதும் இல்லை.

## 1.1 அத யோகானுசாஸனம்:

[பிறகு யோகத்தைப் பற்றிய உபதேசம்]

'அத' என்பது மங்களம் என்ற பொருளைக் குறிக்கின்றது. இந்நூல் ஆரம்பிக்கப்படுகிறது என்பதையும் குறிக்கின்றது. நாமலிங்கானுசாஸனம் என்ற நூலில் ''மங்களம் அநந்தரம் ஆரம்பம், பிரச்னை, கார்த்ஸ்நயம் என்பவைகளில் (பொருள் களில்) அதோ, அத'' என்று கூறப்பட்டுள்ளது. இதனால் அநாதி காலத்திலிருந்தே யோகத்தின் தத்துவம் தொடர்ந்து வருகிறது என்று ஏற்படுகிறது.

ஸம்ஸ்காரம் பெறாத பொருளை எப்படி உபயோகப்படுத்த முடியாதோ அவ்விதமே ஸம்ஸ்காரத்தைப் பெறாத உடலை, தத்துவக்ஞானத்தைப் பெறுவதற்கும், கர்மங்களை செய்வ தற்கும், உபயோகப்படுத்த முடியாது என்று ஏற் படுகின்றது. இதைப் பற்றி அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை. வேதாந்தம் என்ற அத்யாத்மசாஸ்திரத்திலும், தர் மானுஷ்டானத்தைச்செய்வதற்கும் ஏற்பட்ட கர்ம சாஸ்திரத்தி லும் இதனை நன்றாகக் காணலாம். உயிர் உள்ளவர்களுக்கும், உயிரற்றவைகளுக்கும் மேலும் மேலும் நற்காரியங்களில் உபயோகப்படுவதற்கு தகுதியை உண்டாக்குவது என்பது ஸம்ஸ்காரம் என்ற சொல்லுக்குப் பொருள். இதற்கு உதாரணம் அத்யயனம் செய்வதற்கு உபநயனம் ஸம்ஸ்காரமாக ஆகிறது. பெண்ணுக்கு கர்பாதானத்திற்கு விவாகம் ஸம்ஸ்காரம் ஆகிறது. க்ருஹ்ய[4] ச்ரௌத[5] காரியங்களைச் செய்வதற்கு கரண்டி முதலியவைகள், ஹோமத்திற்காக ஸம்ஸ்காரத்தைப் பெறுகின்றன. யோகம் செய்யாத புருஷனுக்கோ, பெண்ணுக்கோ எக்காரியங்களிலும் அதிகாரம் கிடையாது என்று பிராசீன ஸம்பிரதாயங்களைத் தெரிந்தவர்கள் நிச்சயித்துள்ளார்கள். ஸம்ஸ்காரம் பெற்ற சேதநனுடைய உடலுக்கு வேதாந்த சாஸ்திரங்களில் அதிகாரம் உண்டு. அதுவும் யோகத்தினால் ஸம்ஸ்காரம் பெற்றவனுக்குத்தான் உண்டு என்று அறிய வேண்டும்.

முதல் ஸூத்திரத்திற்குப் பெயர் ப்ரதிக்ஞா ஸூத்திரம் என்பது.

# 1.2 யோக: சித்த வ்ருத்தி[7] நிரோத:

(யோகம் சித்தத்தின் செயல்களைத் தடுக்கிறது)

இங்கு யோக என்ற சொல் த்யானம் என்ற பொருளைக் குறிக்கும். சித்தத்தின் செயல்களை அடக்குவது த்யானம் என்பதற்கு வெளியிலுள்ள விஷயங்களைப் பற்றிய மாறுதல்கள் சித்தத்தில் உண்டாகும்போது அவைகளை அடக்குதல் என்று பொருள். த்யானம் என்பதற்கு பரம புருஷனை ஸர்வேச்வரனை எண்ணுதல் ''அவன் நாமத்தை ஜபம் செய்வது அவன் நாமத்தின் பொருளை எண்ணுதல்[9]'' என்று பொருள். அதாவது சித்தத்தை அவனுடைய உருவத்தில் நிலை நிறுத்துவது.

ரஜஸ், தமஸ் இவைகளுடன் சேர்க்கை சிறிதும் இல்லாத சுத்தஸத்துவமயமான சித்தம் எப்போது ஜீவனுடைய, தர்மபூதஞானத்தை[11], ஆதாரமாகக் கொண்டு பலவித ப்ராணாயாமத்தை அப்யஸித்து, ஹ்ருதயத்தில் உள்ள அந்தர்யாமியை ஒவ்வொரு கணமும் நினைத்துக் கொண்டு செயல்படுகிறதோ, அப்போது அந்த செயலால் சித்தத்திற்கு ஒன்றே ஒன்றைக் குறியாகக் கொள்வது என்று யோகத்தை நன்றாகக் கடைப்பிடித்துத் தேர்ந்தவர்கள் ''ப்ரத்யயைக தானதா'' என்ற பெயரைக் கொடுத்துள்ளனர். யோகத்தைப் பயிலுபவர்களுக்கு இது த்யானம் என்ற பெயரால் விளங்கும். ஹ்ருதயத்தில் உள்ள அந்தர்யாமியைக் குறித்து கடைப்பிடிக்க வேண்டிய முறை ''தாமரை மொக்கைப் போல் பிரகாசிக்கும்... நன்றாக பிரகாசிப்பவன்''[12] என்று நாராயண ஸூக்தத்திலிருந்து அறிய வேண்டும்.

நாமலிங்கானுசாஸனம் என்ற நூலிலிருந்து யோக என்ற சொல்[13] த்யானத்தைக் குறிக்கிறது என்று அறிகிறோம்.

''யுஜ் ஸமாதௌ'' என்ற தாது பாடத்தின்[14] மூலமாக யோக என்ற சொல்லுக்கு ஸமாதி என்ற பொருள் கிடைக்கின்றது.

இவைகளில் எதனை எடுத்துக் கொள்ள வேண்டும்? த்யானமும் ஸமாதியும் காரியமாகவும் காரணமாகவும்

உள்ளவை[15] என்று ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஸமாதியானது த்யானத்தின் பரிபக்குவமடைந்த நிலே. இதை அடைவதற்கு வேறு ஒன்றும் தேவையில்லே. ஆகையால்தான் ''பொருள் ஒன்றின் தோற்றமே அங்கு உள்ளது'' என்று ஸூத்திரத்தை இயற்றிய பகவான் பதஞ்சலி கூறினர்.

## 1.3 ததா த்ரஷ்டு: ஸ்வரூபேவஸ்தானம்

[அப்போது ஜீவன் தன்னுடைய உருவத்தில் நிலே பெற்றிருப்பான்.]

(ஸூத்திரத்தின் பொருளாவது: சித்தத்தை அடக்கும் சமயத்தில் பார்க்கும் ஜீவாத்மாவிற்கு ஞானம் நிறைந்து ஞானனந்த ஸ்வரூபத்தை தன்னுடைய ஸ்வரூபத்தில் ஜீவன் நிலே நிறுத்துகின்றுன். உள்ளும் புறமும் அதுவே உண்டாகின்றது என்று அறிய வேண்டும்.

(செய்யுள்) ஸ்வரூபத்தில் இருத்தல் என்ற ஸூத்திரத்தில் ஜீவன் பார்ப்பவன் என்று வர்ணிக்கப்பட்டுள்ளான். தன் ஸமயத்தில் இருப்பதால் பார்வையை செலுத்துகிறவனுடைய என்று பொருள் நன்கு விளங்குகிறது.)

(அப்போது ஜீவன் தன்னுடைய உருவத்தில் நிலே பெற்றிருப்பான்.)

(செய்யுள்) முதல் இரண்டு ஸூத்திரங்களால் யோகத்தினுடைய ஆரம்பம், அதனுடைய லக்ஷணம் சொல்லப்பட்டன. இந்த மூன்றுவது ஸூத்திரத்தில் ஜீவனுடைய ஸ்வரூபம் கூறப்படுகின்றது. யோகம் என்ற கொடியானது நல்லவர்களிடம் எப்போதும் மலர்ந்த பூக்களே உடையதாக ஆகின்றது. நீசமான யோகத்தைச் செய்யும் மனிதனிடத்தில் அது கூர்மையான நுனியையுடைய பாணமாக ஆகின்றது.

(அப்போது) நல்ல குருவினிடம் உபதேசத்தைப் பெற்று, அங்கங்களுடன் கூடிய யோகத்தை நியமத்துடன் அப்பியாஸம் செய்யவேண்டும். இதனுல், ஆசை பிறந்து, அதன் பிறகு உண்டாகும் சப்தம்[17] முதலிய வெளிவிஷயங்களினுல் உண்டாகும் சித்தத்தின் கொந்தளிப்பானது அடங்கிவிடும்.

படைத்தல் காத்தல் நடைபெறும் ஸமயங்களில் பரம புருஷனுன ஸர்வேச்வரனுடைய உண்மையான ஸங்கல்பத்தால் ப்ரகிருதியினின்றும் உண்டான இந்த உடலில் ஜீவன் கட்டப்படுகிருன். பல பிறப்புகளில் செய்த புண்யம்; பாவம் இவைகளாலும் தான் செய்த அபராதங்களாலும் துன்பத்தை அடைகிருன்.

'தன்னுருவில்' என்பதற்கு தன்னுடைய, அதாவது ஜீவனுடைய பரிசுத்தமான உருவம் என்று பொருள். பகவத் கீதையில்[18] 13வது அத்யாயத்தில் ''ஞானம், தெரிந்து கொள்ள வேண்டிய பொருள் ஞானத்தால் அடையத்தக்கது. அது எல்லோருடைய இதயத்தில் நிலைபெற்றுள்ளது,'' என்று கூறப்பட்டுள்ளது.

அவஸ்தானம் என்ற சொல்லில் அவ என்பதற்கு நிலை பெற்றிருத்தல், சிறப்புடன் இருத்தல் என்று பொருள்.

பரமாசார்யனுன நாதமுனிகளின் பேரன் ஆளவந்தாரும் ஆத்மஸித்தி என்ற நூலில்[19] ''உடல், பொறிகள், மனது, பிராணன், புத்தி இவைகளினின்றும் வேறுபட்டவனுயும் வேருென்றையும் உபாயமாக அடையாதவனுயும், நித்யமாயும் வ்யாபித்தவனுயும் உள்ள ஆத்மா ஒவ்வோர் உடலிலும் வேறுபட்டவனுயும் தானுகவே ஸுகத்துடன் கூடியவனுயும் உள்ளான்'' என்று வெளியிட்டிருக்கின்றுர். இவ்விதம் ப்ரகிருதியினின்று உண்டான கருவிகளுடன் கூடிய உடலானது பரிசுத்தமாக இருந்தபோதிலும், பாதஞ்சல யோகத்தால் மேலும் பரிசுத்தமாக ஆகவேண்டும். அப்போதுதான் எக்காலத்திலும் உள்ளதாயும் ஞானமயமாயும் ஆனந்தமயமாயும் உள்ள ஸ்வரூபத்தை அடையமுடியும்.

பார்ப்பவருடைய என்பதற்கு, பார்ப்பதற்குக் காரணமான ஆத்மாவினுடைய, ஜீவனுடைய, தரிசனம் அதாவது ஆலோகனம், பார்வை என்று பொருள். எது பார்க்கப்படுகின்றது? சித்தமானது மாறுதலை அடையும் நிலையில் வெளியிலுள்ள பொருள்கள் ஜீவனுல் சித்தத்தின் மூலமாகப் பார்க்கப்படு கின்றன. பார்ப்பது மாத்திரம் அல்ல, ப்ராரப்த கர்மாவின்[20] வாஸனையால், அதனுலுண்டான ஸுகதுக்கங்களையும் ஜீவன் அனுபவிக்கிருன்.

சித்தத்தை அடக்கி வைத்திருக்கும் நிலையில் பரிசுத்தமான ஞானானந்த மயமான ஸ்வரூபம் பிரகாசிக்கின்றது. சித்தத்தை அடக்குவதற்குப் பயிற்சி செய்வதால் உயர்ந்தத்யானத்தை உடையவனாக, ஆகின்றான். ரஜஸ்ஸையும், தமஸ்ஸையும் உதறித் தள்ளிவிடுகின்றான். த்யானத்திற்கு விஷயமான பரமாத்மாவை யும் சிறிது காலம் நேராகவே பார்க்கின்றான். அப்போது வெளியிலுள்ள பொருள்களை மறந்து விடுகின்றான்.

## 1.4. வ்ருத்திஸாரூப்யம் இதரத்ர

(மற்ற நிலைகளில் வ்ருத்தியுடன் ஒத்த உருவமுள்ளது)

ஸூத்திரத்தின் பொருளாவது: மற்ற காலத்தில், சித்தம் கலக்கத்தை அடையும்போது, வ்ருத்தியின் ஸாரூப்யம். பார்ப்பவனுடைய என்ற சொல்லை முன் ஸூத்திரத்திலிருந்து இங்கு எடுத்துக் கொள்ளவும். அப்போது புருஷனுக்கு என்று பொருள் கிடைக்கின்றது. சித்தத்தில் உண்டாகும் செயல்கள் யாவையோ (உள்ளனவோ) அவைகளின் உருவங்களுக்கு ஸமமான உருவத்தை புருஷன் அடைகின்றான். புருஷன் என்ற ஒருமையில் உள்ள சொல் புருஷர்களுடைய தொகுதியைக் குறிக்கும்.

சித்தம் கலக்கத்தை அடையும்போது, ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களுடைய (ப்ரகிருதியின் காரியமான அஹங்காரத்துடன்) சித்தம் (புருஷர்கள்) வெவ்வேறாக உள்ளது. முன்பு செய்யப்பட்ட செயல்களின் வாஸனையின் பலத்தால் சித்தம் என்ற பெயரால் பிரஸித்தியை அடைந்துள்ள உருவத்தைப் பெற்றிருக்கிறது. அதற்கு (சித்தத்திற்கு) ஸமானமான உருவத்துடன் மாறுதலையடையும் ப்ரகிருதியி லிருந்து உண்டான உடலில் கட்டுண்ட அந்த புருஷன் அதனுடைய உருவத்தை அடைந்து அந்த உடலை அடைகின்றான். ப்ரகிருதியின் குணமயமான உருவத்தை அடையாவிட்டாலும் பிறகு வெவ்வேறு வேஷம், அணிகள் இவைகளை தரிக்கின்றான். ஒரே நடிகன், தான் ஒருவனே ஆயினும் பல பெயர்களைப் பெறுகின்றான். பல செயல்களையும் புரிந்துகொண்டு வெவ்வேறு

பயன்களை அனுபவிப்பது போல் அபிநயம் செய்கின்றான். அதே மாதிரி இவனும் ப்ரகிருதியினின்றும் உண்டான உடலைப் பெற்று விசித்திரமான உருவம், அழகு, மொழி இவைகளுடன் கூடியவனாக அதற்கு ஏற்ற பேச்சுக்களையும் செயல்களையும் செய்துகொண்டு அதனாலுண்டான பயன்களை அனுபவித்துக் கொண்டு பலஸமயம் துக்கப்படுகின்றான். சில ஸமயங்களில் மகிழ்ச்சியை அடைகின்றான். ஆடுகின்றான், பாடுகிறான், கத்துகின்றான்.

இங்கு சித்தம் என்ற சொல் முன்பு செய்த கர்மாவின் பலத்தால் ஜீவனுக்கு ஏற்படும் நிலையை குறிக்கின்றது. இதை சாந்தோக்கிய உபநிஷத்தில்[21] 7வது அத்தியாயத்தில் ''சித்தமானது ஸங்கல்பத்தால் அதிகமாக'' என்ற வாக்கியத்தில் காணலாம்.

(செய்யுள்) ஞானம், யோகம், தனம், இவைகளைக் கொடுக்கும் யோகம் என்ற கொடியை ஞானிகள் ஞானவல்லீ, யோகவல்லீ, தனவல்லீ என்று மூன்று வகைப்பட்டதாகக் கூறுவார்கள். வேறு ஒன்றிலும் பற்றற்றவர்களுக்கு ஞானவல்லீ. பயனை விரும்புவோர்க்கு தனவல்லீ. பரமாத்மாவுடன் தான் ஒன்றியிருப்பதை விரும்புவோர்க்கு யோகவல்லீ என்று பொருள். இவ்வுலகில் அசைவது அசைவற்றது என்ற ஸ்வரூபத்தை உடையவர்களுக்கு எவ்வளவு உருவங்கள் உள்ளனவோ அவை யாவற்றையும் உயர்ந்தவைகளுக்கும் உயர்ந்ததான யோகவல்லீ தருகின்றது. பூமியில் பீஷ்மர்[22] யோகங்களுக்கு ஈச்வரன் கிருஷ்ணன் என்று சொன்னார். கிருஷ்ணனுக்குப் பிரியமான யோகவல்லியை எல்லா தேவர்களும் தேவலோகத்தில் பாடினார்கள் (போற்றினார்கள்). சித்த வ்ருத்தியானது அவர்கள் நடத்தையைத் தாழ்மையாக செய்துவிடுகின்றது. ஆகையால் சித்தத்தை அடக்குங்கள் என்று பதஞ்ஜலி கூறினார். பதஞ்ஜலி மதமானது எவ்வளவு காலம் புவியில் இருக்கிறதோ அதுவரையில் நோய் இருக்காது. அஞ்ஞானம் இருக்காது. பயமும் இருக்காது. என்று ஸ்ரீமான் நாதமுனிகள் சொன்னார். யோகவல்லியின் அனுக்கிரகத்தால் எனக்கு இம் மூன்றும் (ரோகமின்மை, அஞ்ஞானமின்மை, பயமின்மை) நேரிடையாகவே கிடைத்துள்ளன. அதனால் எப்போதும் கட்டுப்பாட்டை உடைய நான் தத்துவங்களினின்றும் வேறுபட்டவனாக இல்லை

யோகவல்லியால் சுகமயமானவனும் சங்கம், சக்கரம், கதை, சார்ங்கம் கத்தி இவைகளை தரிக்கும் நான்கு கைகளை உடையவனுகியுள்ள நாராயணனை நான் எப்போதும் நினைக்கி றேன்.

## 1.5 வ்ருத்தய: பஞ்சதய்ய: க்லிஷ்டாக்லிஷ்டா:

[வ்ருத்திகள் துன்பமானவை, துன்பமற்றவை. அவை ஐந்து விதங்கள்.]

(செய்யுள்) முதல் நான்கு ஸூத்திரங்கள் கூறப்பட்டன. இப்பொழுது வ்ருத்தி ஸூத்திரம் பலவித வ்ருத்தி வகைகளுடன் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. இதில் வ்ருத்தியை அடக்கும் முறை தெளிவாகின்றது.

சித்தத்தினுடைய என்ற சொல்லை முன் ஸூத்தி ரத்திலிருந்து இங்கு எடுத்துக் கொள்ள வேண்டும். விஷயத்தைப் பற்றுமல், வ்ருத்தி, ஞானம், ப்ரமாணம் இவை உண்டாகமாட்டா. ஆகையால் இங்கு வ்ருத்தியின் விஷயத்தைப் பற்றிக் கூறப்படுகிறது. ஆகையால் எல்லாவிடங்களிலும் அறிகிருன், விரும்புகிருன், முயற்சி செய்கிருன் என்று ஆலோசிக்கப் படுகின்றது என்பதைக் கண்கூடாகக் காண்கிரும். அதாவது ஒருவன் எந்த செயலிலாவது ஈடுபடட்டும். அப்போது முதன் முதலாக அந்த செயலின் பொருளைப் பற்றிய ஞானம், பிறகு அதனைப் பற்றிய விருப்பம், அதற்குப் பிறகுதான் அதைப் பெறுவதற்கு முயற்சி இவைகள் உண்டாகின்றன என்பது உண்மையான கிரமம்.

இந்த யோக மதத்தில், ஆத்மா மனதுடன் சேருகின்றது. மனது இந்திரியத்துடன் சேருகிறது. இந்திரியம் தெரிந்து கொள்ளப்பட வேண்டிய பொருளுடன் சேருகின்றது. பிறகு இது இவ்விதமாக உள்ளது என்ற ஞானம் பிறக்கின்றது. அந்தந்த பொருள்களின் ஞானம் ஆத்மாவில்தான் உண்டாகின்றது. அந்த ஞானத்தைப் பற்றிய அனுபவமும் அங்குதான் உண்டாகின்றது. ஆத்மா என்ற சொல்லால் ஜீவன் குறிப்பிடப்படுகின்றுன்.

எல்லாவற்றையும் அடக்கவல்ல பரமாத்மாவின் அனுமதியால் ஆத்மாவிற்கு மனத்துடன் சேர்க்கையானது உண்டாகின்றது. இதை பகவத்கீதையில்[23] ''ஆதாரம் ...அவ்விதமே செயல்படுபவன்'' என்று காணலாம். பரமாத்மாவின் ஸங்கல்பம் ஜீவனால் முன் பிறவிகளில் செய்யப்பட்ட செயல்களின் வாஸனைகளுக்கு ஏற்றவாறுதான் இருக்கும். அதற்கு ஏற்றவாறு தான் அந்த ஜீவனுக்கு இப்பிறப்பில் பொருள்களில் ஈடுபாடு உண்டாகும். பிறக்கும் போதே பயனைத் தருவதற்கு தொடங்கிய கர்மாவிற்கு ஏற்றவாறு பகவானுடைய ஸம்மதம் இருக்கும். இது பரமாத்மாவின் கட்டளை அல்ல. ஒவ்வொன்றும் மனத்துடன் சேருகின்றது என்பது நாம் சொல்லும் வழி. எல்லா உடல்களிலும் உள்ள ஜீவனுடைய ஈடுபாடு இம்முறையில் அமைந்துள்ளது. ஜீவனுடைய முயற்சியானது நியாயமானது. காரணத்தால் அது சுத்தம் அசுத்தம் என்று இரு வகைப்படும்.

(செய்யுள்) சித்த வ்ருத்திகள், ஐந்து விதங்கள், அவை துன்பமானவை, துன்பமற்றவை என்று இரு பிரிவாகக் கூறப்பட்டுள்ளன. துன்பமான வ்ருத்திகள் துயரத்தைக் கொடுப்பவை. துன்பமற்றவையாக கூறப்பட்டவை குணங்களுக்கு (பிரகிருதியின் மூன்று குணங்களுக்கு) எதிரானவை.

சித்தத்தின் வ்ருத்தி ஒன்றுதான். ஆனாலும் அது ஐந்து (அவயவங்களை) அங்கங்களை உடையதாக உள்ளது. அவைகள் துன்பமானவை, துயரத்திற்கு காரணமாய் மூன்று குணங்கள் நிறைந்தவை. ப்ரக்ருதி வேறு புருஷன் வேறு என்பதைக் காண்பிக்கும் ஞானத்திற்கு காரணங்களையும், வைராக்யத்தின் உண்மை நிலையை அறிவதற்கு விருப்பத்தை உண்டாக்குபவை யாயும், நல்ல ஆசார்யனுக்கு சேவை செய்வது என்று அமைந்தவைகளாயும் உள்ளன துன்பமற்றவை என்று கூறப்பட்டுள்ளது. கலக்கத்தை அடைந்துள்ள மூன்று குணங்களுடன் கூடிய சித்தமானது புருஷனை எப்போதும் துன்பப்படுத்துகின்றது. பிரகிருதியின் குணங்களால் கலக்கத்தை அடைபவை, கலக்கமற்றுள்ளவை என்ற அனுபவங்களை கெட்ட அல்லது நல்ல ஆதாரத்தின் பலத்தால் ஆத்மா அனுபவிக்கிறான். ''ஓ! சாந்தமானவனே, மனது அன்னத்தால் ஆனது[24]'', என்றும் ''ஆஹாரம் சுத்தமாக இருக்கும்போது மனது சுத்தமாக இருக்கிறது''[25] என்றும் சாந்தோக்யம் கூறுகின்றது. கீதையில்[26]

''ஆயுள், மனதின் திடம், உடலில் பலம், ஆரோக்யம்'' என்று கூறப்பட்டுள்ளது.

(செய்யுள்) கொழுப்பு நிறைந்த உடலை தவத்தினால் உலர்த்து, பாலால் வயிற்றில் உள்ள நெருப்பை அணைத்திடு, மனதால் வேதத்தைச் சொல், சுகத்தில் உனக்கு ஆசையிருந்தால் யோகத்தை எப்போதும் பயிலு, துன்பப்படவேண்டும் என்று ஆசையிருந்தால் யோகத்தில் பற்றுதலை விட்டுவிடு. உன்னுடைய தர்மத்தை எப்போதும் செய்துகொண்டிரு. வஸிப்பதற்குத் தக்க இடத்தில் வாஸம் செய். விடியற்காலை தோறும் வேதத்தைப் படி. தகுந்த காலத்தில் சந்தியாவந்தனத்தைச் செய். யோகத்தை அப்யாஸம் செய்தால் சித்தத்தின் ஸ்திரமான நிலை ஏற்படும். யோகத்தை விட்டுவிட்டால் சித்தத்தில் குழப்பம் உண்டாகும். நல்ல தூக்கத்தில் சித்தமானது தன் நிலைமை அறியாமல் இருக்கின்றது. உலகில் சித்தத்தின் உருவமானது பாபத்தை அனுஸரித்திருக்கின்றது. இது ஆச்சரியமே. முதலில் அனுபவத்தைப் பெறும் ஆத்மா, உடல்தான் ஆத்மா என்று ஸந்தேகத்தை அடைகின்றது. இதை ஒழிக்க வேண்டும். ஸந்தேகத்தை அகற்றியவரும் ஆதிசேஷனில் இருப்பவருமான அவருக்கு (நாராயணனுக்கு) நமஸ்காரம்.

## 1.6 ப்ரமாண வியர்யய விகல்ப நித்ரா ஸ்மருதய:

[பிரமாணம், விபர்யயம், விகல்பம், நித்திரை, ஸ்ம்ருதி இவ்வைந்தும் வ்ருத்திகள்]

இது வ்ருத்தியைப் பற்றிய ஸூத்திரம். ப்ரமாண வ்ருத்தி, விபர்யய வ்ருத்தி, விகல்ப வ்ருத்தி, நித்ரா வ்ருத்தி, ஸ்ம்ருதி வ்ருத்தி என்பவை, வ்ருத்தி என்ற சொல் ஒவ்வொன்றுடன் சேர்க்கப்படுகின்றது. யாருடைய வ்ருத்தி என்ற கேள்விக்கு, சித்தத்தினுடைய என்பது பதில். வ்ருத்தி என்ற சொல்லிற்கு மாறுதல் என்று பொருள். பரிணமம், ரூபாந்தரம், என்ற இரண்டு சொற்களுக்கும் ஒரே பொருள்தான் உள்ளது. சித்தத்தின் வ்ருத்தி சித்தத்தின் மாறுதல். இவை சித்தத்தினு

டைய அதன் ஸ்வய உருவத்தைக் காட்டிலும் வேறுபட்ட உருவத்தைக் குறிக்கின்றது. அப்போது சித்தத்திற்கு அதற்கே உரியதான உருவம் எது? என்ற கேள்விக்கு மூன்று குணங்களுடன் கூடி இருத்தல் என்று சிலர் கூறுகின்றனர். ஸத்துவம், ரஜஸ், தமஸ் என்றவை குணங்கள். பிரகாசம், அசைதல், அசையாமலிருத்தல் இவைகளை சித்தம் செய்கின்றது என்றும் ஆத்மாவைப் பற்றியிருப்பதாலும் ஆத்மாவின் அருகிலேயே இருப்பதாலும் ஸ்வயமாகவே மாறுதலை அடைகின்றது என்றும் ஸாங்க்யர்கள் எண்ணுகின்றனர். உலகம் உண்மையல்ல என்று வாதம் செய்பவர்களும், வேதத்திற்கு மாறாக சாஸ்திரங்களைச் செய்தவர்களும், இவ்வாறே கூறுகின்றனர். பரமாத்மாவின் தூண்டுதலால் ஜீவனுடன் சம்பந்தம் பிரகிருதிக்கு உண்டாகின்றது என்று ஸம்பிரதாய வழியில் யோகம் செய்பவர்களும், வெகு காலமாக பிரபஞ்சம், ஜீவன், பரமாத்மா இவர்கள் உண்மையாக உள்ளவைகளே என்றும் கூறும் சிஷ்டர்களும், வேதத்தின் அடிப்படையில் மதங்களை உண்டாக்குகின்ற பிறரும் கூறுகின்றார்கள். அது எப்படியானாலும் சித்தவ்ருத்தியானது ஆத்மாவுடன் ஸம்பந்தப்பட்டதே. அதை நிரூபிக்க முடியாது என்று எல்லோரும் ஒப்புக் கொள்ள வேண்டும்.

நன்றாக அறியப்படுவது ப்ரமா. இதற்குக் கருவி ப்ரமாணம். அனுபவத்திற்கு மாறாக நான்கு பக்கங்களிலும் செல்லுகிறது என்பதால் விபர்யயம். அனுபவத்திற்கு மாறாக கற்பிக்கப் படுகின்றது என்பதால் விகல்பம். மிகவும் நிந்திக்கத்தக்க வழியில் செல்லுகின்றது என்பதால் நித்திரை. முன்பு ஏற்பட்ட அனுபவத்தை நினைக்கின்றது என்பதால் ஸ்ம்ருதி.

முன்பு செய்யப்பட்ட கர்மாவின் வாஸனைகள் வெவ்வேறான தன்மைகளை உடையன. இதனால் உண்டான உடல்களில் புகும் ஆத்மாக்களும் மனங்களும் எண்ணிறந்தவை. வ்ருத்திகளும் கணக்கற்றவை. ஆயினும் அந்த வ்ருத்திகளனைத்தும் இந்த ஐந்துகளிலேயே அடங்கி விடும் என்று பகவான் பதஞ்ஜலி கருதுகின்றார்.

# 1.7 ப்ரத்யக்ஷானுமானாகமா: ப்ரமாணாநி

[ப்ரத்யக்ஷம், அனுமானம், ஆகமம் இவைகள் ப்ரமாணங்கள்]

இந்த ஸூத்திரத்தில் ப்ரமாணங்களின் எண்ணிக்கை இவ்வளவு என்று கூறப்பட்டுள்ளது. ப்ரத்யக்ஷம், அனுமானம், உபமானம், சப்தம் என்றவை ப்ரமாணங்கள் என்று நையாயிகர்கள் கூறுகின்றனர். இவைகளுடன் அர்த்தாபத்தி என்பதும் சேர்ந்து ப்ரமாணங்கள் என்று ப்ராபாகரர்கள் கூறுகின்றனர். அனுபலப்தியுடன் கூடியவை இவை என்று பாட்டர்கள் கருதுகின்றனர். புராணங்களை நன்றாகக் கற்றவர்கள் ஐதிஹ்யத்துடன் கூடிய இவை ப்ரமாணங்கள் என்று கூறுகின்றனர். உபநிடதத்தைப்பற்றியுள்ள வேதாந்திகளும், கபிலர், பதஞ்ஜலி இவர்களுடைய வழியைப் பின்பற்றினர்கள் என்பதால் ப்ரமாணத்தின் நிலை இவ்விதம் உள்ளது.

ப்ரத்யக்ஷப்ரமாணத்தில் வெளிப் பொருள்களுடன் இந்திரியங்களுடன் சேர்க்கையானது நேராகவும், ஆத்மா மனது இவைகளுடன் (பரம்பரையாகவும்) ஏற்படுகின்றது. ஒரு பொருளின் ஒரு பகுதி மாத்திரம் நேரில் காணப்பட்டால் அப்போது அனுமானம் என்பது ப்ரமாணமாக ஆகின்றது. ஆப்த வாக்கியமான சப்தத்தில் மாறுபட்டம், தவறுதல்கள் இவைகளுக்கு இடமில்லை. வகையால் இது ஸந்தேகமற்றபிரமாணம். வேதங்கள் எப்போதும் தானாகவே ப்ரமாணமாக இருக்கும். ஆபஸ்தம்பரும் ''தர்மத்தை அறிந்தவர்களுடைய ஏற்பாடுகள் ப்ரமாணங்கள்'' என்று கூறியுள்ளார். ப்ரமாணங்கள் எல்லாவற்றிலும் சப்தப்ரமாணம் உத்தமமானது. இது இல்லாமல் எவ்விதமான வாழ்க்கையும் நடைபெறுது என்று பதஞ்ஜலியின் மதத்தைச் சேர்ந்தவர்கள் கூறுகின்றனர்.

உபநிடதங்களில் பிரம்மத்தை அறிய விரும்புதல் என்றவிடத்தில் ''அவன் எல்லாவிதமான விருப்பங்களையும் இங்கேயே, எல்லாமறிந்த பிரம்மத்துடன், அடைகிறான்'' என்று, ப்ரம்மஞ்ஞானத்தின் பயனால் இது உண்டாகின்றது என்று கூறப்பட்டுள்ளது[28]. இது துன்பங்களை அறவே ஒழிப்பதால் ஏற்படுகிறது. இவ்விதமே பதஞ்ஜலியின் யோக சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள யோகானுஷ்டானத்தை கிரமமாகவும், நியமத்துடனும் செய்யும் போது ப்ரம்மத்தை அடையக் கூடிய

உபாயமாக ஆகின்றது. எல்லா உபநிடதங்களிலும் இவ்விதமே கூறப்பட்டிருப்பதால் அவ்வித ப்ரம்மத்தை தெரிவிக்கும் சாஸ்திரங்களில் வேதங்கள், ஸ்ம்ருதி முதலியவைகள் மாத்திரம் தான் பிரமாணமாகும். ப்ரத்யக்ஷம், அனுமானம் முதலியவை களும் இவ்விதம் ஆகா என்று நல்லோர்கள் கருதுகின்றனர். உபநிடதங்களிலும், அவைகளைப் போலவே பிரமாணமாயுள்ள பதஞ்ஜலி யோகத்திலும், ஏதேனும் ஒன்றை எடுத்துக்கொள்ள லாம் என்று கருதுகின்றார்கள்.

## 1.8 விபர்யயோ மித்யாஞானமதத்- ரூபப்ரதிஷ்டம்

[விபர்யய என்பது பொய்யான ஞானம். அவ்வுருவில் இல்லாததைப் பற்றியது.]

பிரத்யக்ஷத்தால் உண்டாகும் அனுபவத்திற்கு விரோதமாக உள்ளதால், விஷயமல்லாத விஷயத்தைப் பற்றி, இது உண்டாகிறது என்பதாலும் இது விபர்யய வ்ருத்தி. அவ்வுருவம் அல்லாததைப் பற்றிய ஞானம் விபர்யய என்று சொல்லப் படுகின்றது. அதற்குப் பெயர் பொய்யான ஞானம். அதனுடைய தன்மையல்லாததில், அதனுடைய தன்மை உள்ளதாக எழும் புத்தியானது அவ்வுருவத்தைப் பற்றுது.

## 1.9 சப்தஞானநுபாதீ வஸ்துசூந்யோ விகல்ப:

[சப்தத்தால் உண்டாகும் ஞானத்தைப் பின்பற்றி பொருளற்றதாக உண்டாகும் வ்ருத்தி விகல்பம்.]

சொற்கள் உச்சரிக்கப்பட்டு அதனால் உண்டாகும் ஞானம் 'சப்தம்'. இதனைப் பற்றி எழும் இதனால் உண்டாகும் வ்ருத்தி அப்பொருளைப் பற்றி எழாததால், விகல்பம் என்ற பெயரை அடைகின்றது.

பதஞ்ஜலி முனிவரால் இயற்றப்பட்ட மகாபாஷ்யத்தை அனுஸரித்து இந்த ஸூத்திரத்தை விளக்கும்போது ஸரியானவை களாயுள்ள சொற்கள் பொருளுடன் கூடியவைகளே. இந்த ஸூத்திரத்தால் குறிக்கப்படும் சொற்களுக்குப் பொருள் இல்லை என்று ஒருவிதமான முடிவு.

இந்திரியங்களால் அறியத்தக்கவை, பொருளற்றவை, என்ப தால் சொற்கள் பொருள்களைக் காண்பிக்கமாட்டா, என்பது மற்ற ஒரு முடிவு. சொற்கள் உண்டான விதத்தை குறிப்பிடமுடியும் குறிப்பிடமுடியாது என்பதை ஒப்புக்கொண்டு சாண்டில்ய வித்யையில்[29] கூறப்பட்ட மாதிரி எல்லா சொற்களுடைய பொருளானது பரிசுத்தமான மனத்தால் அறியத் தக்கதே. இவ்விதம் பொருளைத் தெரிவிக்கக் கூடிய சக்தியானது எல்லா சொற்களுக்கும் இல்லை. ஆகையால் அவைகள் புறப்பொருள்கள் இல்லை என்பதைத் தெரிவிக்கும் என்பது மூன்றுவது முடிவு. இதனைப் பற்றித்தான் பொருளற்றது விகல்பம் என்று பதஞ்ஜலி கூறியுள்ளார்.

ஸூத்திரத்தின் பொருளாவது விகல்பம் என்ற ஸூத்திரத்தின் வ்ருத்தி. பொருளற்றது. ஏனெனில் அதற்குப் பொருள் இல்லை. ஆனால் சொல்லால் உண்டாகும் ஞானத்தை இந்த வ்ருத்தி அனுஸரித்து இருக்கின்றது. ஆகையால் ராம என்ற சொல் ராமன் என்ற ஞானம் ராம என்ற பொருளும் அங்கு இல்லை.

## 1.10 அபாவப்ரத்யயாலம்பநா தமோவ்ருத்தி: நித்ரா.

[இல்லையென்ற ஞானத்தைப் பற்றி தமோகுணத்தையுடைய வ்ருத்தியானது நித்திரை.)

எந்த சித்த வ்ருத்திக்கு இல்லை என்று ஞானம் ஆதாரமோ, அது இல்லை என்ற ஞானத்தைப் பற்றியது என்று சொல்லப் படுகின்றது. இதை நித்திரை என்று கூறுகின்றுர்கள். இங்கு தமஸ்ஸுக்கு முக்கியத்துவம் உண்டு. நித்திரையில் வெளி விஷயங்களுடன் ஸம்பந்தமில்லை. இதனுல் விஷயங்களே இல்லை என்று கூறமுடியாது. இந்த ஸூத்திரத்தின் மூலம் எல்லாப்புறப் பொருள்களும் இன்மையும் (இல்லாததுடன்) ப்ரதியோகிகளாக சேர்ந்தே உள்ளன.

## 1.11 அனுபூதவிஷயாஸம்ப்ரமோஷ: ஸ்ம்ருதி:

(அனுபவிக்கப்பட்ட பொருள்களைப் பற்றி மறையாமலிருக்கும் வ்ருத்தி நினைவு.)

வெளியிலுள்ள பொருள்களுடன் இந்திரியங்களுக்கு ஸம்பந்தம் ஏற்படுகின்றது. பிறகு மனதில் விசேஷமான மாறுதல், ஆத்மபலத்தால் உண்டாகின்றது. இது உணர்ச்சி, அனுபவம் என்று சொல்லப்படுகின்றது. அனுபூதி, அனுபவம் இரண்டிற்கும் பொருள் ஒன்றுதான். இந்த அனுபவம் திடமாக இருப்பதால் இதற்கு முன்பு உண்டாகாத ஒரு சக்தியானது ஆத்மாவுடன் கூடிய மனத்தில் உண்டாகின்றது. இந்த சக்திக்கு ஸம்ஸ்காரம் என்று பெயர். அதனுடைய பலத்தால் ஸ்ம்ருதி உண்டாகின்றது. ஞான விசேஷத்தால் சித்தத்தில் மாறுதல் உண்டாகிறது. அப்போது பொருள் அங்கு இருக்கவேண்டிய அவசியமில்லை. ஸம்ஸ்காரத்தின் பலத்தாலேயே முன்பு அனுபவிக்கப்பட்ட பொருளின் உருவம் ஆத்மாவுடன் சேர்ந்த மனத்தில் உண்டாகின்றது. இதுதான் அபஹரிக்கப்படாத (மறையாமல்) நிலை. மறைக்கப்படாமல் இருத்தல் என்றும் சொல்வதுண்டு.

ஆத்மா பரமாத்மாவிற்கு வசப்பட்டதே. சேதனம், அசேதனம் என்ற எல்லாம் கூடியது பிரபஞ்சம், என்று நாத முனிகளுடைய அபிப்ராயம். இதனால் ஆத்மாவிற்கு வசப்படாமலேயே சித்தமானது மாறுகின்றது என்ற கொள்கை நிராகரிக்கப்படுகின்றது. சித்தமானது ஒரு கணம்தான் உள்ளது. அதாவது ஒவ்வொரு கணமும் மாறுதல் அடைகின்றது என்று கூறுபவர்களுடைய மதத்தில், அனுபவம், ஸம்ஸ்காரம், அது மறையாமலிருத்தல், அதனாலுண்டான ஸ்ம்ருதி என்ற நிலைகள் விளக்கப்படமாட்டா.

## 1.12 அப்யாஸவைராக்யாப்யாம் தந்நிரோத:

[அப்யாஸம், வைராக்கியம் இவைகளால் சித்தவ்ருத்தியானது அடக்கப்படுகின்றது.]

**வெளிப்பொருள்களில் உண்டாகும் வைராக்யத்துடன் ப்ரக்ருதி, புருஷன் என்ற வித்யாஸத்தைப் பற்றிய ஞானத்தால்**

முன் சொல்லப்பட்ட ஐந்து விதமான சித்த வ்ருத்திகளும் அடங்கி விடுகின்றன.

## 1.13 தத்ர ஸ்திதௌ யத்நோப்யாஸ:

[அங்கேயே இருக்கும்போது செய்யப்படும் முயற்சி அப்யாஸம்.]

முன்பு சொல்லப்பட்ட வைராக்கியம், அப்யாஸம், இவைகளுக்குள் அப்யாஸமானது இங்கு கூறப்படுகின்றது. ப்ரக்ருதி, புருஷன் என்பவைகளைப் பிரித்து உணர்தலை உண்டாக்கும் ஞானத்தை சிந்திப்பது. அதனால் எந்த நிலையில் சாந்தமான நிலை உண்டாகிறதோ அந்நிலையில் முயற்சி செய்வது அப்யாஸம்.

## 1.14 ஸ து தீர்க்ககாலநைரந்தர்யஸத்காராதராஸேவிதோ த்ருடபூமி:

[அது வெகுகாலம் இடைவிடாமல் மதிப்புடன் அனுஷ்டிப்பதால் திடமாக ஆகிவிடும்.]

முன் ஸூத்திரத்தில் சொல்லப்பட்ட முயற்சியானது வெகுகாலம், அதாவது ஆயுள் உள்ளவரை, இடைவிடாமல் அனுஷ்டிக்கப்பட்டால், மதிப்பைத் தரக்கூடிய முறையில் அனுஷ்டிக்கப்பட்டால், அதாவது ஆதரவுடன், ஆசையுடன் அனுஷ்டிக்கப்பட்டால் அசைக்க முடியாததாக ஆகிவிடும். அதனால் தாதுக்களின் திடம், இந்திரியங்களின் சக்தி, சரீரத்தின் நிலை இவை குறையற்றவனவாக ஆகிவிடும்.

## 1.15 த்ருஷ்டாநுச்ரவிகவிஷயவித்ருஷ்ணஸ்ய வசீகாரஸம்ஞா வைராக்யம்

[காணப்படும், கேட்கப்படும் பொருள்களில் எவனுக்குப் பற்று போய்விடுகின்றதோ அவனுடைய வைராக்யத்திற்கு வசீகாரம் என்று பெயர்.]

விஷயமானது (வெளி) இந்திரியங்களால் அறியக் கூடியது. பூலோகத்தில் அனுபவிக்கத் தக்க சப்தம், ஸ்பர்சம், வர்ணம்,

ரஸம், மணம் இவைகளுடன் கூடியது. இது பிரக்ருதியின் மாறுதலால் பிரத்யக்ஷத்தால் அறியக்கூடியது. (உதாரணமாவது) சப்தம் பிரமாணம் என்பதற்கு (விஷயங்கள்), குரு சிஷ்யன் என்ற பரம்பரைப்பிரகாரம், காது என்ற இந்திரியத்திற்கு விஷயமாக உண்டாகும் சப்தம், ச்ருதி, வேதம் என்ற பெயர்களைக் கொண்டுள்ளது. வெளியிலுள்ள இந்திரியங்களுக்கு விஷயமாகாமல், இவைகளைக் காட்டிலும் வேறுபட்ட சப்தம், ஸ்பர்சம், வர்ணம், ரஸம், மணம் இவைகளுடன் கூடியவை இங்கு பொருள்கள். இவை ஸ்வர்கத்திலுள்ள பெண்கள், சாப்பாடு, அருந்தும் பானம் போன்ற அமிர்தம் முதலியவைகளின் உருவத்தில் உள்ளன. வேறு உலகத்தைச் சார்ந்தவை. இரண்டு விஷயங்கள் இங்கு அனுபவிக்கத் தக்கவை என்று நிச்சயப்படுத்தப்பட்டுள்ளன. ஸூத்திரகாரர் ''பிரத்யக்ஷத்திற்கும், சப்தத்திற்கும் விஷயமானது'' என்று கூறினார். எந்த ஜீவனுக்கு (ஆத்மாவிற்கு) ஆசையானது விடப்பட்டுள்ளதோ, அவன் (ஜீவன்) ப்ரத்யக்ஷத்தாலும் சப்தத்தாலும் அறியக்கூடிய விஷயங்களில் ஆசையற்று உயர்ந்த இடத்தை அடைகின்றான். அந்த இடமும் ஆத்மாவுடன் கூடிய மனத்தின் தன்மையே. இவ்விதமே ஆஞ்சயநேயரும்[31] ''எல்லா இந்திரியங்களையும் இயங்கும்படி செய்வதற்கு மனது காரணம். சுபம் அசுபம் என்ற நிலைகளில் அது (மனது) நன்கு நிலை பெற்றுள்ளது.'' என்று கூறினார்.

இப்படியுள்ள வைராக்கியம் ப்ரத்யக்ஷமாக காணக் கூடியவைகளாயும், சப்தத்தால் அறியக் கூடியவைகளாயும், உள்ள விஷயங்களை நான் அனுபவிக்க மாட்டேன், பார்க்க மாட்டேன், அவைகளின் அருகில் போக மாட்டேன், அவைகளை நினைக்க மாட்டேன், என்ற தன்மையில் அமைந்துள்ளது. ஏனெனில் இவ்வளவு காலம் அவைகளை அனுபவித்ததாலும், அவைகளை நினைத்ததாலும், அவைகள் உள்ள இடத்திற்கு சென்றதாலும், அவைகளைப் பார்த்ததாலும், என்னுடைய உடலில் இந்திரியங்களுடைய ப்ராணவாயு முதலிய சக்திகள் மழுங்கிவிட்டன. இனி இவ்வுலகத்தினுடையவும், ஸ்வர்க்கத்தினுடையவும் விஷயங்களை நினைக்க ஆசைப்படமாட்டேன் என்ற சொற்களின் வடிவில் உள்ளமனத்தின்நிலை. இவ்விதம் எண்ணிக் கொண்டு ஒரு புருஷனோ, ஸ்த்ரீயோ உலகில் இருந்தால் அவனுக்கு (அவளுக்கு) வசீகாரம் என்ற வைராக்யம் உள்ளது என்று (எப்போதும்) சாஸ்த்ரீயமான பெயர் ஏற்பட்டுள்ளது.

# 1.16 தத்பரம் புருஷக்யாதேர்– குணவைத்ருஷ்ண்யம்

[இதைக் காட்டிலும் மேலானது பொருள்களுடைய ஞானத்தால் உண்டாகின்றது. அது குணங்களில் பற்றற்ற நிலே.]

வைராக்கியம், ஞானம், பக்தி என்ற இவை மூன்றும் பரம், அபரம் என்ற பிரிவால் இருவிதமாகும். ஆகையால் வசீகார ஸம்க்ஞை என்ற பெயருள்ள வைராக்கியமும் இருவகைப்படும். வசீகாரம் என்ற பெயருள்ள அபரமானது(தாழ்ந்ததானது). முன்பு சொல்லப்பட்டது. புருஷக்யாதே: என்பது புருஷனுடைய ஞானம், ப்ரக்ருதியில் கட்டுண்டு ஆனல் பரிசுத்தமானவனுக்கு ஆத்மாவை நேராக காண்பது போல் உண்டாகும் ஞானம். இதனுல் குணங்களில் ஆசையற்றுவிடுகிறது. அதாவது ப்ரக்ருதியிலுள்ள ஸத்வம், ரஜஸ், தமஸ் இவைகளின் மாறுதலால் அதன் பிரிவுகளிலும் மறுபடியும் ஆசை எழாமலிருக்கும்படி செய்துவிட்டால் அப்போது உயர்ந்ததான பரவைராக்கியம் என்ற பெயர் உண்டாகின்றது.

# 1.17 விதர்க்கவிசாராநந்தாஸ்மி– தாரூபாநுகமாத் ஸம்ப்ரக்ஞாத:

[விதர்கம், விசாரம், ஆனந்தம், அஸ்மிதா என்ற உருவங்களைப் பின்பற்றுவதால் ஸ்ம்ப்ரகஞாத என்று பெயர் வருகின்றது.]

வைராக்கியம், விவேகம் இவைகளே அப்யாஸம் செய்வதால் எவனுடைய சித்த வ்ருத்தியானது அடக்கப்படுகின்றதோ, அவன் எவ்விஷயமாயினும் அது ஒன்றிலேயே மனதை பதிந்திருக்கும்படி செய்து அனுபவத்தைப் பெறுவான். பெரியது அல்லது ஸூக்ஷ்மமானது என்ற பொருளில் பகுதி பகுதியாகவோ, முழுவதாகவோ அப்பொருளேப்பற்றி உண்டாகும் வ்ருத்தியால் செவ்வையாக செய்யப்பட்டதாகவோ அல்லது அவ்விதம் செய்யப்படாததாகவோ இருக்கும் ஸ்வரூபத்தை அறிந்துகொண்டு இருப்பான். அக்காலத்தில் அவனுடைய மனது அதனில்

பொருந்தியிருக்கும். இவ்விதம் உண்டாகும் ஆத்மானுபவமானது ஸம்பிரக்ஞாத என்று கூறப்படுகின்றது.

சாந்தோக்கியத்தில்[32] ''கலக்கமற்ற இந்த ஆத்மா இவ்வுடலிலிருந்து உயரே கிளம்பி பெரிய ஜோதிஸ்ஸை அடைந்து தன்னுடைய உருவத்துடன் தோன்றுகின்றான்'' என்று சொல்லியுள்ளபடி பிரகிருதியால் உண்டான உடலினின்றும் விடுபட்டு பரமாத்மாவை அனுபவிப்பதால், பரமாத்மாவுடன் சேர்க்கை ஆத்மாவிற்கு ஏற்படுகின்றது. அப்போது ஜாதி முதலியவைகளை மறந்து பரமாத்மாவின் தர்சனத்தை அடைவது போல், ஸமாதிகாலத்தில் பக்தியின் எல்லையை அனுபவிக்கிறான். பரமாத்மாவின் விசேஷமான அனுக்கிரகத்தைப் பெற்று, நான் யார்? எந்தப் பிறப்பைச் சேர்ந்தவன்? இருப்பிடம் எது? என்ற ப்ரக்ருதியில் உண்டான உடலைப்பற்றிய எண்ணங்கள் யாவற்றையும் மறந்து விடுகின்றான். நன்றாக தூங்குபவன் இவ்வுடலில் இருந்தபோதிலும் தன்னையும் தன்னைச் சேர்ந்தவைகளையும் பரமாத்மாவுடன் நெருங்கிக் கொள்வதால் மறந்து விடுகின்றான். அதுபோல இது ''தினந்தோறும் போய்க்கொண்டு இருப்பவர்கள் இந்த ப்ரம்ம உலகத்தைத் தெரிந்துகொள்ளவில்லை,'' என்று சாந்தோக்கியத்தில்[33] தஹராதிகரணத்தில் கூறப்பட்டுள்ளது.

ஸ்ரீமத் ராமாயணத்திலும் [34]அசோகவனத்தில் ஸமாதியில் இருந்த ஸீதையைப் பார்த்து அனுமானும் ''இவள் அரக்கிகளையும், பூக்கள், பழங்கள் இவைகளுடன் கூடிய மரங்களையும் பார்க்கவில்லை. ஒருவனையே (ராமனையே) ஹ்ருதயத்தில் வைத்துக்கொண்டு, உண்மையாக, ராமனையே காண்கிறாள்''. என்று எண்ணினார்.

ஒருவனையே இதயத்தில் வைத்துக் கொண்டு, ஸமாதியின் நிலைமையையும், அதனால் அடையப்பெற்ற ஸுகத்தையும் ஸீதை அடைந்தாள். இவள் பார்க்கவில்லை என்பதால் தன் உடலுக்கு உண்டான உபாதைகளையும் மறந்து விட்டுத்தான் இருந்தாள் என்று தெரியவருகின்றது. இராமனையே உள்ளுக்குள் பார்த்தாள் என்பதால் ஸம்ஸாரத்தையும் மறந்தாள் என்பதும் தெளிவாகின்றது.

# 1.18 விராமப்ரத்யயாப்யாஸபூர்வ: ஸம்ஸ்காரசேஷொந்ய:

[நின்று விட்டது என்ற ஞானத்தை அப்யாஸம் பண்ணிய பிறகு மிகுந்து இருக்கும் ஸம்ஸ்காரத்தோடு கூடியது வேறு]

சித்தவ்ருத்தியை அறவே ஒழித்தல் விராமம். அதனுடைய ப்ரத்யயம் ஞானம். இது இந்திரியங்களுக்கும், அவைகளின் பொருள்களுக்கும் இடையே உண்டான சேர்க்கை விடப்பட்டது என்ற ஞானம். இவ்விதமான விடுதலையைப் பற்றிய ஞானத்தை மறுபடியும் மறுபடியும் செயல்படுத்துதல் அப்யாஸம். இது முன்பே செயல்படுத்தப்படவேண்டியது. ஆகையால் முன்பு அனுபவிக்கப்பட்ட நான்குவித ஸம்பிரக்ஞாத அனுபவத்தால் உண்டான ஸம்ஸ்காரங்களின் மிகுதி.

த்யானம் செய்யப்படவேண்டியதும் த்யானம் செய்கிறவனும் ஒரே உருவத்தை அடைந்திருக்கும் நிலை. இரண்டும் ஒன்றாக மாட்டா. இது அஸம்ப்ரக்ஞாதஸமாதி என்று சொல்லப்படுகின்றது. ஸம்ப்ரக்ஞாதஸமாதியின் அனுபவம் ஏற்படாவிடில் அஸம்ப்ரக்ஞாதஸமாதி ஏற்படாது. இவை இரண்டும் உடலுடன் கூடிய ஆத்மாவிற்குத்தான் உண்டு. (சிலர்) கூறும் ஜீவன்முக்தி என்பதற்கு இல்லை. ஆகையால்தான் ''இங்கு பிரம்மத்தை அடைகிறான்''[35] என்று சொல்லப்பட்டது. அதாவது தான் உடலில் இருக்கும்போதே தன்னால் செய்யப்படும் நித்தியநைமித்திககர்ம என்ற பகவத் த்யானத்தை செய்யும் காலத்தில் உண்டாகும். ''இங்கு'' என்பதற்கு பகவானை த்யானம் செய்யும்போது என்று பொருள். ''ப்ராரப்த கர்மங்கள் அனுபவிப்பதால் தான் நாசம் அடைகின்றன'' என்ற நியாயத்திற்கு ஒத்தவாறு இது சொல்லப்பட்டது. உடல் நீங்கும்வரை பிராரப்த கர்மாவின் அனுபவத்தை விடமுடியாது.

பலாத்காரமாக உடலை விட்டால் தன்னைத்தானே கொல்லுதல் என்ற தோஷத்தால் மறுபடியும் இங்கு உடலை அடைய வேண்டிவரும். ஆகையால் தான் 'வக்ரமான வழியைப் பின்பற்றும்போது தண்டனையால் ஜீவனைப் பாவமற்றவனாகச் செய்து பிரபுவானவன் தன்னுடன் சேர்த்துக் கொள்ளுகிறான்''[36] என்று நிகமாந்தமகாதேசிகனுடைய வசனம் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் உறுதியுடன் கூறப்பட்டுள்ளது.

# 1.19 பவப்ரத்யயோ விதேஹ ப்ரக்ருதிலயாநாம்

[உண்டாகிறது என்பதனுடைய ஞானத்தை உடல அற்றவர்களும் பிரகிருதியிலேயே அழுந்தியவர்களும் அடைவார்கள்.]

மறு பிறவிக்குக் காரணம் நிரோத ஸமாதி என்று பொருள். யாருக்கு இது என்று கேட்டால் போகத்தில் ஆசையையுடைய உடல் அற்றவர்களுக்கும், பிரகிருதியில் அழுந்தியவர்களுக்கும் நிரோத ஸமாதி மறு பிறப்பிற்குக் காரணம் என்று பதில் கூறவேண்டும். உடல் அற்றவர்கள் தேவர்கள். ஆறு கோசங்களையுடைய ஸ்தூல (கண்ணுக்குப் புலப்படக்கூடிய) உடல் அற்றவர்கள். ஸ்வாச கோசங்கள் இரண்டு. அன்னகோசம் ஒன்று, மல மூத்திரக் கோசங்கள் இரண்டு, ஜாடராக்னிகோசம் ஒன்று என்று ஆறு கோசங்கள். இவர்களுக்கு இந்த கோசங்கள் உடலில் இல்லை என்பதால் இவர்கள் உடல் அற்றவர்கள். இது ஒரு வகுப்பு.

மற்றொன்று ப்ரக்ருதிலயர்கள். ப்ரக்ருதி என்பது மூன்று குணங்களின் உருவில் உள்ளது. ஸூக்ஷ்மமானது. இது ஆத்மா அல்ல. அதனையே ஆத்மா என்று பிரமத்தால் (பிரமையால்) அறிந்து ஸமாதியில் பிராப்தகர்மாவினுல் அந்த ப்ரக்ருதியை த்யானம் செய்யத் தக்கது என்று உபாஸித்தலால், தத்க்ரது[36] என்ற ந்யாயத்தாலும் கீதையின்[36-B] ''எதை எதையோ'' என்ற ந்யாயத்தாலும் கூறியபடி ஆத்மா அல்லாத அந்த ப்ரக்ருதியை அடைந்து அதிலேயே அழுந்தி இருப்பவர்கள் ப்ரக்ருதிலயத்தை அடைந்தவர்கள். இது வேறொரு வகுப்பு. இவ்வகுப்பில் இந்திரியங்களில் அழுந்தியவர்களும் சேர்க்கப்படுகின்றுர்கள். ப்ரக்ருதி உபாஸிக்கத் தக்கது. த்யானம் செய்யத்தக்கது என்று நினைக்கும் காரணத்தால் இவர்கள் உபாஸனத்தை நிரோத ஸமாதி என்று எண்ணுகிறுர்கள். ஆனுல் இது நிரோத ஸமாதியின் ஸ்வபாவம் அல்ல. அவர்களுக்கு இது அபிமானமாய் உள்ளது. த்யானம் செய்யத் தக்கவனுய் இருப்பதாலும், த்யானம் செய்யும்படி செய்பவனுய் இருப்பதாலும் பரமாத்மாவை அடைவிக்கும் கர்மாவை மறந்துவிடுகிறுர்கள். இதற்குக் காரணம் பலமுள்ள ப்ராரப்தகர்மவாஸனைதான். தன்னை பகவானிடத்தில் ஸமர்ப்பித்த பக்தர்களுக்கு இது பெரிய அபராதமாகும். இதன் மூலம் பகவானுடைய தண்டனைதான் ஏற்படும். மறுபிறப்புக்குக் காரணமாகும் த்யானம் பகவானுல் அளிக்கப்படும் தண்டனை.

இந்த ஸூத்திரத்திற்கு முன்னுரை பாதஞ்ஜல யோக ஸூத்திரத்திற்கு பாஷ்யம், அதற்கு வியாக்கியானம், அதற்கு டிப்பணீ இவைகளே எழுதியவர்களால் செய்யப்படவில்லே. ஆயினும் பாதஞ்ஜலயோகஸூத்திரங்களுக்கு பிரம்ம ஸூத் திரங்களுடன் ஒற்றுமை உண்டு. யோக ஸூத்திரத்தை செய்தவரிடம் சிறிது குறைவு இருக்கலாம். ஆத்மா, பரமாத்மா, ப்ரக்ருதி இவைகளின் தத்துவத்தை பரிசீலனை செய்த ஸ்ரீமான் யாமுனமுனிகளால் அருளப்பட்ட புருஷ நிர்ணயம், என்ற நூலிலும், ஆத்மஸித்தி, ஈச்வரஸித்தி யிலும் பாதஞ்ஜலயோகத்தைப்பற்றிய விசாரம் செய்யப்பட்டுள்ளது. பகவானிடத்தில் ஏற்படவேண்டிய ப்ரபத்திக்கு[37] யோகம் காரணமாகின்றது என்று தோன்றுகிறது. மிகவும் பலமான பழைய வாஸனையை அடைந்த மனத்தினுடைய அதிகாரம் (தகுதி) ஒருவருக்கொருவரிடம் வித்தியாஸப்படு கின்றது. இந்த வித்தியாஸத்தால் ஸமாதி பாதத்தில் கூறப்பட்ட அஸம்பிரக்ஞாத ஸமாதியைச் செய்வது பல விருப்பங்களுக்கு இடத்தைத் தருகின்றது. இம் முன்னுரை மந்த புத்தியுள்ளவர் களுக்கு ஸந்தேகத்தை நீக்குவதற்கு உதவும் என்று யோகவல்லீகாரருடைய அபிப்ராயம்.

## 1.20 ச்ரத்தா வீர்ய ஸ்ம்ருதி ஸமாதி ப்ரக்ஞாபூர்வக இதரேஷாம்

[பிறருக்கு ச்ரத்தை, வீர்யம், ஸ்ம்ருதி, ஸமாதி ஞானம் இவை அவசியம்.]

மோக்ஷத்தை விரும்புபவன் போகத்தை விரும்புபவன் என்று யோகிகள் இருவகைப்படுவர். மோக்ஷத்தை விரும்புபவருடைய ஸ்வரூபம் இந்த ஸூத்திரத்தில் கூறப் பட்டுள்ளது. போகத்தை விரும்புபவர்களுக்கு முன் ஸூத்திரத்தில் கூறப்பட்டுள்ளது. இரு வகுப்பினரும் ஸமாதியை அடைந்தவர் கள். போகத்தை விரும்புவோர் செய்யும் ஸமாதி காம்யம் என்று முன் ஸூத்திர்த்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. மோக்ஷத்தை விரும்புவோர் செய்யவேண்டிய ஸமாதிக்குச் ஸாதனங்கள் இந்த ஸூத்திரத்தில் கூறப்பட்டுள்ளன.

நாதமுனிகள் யோகரஹஸ்யத்தில் ஸமாதியின் ஸ்வ ரூபத்தை நிர்ணயம் செய்வதற்கும் ஸித்தியை பெறுவதற்கும் முயற்சி செய்திருக்கிறார்.

யோகசாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள யோகானுஷ்டானம் என்ற கர்ம பகவான் பதஞ்ஜலி காலத்திற்குப் பிறகுதான் உண்டாயிற்று. அதற்கு முன்பு இல்லை என்று சிலர் கூறுகின்றனர். வேதபாஷ்யம் முழுவதையும் படித்து அதன் கருத்தை ஆலோசனை செய்தால் பிரம்மரிஷிகுலத்திலும் யோகிகளின் குலத்திலும் ஆசாரங்களிலும் இவைகளைப் படிப்பதும் யோகானுஷ்டானமும் யோக சாஸ்திரமும் எப்போதும் இருந்தன என்று நிச்சயமாகிறது. இதற்காகவே பராசர புராணத்தில் யோகானுஷ்டானமும் ஸமாதியின் லக்ஷணமும் சொல்லப்பட்டுள்ளன. ஸ்ரீமந்நாராயணனே ஸனகர் ஸனந்தர் ஆகிய நித்ய ஸூரிகளுக்கு முதன் முதலாக யோகத்தைச் சொன்னார். இவர்கள்தான் முதன் முதலில் சித்தவ்ருத்தியை அடக்கினார்கள்.

இவர்களிடமிருந்து நான்முகனான பிரம்மாவிற்கு இந்த யோகம் கிடைத்தது. அவரும் தன்னுடைய மனத்தினின்று தோன்றிய பிரம்மரிஷிச்ரேஷ்டரான வஸிஷ்டருக்கு யோக ஸம்பிரதாயத்தைக் கொடுத்தார். வஸிஷ்டரும் குற்றமற்ற யோக சக்தியையுடைய தன் பிள்ளை சக்தி என்பவருக்கு கொடுத்தார். அவரும் தன்னுடைய பிள்ளையான பராசரருக்குக் கொடுத்தார். பராசரரும் தன் சிஷ்யனான மைத்திரேயருக்கும், பிள்ளையான வ்யாஸருக்கும் கொடுத்தார். வ்யாஸர் தன் பிள்ளை சுகருக்குக் கொடுத்தார். அந்த சுகரை எல்லோரும் பாலப்ரம்மயோகி என்று போற்றுகிறார்கள். சாஸ்திரத்தில் வகுக்கப்பட்ட கர்மத்தை செய்யும்போதும், யோகத்தைச் செய்யும்போதும், அங்கங்களுடன் கூடிய வேதத்தை அத்யயனம் செய்யும்போதும், தன்னுடைய குருக்களுடைய பரம்பரையை இரமமாகப் போற்றுவது மூல காரணம். இது நல்ல பலன்களை அளிக்கும். சொற்களுடைய பொருளை அறிந்துகொள்ளாமல் கர்மங்களை செய்வது விபரீதமான பயனைத் தரும் என்று தற்காலத்திலுள்ள விஞ்ஞானிகள் ஒப்புக் கொள்ளுகிறார்கள். யோகத்தின் அங்கங்களை அனுஷ்டிப்பதற்கு எட்டு படிகள் உண்டு. அவைகளின் எட்டாவது படி ஸமாதி என்று பதஞ்ஜலி தன் ஸூத்திரத்தில் (2.29) கூறுகின்றார்.

ஸமாதி என்ற சொல்லும், த்யானம் என்ற சொல்லும் ஒரே பொருளைக் குறிக்கின்றனவா, அல்லது வேறுபட்ட பொருள்களை குறிக்கின்றனவா என்பதை அறிய வேண்டும். இதற்குப் பதில் (இரண்டுக்கும்) ஒரே ஒரு பொருள்தான் உள்ளது. ஆனால்

த்யானத்தை முன்னிட்டுத்தான் இதனைப் பயிலவேண்டும். மூன்றாவது பாதத்தில் சொல்லியபடி த்யானத்தைக் கடைபிடிக்க வேண்டும். இவ்விதம் அனுஷ்டானம் செய்ய வேண்டும் என்பது குரு பரம்பரையின் ஸம்பிரதாயத்தால் தெரிகின்றது. த்யானம், த்யானம் செய்யப்படும் பொருள், த்யானம் செய்பவன் என்ற மூன்றினுடைய ஸ்வரூபத்தை அனுபவிக்காமல் ஸமாதியை உபதேசிக்க முடியாது. இம் மூன்றும் உபநிஷத்துக்களில் நன்றாக விளக்கப்பட்டுள்ளன. கைவல்யோபநிஷத்தில்[38] "ஆத்மாவை அரணியாகச் செய்து, பிரணவத்தை மேல் அரணியாகச் செய்து, த்யானம் என்ற கடைதலை அப்யாஸம் செய்வதால் மறைந்து இருப்பதைப் பார்க்க முடியும்," என்று கூறப்பட்டுள்ளது.

ரஜஸ், தமஸ் இவைகளால் அடியோடு விடப்பட்டுள்ள சுத்த த்யான உருவமாக மாறின மனத்துடனும், ஜீவாத்மாவின் தர்மபூத த்யானத்துடனும் த்யானம் செய்ய வேண்டும். அப்போது த்யானம் செய்பவன் த்யானம் செய்ய வேண்டிய பொருளின் உருவத்தை அனுபவித்துக் கொண்டு இருக்கிறான். அந்த நிலை ஸமாதி என்று கூறப்படுகின்றது. இந்த ஸமாதியானது நான் என்பதைப்பற்றி உபாஸனை செய்தால்தான் கிடைக்கும்.

இந்த ஸூத்திரத்தில் ச்ரத்தை, வீர்யம் முதலிய ஐந்து உதவிக் கருவிகள் நான் என்பதைப் பற்றி உபாஸனை செய்வதற்கு நேராகவே பயன்படுகின்றன. இந்த உபாஸனை ஸமாதியை நேராகவே உண்டு பண்ணும்.

நான் என்பதைப் பற்றிய உபாஸனையின் முறை இந்திரன் "என்னை உபாஸனம் செய்". என்று சொன்ன ப்ரதர்தனவித்யையிலும்[39] "பட்டணத்தின் நடுவில் உள்ள தாமரைக்குள் இருக்கும் தஹரம் என்ற ஆகாயத்தில் துன்பமற்றவனாக இருக்கிறான். அதற்குள் இருப்பவனை உபாஸிக்க வேண்டும்.[40] என்று நாராயணீயத்திலும் "வில்லை எடுத்துக்கொண்டு உபநிஷந்மயமாகிய பெரிய அம்பை, உபாஸனையால் கூர்மையாகச் செய்து அப்யாஸத்தால் அதன் மயமான மனத்தால் தொடுக்க வேண்டும். நல்லவனே! அது அக்ஷரம்[41] என்று தெரிந்துகொள். பிரணவம் வில், அம்பு ஆத்மா, பிரம்மம் இலக்கு, அதனை கவனத்துடன் பிளக்க வேண்டும். அம்பைப்போல் அதன்மயமாக ஆகி[42] விடுவான்." "ஆத்மாவை அரணியாகச் செய்து மறைந்திருப்பதைப் பார்க்கவேண்டும்[43]." "ஆத்மாவைப் பற்றிய யோகத்தால் ஸந்தோஷத்தையும் துயரத்தையும் விட்டு விடுகிறான்.[44]".

ப்ரதர்த்தனவித்யையிலும், நாராயணீயத்திலும், முண்டக, கட, சாண்டில்ய, ச்வேதாச்வதர முதலிய ஆயிரத்திற்கு மேலுள்ள நூல்களிலும்[45], நான் என்பதைப் பற்றிய உபாஸனைமுறை வர்ணிக்கப்பட்டுள்ளது. இவைகள் எல்லா வற்றையும் நன்கு எண்ணி உபாஸனை செய்ய வேண்டும்.

நான் என்பது நான் என்ற வடிவில் உள்ள ஞானம், 'அ' 'உ' அனுஸ்வாரம் என்ற எழுத்துக்களின் வரிசையின் வடிவில் மாத்திரம் உள்ளதல்ல. ''சப்தமானது பொருளை விட்டு பிரியாதது.'' என்று பூர்வ மீமாம்ஸா ஸூத்ரம்[46]. அஹம் என்ற சொல்லிற்கு உலகின் தர்மத்தைத் தாண்டி எல்லாவற்றினுள் அடக்கியாளும் பரமாத்மாவுடன் நெருங்கி உள்ளவன் ஜீவன்தான் பொருள். பரமாத்மாவைக் குறிக்கும் அஹம் என்ற சொல்லும், ஜீவாத்மாவைக் குறிக்கும் அஹம் என்ற சொல்லும் ஒன்றே. அப்படிப்பட்ட அந்தர்யாமியால் ஜீவாத்மா குறிப்பிடப்படு கிறான் என்று அறியவேண்டும். இந்த எண்ணம் எல்லோருக்கும் எளிதில் கிடைக்கக்கூடியதல்ல. இது பகவத்கீதையில்[47] அர்ஜுனனுக்கு ''யோகமாயையால் சூழப்பட்ட நான் எல்லோராலும் காணக் கூடியவனல்ல.'' என்று உபதேசிக்கப்பட்டது. இதை மறந்துவிட்டு அஹம் என்ற பொருள் ஆத்மாவைக் குறிக்காது, அஹங்கார உருவில் மாறினதைக் குறிக்கும் என்று சிலர் கூறுகின்றனர்[48]. சப்தத்தின் தத்துவத்தைத் தெரிந்து கொண்டவர்கள், பதம், வாக்கியம், பிரமாணம் இவைகளுக்கு இப்பொருள் ஒவ்வாது என்று சொல்லுகின்றனர்.[49] இவர்கள்[50] வேதத்தின் சொற்களின் தத்துவத்தை அறிந்தவர்கள். ஆகையால் இந்தப் பொருளை மதிக்க மாட்டார்கள். இவ்வித 'நான்' என்பதைப் பற்றிய உபாஸனை ஒன்றே எல்லாவித ஸமாதியையும் நடத்திவைக்கும். மோக்ஷத்தில் விருப்பம் உள்ளவர்களுக்கும் இதைச் செய்யும்.

யோக ஸூத்திரங்களுக்கு உரை எழுதிய பாஷ்யகாரர் ச்ரத்தா என்ற சொல்லுக்கு சித்தத்தினுடைய தெளிவு என்று உரை இயற்றினர். இது முதன் முதலில் யோகம் செய்பவர்களுக்கு மகிழ்ச்சியை உண்டாக்கும். நான் என்பதைப் பற்றிய உபாஸனை செய்பவர்களுக்கு மகிழ்ச்சியை உண்டாக்காது. எல்லா ஸந்தர்ப்பங் களிலும் உபாஸ்யம் உபாஸனை என்ற சொற்கள் குற்றமற்ற த்யானத்தைக் குறிக்கும். ஆனால் இது ஜீவனுடைய ஞானத்தினுள் உள்ள அறிவாகும். எவர்கள் அஹம் என்ற

சொல்லிற்கு அஹங்கார உருவத்திலுள்ள சித்தத்தின் மாறுதல் பொருள் என்று கூறுகின்றூர்களோ, அவர்களை ப்ரக்ருதியின் இரண்டாவது உருவமாக மாறும் அஹங்காரம் சேதனமா? அசேதனமா? என்று கேட்கிறேம். சேதனம் இல்லை என்று கூறப்பட்டால் இது அவர்களாலேயே நிராகரிக்கப்பட்டுள்ளது. இதனை விவரிக்க வேண்டியதில்லை. அசேதனமாக இருந்த போதிலும் ப்ரக்ருதிக்கு விசித்திரமான சக்தியை ஒப்புக் கொள்கிறேம் என்று பிடிவாதம் செய்தால், அவர்களை ஞானமற்ற எந்தப் பொருளுக்காவது, விருப்பம், முயற்சி, பிம்பம், பிரதிபிம்பம் போன்றவைகள் எங்காவது காணப் படுகின்றவா என்று கேட்கவேண்டும். அப்படியிருப்பின் புருஷன் என்பவரை இவர்களுடைய ஸித்தாந்தத்தில் ஒப்புக்கொள்வது வீண்தான். ஆகையால் அஹம் என்ற பொருள் ஞானத்துடன் கூடிய மாசற்ற பரமாணு உருவத்தில் ஞானஸ்வரூபனுய் ஆனந்தத்தையுடைய ஒரு ஜீவன். அஹம் என்ற சொல் அந்தர்யாமியாய் இருப்பவனைக் குறிக்கும்போது அவன் எல்லா கல்யாண குணங்களும் நிறைந்தவன், எல்லோரையும் அடக்கி ஆளுபவன், ஆனந்தமுடையவன், ஆனந்தத்தைக் கொடுப்பவன். தன்னை அடைந்தாரைக் காப்பாற்றுபவனுக உள்ளான் என்ற இந்த வித்தியாஸமானது ஊகிக்கப்பட வேண்டும். அஹம் என்ற இரண்டு சொற்களும் ஞான வடிவமானவை, ஞானமுள்ளவை, மாசற்றவை. எல்லாவற்றிற்கும் ஆதாரமானவை[51] என்று எல்லா உபநிஷத்துக்களிலும் பிரஸித்தமாய் உள்ளது. இது முண்டக உபநிஷத்[52]தில், பிரணவத்தின் அர்த்தத்தை விவரிக்கும்போது கூறப்பட்டுள்ளது. இவ்வித அஹம் என்பதைப் பற்றிய உபாஸனை செய்தால் அதற்குக் கிடைக்கும் பயன் ஸமாதிதான்.

இது அப்யாஸம் செய்பவனுடைய பிரார்த்தனைக்கு ஏற்ற காலம் வரையில் இருக்கும். மேலும் த்யானம் செய்பவனுக்கு அவனுக்கு இஷ்டமான பயனைத் தரும் என்பதற்கு வால்மீகி[53], பராசரர், வஸிஷ்டர் முதலியோர் இயற்றிய நூல்கள். பிரமாணங்கள், ஸமாதியில் பக்தர்களின் வசத்தில் கட்டுண்டு பிரியத்தை அடைந்து த்யானம் செய்யத்தக்க உருவில் பகவான் இஷ்டங்களைக் கொடுக்கிறுன். எல்லா ஆபத் .ளினின்றும் காப்பாற்றுகிருன். இதற்குப் பிரமாணம் ராமாயணம்[54] முதலிய நூல்கள். இவையெல்லாம் குருகாதீசர் இயற்றிய நாதமுனிகளின்

யோகரகஸ்யத்தினுடைய ஸாரத்திலும்[55] யாமுனமுனிகள் இயற்றிய ஸித்தித்ரயத்திலடங்கிய ஈச்வரஸித்தியிலும் கூறப் பட்டுள்ளன. வித்வான்கள் அங்கு கண்டுகொள்ளலாம்.

ஸமாதி என்பது ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் உண்டாகும் ஸம்பந்தம் என்று இதுவரை எழுதியதில் இருந்து நிச்சயமாகிறது. இவ்விதம் இருப்பின் 1.3 ஸூத்திரத்தில் ஸமாதியின் பயன் ஆத்மாவின் ஸ்வரூபத்தைத் தெரிந்து கொள்ளுவது என்று கூறப்பட்டிருக்கிறது. அப்போது ஜீவனுக்கும், பரமாத்மாவுக்கும் உள்ள ஸம்பந்தமான ஸமாதியானது தோன்றுவதில்லை. அங்கு கூறப்பட்டுள்ள நிரோத ஸமாதியின் பயன் ஜீவனுடைய ஸ்வரூபம்தான் என்று சொல்லப்பட்டிருப்பதால் விரோதம் வருகின்றது. இவ்விதம் சிலர் அஹம் என்பதைப் பற்றிய உபாஸனைக்கு உபாஸனஞானம் மூலகாரணம் என்ற ஸந்தேஹத்தை எழுப்புகின்றனர் என்பதை யும் அறியவேண்டும். ஸம்பந்தப்பட்ட பொருள்களில் ஒன்றின் ஞானம் உண்டாகும்போது அச்சம்பந்தத்தை உடைய வைகளைப் பற்றிய ஞானம் அனைத்தும் ஏற்படுகின்றது. ஆகவே இந்த 1.3 ஸூத்திரத்தில் ஸம்பந்தமானது உடல், உடலையுடையவன் என்ற உருவத்தில் உள்ளது. சீடன், குரு என்றும், தகப்பன் பிள்ளை என்றும், அங்கம் அங்கங்களுடன் கூடியது என்றும் ஏதோ ஒரு ஸம்பந்தம் உள்ளது. ஆனால் அந்த ஸூத்திரத்தில் உள்ள பார்ப்பவன் (த்ரஷ்டு:) என்ற சொல் பரமாத்மாவுடன் கூடிய ஜீவனைக் குறிக்கும். நவநீத நாட்டியமாடிய[56] ஆசார்யனால் (கிருஷ்ணனால்) அர்ஜுனனுக்கு உபதேசம் செய்யும் காலத்தில் பகவத் கீதையில்[57] "என்னைக் காட்டிலும் உயர்ந்தது ஒன்றும் கிடையாது" "அசைவது அசையாதது என்ற பொருள்களில் யாதும் என்னை விட்டு இருக்காது" என்று கூறப்பட்டுள்ளது என்று யோகவல்லீ ஞாபகப்படுத்துகின்றது.

## 1.21 தீவ்ரஸம்வேகாநாமாஸன்ன:

(தீவ்ரமான வேகத்துடன் கூடியவர்களுக்கு அருகில் இது இருக்கும்)

இப்போதே பகவானை நேரில் காண்பிக்கக் கூடிய ஸமாதியை அடைவோம் என்று எவர்கள் வேகத்தை மனத்தில் வைத்துக்கொண்டு 1–18 ஸூத்திரங்களில் சொல்லியபடி ஸமாதி

ஸாதனங்களைக் கடைபிடிக்கிறார்களோ அவர்கள் தீவ்ரமான வேகத்தை உடையவர்கள். இவர்களுக்கு இது மிகவும் அருகில் இருக்கும். நான் என்ற ஞானத்தைப் பற்றிய உபாஸனையால் செய்யப்படும் த்யானத்தின் மூலம் ஸமாதியானது ஆத்மா, பரமாத்மாவை அடையும் பயனைப் பெறுகின்றது.

## 1.22 ம்ருதுமத்யாதிமாத்ரத்வாத்ததோபி விசேஷ:

(ம்ருது, மத்யம், முதலிய முறையில் மிகவும் பெரியதாக இருப்பதால் அதைக் காட்டிலும் இங்கு விசேஷம் உள்ளது.)

## 1.23 ஈச்வரப்ரணிதாநாத் வா

[அல்லது ஈச்வரனை த்யானம் செய்வதால் பயனை அளிக்கும்.]

ஸமாதிக்குக் காரணம் பரிசுத்தமான ஜீவனுடைய ஸ்வரூப ஞானம். அது 1.3 ஸூத்திரங்களில் விளக்கப்பட்டுள்ளது. பார்ப்பவனுடைய (த்ரஷ்டு:) என்ற சொல் தன்னுடைய ஆத்மாவைப் பார்ப்பவனைக் குறிக்கின்றது. ஸ்வாத்மா என்ற சொல் ஜீவனை உடலாக உடைய பரமாத்மா என்ற ஞானம் சுத்தம், மிச்ரம் (கலந்தது) என்று இருவகைப்படும். மிச்ர ஞானமானது ச்ப்த பிரம்மம் என்று[58] பெயர் பெற்றபோதிலும், எல்லோரும் அதனை அறியமாட்டார்கள். தன்னுடைய ஆத்மஸ்வரூபமாயினும் அது தன் ஆத்மாவின் ஞானமாகும் என்று கௌஷீதகி (என்ற) உபநிஷத்தில்[59] ப்ரதர்த்தன வித்யையில் கூறப்பட்டுள்ளது. இந்த ஞானம் நான் அஹம் என்ற ஞானத்தைப் பற்றிய உபாஸனையைச் செய்வதற்கு உதவும்; ஸமாதியையும் முடித்துக் கொடுக்கும் என்று நாதமுனிகளுடைய திருவுள்ளம்.

இரண்டாவது காரணம் ஸமாதியில் இவ்விதம் நான் (அஹம்) என்ற ஞானத்தைப்பற்றி உபாஸனை செய்வதற்கு எவர்கள்

திறமையற்றவர்களோ அவர்கள் அந்த ஸமாதியை அடைய விரும்பும்போது சித்தத்தில் உண்டாகும் கலக்கத்தை விலக்க வேண்டிவரும். இதற்காக மேன்மையான வைராக்கியமும், ப்ரக்ருதி, புருஷன் என்ற விவேகஞானமும் அப்யாஸம் செய்வதால் பயன் அளிக்கும் என்று பகவான் பதஞ்ஜலியால் 1–12 ஸூத்திரங்களில் கூறப்பட்டுள்ளது. இது நாதமுனிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவ்வித ஸமாதியானது அந்தந்த ஜீவனுக்கு ஆதியில்லாதகர்மவாஸனையால், தான் ஆசைப்படக் கூடிய உருவத்தை அடைவிக்கின்றது. இவை யாவற்றையும் ஏற்றுக் கொண்டு 1–19 ஸூத்திரங்களில் கூறப்பட்டுள்ள ஸமாதியின் பயன் சிலருக்குத்தான் உண்டாகும் என்று யோக ரஹஸ்யத்தில் ஆங்காங்கு வெளியிடப்பட்டுள்ளது.

மூன்றுவது காரணம் 1–20வது ஸூத்திரத்தில் ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. நாம் இதனை ஒப்புக் கொள்ளுகிறோம். க்ருத யுகத்தில் அனுஷ்டானத்திற்கு கூறப்பட்டுள்ள வர்ணாச்ரம தர்மங்களைப் போல் மேற்கூறப்பட்ட ஸமாதிக்கு மூன்று வழிகளையும் கடைப்பிடிப்பது கடினமானது. இதைக்கருதி, எல்லா ஆச்ரமத்தைச் சேர்ந்தவர்களும் எந்த ஆச்ரமத்திலும் சேரா தவர்களும் மிகவும் எளிதில் கடைபிடிக்கக் கூடியது ஸமாதி என்று பதஞ்ஜலி கூறுகின்றார். ப்ரகிருதியால் உண்டாகும் மூன்றுவித துயரங்களையும் இது போக்கிவிடும். எல்லா ஆச்ரமத்தைச் சேர்ந்தவர்களும் எளிதில் இது கடைப்பிடிக்கக் கூடியது. இக் கருத்தை 'ஸமாதிக்கு வேறு உபாயம். இதனைத் தவிர்த்து உள்ளதா' என்று பாஷ்யத்தில்[60] வாக்கியம் காண்பிக்கிறது. மேன்மை பொருந்திய நாதமுனி இதனை ஏற்றுக் கொண்டு "அல்லது பகவானைத் த்யானம் செய்வதால்" என்ற ஸூத்திரத்தின் மூலம் ஸமாதியின் உபாயத்தைச் சொல்லு வதற்கு பகவான் பதஞ்ஜலி எண்ணுகிறார் என்று எழுதியுள்ளார். இவ்வுலகில் அனுபவத்தின் பயன்களையும் மோக்ஷத்தையும் அளிக்கக் கூடியது இந்த எளிதான நான்காவது[61] உபாயம்.

ஈச்வர என்ற சொல் ஐச்வர்யத்தைப் பொருளாக உடைய ஈச என்ற தாதுவிலிருந்து உண்டாகியிருக்கின்றது. ஐச்வர்யத்தை இயல்பிலேயே உடையவன் ஈச்வரன். ஐச்வர்யம் என்பது எப்போதும் மற்றொன்றைப் பற்றாததாயும், தன்னுடைய ஸங்கல்பம் ஒன்றையே பற்றினதாயும் உள்ளது. கர்மங்களைப்

பற்றினது அல்ல. கர்மங்கள் வைதிகம், தாந்த்ரிகம், வைதிகதாந்த்ரிகம் என்று மூன்று வகைப்படும் என்பது வேறு விஷயம். இப்பேர்ப்பட்ட ஐச்வர்யத்துடன் கூடியவன் ஈச்வரன் பரமாத்மாதான். இதனால் அவன் மற்ற எவருக்கும் அடங்கினவனல்ல என்று தெரிகிறது. ஈச்வர என்ற சொல் ஒருமையில் உள்ளது. அது ஈச்வரனையும், ஈச்வரியையும் குறிக்கும். ஈச்வரனுடன் ஈச்வரியும் உலகத்தில் படைத்தல் முதலியவைகளைச் செய்கிருள். பாஞ்சராத்ர நூல்களில் இது நன்கு விளக்கப்பட்டுள்ளது[62]. பிராசீன வேதாந்திகள் இருவரையும் திவ்யதம்பதி என்ற ஒரே சொல்லால் குறிப்பிடுவர்.

ஈச்வரனுடைய ப்ரணிதானம் ஈச்வரப்ரணிதானம். மேன்மையுடன் அதிகமாக தரிக்கப்படுகிறது என்பதை பிரணிதானம் என்ற சொல் குறிக்கின்றது. அதாவது ஈச்வரனுடைய திருவடிகளில், வேறு மார்கம் இல்லாததாலும், திடமான அன்பினலும், தன்னை அர்ப்பிப்பது என்று பொருள். இது மூன்று கரணங்களுடைய[63] (கருவிகள்) சுத்தியுடன் செய்யப்பட வேண்டும். இதனுடைய ஸ்வரூபம்: பலவித தாபங்களால் ஆக்கிரமிக்கப்பட்ட நான் மூன்று வித தாபத்தினல் உண்டான துக்கங்களை ஸகிப்பதற்கு முடியாதவனக இருக்கிறேன். உன்னைத் தவிர்த்து அவ்விதத் துயரங்களை நீக்குபவர் உலகம் முழுவதிலும் யாரும் கிடையாது. ஒன்றுமில்லாத நான் மற்ற உபாயங்களைப் பற்ற சக்தியற்றவன். சாஸ்திரங்கள் மூலமாயும், உலக வழக்கின் மூலமாயும் காரணமேதுமில்லாமல், இதற்கு மேல் இல்லை என்று சொல்லக்கூடிய தயையுடையவன் நீ தான் என்று நிச்சயித்து என்னையும், என்னுடையவைகளையும் எது இருந்தாலும் அவை எல்லாம் உன்னுடையவையே என்று ஸமர்பிக்கிறேன்'' என்று எண்ணி ''ஓம் என்று தன்னை அவனுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும்'' என்று நாராயண உபநிஷத்தில்[64] கூறியுள்ளபடி தினந்தோறும் வணங்குவது என்று தெரிகிறது. இதுதான் ப்ரணிதானம் என்ற சொல்லுக்குப் பொருள். இவ்வித ப்ரணிதானத்தின் வழியாக ஸமாதியானது மேன்மையைப் பெறுகின்றது என்று இந்த ஸூத்திரத்தின் பொருள்.

## 'வா' என்ற சொல்லுக்கு உரை ஆசிரியரின் கருத்து:

பதஞ்ஜலி முனிவரால் இயற்றப்பட்ட யோக ஸூத்திரத்தில் முதல் பாதத்தில் யோகத்தின் பயனை ஸமாதிக்கு உள்ள நான்கு

உபாயங்கள் இந்த ஸூத்திரங்களில் மறைந்து கிடக்கின்றன. ஸமாதியை விரும்புபவர்கள் இவை நான்கில் ஏதேனும் ஒன்றை கடைப்பிடிக்க வேண்டும் என்ற காரணத்தால், நான்காவது காரணமான ஈச்வரப்பிரணிதானம் என்ற இந்த ஸூத்திரத்தில் அல்லது (வா) என்ற சொல்லால் நன்கு வெளியிடப்பட்டுள்ளது. ஸூத்திரம், பாஷ்யம் அதனுடைய உரை, அவைகளின் உரையாசிரியர்களால் இது விளக்கப்பட்டுள்ளது. 'வா' என்ற சொல்லுக்கு உவமை, பலவற்றில் ஒன்று என்ற பொருள்'' என்று நாமலிங்கானுசாஸநம் மூன்றும் காண்டம் நாநார்த் தாவ்யய வர்கத்தில்[65] கூறப்பட்டுள்ளது. இவ்விதம் ஸமாதிக்கு நான்கு காரணங்கள் தனித்தனியாகக் கூறப்பட்டுள் ளன என்று உரை செய்துள்ளனர். இவ்விஷயத்தில் யோக ரஹஸ்யத்தை இயற்றிய நாதமுனிகள் வா என்ற சொல்லானது தனித் தனியான பொருளைக் கூறுகின்றது என்று கூறியுள்ளார். அப்படியாயின் எல்லாவற்றிற்கும் அபவாதமுண்டு இலக்காகாதது[66] உண்டு என்ற நியாயத்தை மறந்து அவ்விதம் உரை இயற்றினர்கள் என்று யோகசாஸ்திரத்தை அப்யஸிப் பவர்கள் நிர்ணயிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். அதே அமரசிம்ஹனும்[67] வா என்ற சொல்லுக்கு ''ஏவம் து புனர் வை வா என்பவைகள் நிச்சயமான குறிப்பைக் குறிக்கின்றன'' என்று நாமலிங்கானுசாஸனத்தின் மூன்றுவது காண்டம் அவ்யயவர்கத்தில் வா என்ற சொல்லுக்கு நிச்சயமாக குறிப்பிடுதல் பொருள் என்று கூறியுள்ளார். முக்கியமான உபாயம் என்று யோகரஹஸ்யத்தில் வாதப்ரகரணத்தில் கூறப்பட்டுள்ளது. ஸமாதிக்குக் காரணமான எல்லாவற்றுள்ளும் இதுதான் ஸுலபமாக கடைப்பிடிக்கக் கூடியது. ஆகையால்தான் யோகவல்லியின் ஸமாதி பாதமானது பூர்வம், உத்தரம் என்று இருவிதமாக பிரிக்கப்பட்டுள்ளது. பூர்வபாகத்தில் கூறப்பட்டுள்ள ஸமாதியின் உபாயங்கள் இந்த யுகத்தில் செய்ய முடியாதவை. இவைகளையே மிக்க வைராக்கியத் துடனும், ப்ரக்ருதி, புருஷன் என்ற விவேகத்துடனும் கூடிய யோகாப்யாஸத்தை க்ருதயுகத்தில் உள்ள ஜீவன் களால்தான் அனுஷ்டிக்க முடியும் என்று இதற்குப் பொருள். ஆகையால் 1.1 ஸூத்திர முதல் 1.22 ஸூத்திரம் வரை பூர்வபாகத்தைச் சேர்ந்தது. இந்த நூலில் 1.23 முதல் இரண்டாவது பாதம் முடிய

ஸூத்திரங்கள் இரண்டாவது பாகத்தைச் சேர்ந்தவை என்று தெளிவாகின்றது. நாமலிங்கானுசாஸனத்தில் கூறப்பட்டுள்ளதை ஆதாரமாகக் கொண்டு ஸூத்திரத்தின் பொருளுக்கு உரை செய்யும்போது ஈச்வரபிரணிதானமாகிய உபாயம்தான் எல்லோருக்கும் ஸுலபமாயும் ஸமாதியை உடையவர்களாக இருப்பதற்கும் உபாயமாகும். வர்ணாச்ரம தர்மங்களில் மிகவும் உயர்ந்ததாயும் க்ஷத்திரியன் ஒருவனாலேயே செய்யக்கூடியதாயும் உள்ள அச்வமேதம், கோமேதம் முதலியவை வேதத்தில் கூறப்பட்டுள்ளன. ஆயினும் கலியுகத்தில் இவைகளை அனுஷ்டிப்பதற்கு முடியாது. அப்படி அனுஷ்டிக்கப்படாவிட்டாலும் குற்றம் ஏதும் உண்டாகாது. அவ் விதமே அந்த வர்ணாச்ரம தர்மங்களுக்குள் மிகச் சிறந்ததான நான்காவது ஆச்ரமத்தினுடைய தர்மானுஷ்டானமானது மற்ற யுகங்களில் செய்யக் கூடியவை. ஆயினும் கலியுகத்தில் செய்ய முடியாது. இவைகளை கலியுகத்தில் விட வேண்டும் என்று ''நெருப்பை மூட்டுவது, கவாலம்பத்தையும் இவ்வைந்தையும் கலியுகத்தில் விட்டு விட வேண்டும்'' என்று மனு[61] கூறுகின்றார்[68]. ஆதலால் இவைகள் அனுஷ்டிக்கப்படாமல் விடப்பட்டுள்ளன. இதனால் வேதங்களை மீறிவிட்ட குற்றம் உண்டாகாது என்று நிச்சயப்படுத்தப்பட்டுள்ளது. இவ்விதமே பகவான் பதஞ்ஜலியால் இயற்றப்பட்ட நான்கு பாதங்களை உடைய யோக ஸூத்திரத்தில் முதல் பாதத்தில் நிரோதஸமாதி கூறப்பட்டுள்ளது. இதற்கு உபாயமாயும் ஸமாதிக்கு அங்கமாயும் உள்ள வசீகாரம் என்ற பெயரையுடைய வைராக்கியம் குறிப்பிடப்பட்டுள்ளது. கலியுகத்தில் மனிதர்களின் ஆயுளின் அளவு மிகவும் குறைவாக உள்ளது. ஸமாதிக்கு உபாயத்தை அனுஷ்டிப்பதற்கு வெகுகாலம் வேண்டியிருக்கும் என்று ''வெகுகாலம் இடைவிடாமல்'' என்று 1–14 ஸூத்திரத்தில் கூறப்பட்டுள்ளது. இந்த பிரமாணத்தைக் கொண்டு வெகு காலம் கடைப்பிடிக்க வேண்டிய ஸமாதியின் காரணத்தை அனுஷ்டிப்பது ஸுலபமில்லை. முதல் பாதத்தில் இரண்டாவது பாகத்தில் கூறப்பட்டுள்ள ஈச்வரபிரணிதானம் என்பது பக்தியையும், பிரபத்தியையும் குறிப்பிடுகின்றது. இவை மிகவும் ஸுலபமாக செய்யக் கூடியவை. இது ''யோகங்களின் அனுஷ்டானம்'' என்ற 2.28 ஸூத்திரத்தில் விவரமாகக் கூறப்பட்டுள்ளது. இவைகளுடன் இரண்டாவது பாகத்தைச்

சேர்ந்த ஈச்வரப்ரணிதானம் தான் அவசியம். இவ்விதம் வர்ணிக்கும் பகவான் பதஞ்ஜலி மகரிஷி முதல் பாதம் இரண்டாவது பாகத்தில் தொடக்கத்திலேயே எல்லோரும் யோகம் செய்வதற்கு ஈச்வரப் பிரணிதானம்தான் மிகவும் எளியது என்று குறிப்பிடுகின்றார்.

ஈச்வர என்ற சொல் யாதொரு காரணத்தையும் பற்றாமலேயே ஐச்வர்யத்தை அடைந்துள்ள ஈச்வரனைக் குறிக்கும். ஆகையால் எல்லாவித த்யானங்களிலும் த்யானம் செய்யத்தக்கவன் என்று பிரணவத்தால் நிரூபிக்கப்படுகின்றான் எல்லோருக்கும் ஈச்வரனையும், லக்ஷ்மியுடன் கூடியவனையும், வாஸுதேவன் என்ற பெயரை உள்ளவனையும் இருக்கும் அவனையே குறிப்பிடுகின்றார் என்று அறியவேண்டும். அவன் எப்போதும் லக்ஷ்மியுடன் கூடவே இருக்கிறான். ஆதலால் பிரணவத்தால் நிரூபிக்கப்படும், ஸ்ரீயுடன் கூடிய நாராயணன்தான் ஸமாதிக்கு அங்கமான த்யானங்களுக்கு விஷயமானவன். "[69]ப்ரணவம் வில், ஆத்மா பாணம்... பாணத்தைப் போல் அதன் மயமாக ஆவான்". "[70]வில்லை எடுத்துக் கொண்டு உபநிஷத்தைச் சேர்ந்த இலக்கை, ஓ நல்லவனே, அதே அக்ஷரம் என்று பிளந்து விடு." "[71]ஓம் என்று ஆத்மாவைச் சேர்க்க வேண்டும்." என்பவை பிரமாணம். 'நாராயண' 'வாஸுதேவ' என்ற சொற்களால் குறிக்கப்படும் ஸர்வேச்வரன் "[72]தீரர்கள் பூதங்களுக்கு மூலமான எதை (எவனை) பார்க்கிறார்களோ", த்யானத்தால் பார்க்கிறார்களோ, (அவன்) யோகிகளுடைய ஸமாதிக்கும் விஷயமாகிறான். 'அவ்விதமே ஈச்வரியான மகாலக்ஷ்மிக்கும் என்று "[73] எல்லா பூதங்களுக்கும் ஈச்வரியான ச்ரீயான உன்னை இங்கு அழைக்கிறேன்" என்ற வேதங்களால், எல்லா பூதங்களுக்கும் மூலமாயிருப்பது நூற்றுக்கணக்கான வேத வாக்யங்களால் அறியப்படுகிறது.

ஈச்வரனிடத்தில் த்யானம் ஈச்வரப்ரணிதானம். ப்ரணிதானம் என்பது பக்தியின் விசேஷம், பராபக்தி என்று பெயரைக் கொண்டது. பக்தியாலும், பிரபத்தியாலும் ப்ரீதியை அடைந்த லக்ஷ்மியுடன் கூடிய நாராயணனே நாம் செய்யும் த்யானத்தின் சிறப்பால் மகிழ்ச்சியை அடைகின்றான். மூன்று[66] விதமான துன்பங்களினின்றும் விடுதலையை அளிக்கின்றான். இவ்வித ப்ரணிதானத்தாலேயே ஸமாதியின் ஸித்தியையும் தான் விரும்பும் பயன்களையும் த்யானம் செய்பவன் பெறுகின்றான்.

பதஞ்ஜலி ஸூத்திரத்தில் முதல் பாதத்தில் யோகாங்கங்களான த்யானம் முதலிய சொற்கள் தனித் தனியாக கூறப்படவில்லே. ஆயினும் இவைகளுள் சிறந்ததான ஸமாதி என்ற சொல்லானது பல ஸூத்திரங்களில் கூறப்பட்டு இருப்பதால் அதற்கு அங்கங்களான யமம் முதலியவைகளும் கூறப்பட்டுள்ளன என்று கொள்ள வேண்டும். இவ்விதம் சுருக்கமாக சொல்லப்பட்டுள்ளது.

## 1.24 க்லேசகர்மவிபாகாசயைரபராம்ருஷ்ட: புருஷவிசேஷ ஈச்வர:

(துயரம், கர்ம, கர்மபயன், ஸம்ஸ்காரங்கள் இவைகளால் பாதிக்கப்படாத புருஷச்ரேஷ்டன் ஈச்வரன்)

துயரங்கள்[74] ஆத்யாத்மிக, ஆதிதைவிக, ஆதிபௌதிக என்று எல்லா சாஸ்திரங்களிலும் பிரஸித்தமாய் உள்ளன. இந்த சாஸ்திரத்தில் துயரங்கள் அவித்யை முதலியவைகளாக பின்னுல் கூறப்படுகின்றன. கர்மங்கள் (முன் செய்த கர்ம பலத்தால்) சாஸ்திரத்தைப் பற்றியவைகளாயும், அவைகளே பற்றுதவைகளாயும் உள்ளன என்று அறிய வேண்டியவை. கர்ம பயன் என்பது கர்மத்தின் குறிப்பிட்ட நிலையைக் குறிக்கும். அதாவது கர்மத்தின் குறிப்பிடக்கூடிய மாறுதல் (விபாகம்) என்று கருத்து.

ஆசயம் என்பது பல ஸம்ஸ்காரங்கள் ஒன்ருகப் பின்னப்பட்டு மனத்தில் இருப்பது. இவைகளால் பாதிக்கப்படாதவன். இவைகளுள் இருப்பினும், இவைகளிலிருந்து பிரிந்து இருக்கிருன். தன்னுடைய விருப்பங்கள் யாவையும் பயன்பட அடைந்தவன். எப்பொழுதும் பரிபூர்ணமான ஆனந்தத்தை உடையவன். கர்மங்களுடைய பயன்களுடன் சேர்க்கையையும், பிரிவையும் அடையாதவன். பரிபூர்ணனுன பகவானுக்கு பயனில் ஆசையானது தானுகவே விலகியிருக்கின்றது. ஆகையால் ஈச்வரனுடன் அவைகட்கு சேர்ந்து இருப்பதற்கும், பிரிந்து இருப்பதற்கும் அவகாசம் இல்லே. இறந்த காலம், நிகழும் காலம், வருங்காலம் இம் மூன்றிலும் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற காலங்களிலும், துன்பங்கள் யாவற்றிற்கும் அவனே பாதிப்பதற்கு அவகாசம் இல்லே. இவ்வித துன்பங்களுடன் தொடர்பு அற்றவன் என்று பொருள்.

''என்னை கர்மங்கள் பாதிக்க மாட்டா. எனக்கு கர்மாவின் பயன்களில் விருப்பம் கிடையாது.'' என்று பகவத் கீதையிலும் ''அபஹதபாப்மா'' என்று சாந்தோக்யத்திலும் கூறப்பட்டுள்ளது.

சிறந்த புருஷன் ஈச்வரன். புருஷன் என்ற சொல்லானது நித்தியமாகவும், நிலைபெற்றதாயும் உள்ள சைதன்யம் என்ற குணத்துடன் கூடிய பரமாத்மாவைக் குறிக்கும். ஆத்மாக்கள் பலரும் ஜீவன் என்ற சொல்லால் மற்றவிடங்களில் குறிப்பிடப் படுகின்றனர். இந்த ஸூத்திரத்தில் புருஷ என்ற சொல்லானது பகவானைக் குறிக்கும் என்பது ''பகவான் என்ற சொல்லும் புருஷ என்ற சொல்லும் வாஸுதேவனுகிய பரமாத்மாவினிடத்தில் தானுகவே உள்ளதாக இருக்கும்[77]'' என்று பராசரபுராணத்திலிருந்து தெரிகின்றது. முக்கியமாக ''ஸஹஸ்ர சீர்ஷா புருஷ'' என்று புருஷஸூக்தத்திலும்[78] விசேஷ என்பது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. புருஷன் என்ற சொல் ஜீவனைக் குறிப்பிடும்படி உபயோகப்படுத்தப் படுகின்றது. இங்கு இந்த சொல் ஔபசாரிகம்[79] என்ற பிரயோகத்தில் உள்ளது என்று அறிய வேண்டும். மாணவன் சிங்கம் என்பது இங்கு உதாரணம். புரி என்ற சொல் ஐந்து பூதங்களால் உண்டான சரீரமாகிய பட்டணத்தில் படுத்திருக்கிறுன், சுகமாக தூங்குகிறுன், என்பதைக் குறிக்கின்றது. இவ்விதம் படுத்திருத்தல் ஜீவனுக்கும், பரமாத்மாவிற்கும் பொதுவானது. ஆனுல் படுத்துக்கொண்டு இருந்த போதிலும் பரமாத்மா பிறரை தகரம்[80] என்ற ஆகாயத்தில் அடக்கி வைத்துக் கொண்டு படுத்திருக்கிறுன். இது ராமாயணத்தில் இருந்து[81] ''ராமன் எப்போதும் தூக்கமற்று இருக்கிறுன். தூங்கினுலும் மானிடர்களிற்சிறந்தவன்'' என்று தெரிகிறது. மற்றவன் ஜீவன். கர்மங்களால் கட்டப்பட்டவனுக ஸுகம், துக்கம் இரண்டையும் அனுபவிக்கிறுன். இது இருவருக்கும் உள்ள வேறுபாடு. அங்கு இருந்த போதிலும் ஏன் அவன் கட்டப்பட்டவனுக இல்லை? ப்ரக்ருதியால் உண்டான உடல் இந்திரியங்கள் மனது இவைகளின் மாறுதல்களால் ஏன் அவன் பற்றப்படவில்லை? இதற்குப் பதில் அவன் எப்போதும் ஆனந்தத்துடன் இருப்பவன் என்பதே. ப்ரக்ருதியால் உண்டான மற்ற குணங்கள் அவனை அடைவதில்லை. ஆறுவித ருசிகளுடன் கூடிய ஆகாரத்தைச் சாப்பிட்டு திருப்தியை அடைந்தவனுக்கு சிறப்புள்ளதான சாப்பாடு ஆயினும் அதில் விருப்பம் இருக்காது.

அதேபோல் பரிபூர்ணனுன புருஷோத்தமன் அந்தர்யாமியாய் இருக்கிறுன். அவன் ஜீவனுடைய ஹ்ருதயத்தில் இருந்த போதிலும் ப்ரக்ருதியின் குணங்களால் உண்டாகும் போகங்களில் அவனுக்கு விருப்பம் கிடையாது. மிகவும் நெருக்கமாக உள்ள போதிலும் ப்ரக்ருதியின் குணங்கள் அந்தர்யாமியாகிய அவனே பாதிக்க மாட்டா. ஏனெனில் அவன் தேஜஸ்வீ, ஓஜஸ்வீ, ப்ராஜஸ்வீ. பிரகாசத்துடன் கூடிய உஷ்ணத்திற்கு தேஜஸ்வீ என்று பெயர். மற்றவைகளே அகற்றும் சக்தி ஓஜஸ். இடம் கொடுக்காமல் இருப்பது ப்ராஜஸ். இதனுல் எல்லாவற்றையும் அடக்கி ஆளுபவனுக இருக்கிறுன். இவனுடைய உருவத்தை எல்லேயற்ற ஒரே நிலேயில் உள்ள பக்தியுடன் கூடிய மனத்தால் மாத்திரம் தெரிந்து கொள்ள முடியும். முன் ஸூத்திரத்தில் கூறப்பட்ட மாதிரி இங்கும் ஈச்வரன் அறியப்படவேண்டியவன், என்றே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சிறந்த புருஷன் என்ற சொல்லுக்கு புருஷோத்தமன், உத்தம புருஷன் என்று பொருள். "உத்தம புருஷன் (ஜீவனேக் காட்டிலும்) வேறு. பரமாத்மா என்று கூறப்படுகிறுன். எவன் மூன்று உலகங்களிலும் உட்புகுந்து நாசமற்றவனுக அவைகளே தரிக்கின்றுனே அவன் ஈச்வரன் என்று பகவத்கீதை[82] யில் இப் பொருள் விளக்கப் பட்டுள்ளது. 'க்ஷரத்தை தாண்டியும் அக்ஷரத்திற்கும் மேலானவனுகவும் இருப்பதால் உலகத்திலும் வேதத்திலும் புருஷோத்தமன் என்று ப்ரஸித்தியை அடைந்துள்ளான்" என்ற கீதா வசனமானது[83] இப்பொருளேத் திடப்படுத்துகின்றது.

க்ஷரம் என்பது ஸம்ஸாரத்தில் கட்டுண்ட ஜீவனேயும், அக்ஷரம் என்பது முக்தியை அடைந்த ஜீவனேயும் குறிப்பிடுகின்றன. ஈச்வரன் க்ஷரம் அக்ஷரம் இவைகளேக் காட்டிலும் வேறுபட்டவன். பக்தியுடன் யம, நியம முதலியவைகளுடன் கூடிய ஸமாதியை அடைந்தவர்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் எல்லாவிதமான ஸமாதியும் கிடைக்கின்றது என்று "அவன் உயர்ந்தவைகளுக்கும் உயர்ந்தவன். உயர்ந்தது, தாழ்ந்தது என்பவைகளுக்கு ஈசனுன அவனிடத்தில் துன்பம் முதலிய யாவையும் இல்லே" என்று[84] பராசர புராணத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

## 1.25 தத்ர நிரதிசயம் ஸர்வஜ்ஞபீஜம்

(அங்கு இதற்கு மேல் இல்லை என்று சொல்லக் கூடிய எல்லாம் தெரிந்திருப்பதற்கு விதையானது உள்ளது)

அதாவது நிகரற்றதாயும் இதனைக் காட்டிலும் உயர்ந்தது ஒன்றும் இல்லை என்று சொல்லக்கூடிய யாவற்றையும் அறிவதற்கு இவன் (ஈச்வரன்) விதை. எல்லாப் பொருள்களைப் பற்றிய ஞானத்திற்கு ஆதாரம், அதாவது இருப்பிடம், அவனிடத்தில்தான் உள்ளது. வேறு எங்கும் இல்லை. எதைக் காட்டிலும் மேன்மையானது எங்கும் இல்லையோ அதை நிரதிசயம் என்று கூறுவார்கள். எல்லாம் அறிந்தவன் ஸர்வக்ஞன். ஸர்வ என்ற சொல் ஸர்வக்ஞன் என்பதைக் குறிக்கும். பீஜம் என்ற சொல் இங்கு விதையைக் (மூலகாரணத்தைக்) குறிக்கின்றது. அதாவது இவன் எல்லாவற்றிற்கும் காரணம் என்று பொருள். ஆதலால் சிறந்த புருஷனுக்கு இந்த ஸூத்திரம் இலக்கணத்தைக் கூறுகின்றது. எல்லாவித சேதனம், அசேதனம் இவைகளுடன் தொடர்பு கொண்டதாயும் படைத்தல், காத்தல், அழித்தல் என்பவை நடைபெறும் காலத்தில் கர்மங்களைப் பற்றிய ஞானத்திற்கு இருப்பிடமாயுமுள்ள என்று பொருள். அது ஒப்பில்லாதது. இதனைக் காட்டிலும் உயர்ந்தது ஒன்றுமில்லை. அதனுடைய ஞானமானது எப்போதும் குறைவற்றது.

## 1.26 ஸ ஏஷ பூர்வேஷாமபி குரு: காலேனாநவச்சேதாத்

(அப்பேர்ப்பட்ட இவன் (ஈச்வரன்) முன்னோர்களுக்கும் காலத்தால் அளவிட முடியாதவன் என்பதால் குரு )

எவன் முன்பு சொல்லப்பட்ட பரமாத்மாவோ அவன் இப்போது நம்முடைய புத்தியில் (இச் சந்தர்ப்பத்தில்) உள்ளவனாகிறான். முன்காலத்தில் இறந்தவர்களும், நிகழும் காலத்தில் இருப்பவரும், வரும் காலத்தில் இருப்போருமான ஜீவன்களுக்கு அதாவது சேதனர்களுக்கு குரு. உபதேசம்

செய்பவன். அஞ்ஞானத்தை அகற்றுபவன். ஈச்வரனுக்கு பிரகாசத்துடன் கூடிய உடல் உண்டு. காலத்தினுல் அவன் அளவிடர்க்கரியன். எப்போதும் உள்ளவன்.

## 1.27 தஸ்ய வாசக: ப்ரணவ:

(பிரணவம் அவனைக் குறிக்கும்)

இவ்விதம் 'எல்லாக் காலங்களிலும் உள்ளவனுயும், எல்லோருக்கும் குருவாக உள்ளவனும், சொல்லுக்கும் எண்ணத்திற்கும் அப்பாற்பட்டவனுயும் உள்ள ஈச்வரனை பிரணவம் குறிக்கும், தெரிவிக்கும். அவனைப்பற்றிய ஞானத்தை உண்டுபண்ணும். மேன்மையுடன் புதியதாக உள்ளது என்ற கருத்து பிரணவம் என்ற சொல்லுக்குப் பொருள். பிரணவமானது பரமாத்மாவின் ஸ்வரூபம். ''உள்ளுக்குள் உள்ள ஆனந்தமயமான பிரம்மம், அது பிரணவத்தின் உருவத்தில் உள்ளது. அ உ ம'' என்ற பிரமாணம்[84] இதற்கு உள்ளது.

## 1.28 தஜ்ஜபஸ்ததர்த்தபாவனம்

(அதனை ஜபிப்பது அதனுடைய பொருளை எண்ணுவது)

பிரணவத்தின் ஜபமாவது, நியமத்துடன் மறுபடியும் மறுபடியும் பிரணவத்தினுடைய ஜபம். பிரணவத்தின் பொருளை எண்ணுவதானது அதனைக் கசக்குவது, அதாவது இடைவிடாமல் அதனுடைய பொருளை எண்ணுவது.

ஆதர்வணரஹஸ்யத்தில் பிரணவத்தை ப்ரக்ருதி ஸம்பந்தமற்ற திவ்யமான மங்களகரமூர்த்தியை உடையவனுயும் தன்னுடைய ஹ்ருதயத்தில் இருப்பவனுயும் கட்டை விரல் அளவாக உள்ளவனுயும் இருக்கும் பரமாத்மாவை எண்ணுதல் என்று கூறப்பட்டுள்ளது, ''ஆத்மாவின் நடுவில் கட்டைவிரல் அளவிலுள்ள புருஷன் இருக்கிருன்[86].'' ''நிகழ்ந்தவைகளுக்கும், நடைபெறப்போகின்றவைகளுக்கும் ஈச்வரனுன அவன் இன்று உள்ளான் நாளைக்கும் இருப்பான்'' என்று கட உபநிஷத்[87] கூறுகின்றது.

இவ்வித ஜபமானது பிரணவத்தின் பொருளை த்யானம் செய்வதே. யோகிகளுக்கும் இது எப்படியும் அனுஷ்டிக்கத் தக்கது. "ஓம் என்றே, ஓ பிராமணர்களே! எப்போதும் படியுங்கள். கேசவனைத் தியானம் செய்யுங்கள்" என்பது இங்கு பிரமாணம்.

## 1.29 தத: ப்ரத்யக்சேதனாதிகமோ-ப்யந்தராயாபாவாச்ச

[பிறகு உள்ளிருக்கும் ஆத்மாவை அடையலாம். தடங்கலும் இருக்கா.]

இப்படிப்பட்ட பிரணவஜபமானது, பிரணவத்தையும், அதன் பொருளையும் எண்ணுவதால் அந்தர்யாமியுடன் கூடிய பரிசுத்தனான ஜீவனை நேரில் காட்டும். ஜீவனுக்கு எந்த ஸ்வரூபம் என்ற ஸந்தேகமும் நீங்கிவிடுகின்றது. ஆதலால் உடலைப் பற்றியதாயும், மனதைப் பற்றியதாயும் எந்த துன்பங்கள் தடங்கல்களாக உள்ளனவோ அவைகள் விலகிவிடுகின்றன.

## 1.30 வயாதிஸ்த்யானஸம்சயப்ரமாதாலஸ்-யாவிரதிப்ராந்திதர்சனாலப்தபூமிகத்வா-நவஸ்திதத்வாநி சித்தவிக்ஷேபாஸ்தே அந்தராயா:

வியாதி, எக்காரியத்திலும் ஈடுபடாமல் இருத்தல், ஸந்தேகம், கவனமின்மை, சோம்பேறித்தனம், புறப்பொருள்களை அனுபவிப்பதினின்றும் மீளாமை, மதி மயக்கம், ஸமாதியின் நிலையை அடையாமலிருத்தல், சித்தத்தின் நிலைபெறுமை இவை சித்தத்தில் கலக்கத்தை உண்டாக்கு கின்றன. ஆகையால் இவைகள் தடங்கல்கள்.

உள்ளிருக்கும் ஆத்மாவை அறிவதைப் பற்றிய இந்த ஸூத்திரத்தில் தடங்கல்களை வரிசையாக ஸூத்திரகாரர் தெரிவிக்கின்றார். எவன் தனக்கு சக்தியிருந்த போதிலும் உலகங்களுக்கு ஈச்வரனான தத்துவத்தைக் குறிக்கும் பிரணவ

அதன் பொருளை எண்ணுவது அதாவது த்யானம் செய்வது போன்ற செய்கைகளால் மூன்று கரணங்களாலும் அண்டவில்லையோ அவனுக்குக் கீழ் கூறப்படும் தடங்கல்கள் பாதகம் ஏதும் இல்லாமல் (தடையின்றி) அவனை சூழ்ந்துகொண்டு துன்புறுத்துகின்றன. எவனொருவன் சக்தியற்றவனாக இருந்த போதிலும் மனத்தில் ஈச்வரனை தரித்துக்கொண்டு மனத்தாலேயே அவனை பூஜிக்கிறானோ அவனுக்கு தடங்கல்கள் துன்பத்தை உண்டு பண்ணமாட்டா.

உடல், இந்திரியம், மனது இவைகளுக்கு வியாதியானது அதிகமான துன்பத்தை உண்டாக்குகின்றது. சேர்க்கையின் தோஷங்களால் ஈச்வரனைத் த்யானம் செய்யாமலிருத்தல் எக்காரியத்திலும் ஈடுபடாமல் இருப்பதாகும். ஈச்வரன் இருக்கிறானா இல்லையா என்ற சர்ச்சை அதாவது ஸம்சயம் சாஸ்திரங்களில் கூறப்பட்டபோதிலும் அவன் நம்முடைய துன்பங்களை விலக்குவானோ மாட்டானோ என்ற எண்ணம் ஸந்தேகமாகும். கவனமின்மையாவது நம்பிக்கையற்று இருத்தல், சாஸ்திரத்தில் கூறப்பட்ட காலத்தில் காரியங்களை செய்யாமலிருத்தல் சோம்பேறித்தனம். சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளவற்றை மீறுவது அனுபவங்களிலிருந்து மீளாமை. அதாவது சாஸ்திரத்தில் கூறப்பட்டவைகளை அனுஸரிக்காமல் இருப்பது. வேதத்தில் கூறப்பட்ட மாதிரி ஜீவிக்காது வேஷம், பாஷை, இருப்பிடம் இவைகளை விடுவது. மதிமயக்கம். தன் இஷ்டப்படி நடப்பதும், நியமமில்லாமல் நடப்பதும், நிலையை அடையாமல் இருத்தல். இவ்வாறு ஒன்பது தடங்கல்கள் கூறப்பட்டுள்ளன. உடலில் உள்ள ஒன்பது துவாரங்களில் தடங்கல்களால் உண்டாகும் ஒன்பதுவித உபாதைகள் க்ரமமாகவும், க்ரமம் மாறியும் நீடிக்கும். இதை அனுபவம் ஒன்றாலேயே அறியவேண்டும்.

பக்தி உண்டாவதற்கு மனத்தில் அழுக்கு இல்லாமல் இருக்கவேண்டும் என்று ஆத்மாவைப் பற்றி யோகம் செய்பவர்கள் கருதுகின்றார்கள். பக்தி என்பது மனத்திற்கு இயல்பாகவே உள்ள வ்ருத்திக்கு வேறு ஒன்றினுடன் சேர்க்கை. இது இரண்டு பொருள்களிலும் பொருந்தியுள்ளது. இதைப்பற்றி ஒரு சச்சரவும் இல்லை. இது (சேர்க்கை) மலமற்ற மனத்தால் உண்டாகும் சேர்க்கையால் பெறவேண்டியது. மனத்தால்

உண்டாகும் இந்த செய்கை களங்கமற்ற ஆத்மாவிற்கு மாத்திரம்தான் உண்டு. சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள ஸாத்விக ஆகாரத்தை உட்கொள்வதால் அவ்வித உடல் உண்டாகும். உட்கொள்ளப்பட்ட ஆகாரம் ஜீரணமாக வேண்டும் என்பது மட்டுமல்ல. ஜீரணமாவதால்தான் ஆரோக்கியம் என்ற பெயரில் சக்தி உடலில் உண்டாகின்றது.

ஜீரணம் செயவதற்கு பல உபாயங்கள் இருந்த போதிலும் குறிப்பிட்ட அளவுள்ள திரவியங்களால் இதனைச் செய்ய முடியாது. இதனால் இம்மை, மறுமை இவைகளுடைய விஷயங்களை அனுபவிப்பதற்கு மலமற்ற உடல் வேண்டும். அதற்காக எட்டுவித யோகங்களில் முக்கியமாக யம, நியம, ஆஸன, பிராணயாம என்ற நான்கை நியமத்துடன் பகவான் பதஞ்ஜலி கூறினார். இவை உடல், சொல், மனது என்ற மூன்றாலும் செயல்படுத்த வேண்டிய வெவ்வேறு யோகாங்கங்கள். மேற்கூறிய நான்கு அங்கங்களால் எவ்வித ஆரோக்கியமோ, சக்தியோ உண்டாகின்றதோ அது பல விதமாக பணத்தைச் செலவு செய்தாலும் உண்டாகாது. உடலில் உள்ள பிராண சக்தி வேறு, புற இந்திரியங்களின் சக்தி வேறு. இவ்விரண்டிலும் இயங்கும் சித்தசக்தி வேறு. இம்மூன்று சக்திகளுள் ஒன்றுக்கொன்று விரோதமின்றி ஒன்று சேர்ந்து, ஆண், பெண் என்ற சாதாரணமான உடலில் உள்ள தொண்ணூற்றுறு எலும்புகளின் சந்திகளிலும், எண்ணற்ற முடிச்சுகளிலும், அந்தந்த வயதுக்கேற்ற வளர்ச்சி, வளர்ச்சியின்மை, இவைகளை அடைந்துள்ள நாடி, 81 தமனி, முடிச்சுகள் இவைகளுள் தடங்கலின்றி பரவுகின்றன. உடலில் அதிகமான பருமன், அதிமாக இளைத்தல், அதிகமான நீளம், அதிக குட்டை என்பவைகளை எப்போது செய்கின்றனவோ அப்போது முன் கூறப்பட்ட மூன்று சக்திகளும் உடலுக்கு திடத்தையும், ஆரோக்கியத்தையும் நிச்சயமாக செய்கின்றன என்று நம்மால் கூற முடியும். இவ்வித நான்கு அங்கங்களை அனுஷ்டிக்கும் ஆத்மாக்கள், பால்யம், கௌமாரம், யௌவனம், வார்தக்யம் என்ற நான்கு நிலைகளிலும் [89]ஆணாயினும் பெண்ணாயினும் யோகங்கள் செய்வதற்கு சக்தியற்றவர்களா இல்லையா என்பதை ஒவ்வொருவரும் தங்கள் புத்தியால் அறியவேண்டும். யாருக்கு எந்த நிலையில் எந்த அங்கங்களை செயல்படுத்துவதற்கு சக்தி உண்டாகின்றதோ, அந்த

சக்தியைக் கொண்டே அந்த செயலில் ஈடுபடவேண்டும். அது செய்யவே முடியாததா இல்லையா? அதிகமாக செய்ய வேண்டுமா? என்பவை யாவையும் ''சொல்லப்படாததை வேறு இடத்திலிருந்து தெரிந்து கொள்ள வேண்டும்'' என்ற நீதியின் மூலமாயும் ''அதிகமாக சாப்பிடுபவனுக்கு யோகம் கிடையாது'' என்று பகவத் கீதை[90]யின் மூலமாயும் ஊகித்துக்கொள்ள வேண்டும். நான்கு ஆச்ரமங்களிலும், அவைகளின் தர்மங்களிலும், மேலும் ஆச்ரமத்தை அடைந்தபோது உள்ள தர்மங்களில் முன் ஆச்ரமத்தினுடைய சில தர்மங்கள் விடப்படுகின்றன. அவ்விதமே நான்கு நிலைகளிலும் முன் நிலைகளில் செயல்படுத்தப்பட்ட யோக தர்மங்கள் சுருக்கமாக அனுஷ்டிக்கப் படுகின்றன. எல்லா ஆச்ரமங்களிலும் பிரமசர்ய தர்மம், பதிவ்ரதாதர்மம் இடைவிடாமல் தோன்றுகின்றன. அவ்விதமே யோகங்களை அனுஷ்டிக்கும் முறைகளில் எல்லா நிலைகளிலும் பிரம்மசர்யம், பாதிவ்ரத்யம் இவைகளைக் கடைபிடித்துக் கொண்டு, மூன்று வேளைகளிலும் பிராணுயாமம், உலகத்தின் தலைவனை தெரிவிக்கும் பிரணவம், அதனுடைய ஸ்வரூபத்தை எண்ணி த்யானித்தல் இவைகளைச் செய்பவர்களுக்கு தடங்கல்கள் உண்டாகவே மாட்டா என்பது யோக ரஹஸ்யத்தை அருளிச் செய்த நாதமுனிகளின் அபிப்பிராயம். ''பிராணுயாமத்தால் ச்வாசமும், ப்ரத்யாஹாரத்தால் இந்திரியங்களும் தன் வசத்திற்குக் கொண்டு வரப்படும் போது'' என்று விஷ்ணு புராணத்திலும்[91] இதுவே கூறப்பட்டுள்ளது.

## 1.31

## துக்கதௌர்மனஸ்யாங்கமேஜயத்வச்வாஸ பரச்வாஸா விக்ஷேபஸஹபுவ:

[துக்கம், மனத்தின் கெட்டநிலை, உடலில் நடுக்கம், பெருமூச்சு இவை சித்தத்தின் எழுச்சியால் உண்டாகின்றன.]

எந்தவிதமான மனத்தின் செயல், 'கம்'=தகர ஆகாசத்தை, கெட்டதாக, கலங்கினதாகச் செய்கிறதோ அது துக்கம் என்ற சொல்லால் குறிப்பிடப்படுகின்றது. கெடுதலான மனது

துர்மனது. துர்மனத்தின் தன்மை கெட்டமனது. மனத்தில் கெடுதல் என்பது ப்ரக்ருதியில் உள்ள ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற குணங்கள் மூலம் முன் பிறவியில் செய்த செயல்களால் உண்டான வாசனையால் பகவானுடைய ஸங்கல்பத்திற்கு ஏற்றவாறு நிலை மீறி கலக்கம். அதனைப் பின்பற்றி எழுச்சி, சுற்றுப்புறமும் எழுச்சி என்று நிலைபெருமையால் சிற்சில காலங்களில் உடலில் உள்ள ஆத்மாவை அங்கு உருளும்படி செய்து அந்த வலியை பொறுக்க முடியாமல் செய்து விடுகின்றன. அவ்வித பொறுக்க முடியாமல் இருப்பதுதான் மனத்தின் கெட்டநிலை. உடலில் அங்கங்களுடைய அசைவானது கெட்ட மனத்தால் உண்டாகும் உடலின் நடுக்கம். இந்நடுக்கம் உண்டான உடனே தடுக்க முடியாத வேகத்துடன் மூச்சு விடுதலும், மூச்சு இழுப்பதும் உண்டாகின்றன. இஷ்டமில்லாவிட்டாலும் அதிகமான ச்வாசம், பிரச்வாசம் இவை கலக்கத்தால் உண்டாகின்றன. கலக்கமானது மனத்தில் உண்டாகும் வியாதி.

## 1.32 தத்ப்ரதிஷேதார்த்தமேகதத்வாப்யாஸ.

[அவைகளை தடுப்பதற்காக ஒரே ஒரு தத்துவத்தை அப்யஸிக்க வேண்டும்.]

அவைகளுடைய, அதாவது கலக்கத்திற்கு காரணமானவைகளைத் தடுப்பதற்கு ஓர் தத்துவத்தை அப்யாஸம் செய்யவேண்டும். ஒன்றாகவும், தத்துவமாகவும் உள்ளது ஏகதத்துவம். இதனுடைய அப்யாஸம் ஏகதத்துவாப்யாஸம். ஏக என்ற சொல் எல்லாம் அறிந்தவனும், எல்லா சக்தியையும் உடையவனும், எல்லா குணங்களையும் உடையவனும், இடம், காலம், செயல் இவைகளுக்குக் கட்டுப்படாத அவித்யை முதலிய துன்பங்கள் அற்றவனும், எல்லா வேதவாக்கியங்களுக்கும் தலை சிறந்த ஓங்காரம் என்ற வேறு பெயரை உடைய பிரணவத்தால் குறிப்பிடக் கூடியவனும், குறைவற்ற ஐச்வர்யத்தை உடையவனும், நினைத்த மாத்திரத்திலேயே எல்லா வியாதிகளையும் போக்குபவனும், ப்ரக்ருதியின் குணங்களுடைய சேர்க்கையை அடையாதவனும், புருஷனுடைய [illegible]வத்தை

உடையவனுயும் உள்ள பகவானைக் குறிக்கின்றது. இதனை [92]''உள்ளுக்குள் ஆனந்தமயமான பிரம்மம் புருஷன் பிரணவ உருவத்தில் அ உ ம என்று உள்ளது.'' [93]ஆயிரக்கணக்கான தலைகளை உடைய புருஷன்'' என்ற பிரமாணங்கள் மூலம் அறியலாம்.

தத்துவம் என்ற சொல் எக்காலத்திலும், எல்லா விடத்திலும், எல்லா நிலைகளிலும், மாறுதலை அடையாதவனுயும், நிறைந்த ஆனந்தத்தையுடையவனுயும், எல்லா நற்குணங்களுடன் கூடியவனுயும் அளவிடற்கறிய ஒளதார்யம், தயை, ஞானம் இவைகளின் இருப்பிடமாயும் உள்ளவனைத் தெரிவிக்கின்றது. இவ்வித தத்துவத்தை இடைவிடாமல் அப்யாஸம் செய்வது யோகாப்யாஸம் செய்வதற்கு அவசியமானது. அதனுல் உலகிலுள்ள வியாதிகள் யாவையும் சாம்பலாய்ப் போய்விடுகின்றன. இது பகவானைக் குறிப்பிடும் பிரணவம், அதன் ஜபம், அதனுடைய கருத்தை நினைப்பது இவைகளால் உண்டாகும் பயனைத் தெரிவிக்கின்றது என்று 1.29 ''பிறகு உள்ளிருக்கும் சேதனன்'' என்ற ஸூத்திரத்தில் விளக்கப்பட்டது.

யோகத்தினுல் ரோகங்களுக்கு சிகித்ஸை செய்யும் விதம் இவ்விதம் இருந்தது என்று பகவானுன பதஞ்ஜலிக்கு தெரிந்திருந்தது. ஆனுலும் யுகங்களுக்குள் உள்ள வித்தியாஸத்தால் வைதிகதர்மத்தை அனுஷ்டானம் செய்வதற்கு குறைவு ஏற்படுகிறது. உலகில் ஆண்களுக்கோ, பெண்களுக்கோ, எல்லோருக்குமே ரோகத்தின் சிகித்ஸைக்கு எளிதான முறையை ஸாதனபாதம் என்ற இரண்டாவது பாகத்தில் முதல் ஸூத்திரத்தில் விவரமாகக் கூறுகின்றுர். இவ்வளவு எழுதியதால் வியாதிகள் ஸுகத்திற்கு விரோதிகள் என்று நிச்சயமாகத் தெரிகின்றது. இங்கும் மனத்தில் உண்டாகும் வியாதிகளைப் போக்குவதற்கு சில எளிதான உபாயங்கள் 1..34 ''பிராணவாயுவை வெளியில் செலுத்துதல் முதலான' என்ற ஸூத்திரத்தில் குறிப்பிடப்படுகின்றன. இவை யாவும் `ஷ்டருடைய பேரனுன பராசரரால் தன்னுடைய விஷ்ணு புராணத்தில்[94] வியாதிகளின் பெயர்களையும், அவைகளைப் போக்கும் முறைகளையும் காண்டிக்கிய கேசித்வஜ ஸம்பாஷணையில் விளக்கப்பட்டுள்ளன.

யோகாப்யாஸம் செய்பவர்களும், யோகப் பயிற்சியை அளிப்பவர்களும், தங்களுடைய உடலில் வியாதிக்கு ஒரு போதும் இடம் தரலாகாது என்பதை மறக்கவும் கூடாது. பிறகு யோகம் செய்யும் காலத்தில் ரிஷிகளால் ஏற்படுத்தப்பட்ட ஸம்பிரதாயத்தை அனுஸரித்தே இருக்கவேண்டும்.

## 1.33
## மைத்ரீ கருணா முதிதோபேக்ஷாணாம் ஸுகது:கபுண்யாபுண்யவிஷயாணாம் பாவனாதச் சித்தப்ரஸாதனம்

[சுகமாக இருப்பவர்கள், துக்கப்படுபவர்கள், புண்ணிய விஷயங்கள், பாப விஷயங்கள், இவர்களைப்பற்றி முறையே, ஸ்நேக பாவம், கருணை, மகிழ்ச்சி, உதாஸீனம் இவைகளை எண்ணுவதால் சித்தமானது தெளிவடைகின்றது.]

சிநேகிதனுடைய தன்மை சிநேகம். அதாவது அன்பு. வெளியிலுள்ள இந்திரியங்களுடன் சேர்க்கை உண்டாகி வெளிப் பொருள்களின் உருவத்தில் மனதானது நிலைத்திருக்கும்படி மாறினால் அதற்குப் பாவனை என்று பெயர். இவ்வித ஸ்நேக பாவனையை ஸுகத்தைக் கொடுக்கும் பொருள்களில் கண்டு எவன் மகிழ்ச்சியை அடைகிறானோ அவன் துக்கத்திற்கு எட்டாதவனாகவே இருப்பான். இவ்விதமாகவே கருணாமயமான பாவனையைப் புண்ணிய விஷயங்களிலும், நடுநிலையிலுள்ள பாவனையை புண்ணியமல்லாத விஷயங்களிலும் வைக்கவேண்டும். இவ்வித நேர்மாறான ஸாமக்ரீ (காரணப் பொருட்கள்) மனத்தில் உள்ள கெடுதல்களை நீக்கி விடுகின்றன.

## 1.34 ப்ரச்சர்தனவிதாரணாப்யாம் வா ப்ராணஸ்ய

[அல்லது உள்ளிருக்கும் பிராண வாயுவை சிறிது வெளி விடுதல், வெளியிலுள்ள பிராணவாயுவை உள்ளே இழுத்து நிறுத்தி வைத்தல் ஆகிய இவை இரண்டாலும் கலக்கத்தைத் தடுக்கலாம்.]

உள்ளிருக்கும் வாயுவை வெகு வேகமில்லாமலும், அதிக தாமதமில்லாமலும் வெளியில் செலுத்துதல். இது

ப்ரச்சர்தனம் என்று கூறப்படுகின்றது. பரிசுத்தமான வெளியிலுள்ள வாயுவை நாக்கு, உதடு, மூக்கின் இரு துவாரங்கள் இவைகளால் பருகுதல் விதாரணம் என்று சொல்லப்படுகின்றது. நாக்கு என்பதால் சீதளீ[95], இரு உதடுகள் என்பதால் ஸீத்காரத்துடன்[96] காற்றை இழுப்பதால் ஸீத்காரீ[96] என்றும் பெயர்கள் இவைகட்கு உள்ளன. வெளியில் விடப்பட்ட வாயுவை உடனே இழுத்துக் கொள்ளக் கூடாது. குடிக்கப்பட்ட காற்றை உடனே வெளியில் விடக் கூடாது. கலா மாத்திரம்[97] வைத்துக் கொள்ளுதலால் வெளியில் செலுத்துதல், குடிப்பது இரண்டும் பயன்களை அளிக்கும். வெளியில் செலுத்துதல் உள்ளே வைத்துக் கொள்ளுதல் என்ற இரண்டும் முதன் முதலாக அப்யாஸம் செய்பவர்களால் ஒரு யாமத்திற்கு[98] 24 (இருபத்து நான்கு) தரம் செய்யப்படவேண்டும். அப்போது மற்ற எல்லா காரியங்களையும் விட்டு விடவேண்டும். ஆஹாரமானது பால் போல் இனிமையாய் இருக்க வேண்டும். திரவமான ஆஹாரத்தைத்தான் உபயோகிக்க வேண்டும். கெட்டியான ஆஹாரம் கூடாது. இங்கு பிராணன் என்பதால் தன் உடலில் உள்ள பிராணனைக் குறிப்பிட்டு அதனை வெளியிடுவது, தரிப்பது இவைகளைச் செய்யவேண்டும் என்று பொருள். இயந்திரங்களால் இதனை செய்யக்கூடாது.

ஆயுர்வேதம் முதலியவைகளிலும் வைதிக மந்திர சாஸ்திரங்களிலும்,சிகித்ஸையைப் பற்றிய பாகங்களில் ரோகங்கள் பலவற்றைத் தடுப்பதற்காக சிகித்ஸை உருவத்தில் பல காரியங்கள் விளக்கப்பட்டுள்ளன. இங்கு வைதிக மந்திரங்கள், ஜபங்கள், முதலியவைகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவ்விதமே பாதஞ்ஜல யோக சாஸ்திரத்தில் சிகித்ஸை முறைகள் பலவிதமாக ஸூத்திரங்களில் கூறப்பட்டுள்ளன. எல்லா காரியங்களுக்கும், எல்லாவித யோகங்களுக்கும், எல்லாவித மருந்துகளுக்கும், எல்லா ஜனங்களுடைய உடலைப் பற்றியதும், மனத்தைப் பற்றியதுமான ரோகங்களை விலக்குவதற்கு ஏற்ற உபாயங்களின் முறைகள் விளக்கப்பட்டுள்ளன. உடலில் உள்ள ரோகங்களை விலக்குவதற்கு மருந்துகளை உபயோகிப்பது உதவியாய் இருக்கும். அதைப் போலவே யோகங்களின் ஆஸனம், பிராணாயாமம், வைராக்கியம் இவைகள் உடலில் உள்ள ரோகத்தை விலக்கும். இதில் ஸந்தேகமில்லை. மருந்து, பானம், முதலியவைகள் மூலம் ரோகத்தை விலக்குவதற்காக, ரோகிகளுக்கு சில நியமங்கள்

வைத்தியர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவ்விதமே யோகங்களை அப்பியாஸம் செய்வதால் உடலில் உள்ள ரோகங்களை விலக்குவதற்காக பகவான் பதஞ்ஜலி தன்னுடைய ஸூத்திரங்களில் ரோக சிகித்ஸை செய்வதற்கு நியமங்களை காண்பித்துள்ளார். அவைகளில் முக்கியமானவை மூச்சு விடுதல், மூச்சு இழுத்தல், கைகள், துடைகள், கால்கள், கழுத்து, இவைகளை மூச்சு விடுதல், மூச்சு இழுத்தல் என்பதற்குத் தகுந்தவாறு அசைத்தல், திருப்புதல் இவைகளைச் செய் தல், ஆஹார நியமங்களை ஏற்றுக் கடைப்பிடித்தல். நாட்டில் நியமமில்லாமல் அலைவதை நிறுத்துதல் இவை முக்கியமானவை. நியமங்களை மீறி அனுஷ்டானம் செய்ய வேண்டிய உபாயங்களை தெரிந்து கொள்ளாமல் யோகாங்கங்களை அனுஷ்டித்தால் சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள காலத்திலேயே ரோகிகளுக்கு ரோகநிவ்ருத்தி ஏற்படாது. உடல், மனது, இந்திரியம் இவைகளுடன் ஸம்பந்தப்பட்ட ரோகங்களை விலக்குவதற்கு பதஞ்ஜலி நூலில் சொல்லப்பட்டிருக்கும் அங்கங்களை[99] அனுஷ்டிக்க வேண்டும். மிகவும் முக்கியமான பிரம்மசர்யத்தை அனுஷ்டிப்பது, பாதிவ்ரத்யத்தைக் காப்பாற்றுவது, ராஜஸ, தாமஸ, ஆஹாரங்களை விடுவது இவை போன்ற நியமங்களை, தன் தேசம், தன் இனம் இவைகளுக்கு ஸம்பந்தப்பட்ட அனுஷ்டானம். இவைகளை சக்திக்கு தக்கவாறு கடைப்பிடிக்க வேண்டும் என்று நாதமுனிகள் கூறுகின்றார். புதியதான இரத்தத்தின் ஏற்றம், பழைய இரத்தத்தில் உள்ள தோஷங்களை அகற்றுதல், எலும்புகளின் மூட்டுகள் திடம் பெறுதல். சுவாச கோசங்களில் உள்ள குறைகள் நீங்குதல், இந்திரியங்கள் தங்கள் தங்கள் வேலைகளில் சரியாக இயங்குதல், முக்கியமாக வாக்கு, பார்வை இவைகளின் சக்தியின் பரவுதல் இவை போன்ற பல குணங்கள் வேண்டப் படாமல் இருந்தாலும், நியமங்களை கடைபிடிக்கும் ரோகிகளுக்குக் கிடைக்கின்றன.

இதற்குப் பிறகு அதே முனிசிரேஷ்டர் மனத்தைப் பற்றிய ரோகங்களை நிவாரணம் செய்வதற்கு வேண்டிய உபாயங்களை மேலே கூறப்போகும் பிரகரணத்தில் வெளியிட்டுள்ளார். தான் இயற்றிய ஸூத்திரங்களில் யோகானுஷ்டானம் செய்பவர்களுக்கு அதனால் பயன் யாது என்று கேட்கும் மாணவர்களுக்கு பதஞ்ஜலி பதில் கூறுகின்றார். முதல் பாதம், இரண்டாவது ஸூத்திரத்தில் கூறப்பட்டுள்ளபடி எவர்கள் இந்திரியங்களை அடக்குகிறார்களோ,

பிரம்மசர்யத்தை அனுஷ்டிக்கிறார்களோ, அவர்களுக்கு யோகானுஷ்டானத்தால் கிடைக்கும் பலன் நிரோதஸமாதி என்று கூறுகின்றார். ஸமாதி உண்டானாலும், உண்டாகாவிட்டாலும், மனதானது வேறுபட்ட நிலையில் இருக்கும். இதனால் இம்மையிலும், மறு பிறவியிலும், ஸுகம் உண்டாகும். இரண்டாவது நிலை அதாவது ஸமாதி உண்டாகாத நிலை. இவைகளில் இம்மை, மறுபிறவி, இவைகளின் துயரானது ஜ்வாலையாக வீசும். ஆகையால் எவன் எதை அடைய விரும்புகின்றானோ, அவன் அதை அடையும் வழியைப் பின்பற்ற வேண்டும்.

நிரோதம்,[100] விக்ஷேபம்,[101] என்ற இரண்டு உபாயங்கள் உண்டு. இவை மனத்தின் கலக்கத்தை அடக்காமல் இருப்போருக்கு பலவிதமான விஷ ஜ்வாலையை உண்டாக்கும். அடக்கும் முறை அதாவது நிரோதம். இதை பின்பற்றுவோர்க்கு உடல் நோயற்று இருக்கும் என்று ஆரம்பித்து, நோயற்ற உடலை விரும்புபவர் எல்லோரும் நிரோத ஸமாதியை அனுஷ்டிக்க வேண்டும். கதம் என்றால் ரோகம். அகதம் என்றால் ரோகமற்ற நிலை. ரோகமானது மனத்தில் உள்ள கலக்கத்தால் உண்டாகின்றது. நோயற்ற நிலை மனத்தை அடக்குவதால் உண்டாகின்றது. மனத்திற்கு சம்பந்தப்பட்ட ரோகத்திற்கு காரணம் சித்தத்தின் கலக்கமே. இது உடலின் தத்துவத்தை அறிந்தவர்களுக்கு தெரியாதது அல்ல. அவைகளை விலக்குவதற்காகத்தான் நிரோதத்தை அப்யாஸம் செய்யவேண்டும். இந்த நல்ல வழியை ஸூத்திரம் எழுதியவர் தெரிவித்துள்ளார். முதல் பாதத்தின் தத்துவத்தை அறியாதவர்கள் அங்கு சிகித்ஸையைப் பற்றிகூறப் படவில்லை என்று சொல்லுவார்கள். 1.12 "அப்யாஸம், வைராக்யம் இவைகளால்" என்ற ஸூத்திரம் உங்களால் நீக்கப்பட்டு விட்டதா என்று அவர்களைக் கேட்கிறோம். வைராக்யம் என்பது இந்திரியங்களை வெளி விஷயங்களினின்றும் திருப்புவது. வெளிப் பொருள்கள் என்பது அறிவாளிகள், அறியாதவர்கள் எல்லோரும் பலவித சப்தங்கள், பல பொருள்களைப் பற்றிய உணர்ச்சிகள், கண் என்ற இந்திரியத்தை வேருடன் பிடுங்கி எறிய சக்தியுள்ள வர்ணங்கள், நாக்கையும், அன்னக் குழாயையும் எரிப்பதற்கும், சிவப்பாக உலர்த்துவதற்கும், சக்தியுள்ள பலவித ரஸங்கள், மூச்சை விடுதல், மூச்சை இழுத்தல் இவைகளைத்

தடுப்பதற்கும் உபயோகமான மூக்குத் துவாரங்களை உலர்த்துவதற்கும் ஸாமர்த்தியமுள்ள பலவித மணங்கள், பத்து விதமான பிராணனுடைய[102] ஸஞ்சாரத்தைத் தடுத்து உடலில் உள்ள பூட்டுகளில் பலவீனத்தை இவை யாவும் உண்டு பண்ணுகின்றன என்று எண்ணி பகவான் பதஞ்ஜலி இந்த அப்யாஸ வைராக்கியங்களால் அடக்குவது என்ற ஸூத்திரத்தை இயற்றினர். இவையெல்லாம் எல்லோராலும் அனுபவிக்கப்படும் ரோகங்களுக்கு காரணம். இதற்கு காரணம் கெடட விஷயங்களில் ஈடுபட்டு இருத்தல். இதனுல் மனதானது இங்குமங்கும் அலைகின்றது. இந்த அலைச்சலை விலக்குவதற்கு கெட்ட விஷயங்களினின்றும், வெகு தூரத்தில் இருந்து கொண்டு மனத்திலுள்ள ரோகத்திற்கு சிகித்ஸை செய்யவேண்டும். மனத்திலுள்ள ரோகத்திற்குக் காரணம், அதை ஒழிப்பதற்கு உபாயம் இவ்விரண்டையும் பதஞ்ஜலி முதல் பாதத்தில் மனத்தைப் பற்றிய ரோகத்திற்கு சிகித்ஸையின் முறையை விளக்கியுள்ளார். சித்தம் ஒய்வு இல்லாமல் எழுகின்றது. எப்போது அந்த கலக்கம் அடக்கப்படுகின்றதோ அப்போது ஆத்மாவின் ஸ்வரூபம் அதனுடைய நிலையில் இருக்கும். இதுதான் அதனுடைய அனுபவம்.

வெளியிலுள்ள இந்திரியங்களுக்கும், வெளியிலுள்ள பொருள்களுக்கும் உள்ள ஸம்பந்தமானது சித்தத்தில் பலவித கலக்கங்களை உண்டாக்குகின்றது. அவைகளைத் தடுப்பதற்கு பலவித வைராக்கியம், தத்துவாப்யாஸம் இவை உபாயங்கள். இதனுல் நிரோதஸமாதி உண்டாகின்றது. இதை அடைவது எல்லோருக்கும் எளிதல்ல என்று எண்ணி, எல்லோருக்கும் எளிதாக கடைப்பிடிக்கக் கூடிய ஸமாதியின் உபாயம் அல்லது பயன் இவைகளை அடைவதற்கு பதஞ்ஜலி முனிவர் ஈச்வரனை தியானம் பண்ணுதல் என்று நான்கு ஸூத்திரங்களில் கூறியுள்ளார். ஸ்பாவத்திலேயே இதற்கு மேல் இல்லையென்று சொல்லக்கூடிய மேன்மையை உடைய ஐச்வர்யம், எல்லாவற்றையும் அறிந்திருத்தல் போன்ற பல குணங்களுடன் கூடியது பகவானுடைய ஸ்வரூபம். இதனை நேரில் காண்பதற்கு காரணத்தை பிரணவம் என்ற சொல்லால் குறிப்பிட்டிருக்கிறுர். இது பரமாத்மத்யானம் என்ற திடமான பக்தி ஏற்படுவதற்கு உபயோகப்படும். இதுதான் பதஞ்ஜலியின் நூலில் முதல்

பாதத்தின் இரண்டாம் பகுதியின் விஷயம்.

மனத்தில் ரோகமானது சித்தத்தின் கலக்கத்தால் உண்டாகின்றது. சித்தத்தின் கலக்கம் வெளியிலுள்ள பொருள்களுடன் ஏற்படும் சேர்க்கையால் உண்டாகின்றது. இந்த சேர்க்கையும் பொருள்கள் அருகில் இருப்பதால் உண்டாகின்றது. இதற்கு உபாயமானது அந்த ஆத்மாவால் முன்பு செய்த கர்ம வாஸனை என்பதை மறக்கக் கூடாது. கர்ம வாஸனையும் ஸர்வேச்வரனுடைய ஸங்கல்பத்தைப் பற்றியது. ஆகையால்தான் ஆண்களுக்கும், பெண்களுக்கும் சித்தத்தின் கலக்கமும், கலக்கமின்மையும் உண்டாகின்றன. மனத்திலுள்ள ரோகத்தை ஒழிப்பதற்கு முதன் முதலில் திடமான முயற்சியைச் செய்ய வேண்டும். அம்முயற்சியானது பகவானைப் பற்றிய எண்ணம் முதலியன. 1.34 ஸூத்திரத்தால் உடலுக்கு உள்ளே இருக்கும் மனத்தின் கலக்கம் எல்லா இந்திரியங்களுடைய சக்தியை சிறிது நாசம் செய்கிறது என்று அறியலாம். அங்கு உள்ளே இருக்கும் வாயுவை வெளியிட்டு பரிசுத்தமான வெளியிலுள்ள வாயுவை இழுப்பது. இவ்விரண்டும் மிருகங்களுக்கு உள்ள மூச்சை வெளியிடுவது, உள்ளிழுப்பது போன்றவை அல்ல. இவ்விதம் மூச்சை வெளியிட்டு உள்ளுக்கு இழுப்பதால் மனத்திலுள்ள ரோகமானது அழிவதில்லை. ஆயினும் எல்லோரையும் அடக்கியாளும் பகவானுடைய உருவத்தை நினைப்பதுடன் இவைகளை செய்தால் தான் ரோகங்கள் ஒழிந்துவிடும். இங்கு நினைப்பது என்பது நேராகவே பார்ப்பது. இதுபோல் மூச்சை விடுவதும், மூச்சை இழுப்பதும் பிராணயாமத்தில் அப்யாஸத்தில் சொல்லியுள்ளபடி தீர்க்கமாயும், ஸூக்ஷ்மமாயும் இருக்க வேண்டும். வேறு உபாயங்களைக் கடைபிடிப்பதுபோல, வெகு காலம் இடைவிடாமல் செய்தால் யோகிகளுக்கு உபயோகமாயிருக்கும். அவ்விதமே மனத்திலுள்ள ரோகத்தை ஒழிப்பது, தீர்க்கமான ஆயுளைப் பெறுவது, இவைகளுக்காக மூச்சை தீர்க்கமாக வெளி விடுவதையும் உட்கொள்ளுவதையும் செய்ய வேண்டும். 2.49, 50 இந்த ஸூத்திரங்களினின்றும் ச்வாசத்தை எப்படி விடுவது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். மனத்திலுள்ள ரோகங்கள் யாவற்றையும் விலக்குவதற்கு உபாயங்களைச் செய்யும் காலத்தில்

மனத்திற்கு போஷணையை கொடுக்கக் கூடிய ஆஹாரநியமம் வேண்டும். இது இல்லாவிடில் யோகத்தால் ரோகசிகித்ஸை பயனைத் தராது. வயதின் தர்மத்தை மறந்து எல்லோரும் எல்லாவிதமான யோகங்களின் அனுஷ்டானத்தை எல்லா காலத்திலும் செய்ய வேண்டும் என்று பலர் மனமயக்கத்தால் கூறுகின்றனர். இது சிறிதும் சரியல்ல. சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள கர்மங்களைச் செய்யும்போது வயது, தர்மம் இவைகளுக்கு ஏற்றவாறு செயல்கள் தனிப்பட்டவையாக இருக்கவேண்டும். அவ்விதமே யோகஸம்பந்தமான செயல்களும் இருக்கவேண்டும் என்று நிச்சயமாக அறிந்து கொள்ள வேண்டும்.

## 1.35
## விஷயவதீ வா ப்ரவ்ருத்திருத்பன்னு மனஸ: ஸ்திதிநிபந்திநீ

(விஷயங்களைப் பற்றிய பிரவ்ருத்தி உண்டாகும்போது அது ஸ்திரமாக இருக்கும்.)

இந்த ஸூத்திரத்தில் கூறப்பட்டுள்ள விஷயத்தைப் பற்றி ஸ்திரமான நிலை உண்டாவதற்கு ஸாதனம் செய்ய வேண்டும். வெகு காலம் இளவயதினர்களோ, வயதானவர்களோ சித்தத்தை ஸ்திரப்படுத்துவதற்கு பல உபாயங்கள் இருக்கும் போது, விஷயங்களில் ஈடுபட்டிருப்பது ஆட்டின் கழுத்தில் தொங்கும் ஸ்தனத்தை கரப்பது போலாகும் என்று என்னுடைய குரு கூறினார்கள். சித்தத்தின் விஷயம் பிரக்ருதி சம்பந்தம் அற்றதாகவும், வைதிகமாயும் எண்ணப்பட வேண்டும். இந்த ஸூத்திரத்தில் பலவித ஞானங்கள் பிரக்ருதியுடன் சேர்ந்த விஷயங்களைப் பற்றியுள்ளன. ஆத்மாவைக் காண விரும்புபவர்கள் இதனைப் போற்ற மாட்டார்கள். இது என்னுடைய குருநாதருடைய[103] கருத்து.

## 1 36 விசோகா வா ஜ்யோதிஷ்மதீ

(ஸத்துவ மயமான பிரகாசத்தையுடைய ஜ்யோதிஷ்மதீ என்ற ப்ரவ்ருத்தியானது துக்கமற்றதாக இருக்கும்:)

இந்த ஸூத்திரத்தில் கூறப்பட்டுள்ள விஷயங்களை அப்யாஸம் செய்வது வெளியிலுள்ள விஷயங்களை மீறி தன் உடலில், ஹ்ருதயத்தில் உள்ள பிரகாசத்தை பார்ப்பதற்கு அதற்கு தகுந்த ஒரு ஆஸனத்தை அப்யாஸம் செய்ய வேண்டும். அவ்விதமாக உட்கார்ந்து வெளிச்சமில்லாமலும், சத்தம் இல்லாமலும் உள்ள இடத்தில் வெகு காலம் யோனி முத்திரையால் குருவால் உபதேசிக்கப்பட்ட வழியைப் பின்பற்றி உள்ளுக்கும், த்ராடகத்துடன்[104] கும்பகத்தால்[105] அனுபவிக்கக் கூடியது ஜ்யோதிஷ்மதீ என்ற ப்ரவ்ருத்தி. இந்த வ்ருத்தியால் முன்பே பக்குவமடைந்த பிராணாயாமத்தை அப்யாஸம் செய்யும் யோகிகள் சத்தமற்ற இரவில் ஒரு பகுதியில் இதனை அப்யஸிக்கிறார்கள்.

## 1.37 வீதராகவிஷயம் வா சித்தம்

(ராகம் அற்ற பொருளை உடையதாக சித்தம் ஆகும்)

இந்த ஸூத்திரத்தில் பெருமைவாய்ந்த சில மகானுபாவர்களை யாத்திரை செய்யும் காலத்தில் நேரில் பார்த்து திரும்பியபின் அவர்களைப் பற்றி நேரில் பார்ப்பது போல் நினைத்து அவர்களுடைய ஸ்வரூபத்தை அனுபவித்தால் அதனைப் போன்ற அனுபவத்தால் அவர்களுடைய சித்தம் ராகமற்று இருக்கும்.

## 1.38 ஸ்வப்னநித்ராஞானாலம்பனம் வா

(கனவு, தூக்கம் இவைகளைப் பற்றிய ஞானத்தை ஆதாரமாகக் கொண்டு மனத்தின் திடமான நிலையை அடையலாம்.)

இந்த ஸூத்திரத்தில் .(கூறப்பட்டுள்ள) கனவு, விஷயத்தை நினைவுப்படுத்திக்கொள்வது, விழித்திருக்கும் நிலையில்

சித்தத்தை ஸ்திரப்படுத்தும் என்று கூறப்பட்டுள்ளது. நல்ல கனவின் விஷயத்தை, கெட்ட கனவின் விஷயமல்ல என்று நிச்சயித்துக் கொள்ளவேண்டும். கனவு என்ற சொல் கனவு உண்டாகும் காலத்தில் அனுபவிக்கப்படும் விஷயத்தைக் குறிக்கும். தூக்கம் என்ற சொல் தன்னையும் தன்னைத் தவிர மற்ற விஷயங்களைப் பற்றியதாயும், விழித்திருக்கும் காலத்தில் வெளி விஷயங்களைப் பற்றியதாயும் உள்ள ஞானம் இல்லாத தன்மை, அபாவ ப்ரத்யாலம்பன (1-10) ஸூத்திரத்தில் இது ஏற்கனவே சொல்லப்பட்டது. அதனைப் பின்பற்றி இந்த ஸூத்திரத்தில் தூக்கம் என்ற சொல்லுக்கு விளக்கம் செய்யப்பட்டுள்ளது. கௌஷீதகி பிராம்மணத்தில்[106] பாலா அஜாதசத்ரு இவர்களுடைய ஸம்பாஷணை கூறப்பட்டுள்ளது.

இதனை அடிக்கடி படிக்க வேண்டும். தன் பிள்ளை ச்வேதகேது என்பவனுக்கு மகரிஷியான உத்தால்கர்[107] ஓ நல்லவனே, கனவு முடியும் வரையில் என்னிடம் இருந்து தெரிந்து கொள்[107] என்று ஸத்வித்யையை உபதேசித்தார். நல்ல தூக்கத்தின் விஷயங்களை பலதரம் படிப்பதோடு, ஆலோசிக்க வேண்டும் என்று. இதுவே முனிச்ரேஷ்டரான நாதமுனிகளால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. விழித்திருக்கும் நிலையில் நான் மனிதன், பிராம்மணன், வித்வான், க்ரஹஸ்தன், வேதவேதாந்தங்களை அத்யயனம் செய்தவன் என்ற ஞானமானது எவனுக்கு உண்டாகிறதோ அவனுக்கு தூக்க கால்த்தில் இந்த ஞானம் உண்டாவதில்லை. (அந்த ஞானமும் எந்த சித்தவ்ருத்திக்கு ஆதாரமாக இருக்கின்றதோ அது தூக்கம் என்று நிச்சயிக்கப்பட்டுள்ளது.) சாந்தோக்யஉபநிஷத்தில் தான் அபீதனாக இருக்கின்றான் என்று சுருக்கமாக கூறப்பட்டுள்ளது. "அங்கு படுத்திருக்கிறான்." "பிராணனில் ஒரேவிதமாக இருக்கிறான்" "தான் அபீதனாக இருக்கிறான்." அங்கு உள்ள ஸ்வ என்ற சொல் அந்தர்மியாக உள்ள பரமாத்மாவைக் குறிக்கும். அபீத என்ற சொல் அங்கு மறைந்திருக்கும் ஜீவனைக் குறிக்கும். பரமாத்மாவில் மறைந் திருக்கும் ஜீவன் சிறிது காலம் களைப்பாறுகின்றான். இவ்விதமே கௌஷீதகிபிராம்மணத்தில் அஜாதசத்ரு, பாலாகி இவர் களுடைய ஸம்பாஷணை கூறப்பட்டுள்ளது. என்று அறிய வேண்டும். அங்கு லய என்ற சொல்லை நீக்கி ஏகதா என்ற சொல்[109] காணகிறது. ஏகதா என்பது ஒரே உருவத்தில் உள்ளது என்ற பொருளைக் குறிக்கின்றது.

## 1.39 யதாபிமதத்யானுத்வா

(அல்லது விரும்பிய பொருளை த்யானம் செய்வதனுல் சித்த ப்ரஸாதம் உண்டாகும்.)

விரும்பிய பொருளை விருப்பத்திற்கு மீறுமல் த்யானம் செய்ய வேண்டும். இது சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள பொருளைப் பார்ப்பதற்கு ஒத்ததான ஸ்மரணம். இது குறிப்பிட்டதோ, குறிப்பிடப்படாததோ உள்ள காலத்தில் செய்யலாம். எப்போது இது உண்டாகிறதோ அப்போது அதற்கு ஐகாந்திகம் என்று பெயர். த்யானம் விஷயத்தைப் பற்றித்தான் உண்டாகும். சிந்தை என்ற பொருளைக் குறிக்கும். த்யை என்ற தாதுவிலிருந்து த்யானம் என்ற சொல் உண்டாகியிருக்கிறது. சிந்தை மிகவும் அதிகமாக அனுபவிக்கப்பட்ட விஷயத்தைப் பற்றி நினைத்தல் என்பதை அமரஸிம்ஹர் தன்னுடைய நாமலிங்கானுசாஸத்தில்[109] ''சிந்தை, ஸ்ம்ருதி, த்யானம்'' என்று வெளியிட்டுள்ளார். திடமான அனுபவத்தால் நினைவு உண்டாகின்றது. இதற்குக் காரணம் அனுபவம். ஞானத்தின் உருவத்தில் இருப்பது. ஞானமானது ஆத்மாவின் தர்மமா, ஆத்மாவின் ஸ்வரூபமா என்பதைப் பற்றி எல்லா மதத்தினரும் ஒரேவிதமான அபிப்பிராயத்தைக் கொள்ளவில்லை''. ஞானத்திற்கு ஆதாரம் ஆத்மா[110] ஞானம் எப்போதும் உள்ளது. தானுகவே பிரகாசிக்கும். எல்லாவிடங்களிலும் பரவியுள்ளது. வெளி இந்திரியங்களுக்குப் புலப்படாதது. தானுகவே இதனை அறிய வேண்டும். சித்தத்தின் வியாபாரம் மூன்று குணங்களுடைய ப்ரக்ருதியின் மாறுதல். ஒரே குறிக்கோளையுடையதாக இருப்பதால் ஞானத்திற்கு ஸம்ஸ்காரத்தின் உருவத்தில் உள்ள சக்தி வளருகிறது. இதனுல் நினைவு உண்டாகின்றது. ''ஸம்ஸ்காரத்தால் மாத்திரம் உண்டாகும் ஞானமே ஸ்ம்ருதி[111]''. த்யானம் விஷயத்தைப் பற்றி உண்டாகின்றது. அது ஜீவனுக்கு தர்மபூதமான ஞானத்துடன் கூடியதாகவும், ரஜஸ், த்மஸ் இவைகள் அற்றதாயும் சுத்த ஸத்துவமாயும் உள்ள மனித உருவத்தில் உள்ளது. இப்படிப்பட்ட மனது த்யானம் செய்யத் தக்க பொருளில் ஒன்றி விடுகின்றது. அப்போது த்யானம் என்பது அனுபவத்தின் மூலமாக உண்டாகின்றது.

# 1.40 பரமாணு பரம மஹத்வாந்தோஸ்ய வசீகார:

## (இதனுடைய பயன் பரமாணு முதல் பரம மகத்துவம் வரை உள்ளவைகளை வசீகரித்தல்.)

பரமமாயும் அணுவாயும் உள்ளது பரமாணு. பரமமாயும், மகத்தாயும் உள்ளது பரமமகத்துவம். இது ஸூத்திரத்தில் வசீகாரம் என்ற சொல் விசேஷணமாக.[112] ஆகின்றது.

பரம என்ற சொல் உயர்ந்தது என்று சொல்லக்கூடிய பொருளைக் குறிக்கின்றது அணு என்ற சொல் மிகவும் ஸூக்ஷ்மமான பொருளைக் குறிக்கின்றது. எதைக் காட்டிலும் ஸூக்ஷ்மமானது இல்லையோ அதைப் பரமாணு என்று குறிப்பார்கள். பரமம் மிகவும் உயர்ந்தது. மகத் மிகவும் உயர்ந்தது. மகத் என்ற சொல் மிகவும் ஸ்தூலமானதைக் குறிக்கின்றது. பரமமகத்துவம் என்பதற்கு மிகவும் பெரியது என்று பொருள். உலகில் ஞானியால் தெரிந்து கொள்ள வேண்டியவை இரண்டு பொருள்களே. அவை பரமாணு, மிகவும் பெரியது பரம மகத்துவம்.

வசப் படாததை வசப்படுத்துவது வசீகாரம். தன் வசத்திற்கு கொண்டு வருதல் என்று பொருள். நிகழ்ந்த காலத்தில் தன் வசத்திற்கு உட்படாததை நிகழும் காலத்தில் தன் வசத்திற்கு கொண்டு வருவது என்று பொருள். உலகத்தின் உருவம் மிகவும் ஸூக்ஷ்மமாயும், மிகவும் பெரியதாயும் உள்ளது. ஆயினும் அது தர்மத்துடன்[111] கூடியது. இவ்வித உலகத்தை தன் வசமாக்க முடியும். ஸத்குணங்களுடன் கூடிய பகவானை த்யானம் செய்வதால் இது சாத்தியமாகும்.

இதற்கு பரமாணு, பரமமகத்துவம் என்ற இரண்டும் வகைகள். இதனால் யோகாங்கத்தை செய்யும் புருஷனுடைய ஸ்வரூபத்தை இது குறிக்கின்றது. த்யானம் செய்பவனைக் காட்டிலும் த்யானம் வேறு. த்யானம் செய்யப்படும் பொருள் அதனின்றும் வேறு. இதனால் இந்திரியங்களுக்கு அப்பாற்பட்ட தத்துவங்களை நேராக பார்க்கும்படி செய்யும் சக்தியை உடையது. இதனையே மனத்தில் வைத்துக் கொண்டு ''தத: ப்ரத்யக் சேதனாதிகமோப்யந்தராயாபாவச்ச'' என்று 1.29 ஸூத்திரத்தை இயற்றினார். எல்லா உலகங்களுக்கும் ஈச்வரனான அவனுடைய ஸ்வரூபம், குணம் இவைகளை த்யானம் செய்பவர்களுக்கு,

பரமாணுவைக் காட்டிலும் மிகவும் ஸூக்ஷ்மமாயும், பரமாணுவின் உள்ளே மறைந்திருந்தாலும், உள்ளிருக்கும் சேதனன் என்ற ஜீவன் ஸுலபமாக அடையத்தக்கவனுக ஆகின்ருன். நேராகவே தெரிந்து கொள்கிருன். அல்லது அனுபவிக்கிருன், என்று தெரிவிக்கப்படுகின்றது.

## 1.41 க்ஷீணவ்ருத்தேரபிஜாதஸ்யேவ மணேர்க்ரஹீத்ருக்ரஹணக்ராஹ்யேஷு தத்ஸ்ததஞ்சநதா ஸமாபத்தி:

(வ்ருத்தியினின்றும் விடுபட்டவன் உயர்ந்த மணியைப் போல், அறிபவன், அறிதல், அறியப்படும் பொருள் இவைகளில் அங்கு ஒன்றியிருந்து அவைகளின் மயமாக ஆகும்போது அவ்வுருவமாக மாறிவிடுகிருன்.)

எந்த புருஷனுடைய சித்தவ்ருத்திகள் க்ஷயத்தை அடைந்தனவோ, அந்த புருஷன் க்ஷீணவ்ருத்தி என்று சொல்லப்படுகின்ருன். அதாவது அடக்கப்பட்டசித்தத்தை உடையவன் என்று பொருள். அப்போது அவன் உயர்ந்த மணியைப்போல் இருக்கின்ருன். அதாவது சுத்தமான குற்றமற்ற மணியைப்போல் என்று பொருள். ஜீவனுடைய நிலே உயர்ந்த மணியைப்போல் இருக்கிறது. அறிந்து கொள்பவனும் ஜீவாத்மா, அதன் கருவி இந்திரியங்கள், அறியப்படுவது ஸர்வேச்வரனை பரமாத்மா. எவனெருவன் யோகங்களே அனுஷ்டித்து க்ஷீண வ்ருத்தியாக இருக்கின்ருனே, அவன் அறிபவன், அறிவதற்கு கருவி, அறியப்படும் பொருள் இவைகளே த்யானம் செய்யும் போது, அப்பொருளின் உருவத்தை அடைகின்ருன். அதாவது த்யானத்தால் பூசப்படுகின்ருன். த்யானம் செய்யத்தக்க பொருளின் ஆகாரத்தை நினைப்பதால் அவன் அப்பொருள் களுடன் அவைகளாகவே ஆகிவிடுகின்ருன். மையால் பூசப்படுவது போல் அப்பொருள் அதன்மயமாக இங்கு த்யானம் ஆகி விடுகின்றது. அது அவன் அடையும் நிலே. இங்கு த்யானம் செய்யத்தக்க பரமாத்மாவின் திவ்யமங்களவிக்ரகமானது பிரக்ருதியினின்றும் உண்டான பொருளல்ல.

# 1.42 சப்தார்த்தக்ஞான விகல்பை: ஸங்கீர்ணா ஸவிதர்கா ஸமாபத்தி:

(சப்தம், அர்த்தம், ஞானம், விகல்பம் ஒன்றுக்கொன்று பல வகைகளால் பின்னப்பட்டுள்ளன. இது ஸவிதர்க ஸமாபத்தி.)

ஸவிதர்க ஸமாபத்தியின் லக்ஷணத்தை சப்தார்த்தக்ஞான விகல்பைரென்ற இந்த ஸூத்திரத்தில் கூறுகின்றார். ப்ரமாண ஸூத்திரத்தில் (1–6) விகல்ப உருவத்தில் உள்ள சித்த வ்ருத்தியானது பொருளற்றது என்று கூறப்பட்டுள்ளது. ஆயினும், அது பிரமாணத்திற்கு விஷயமானது என்பதைத் தெரிவிக்கும் ஸூத்திரகாரர் ஸவிதர்க்க ஸமாபத்தி (1–42) என்ற இந்த ஸூத்திரத்தில் உள்ள விகல்ப என்ற சொல்லை வேறுவிதமாக விளக்க வேண்டும். அல்லது இதனை நீக்கிவிடலாமா என்ற ஸந்தேகத்தால் நாதமுனி இந்த ஸூத்திரத்தில் விகல்ப என்ற சொல் ஸமாதிக்கு விஷயமான பொருள்கள், பிரக்ருதியைச் சார்ந்தது, சாராதது என்ற பொருள்களுடன் சேர்ந்துள்ளன என்ற உரையிட்டார். அதனுடைய ஸாரத்தைத்தான் பாஷ்யத்தை இயற்றியவரும் அதற்கு டீகாவை எழுதியவரும் ஸவிதர்க்கத்தின் பொருள் ஸ்தூலமானது என்று உரையிட்டனர். மற்ற இரண்டு ஸமாதிகளும் தர்க்கமற்றதும், விசாரம்செய்யத் தகாததாயும் உள்ளன. பிரக்ருதிஸம்பந்தமற்ற விஷயத்தைப் பற்றியவை என்று அறியவேண்டும். விதர்க்கத்துடன் கூடிய விஷயத்தில் முதன் முதலாக அப்யாஸம் செய்பவர்களுக்கு பிரக்ருதியுடன் ஸம்பந்தப்பட்ட ஸ்தூல விஷயத்தில் ஸமாதியை அப்யாஸம் செய்வது ஸுலபமாய் இருக்கும். இந்த ஸூத்திரத்தில் மூன்றும் ஒன்றையொன்று ஏறிட்டு இருப்பதால் பல ஸமாதிகள் கலந்துள்ளன. ஆயினும் அது சிறிதளவே ஞானத்தை உடையவர்களைப் பற்றியது.

ஸமாதியை அப்யாஸம் செய்பவர்கள் சித்தத்தை ஒரே நிலையில் நிறுத்த வேண்டும். அதற்காக தாரணை என்ற அங்கத்தை திடப்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்காக பிரக்ருதியினின்று உண்டான உலோகங்களாலும், மண்ணாலும் தன்னுடைய மனதிற்கு மகிழ்ச்சியை அளிக்கக் கூடிய மூர்த்தியை செய்து முதலில் அதில் தன் பார்வையை ஸ்திரமாக வைக்க

வேண்டும். த்ராடகம்[113] என்பதின் அப்யாஸத்தால் எதுவரையில் தனக்கு வேண்டிய காலங்களில் தன்னுடைய நினைவில் அந்த மூர்த்தி தென்படுகின்றதோ, அதுவரை இதனை உபயோகிக்க வேண்டும். நேரில் பார்ப்பது போன்ற நினைவுதான் த்யானம். அதில் தொடர்ந்து த்யானத்திற்கு ஏற்ற பொருளின் தத்துவத்தில் அசையாமல் உள்ள நிலை ஸமாதி. அது ஸவிதர்க்கம். அதாவது விசாரத்துடன் கூடியது. அந்த மூர்த்தியானது பிரக்ருதியால் உண்டாகாத ஸ்தூலத் திரவியம் என்பதால் அதை சுபத்திற்கு இருப்பிடம் என்று கூறுகின்றார்கள். வேதங்களால் அளவிடப்பட்டது என்று கூறினார்கள். அவ்வித ஸமாதியில்தான் சப்தம் அர்தத்துடன், அர்த்தம் சப்தத்துடன், ஞானம் அர்தத்துடன் கூடியிருப்பது என்று பின்னப்பட்டுள்ளன. எப்போது நினைவானது திடமாக ஆகின்றதோ, அப்போது அப்யாஸம் செய்யவேண்டும். அதற்குப் பிறகுதான் நிர்விசார, நிர்விதர்க ஸமாதியை அனுஷ்டிக்க முடியும். இதற்காகத்தான் ஸூத்திரத்தில் விகல்ப என்ற சொல் காண்கின்றது.

## 1.43 ஸம்ருதிபரிசுத்தௌ ஸ்வரூப/– சூந்யேவ அர்த்தமாத்ரநிர்பாஸா நிர்விதர்கா

(நினைவானது சுத்தமாய் இருக்கும்போது ஸ்வரூபம் அற்றதுபோல் பொருள் மாத்திரம் பிரகாசிக்கும்படி இருக்கும். இதற்கு நிர்விதர்கா என்று பெயர்)

## 1.44 ஏதயைவ ஸவிசாரா நிர்விசாரா ச ஸூக்ஷ்ம விஷயா வ்யாக்யாதா

[இதனாலேயே ஸூக்ஷ்மமான விஷயத்தை உடைய ஸவிசாரா நிர்விசாரா இரண்டும் விளக்கப்பட்டுள்ளன.]

ஸவிதர்கம், நிர்விதர்கம் என்ற ஸமாதிகள் ஸ்தூல விஷயத்தைப் பற்றியவை. அவ்விஷயம் த்யானிக்கத் தக்க

பொருளே. த்யானிக்கத்தக்கவன் பரமாத்மா. ஈச்வரனை த்யானித்தல் 1.23 என்ற ஸூத்திரம் இதற்கு பிரமாணம். இதனால், த்யானம், த்யானம் செய்வதற்கு தக்க பொருள், த்யானம் செய்பவன் எல்லாம் தனிப்பட்டவையே. அதனால் த்யானம் செய்யத்தக்க பொருள், த்யானம் செய்பவன் என்று கூறுவதற்காக ஏற்படுத்தப்பட்ட கற்பனை என்று கூறுபவர் கண்டிக்கப்பட்டுள்ளனர்.அப்போதுபார்ப்பவன் தன் ஸ்வரூபத்தில் உள்ளான். 1.3 என்ற ஸூத்திரம் த்யானம் செய்பவனைக் குறிக்கின்றது. அங்கு அந்த ஞானம் ஒன்றையே பற்றியது த்யானம். (3.2) என்ற ஸூத்திரத்தில் த்யானத்தின் ஸ்வரூபம் கூறப்பட்டுள்ளது. பொருள் ஒன்றே தோன்றும்படி ஸ்வரூபம் அற்றது போலுள்ளது ஸமாதி (3.3) என்ற ஸூத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. த்யானம் செய்யத்தக்கவன் ஈச்வரன் தான். வேறு யாருமில்லை என்று அவனைக் குறிக்கும் பிரணவம் (1.27) இது அதனை ஜபம் செய்வது, அதன் பொருளை எண்ணுவது (1.28) உள்ளிருக்கும் சேதனனை (1.29) என்ற இம்மூன்று ஸூத்திரங்களால் விளக்கப்பட்டுள்ளது. ரஜஸ், தமஸ் இவைகளால் பாதிக்கப்படாத சித்தத்திற்குத்தான் நான்குவித ஸமாதிகள். அந்நிலையில் த்யானம் செய்பவனுக்கு த்யானம் செய்யப்படும். பொருள் ஸ்தூலமாயும், ஸூக்ஷ்மமாயும் தென்படும். த்யானம் செய்யத்தக்க பரமாத்மாவின் உருவம் ஸூக்ஷ்மமாயும், ஸ்தூலமாயும் உள்ளது.

இது பிரக்ருதியினால் ஏற்பட்டதல்ல. இதில் பிரக்ருதியுடன் தொடர்பு இல்லை. தானே பிரகாசிக்கக் கூடியது. தன் ஸங்கல்பத்தாலேயே த்யானம் செய்பவர்களை அனுக்கிரகிப்பதற் காக தன்னிடமுள்ள ஸ்தூலத்தன்மை, ஸூக்ஷ்மத்தன்மை இரண்டையும் தானே காட்டும். உலகத்திற்கு ஈச்வரனையும், உலகத்தைக் காப்பவனையும் உள்ள பகவானுடைய இயல்பாலேயே துன்பங்கள், கர்மங்கள் இவை நீங்கும். அப்போது த்யானம் செய்பவனை அனுக்கிரகிப்பதற்கு அவனாலேயே காண்பிக்கப்பட்ட பல உருவங்கள் சுபமான இயல்பை உடையன. அவனுடைய பலவித சக்தியால் உண்டாகிறது. ''ஓ அரசனே. இந்த எல்லா சக்திகளும் எங்கு நிலை பெற்றுள்ளனவோ, அது ஹரியினுடைய விச்வரூபத்தினின்றும் மாறுபட்ட வேறு உருவம்''[114] என்று பராசரபுராணத்தில் கூறப்பட்டுள்ளது. பெரியோர்கள் இதனை

அங்கு கண்டு தெரிந்து கொள்ளட்டும். இப்படிப்பட்ட உருவமானது த்யானம் செய்பவனுடைய தர்மபூதஞானத்திற்கு இலக்காகும். த்யானத்தால் மகிழ்ச்சியை அடைந்த ஈச்வரனேயே த்யானம் செய்பவனுக்கு அனுக்கிரகம் செய்வதற்காகவே இது காண்பிக்கப்பட்டது என்று 'அவர்களுடன் அவர்களுக்கு கருணை பொழிவதற்கு' என்று பகவத் கீதையில்[115] ச்லோகங்களில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. எவனுக்கு இவ்விதமான பகவானுடைய நேர்தரிசனம் கிடைக்கின்றதோ அவனுக்கே நிர்விதர்க ஸமாதி என்று பகவான் பதஞ்ஜலி ஸ்ம்ருதி சுத்தமாக இருக்கும்போது என்ற (1.43) ஸூத்திரத்தில் கூறியுள்ளார்.

ஸ்ம்ருதி என்பது ஸமாதிகாலத்தில் தோன்றும் நினைவு. அது நேரில் பார்ப்பதற்கு ஸமமாக இருக்கும். அதனுடைய சக்தியானது அதை மறைக்காமல் இருப்பது. எப்பொழுதும் வைத்துக் கொண்டிருப்பது. மற்ற விஷயங்களுடன் கலவாமை, ஸமாதியில் த்யானிக்க வேண்டிய உருவத்திற்கு வேறுபட்ட பொருள் ஒன்றும் அப்போது இல்லை. அந்த நினைவானது த்யானம் செய்பவன் பகவானுடைய உருவத்தை அனுபவத்தால் பெறக் கூடியது. அனுபவம் என்பது நேருக்கு நேராக பார்ப்பது. இப்பார்வை எவ்வளவுக்கெவ்வளவு பலமுள்ளதாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு ஸம்ஸ்காரமும் பலமுள்ளதாக ஆகின்றது. ஸம்ஸ்காரம் எவ்வளவு பலமுள்ளதாக ஆகின்றதோ அந்தத் திடத்தினால் நினைவும் திடமாக ஆகின்றது. இதுதான் இந்த ஸூத்திரத்தில் சொல்லப்படும் ஸ்ம்ருதிபரிசுத்தி என்பதற்குப் பொருள். இவ்வித நினைவு பரிசுத்தமாக இருக்கும்போது த்யானம் செய்யத்தகுந்த பொருளின் ஆகாரத்துடன் (வடிவத்துடன்) உண்டாகும் நினைவு அதற்கு ஸ்வரூபம் அற்றதுபோல் ஆகின்றது. இதுதான் ஸ்வரூபசூன்யம் என்பதற்குப் பொருள். த்யானம் செய்பவன் ஆனந்த ஸ்வரூபனாக ஆகின்றான். ஆகையால் இந்த ஸூத்திரத்தில் பொருள் மாத்திரம் தோன்றுகிறது என்று கூறப்பட்டுள்ளது. த்யானம் செய்யத்தக்க பொருள், த்யானம் செய்பவன், நினைவு இவைகளே தோன்றுகின்றன. அதாவது அனுபவிக்கப்படுகின்றன. இந்த அனுபவம் த்யானம் செய்யத்தக்க உருவத்தில் ஸூக்ஷ்மதன்மையைப் பற்றிய ஸமாதியை அனுஷ்டிப்பவனுக்கே உண்டாகும். ஸ்தூல விஷயத்தைப் பற்றிய ஸமாதியை அனுஷ்டிப்பவனுக்கு அல்ல. இந்நிலையை வர்ணிக்க முடியாது

என்பதால் நிர்விதர்க என்று இந்த ஸூத்திரத்தில் கூறப்பட்டுள்ளது. இதற்காக ஸ்தூல விஷயத்தைப் பற்றிய ஸமாதியை அனுஷ்டிப்பதை (ஸவிதர்க்க அனுஷ்டானம்) வெகு காலம் அப்யஸிக்கவேண்டும். இவை எல்லாவற்றையும் ஸவிதர்க்க, ஸவிசார, ஸமாதியிலும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இங்கு பதஞ்ஜலியின் மதத்தில் அறியப்பட வேண்டிய விஷயங்களைப் பற்றிய விவாதத்தை சுருக்கமாக காட்டுகிறோம்.

கபிலமதத்தில் பிரகிருதியால் ஆகிய தத்துவங்கள் இருபத்து நான்கு என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. பதஞ்ஜலி முனிவர் இதை ஏற்றுக் கொண்டிருக்கிறார். ஆனால் ஆத்மாவின் விஷயத்தில் கபிலரால் சொல்லப்பட்ட அபிப்பிராயம் ஏற்கப்படவில்லை. கபில மதத்தை பின்பற்றும் சிலர் சில விடங்களில் புருஷன் அனுபவிக்கிறான். மற்ற விடங்களில் உதாஸீனன் என்றும் கூறுகின்றனர். ''பிரக்ருதி தன் கார்யத்தை செய்துவிட்டு ஸம்ஸாரத்தில் கட்டுப்பட்டுள்ளது[116]''. ''பலவற்றை ஆதாரமாக உடையது[117]'' என்று விரோதமாக கூறுகின்றனர். பதஞ்ஜலி முனிவர் இவ்விதம் சொல்லவில்லை. ஆனால் புருஷனுடைய போகத்திற்காகவும், மோக்ஷத்திற்காகவும் அது முயற்சி செய்கிறது. புருஷன் அறிகிறான். அனுபவிக்கிறான். புருஷர்கள் எண்ணற்றவர்கள். ஈச்வரன் பிரக்ருதி, புருஷன் இருவரிடமிருந்தும் வேறுபட்டவன், சுதந்திரன். கர்மாவிற்கு வசப்படாதவன். பரமாத்மாவாக உலகத்திற்கு ஈச்வரன், எல்லாம் அறிந்தவன் எல்லோருக்கும் அனுக்கிரகத்தை செய்பவன், துயர்கள் யாவற்றிற்கும் அப்பாற்பட்டவன். பக்தர்களுக்கு மோக்ஷத்தை அளிப்பவன். இவ்விதம் உள்ளவனை ஏற்றுக் கொண்டு அவனை த்யானம் செய்வதற்கு யோகாங்கங்களை உபயோகப்படுத்துவதற்கு முறைகளும் கூறப்பட்டுள்ளன. ஆதியின்றி உள்ள கர்மாவின் வாஸனையால் மூன்று வித துன்பங்கள் உண்டாகின்றன. இவைகளால் கஷ்டப்படும் புருஷர்களை அத்துன்பங்களினின்று வெளியேற்றுகிறேன் என்று அனுக்கிரகமாகிற ஸங்கல்பத்தைச் செய்கிறான். பிரக்ருதியால் அவன் கட்டுப்பட்டவனல்ல. பிரக்ருதியை அடக்கினவன். தன்னுடைய ஸூத்திரங்களில் எங்கும் உலகம் பொய்யானது என்று பதஞ்ஜலி கூறவில்லை. ஆதலால் பதஞ்ஜலியைப் பின்பற்றியவர்கள் புருஷர் என்ற சொல்லால்

குறிக்கப்படுவார்கள் ஜீவன்கள், பார்ப்பவர்கள். பிரக்ருதியின் தத்துவங்கள் இருபத்து நான்கு, ஈச்வரனையும் தத்துவமாக ஏற்றுக் கொள்ளுகிறார்கள். இவ்விதம் அறியக்கூடிய பொருள்களில் பிரணவத்தால் தெரிவிக்கப்படும் பகவானாகிய பரமாத்மாவிற்கு உ[116]பாதான காரணமும், நிமித்த காரணமும் கூறப்படவில்லை என்று ராமானுஜரைப் பின்பற்றியவர்களும், சங்கரரைப் பின்பற்றியவர்களும் இது பெரிய தவறு என்று சுட்டிக் காண்பிக்கிறார்கள். இது இச்சந்தர்ப்பத்தில் பொருந்தாத விஷயம். ஆயினும் தனித்தனியாக இருக்கும்போது பரமாத்மா உலகத்தை அடக்கி ஆளுகின்றான். தன்னை புகலாக அடைந்தவர்களுக்கு அனுக்கிரகம் செய்கிறான் என்று கூறுகின்றோம். நான்கு ஸமாதிகளில் ஏதேனும் ஒன்றுக்கு எவன் முயற்சி செய்கிறானோ, அவன் பதஞ்ஜலியின் மூன்றாவது பாதத்தின் முதலிரண்டு ஸூத்திரங்களில் கூறப்பட்ட வழியில் முதன் முதலில் தாரணை திடமாகும் வரை அப்யாஸம் செய்யவேண்டும். பிரத்யாஹாரத்தை அப்யாஸம் செய்யாதவனுக்கும், வெகு காலம் பிராணாயாமங்களை செய்யாதவனுக்கும் தாரணை ஆகாயப்பூ மாதிரிதான். இதற்கு மேல் சொல்லுவதற்கு ஒன்றுமில்லை. த்யானம் தாரணையை ஆதாரமாகக் கொண்டது. த்யானத்தின் மேன்மையை ஆதாரமாகக் கொண்டது ஸமாதி. த்யானமானது காற்றில்லாத இடத்தில் உள்ள தீபத்தைப் போன்றது[119]. த்யானமில்லாமல் ஸமாதியை அனுபவிக்க முடியாது. அதற்காக முதல் முதல் அப்யாஸம் செய்பவர்கள் மண்ணாலேயோ, உலோகத்தாலேயோ பிரக்ருதியுடன் சம்பந்தப்பட்ட மிகவும் அழகான மூர்த்தியை செய்து, தன் முன்பு அதை வைத்து தனிமையிலேயோ, சத்தமற்ற இடத்திலேயோ எந்தப் பெயருடன் அந்த மூர்த்தி உள்ளதோ அந்த வைதிகப் பெயரை முதலில் சொற்களால் சொல்லிக் கொண்டு இமை கொட்டாத கண்களால் மூர்த்தியைப் பார்க்க வேண்டும். எதுவரையில் அம்மூர்த்தி மனதில் ஸ்திரமாக இருக்கிறதோ அதுவரை ஒரு ஆஸனத்தில் திடமாக இருந்து கொண்டு அசைவற்று இருக்க வேண்டும். துன்பம் இல்லாவிட்டாலும் அவன் மூர்த்திமயமான தன் மனத்தையும் தன்னையும் எப்போது எண்ணுகிறானோ, தான் எங்கு இருக்கிறோம் என்பதை மறந்து விடுகிறானோ அப்போது

இந்த நிலே எவ்வளவு காலம் உள்ளதோ அதுவரை முதன் முதலில் அப்யாஸம் செய்பவருக்கு ஸமாதிநிலே என்று அதற்குப் பெயர். அதாவது த்யானம் செய்யும் புருஷனுக்கும், த்யானம் செய்யும் உருவத்துடன் கூடிய மூர்த்திக்கும், த்யானத்திற்கும் வித்தியாஸத்தை எவன் அறியாமல் இருக்கிருனே அவனுக்கு இந்த நிலே என்று கூறப்பட்டுள்ளது.

இவ்விஷயத்தில் வேதாந்தஸம்பிரதாயத்தில் மிக்க அனுபவமுள்ள பெரியோர்களின் அபிப்பிராயம் கீழ்வருமாறு இருக்கின்றது. ஆதாரமற்ற தாரணே சரிப்படாது. பராசர புராணத்தில்[120] "அழகான உருவத்தையுடைய விஷ்ணுவின் பிரதிமையை" என்று கூறப்பட்டுள்ள முறைப்படி சோதிட சாஸ்த்திரத்தைப் பின்பற்றி தக்க சமயத்தில் சில்ப சாஸ்த்திரத்தின் ரகஸ்யத்தை அறிந்த பெரி யோர்களால் ஐந்து அங்குல அளவுக்கு மீருத பகவா னுடைய விக்ரகத்தைச் செய்ய வேண்டும். சாஸ்த்திரம் அறிந்தவர்களேயும், வேதம் அறிந்தவர்களேயும் கொண்டு ஜலாதிவாஸ, தான்யாதிவாஸ, க்ஷீராதிவாஸ[121] முதலியவை களில் ஏழு இரவுகள் அதை வைக்க வேண்டும். தினந்தோறும் முற்பகல், நடுப்பகல், பிற்பகல் இவைகளில் ஐந்து சாந்தி[122] மந்திரங்கள், ஐந்து ஸூக்தங்கள்[123] இவைகளால் அந்த விக்ரகத்திற்குத் தயிர், பால், நெய், இளநீர், சுத்தநீர் இவைகளால் அபிஷேகம் செய்ய வேண்டும். பூஷணுத் த்யாயத்தில்[124] கூறப்பட்டுள்ள முறையில் பலவித தங்கஆபர ணங்களால் அந்த விக்ரகத்தை அலங்கரிக்க வேண்டும். அவ்விக்ரகத்திற்கு ஆயிரம் பெயர்களேச் சொல்லி அர்ச்சனே செய்து பதினுறு உபசாரங் களே[125] மந்திரங்களுடன் உபசரித்து நமஸ்காரம் செய்ய வேண்டும். பிறகு நீராஜனம்[126] செய்து சக்திக்குத் தக்கவாறு சாஸ்திரத்தில் சொல்லியபடி நைவேத்யங்களால்[127] மகிழ்வித்து, வேத வாக்கியங்களால் துதித்து ஓம், ஹ்ராம், ஹ்ரீம், க்ரோம், யம், ரம், லம், வம், சம், ஷம், ஸம், ஹோம்[128] என்று விக்ரகத்திற்கு பிராணப் பிரதிஷ்டையை செய்து ஜடிபந்தன[129] யந்திரத்தின்[130] மூலம் இதனேச் செய்து எழுந்து அஞ்சலி செய்ய வேண்டும். இந்த விக்ரகத்திற்கு ஐந்து ப்ராணங்கள் எல்லா இந்திரியங்கள், (ஞான, கர்ம, இரு வகைகள்) சக்தியுடன் கூடிய காரியங்கள் இந்த பிம்பத்தில் வெகுகாலம் இருக்கட்டும்," என்ற மந்திரத்தால்

தர்பத்தின் பிடி, மாந்துளிர்கள் இவைகளால் எல்லாப் பக்கங்களிலும் தடவி அந்த மூர்த்தியின் பெயரால் பத்தாயிரம் தரம் ஹோமம் செய்து பூர்ணாஹுதியையும்[131] செய்யவேண்டும். பிறகு பரிஷேசனம்[132] செய்து அக்னியுடன் மூர்த்தியைப் பிரதக்ஷிணம் செய்ய வேண்டும். குருவின் அனுமதியைப் பெற்று தாரணத்திற்கு[135] ஆரம்பிக்க வேண்டும். பிறகு த்யானம், அதன் பிறகு ஸமாதி. உட்கார்ந்து கொண்டே த்யானம் செய்யவேண்டும். படுத்துக் கொண்டோ, நின்று கொண்டோ செய்யக் கூடாது. இதற்குப் பிறகு பஹிஸ்த்ராடகம் என்ற யோகத்தை செய்து மூர்த்தியை திருவடி முதல் திருமுடி வரையில் பார்த்துக் கொண்டு, கண்களை மூடாமல் உள்ளுக்குள் ஒரு பாப்பாவை நகரும்படி செய்து கண்ணீர் கீழே வரும்வரை பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். பிறகு குளிர்ந்த நீரால் கண்களை அலம்பி விட்டு இவ்விதமே மூன்றுதரம் அப்யாஸம் செய்ய வேண்டும். கடைசியாக கண்களை மூடிக் கொண்டு சக்திக்குத் தக்கவாறு மூர்த்தியின் பெயரின் பொருளை எண்ணிக் கொண்டு தன் ஜீவன் அவனையே நம்பியிருப்பதாக த்யானம் செய்ய வேண்டும். தனக்கும் மூர்த்திக்கும் நடுவிலுள்ள இடம் இருபத்தாறு அங்குலங்களுக்கு மேல் போகாமலும், பதினெட்டு அங்குலங்களுக்கு கீழே இல்லாமலும் மேரு தண்டத்தை (முதுகெலும்பை) கொம்பு போல் செய்து உட்கார வேண்டும்.

## 1.45 ஸூக்ஷ்மவிஷயத்வம் சாலிங்க பர்யவஸானம்

**[ஸூக்ஷ்மமான விஷயத்தைப் பற்றிய ஸமாதி அடையாள மற்ற நிலையில் முடிகின்றது.]**

நான்கு விதமான ஸமாதிகளுக்கு ஸ்தூலமும், ஸூக்ஷ்மமும் விஷயங்கள் என்று பதஞ்ஜலி முனிவர் கூறுகின்றார். இரு ஸ்தூலம், இரு ஸூக்ஷ்மம் இவை விஷயங்களாக ஸமாதியில் ஏற்படும்போது த்யானம் செய்யத்தக்க உருவங்களும், ஸமாதிக்கு விஷயமாக ஆகின்றன. பிரக்ருதியுடன் ஸம்பந்தப்பட்டது மாத்திரமல்ல. ஏனெனில் பிரக்ருதியின் குணங்கள் ஸமாதிக்கு

விஷயமான த்யானத்தின் வஸ்துவில் இருக்கமாட்டா. மேலும் ஸமாதியின் விஷயத்தை ஸ்தூல இந்திரியத்தால் கண்டுகொள்ள முடியாது. ஆயினும் பிரக்ருதிஸம்பந்தம் அற்றதாயும் பிரகாசத்துடன் கூடியதாயும் ஜோதிர்மயமாயும், இருந்த போதிலும், தன்னை அடைந்தவர்களை காப்பதற்காக எல்லா நற்குணங்களையும் அவன் எடுத்துக் கொள்ளுகிறான். எல்லா சக்தியுடன் கூடியனவனுயும் ஆகின்றான். அந்த உருவமானது நம்முடைய உருவத்தைப் போல் த்யானம் செய்யத்தக்க வஸ்துவைப் போன்றது. ஆனால் கர்மங்களால் உண்டானது அல்ல. கர்மங்களுக்கு வசப்பட்ட ஆகாரம் (உருவம்) சிறிது காலத்திற்குப் பிறகு நாசத்தை அடைகிறது. ஸமாதிக்கு விஷயமான த்யானம் செய்யத்தக்க உருவம், கர்மத்தை செய்யும் காலம், அதன் பிறகு உண்டாகும் காலம் இரண்டிற்கும் வசப்படாமல் இருக்கிறது. இதைப் பற்றி நூற்றுக்கணக்கான பிரமாணங்கள் உள்ளன. "ஒருவனும் இவனைக் கண்ணால் பார்க்க முடியாது[135]"

"ஹ்ருதயத்தாலும், புத்தியாலும், மனத்தாலும், தகுதியுள்ளவர்களாக எவர்கள் ஆகின்றார்களோ, அவர்கள் இவனைத் தெரிந்து கொள்ளுகிறார்கள். அவர்கள் அமரர்களாக ஆகின்றனர்[136].

த்யானம் செய்யத்தக்க உருவம், ரஜஸ், தமஸ் இவைகளுடன் சிறிதளவும் கலக்காமல் உள்ள தர்மபூதக்ஞானத்தின் உதவியால் ஜீவாத்மாவிற்கு நன்மையைத் தரக்கூடிய த்யானத்தை அனுஷ்டிப்பதால் மாத்திரம் அறியத்தக்கது என்று முன்பு கூறப்பட்டதை மறக்கக் கூடாது. அவ்வித த்யானத்தால் அறியத்தக்கவன் பரமாத்மாதான். அவனுடைய உருவம் த்யானம் செய்பவனுடைய விருப்பத்திற்கு இணங்க ஸ்தூலமாகவோ, ஸூக்ஷ்மமாகவோ, த்யானம் செய்யத்தக்க பரமாத்மாவினிடத்தில் உள்ளது.

இது காலத்தினாலோ, கர்மத்தினாலோ உண்டாவதில்லை. ஆனால் த்யானம் செய்யத்தக்கவன் எல்லாம் அறிந்தவனாக இருப்பதாலும், எல்லோருக்கும் அந்தர்மியாய் இருப்பதாலும், த்யானம் செய்பவனுடைய சக்திக்கு ஏற்றவாறு ஸமாதி நிலையில் அவ்விதம் தோன்றுகிறான். முதன் முதலாக ஸமாதியை அப்யாஸம் செய்பவர்களுக்கு ஸமாதிக்கு விஷயமான த்யா

னத்தின் உருவம், வேதம், ஸ்ம்ருதி, புராணம், ஆகமம் ஆகிய பிரமாணங்களை அனுஸரித்து இருக்கின்றது. பிரக்ருதியின் உருவம் மிகவும் தெளிவாக பிரகாசிக்கின்றது. ஆயினும் அந்த ஆகாரமானது (உருவம்) கடைத்தெருவில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் பிரதிமைக்கு ஸமமானது அல்ல. முதன் முதலாக அப்யாஸம் செய்பவன் தன் முன்பு பிரகாசிப்பதாயும், த்யானம் செய்யத்தக்க ஆகாரத்துடன் கூடிய தாயும் எது உள்ளதோ அது வேதம், ஸ்ம்ருதி, ஆகமங்கள் இவைகளில் கூறப்பட்டுள்ள ஸம்ஸ்காரங்களால் பிராணப் பிரதிஷ்டை, நேத்ரோன்மீலனம், யந்த்ர ஸ்தாபனம் முதலிய ஸம்ஸ்காரங்களுடன் கூடியதாக த்யானம் செய்யத் தக்கது. இது முன்பே கூறப்பட்டுள்ளது. அவ்வித ஸம்ஸ்காரங்களால், அங்கு ஆவாஹனம் செய்யப்பட்ட பிரக்ருதி ஸம்பந்தமற்ற ஜகதீச் வரனுடைய சக்தி உள்ளுக்குள் மறைந்து ஸாமான்ய மனிதர்கள் கண்களுக்கு புலப்படாது. பிரக்ருதியால் ஆனதோ, அப் பிராக்ருதமோ சக்தி இந்திரங்களுக்கு இலக்காக ஆகாது. ஆனால் சக்தியைப் பெற்றுள்ள புருஷர்களின் பேச்சு, செய்கை இவை மூலம் அது சக்தி உள்ளதாக ஆகின்றது. என்று ஊகிக்கவேண்டும். ஆகவே முதன் முதலில் ஸமாதியை அப்யாஸம் செய்பவர்களுக்கு ஸமாதியை அனுஷ்டிக்கும் முறை உலகில் வழங்கும் காரியங்களுக்கு ஸமமாக ஆகாது. இவை அனைத்தையும் இந்திரியங்களை அடக்கி வைப்பவர்களுக்கு சிரேஷ்டரான நாதமுனிகள் அருளிச் செய்த யோக ரஹஸ்யத்தின் உட்பொருள்

அதாவது எந்த ஸமாதியில் உலகிலும் இருப்பவனாகவோ, உலகத்தின் உருவமாக மாறினவனாகவோ பல மதங்களில் வஸ்துவின் காரணமான தத்துவங்களிலோ பிராக்ருத விஷயங்களில் மிகவும் ஸூக்ஷ்மமாயும், அப்பிராக்ருதத்திலும் மாறுதலை அடையாமலும் உள்ள ஆத்மாக்களில் இது ஸூக்ஷ்ம விஷயம். ஸமாதியில் உள்ள புருஷன் இதை நன்றாகத் தெரிந்துகொள்கிறான். த்யானம் செய்யத்தக்க உருவத்தினுடைய ஸ்தூல நிலையில் உயர்ந்த நிலையானது இந்த ஸூத்திரத்தால் தெரிவிக்கப்படுகின்றது. ஆயினும் அலிங்கம் என்பதை விவரிக்கும்போது நாதமுனிகள் அது அநாதி என்று உரையிட்டுள்ளார். யோக ஸூத்திரத்தைப் படிப்பவர்கள் பிரக்ருதி மாத்திரத்தையோ, ஈச்வரனால் ஆளப்படாததையோ பிரசித்த

**மில்லாத நிலையில் உள்ளவற்றை அலிங்கம் என்று கூறினால் அதை ஏற்க முடியாது.**

''அசைவதோ, அசைவற்றதோ எப்பொருளும் என்னை விட்டு இருக்க மாட்டா''[137]. இதற்கு முடிவும், ஆதியும், ஸ்திரமான இருப்பும் கிடையாது'' என்று ச்ருதி, ஸ்ம்ருதி இவைகளின் பிரமாணங்களால் ஆத்மா, அநாத்மா, பரமாத்மா என்ற இம் மூன்றாலும் இவ்வுலகம் நிறைந்துள்ளது. இதை ஆத்மாவற்றது, தன்மையற்றது என்று கூறுபவர்கள் நரகத்திற்குச் செல்வார்கள் ''மிக்க அசுத்தமான நரகத்தில் வீழ்வார்கள்'' என்று கீதை[138] கூறுகின்றது. இந்த அலிங்கபர்ய **வஸானம் என்ற ஸூத்திரத்தில் மிகவும் ஸூக்ஷ்மமான த்யானம் செய்யத் தக்கவனுடைய உருவம் உயிரற்றது பிரக்ருதியால் ஆனது என்று ஒருவராலும் கூற முடியாது.**

## 1.46 தா ஏவ ஸபீஜ: ஸமாதி:

### (அவைகளே பீஜத்துடன் கூடிய ஸமாதி)

ஸவிதர்கம், ஸவிசாரம், நிர்விதர்கம், நிர்விசாரம் என்ற நான்கு ஸமாதிகளும் பீஜத்துடன் கூடிய ஸமாதிகள். மற்றவை அவ்விதம் அல்ல. பீஜத்துடன் கூடியிருப்பதானது விஷயத்துடன் கூடியிருப்பது. இதைப் பார்ப்பவர்கள் (ஆத்மாக்கள்) எண்ணற்றவர்கள். உலகத்திற்கு ஈச்வரனான பரமாத்மா, பெரிய ஜோதிஸ், எல்லா நற்குணங்களையும் எல்லாக் காலங்களிலும் நிரம்பப் பெற்றவன். அவனிடத்தில் காலம் ஒன்றையும் செய்யாது. ''காலமும் அவனாலேயே படைக்கப்பட்டது. அவன் காலத்தை தன் வசத்தில் வைத்துள்ளான். காலம் அவனை வசப்படுத்தாது[139] என்று பராசர புராணத்திலும், ''கலா முஹூர்த்தா. காஷ்டா'' என்று நாராயணீயத்திலும்[140] கூறப்பட்டுள்ளது. அவன் எல்லோரையும் உள்ளுக்குள் இருந்து கொண்டு அடக்குகிறான். எப்போதும் இவ்விதம் அடக்குவதால் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன். பிரக்ருதி உயிரற்றது. மூன்று குணங்களுடன் கூடியது. ஸூக்ஷ்மமான எல்லாக் குணங்களிலும்

எப்போதும் பலவித மாறுதல்களை அடைகின்றது. பதஞ்ஜலியின் முறையைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளாமல் தங்களை யோகிகளாக நினைக்கும் சிலர் நன்றாக யோகாப்யாஸத்தைச் செய்யாமல் ஸ்தூலமாயும், ஸூக்ஷ்மமாயும் உள்ள விஷயங்களுடன் கூடின நான்கு ஸமாதிகளையும் வெளியிலுள்ள விஷயங்களைப் பற்றினவை என்று கூறுகின்றார்கள். யோக ஸூத்திரத்திற்கு பாஷ்யம் செய்தவரும் அவ்விதமே கூறினார். தத்துவத்தை அறிந்தவர்கள் இவ்வித அபிப்ராயத்தை நம்பக்கூடாது என்று கருதுகின்றனர். பீஜத்துடன் இருப்பது, விஷயத்துடன் இருப்பது இரண்டும் ஒரே பொருளை உடையவை என்று முன்பு கூறப்பட்டது. நான்குவித ஸமாதிகளிலும் த்யானம் செய்பவன், த்யானம் செய்யத்தக்க பொருள் இரண்டும் ஒன்றாகி விடுகின்றன. ''பிரணவம் வில் ஆத்மா பாணம் பிரம்மம் அதற்கு இலக்கு'' கவனத்துடன் அடிக்க வேண்டும். ''பாணத்தைப் போல் அதன் மயமாக ஆகவேண்டும்'' என்று முண்டகத்திலும், ''உபநிஷந்மயமான வில்லை எடுத்துக் கொண்டு, பெரிய பாணத்தை உபாஸனையால் கூர்மையுடையதாகச் செய்து தொடுக்க வேண்டும். நன்றாக இழுத்து அவ்வெண்ணத்துடன் கூடிய மனத்தால்[142]'' ''ஓ, நல்லவனே அதே நாசமற்ற இலக்கைத் தெரிந்து கொள்ள வேண்டும்'' என்று முண்டகத்திலும்[143] பிரமாணமாக உள்ளன. ''ஓம் என்று ஆத்மாவை சேர்க்க வேண்டும்'' என்றும் பிரமாணம் உள்ளது[144]. ஸமாதிக்கு விஷயங்கள் வெளியில் இருப்பது அல்ல. ஆனால் உண்மையானவையே. ஜீவனுக்கும் பரமாத்மாவிற்கும் பேதம் உண்டு. அதனால் ஒன்றாகப் போவது என்பது உடலுக்கு வெளியில் அல்ல என்று மிகவும் தெளிவாகத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## 1.47 நிர்விசாரவைசாரத்யே அத்யாத்ம ப்ரஸாத:

(நிர்விசாரமாய் இருப்பதும், தெளிவாக இருப்பதும் ஆத்மாவில் உண்டாகும் தெளிவு.)

ஒன்றிலேயே இருப்பது எதனிடமிருந்து விசாரமானது விடுபட்டதோ அது . நிர்விசாரம். விசேஷமாக செல்லுகிறது என்பதால் விசாரம். சிதறிப் போகிறது என்ற பொருளையுடைய ச்ரு

என்ற தாதுவிலிருந்து உண்டானது சாரத என்ற சொல். சிறப்புடன் கூடிய சாரதம் விசாரதம். அதனுடைய தன்மை வைசராத்யம்; தர்மபூதஞானத்துடன் கூடிய சித்தத்தின் என்ற சொல்லை இங்கு சேர்த்துக் கொள்ள வேண்டும்.

அத்யாத்மம் என்பதற்கு ஆத்மாவில் என்று பொருள். உட்காருவது என்ற பொருளையுடைய ஸத என்ற தாதுவிலிருந்து ஸதனம் என்ற சொல் உண்டாயிருக்கிறது. தெளிவுடன் கூடிய பிரவாகம் என்று பொருள். ஆத்மாவில் உள்ள தெளிவு அத்யாத்ம பிரஸாதம். தெளிவுடன் கூடிய பிரவாகம் எப்போது உண்டாகிறதோ அப்போது நிர்விசார உருவத்தில் உள்ள ஸமாதி ஒன்றிலேயே இருப்பது திடமாக ஆகின்றது. ''பிறகு ஆத்மாவில், பிராணன், வ்யான'' என்று தைத்திரியத்தில் சொல்லப்பட்டுள்ளது. அசுத்தமான ஆவரணத்தின் மலத்தினிட மிருந்து விடுபட்டுள்ள பிரகாசத்துடன் கூடிய புத்தி தத்துவத்தினுடைய ரஜஸ், தமஸ் இவைகளால் அடக்கப்படாத (வசீகரிக்கப்படாத) தெளிவான (அங்குள்ள) பிரவாகமானது ''வைசாரத்யம்'' என்று வ்யாஸருடைய பாஷ்யம் கூறுகின்றது.

பகவான் பதஞ்ஜலி, யோகிகளுக்கு தலைவரான நாதமுனிகள் இப்புவியில் நிர்விசாரமான ஸமாதிக்குத் தெளிவைச் சொன்னார்கள். வாதங்கள் அனுபவம் வரைதான், வாழ்வு இறப்பு வரைதான் செல்லும். இவ்விதமுள்ள இப்புவியில் அனுபவம் இரண்டு விதமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. பிரமாணத்தை ஏற்று நடக்கும் ஜனங்கள் இது உலகத்துடன் சேர்ந்தது, சேராதது என்று கூறுவார்கள். அனுபவம் ஆதாரமற்றதல்ல. அது ஆத்மாவை ஆதாரமாக உடையது. ஆத்மாவுடன் ஸம்பந்தப்பட்டது. பரமாத்மாவுடன் ஸம்பந்தப்பட டது என்றவை இரு ஸத்தியங்கள் அதாவது அம்ருதங்கள். அனுபவம் தானாகவே தன்னைக் காட்டாது. அதன் உண்மை ஸ்வரூபத்தைத் தானாகவே சொல்லும். ஆனால் தானாகவே தத்துவத்தைக் குறிக்கும் (காட்டும்) உயிரற்ற பிரக்ருதியை உடையது என்று எண்ணக் கூடாது. தானே ப்ரகாசிக்கும். எப்போதும் உள்ள இது மற்றவைகளை ப்ரகாசப்படுத்தும்.

# 1.48 ரிதம்பரா தத்ர ப்ரக்ஞா

(அங்கு உண்டாகும் ஞானம் ரிதம்பரா)

ரிதத்தைத் தரிக்கிறது. (தரிக்கிறது) என்பதால் ரிதம்பரா ஸ்வரூபத்திற்கு ஸமமானது. அங்கு நிர்விசார வைசாரத்ய இவைகளின் நிலைகளில் பிரக்ஞா, மேன்மையுடன் தெரிந்து கொள்கிறது. அதாவது ஞானம் என்று கருத்து, வைசாரத்ய நிலையில் ஜீவனிடத்தில் உண்மையான அதனுடைய உருவத்தின் ஞானத்தை உண்டாக்குகிறது. அது நாராயணீயத்தில் ''ரிதமும், ஸத்யமும் தபஸால் ஓங்கி வளருகின்றன'' என்று கூறப்பட்டிருக்கிறது. அது ஸந்தேகத்தை நீக்குகிறது. ஆகையால் அது ப்ரக்ஞா ஆகும்.

# 1.49 ச்ருதானுமான ப்ரஞாப்யாம் அந்ய விஷயா் விசேஷார்த்தத்வாத்

(ச்ருதம், அனுமானம் இவைகள் வேறு விஷயத்தைப் பற்றியவை. ஏனெனில் விசேஷமான பொருள்களுடன் இவை கூடியிருக்கின்றன)

ச்ருதப் பிரக்ஞா என்பது ஆகமம். எங்கு கிடைக்கின்றதோ அங்கு வழியும் உள்ளது என்ற ஞானம் அனுமான ஞானம் ஆகிறது. ச்ருதம், அனுமானம் இவைகளுடைய ஞானத்திற்கு உள்ளதைக் காட்டிலும் வேருன விஷயம். ஏனெனில் ஒவ்வொன்றிற்கும் தனியான விஷயம் இருக்கிறது.

ஸாதாரண பிரக்ஞா ஸாமான்ய விஷயங்களைப் பற்றியது. ச்ருதபிரக்ஞா சாஸ்த்ர விஷயங்களைப் பற்றியது. அனுமான ப்ரக்ஞா தர்க்க விஷயத்தைப் பற்றியது. என்று பிரக்ஞா மூன்று விதம். ரிதம்பரா ப்ரக்ஞா இந்த மூன்று பிரிவுகளுள் மற்ற இரண்டைக் காட்டிலும் வேறுபட்டது

# 1.50 தஜ்ஜ: ஸம்ஸ்காரோந்யஸம்ஸ்கார ப்ரதிபந்தீ

(அதனிடமிருந்து உண்டாகும் ஸம்ஸ்காரம் வேறு. இது மற்ற ஸம்ஸ்காரங்களைத் தடுக்கின்றது.)

''உடலுடன் கூடியவனுக்கு ப்ரியம், பிரியமில்லாதது என்பது நீங்காது. உடலற்றதை (ஆத்மாவை) பிரியம், பிரியமல்லாதது என்பது நெருங்காது'' என்று சாந்தோக்கியத்தில்[149] கூறப்பட்டுள்ள பிரமாணத்தை அனுஸரித்து பல பெரிய மஹான்களும், ஸந்யாஸிகளும், வேதங்கள் புருஷனால் இயற்றப்படவில்லை என்று தெரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆயினும் ஜீவர்கள் பலர். ஜீவன் உண்மையானவன், பரமாத்மா அவனைக் காட்டிலும் வேறுபட்டவன், பரமாத்மா எல்லாவிடங்களிலும், எல்லா காலங்களிலும், எல்லா நிலைகளிலும் உண்மையானவன். எடுத்துக் கொள்ளப்பட்டவைகளும், எடுத்துக் கொள்ளப் படாதவைகளுமான பிராரப்த கர்மத்தை அனுஸரித்து உடலின் சேர்க்கையால் ஜீவர்கள், பக்தன், முக்தன், நித்யன் என்ற மூன்று வகைப்படுவர் என்பதை தங்களுடைய பிராமணத்தை ஒப்புக்கொண்டு சில இடங்களில், சில சமயங்களில், ஞானிகளிற் சிறந்தவர்களும் தத்துவத்தை அறியும் விஷயத்தில் தடுமாறுகிறார்கள் என்பது ஆச்சரியமல்ல. சிறிதளவு அறிந்த புருஷர்கள் இவ்வித தடுமாற்றத்தை உடையவர்களின் வழியைப் பின்பற்றி தன்னுடையது பிறருடையது என்ற வித்தியாஸத்தைத் தெரிந்து கொள்ளாமல் அந்த வழியிலேயே பின்செல்லுகிறார்கள். இப்போது ஸூத்திரங்களுக்கும் உரை எழுதும்போது, நான்கு பாதங்களிலும் பகவான் பதஞ்ஜலி ஜீவனுக்கும் பரமாத்மாவிற்கும் பேதம் உண்டு என்றும் ஜீவன்களும், பரமாத்மாவும் குணத்துடன் கூடியவர்கள். உயிரற்ற மூன்று குணங்களுடைய பிரக்ருதி பரமாத்மாவிற்கு அடங்கியது. ஆகையால் மாறுதலை அடைகின்றது என்பதைத் தெரிந்து கொண்டு, பலவித ஸமாதி, அதன் பயன் இவைகளை ஜீவனுக்கு பரமாத்மாதான் தருகின்றான் என்று தெளிவாக நிருபிக்கப்பட்ட போதிலும், மிகவும் பால்யத்திலேயே விரக்தர்களாகவும், பல மதங்களை ஸ்தாபித்தவர்களாயும், வைதிகர்களாயும் இருந்தும் எல்லா வேதங்களுக்கும்

விரோதமாயும் கூறிக் கொண்டு, வேதத்தில் அநேக ஆத்மாக்கள் கூறப்பட்டுள்ளன, பிரம்மமானது குணங்களுடன் கூடியது என்று வேதத்தில் கூறப்பட்டதை இவர்கள் ஒதுக்கி விட்டார்கள். பகவான் பதஞ்ஜலியினுடைய ஸூத்திரத்திற்கு விரோதமாக சித்த விக்ஷேபம், சித்த விரோதம், நிரோத ஸம்ஸ்காரம், அவனுடைய ஸம்ஸ்காரங்கள் இவையாவும் மனத்திலேயே உள்ளன. ஆத்மாவில் அல்ல. இவ்விதம் உபாயங்களை அனுஷ்டிப்பது, அனுஷ்டானத்திற்கு பயன்களான பல ஸமாதிகள், ஸமாதியில் உண்டான ஞானம், ஞானத்தால் உண்டான ஸம்ஸ்காரம், ஸம்ஸ்காரத்தின் அதிகாரம், இது பீஜமற்ற ஸமாதிக்கு பீடம் போன்றது. அவ்வித நிர்பீஜ ஸமாதி இவையாவையும் பயனற்றவை என்று கூறுகிறார்கள். இந்த உலகத்தில் தடுமாற்றம் என்பது பெரிய திரை என்று பதஞ்ஜலியின் ஸூத்திரம் திடப்படுத்துகின்றது. "அதனால் உண்டாகும் ஸம்ஸ்காரம் மற்ற ஸம்ஸ்காரங்களை தடுக்கின்றன" என்று இந்த ஸூத்திரம்[150] கூறுகின்றது. அதனிடமிருந்து அந்த ஸமாதியினிடமிருந்து உண்டான ஸம்ஸ்காரம் பிரக்ஞையிலிருந்து மற்ற ஸம்ஸ்காரங்களைத் தடுக்கின்றன. விக்ஷேபம் முதலிய ஞானத்தால் உண்டாகும் ஸம்ஸ்காரங்களைத் தடுக்கும். இது வேறு விதமான ஸம்ஸ்காரம்.

சித்தத்தின் பல நிலைகள் வ்ருத்தியின் உருவத்தில் உள்ளன. எழுச்சியை அடையும் நிலை, கலக்கத்தை அடையும் நிலை இவை இரண்டும் ஒரே ஒரு பொருளைக் குறிக்கின்றன. புற விஷயங்களுடன் ஒன்றியிருக்கும் நிலையினின்றும் உண்டாகும் ஸம்ஸ்காரம் எழுச்சியை அடையும். இது (வ்யுத்தான) ஸம்ஸ்காரம். சித்த வ்ருத்தியை அடக்கும் நிலையில் உண்டாகும் ஸம்ஸ்காரம். எங்கு கலக்கம் உண்டாகிறதோ அங்குதான் அது அடக்கப்படுகிறது. யோகாங்கங்களை அனுஷ்டிப்பதால் உண்டாகும் பலத்தால் பரமாத்மாவுடன் ஒன்றியிருப்பது பாவனு ஸமாதி. அதனிடமிருந்து உண்டாவது பாவனு ஸம்ஸ்காரம்.

# 1.51 தஸ்யாபி நிரோதே ஸர்வநிரோதாத் நிர்பீஜஸ் ஸமாதி:

## (அதனையும் தடுக்கும்போது எல்லாம் தடுக்கப்படுவதால் பீஜமற்ற ஸமாதி உண்டாகிறது)

பதஞ்ஜலியின் ஸூத்திரங்களை இருவிதமாக விளக்குகிறார்கள். சிலர் ஸமாதி விஷயத்தில் சித்தமானது அதிகாரத்துடன் இருக்கின்றது என்று கருதுகின்றனர். சிலர் சித்தம் ஜடமாய் இருப்பதால் அதற்கே உரியதான அதிகாரம் ஏதும் கிடையாது என்று எண்ணுகிறார்கள். ஆத்மாக்கள் யாவும் ஒன்றுதான் என்று சங்கரரைப் பின்பற்றுபவர்கள் ஆத்மாவைத் தவிர்த்து எல்லாம் பொய் என்று நிச்சயித்து பதஞ்ஜலியால் கூறப்பட்ட ஸமாதியின் விஷயத்தை அவ்வண்ணமே விளக்குகிறார்கள். அவர்களைப் பின்பற்றுபவர்களும் எல்லாம் சித்தத்தின் சேஷ்டைதான். ஆத்மாவினுடையது அல்ல. அந்த ஆத்மா ஒன்றுதான் வேறொன்றினுடன் சேராதது என்று கூறிக்கொண்டு வ்ருத்தி ஸம்ஸ்காரம், நிரோத ஸம்ஸ்காரம், ஸமாதி ஸம்ஸ்காரம், ஸமாதி பிரக்ஞா ஸம்ஸ்காரம் ஆகிய எல்லா ஸம்ஸ்காரங்களும் சித்தத்தின் சேஷ்டைகளே. ஆத்மாவிற்கு இதில் ஸம்பந்தம் ஏதும் இல்லை என்று கூறுகின்றனர். ஆத்மாக்கள் பல என்று கூறுவோர் மூன்று குணங்களின் உருவத்தில் உள்ள சித்தமானது ஜடம், அசேதனம். அசேதனமானது அதற்கு கல்லுக்கு போல் இயல்பான சேஷ்டை கிடையாது. ரிதம்பரா, ப்ரக்ஞா வரையிலுள்ள நிரோதம் முதலிய சித்த வ்ருத்திகளும் ஆத்மாவைப் பற்றியே உண்டாகின்றன என்று கூறிக் கொண்டு சித்த சம்பந்தமான எல்லா ஸம்ஸ்காரங்களையும் ஒப்புக்கொள்கிறார்கள். வ்ருத்தி, வ்ருத்தி நிரோதம் முதலியவை ஸமாதி வரையில் உள்ள உலகின் மாறுதல்கள் அனைத்தும் உண்மையானவையே. ஆகையால் ஸமாதி முதலியவை ஆத்மாவைச் சேர்ந்தவை அல்ல என்று நம்புகிறார்கள். பிரபஞ்சம் உண்மையானது என்று கூறுபவர்களின் மதத்தில் எல்லா யோகாங்கங்களும் வேதத்தில் கூறப்பட்டிருக்கின்றன. வேதமானது மனிதனால் இயற்றப்படாதது. நித்தியமாக இருப்பது. வேதத்தில் கூறப்பட்டுள்ள ஸந்தியாவந்தனங்களை அனுஷ்டிப்பதுபோல் யாகங்களை அனுஷ்டிப்பது போலும் யோகாங்கங்களின் அனுஷ்டானம் நித்தியம். தத்துவத்தை அறிவிக்கும் பிரமாணங்களில் வேதத்திற்கோ, ராஜ்யத்தில்

அரசனுடைய உத்தரவு போல் முக்கியத்துவம் உண்டு. அவைகளில் கூறப்பட்டுள்ள கர்மங்களை அனுஷ்டானம் செய்யும்போது தண்டனை கிடைக்கும் என்ற பயத்தால் யமம் முதல் ஸமாதி வரையில் உள்ள எல்லா அங்கங்களையும், தங்களால் பிராரப்த கர்மாவின் வாஸனையால் எடுத்துக் கொள்ளப்பட்ட சரீரத்தை உடைய புருஷர்களோ, ஸ்த்ரீகளோ "என்னையே எவர்கள் (சரணமாக) அடைகிறார்களோ, அவர்கள் இந்த மாயையைத் தாண்டுகிறார்கள்" என்று கீதையில்[151] கூறப்பட்ட ச்ரத்தை, பக்தி, அடக்கம் இவைகளைக் கொண்டு மகிழ்ச்சியுடன் அனுஷ்டிக்கிறார்கள். துயரத்துடன் அல்ல. எல்லோரும் தங்களுக்கு அந்தர்யாமியாக உள்ளவனை நேரில் காண்பதற்காக, குறிப்பிட்ட காலங்களில் பகவானுக்கு அளித்தவற்றில், அளவுள்ள சாப்பாட்டை உட்கொண்டு பகவானை ஜபம் பண்ணிக்கொண்டு உபாஸிக்கிறார்கள். உபாஸனை என்பது ரஜஸ், தமஸ் இவை நீங்கியதாயும், அங்கங்களையுடையதாயும் எல்லா தர்மபூத க்ஞானத்தையும் பற்றியதாயும், ஒரே நோக்குள்ளதாயும் த்யான உருவத்தில் உள்ள சித்தம். அதைக் காட்டிலும் உயர்ந்த த்யானம் செய்யத்தக்க பரமாத்மாவை ஐந்து காலங்களிலும்[152] தங்கள் சக்திக்குத் தக்கவாறு துதிக்கிறார்கள். அவ்வுருவத்தை அனுபவித்து அதன் விளைவாகப் பெற்ற ஸம்ஸ்காரங்களால் அவனைச் சிந்திப்பது, நினைவு படுத்திக் கொள்வது இவைகளால் "இங்கு பிரம்மத்தை அடைகிறான்" என்று ப்ருஹதாரண்யக உபநிஷத்தில்[152] கூறப்பட்டமாதிரி இவ்வுடலிலேயே அங்குள்ள ஆத்மா அதனுடைய ஹ்ருதயத்தில் அதற்கு ஆத்மாகவுள்ள பரமாத்மா இவர்களை அனுபவித்துக் கொண்டு அவ்வழியைப் பிறருக்கு உபதேசித்துக் கொண்டு ஆனந்தத்தை அனுபவிக்கின்றனர். இது நாதமுனிகளின் ஸம்பிரதாயத்தின் முறை.

இந்த ஸூத்திரத்தின் பொருளாவது அதையும் தடுக்கும்போது ரிதம்பரா பிரக்ஞையால் உண்டாகும் ஸம்ஸ்காரம், அந்த ஸம்ஸ்காரத்தால் கிடைக்கும் பகவானுடைய நினைவு இவை தடுக்கப்படுகின்றன. ரோதம், கரை, ஆவரணம் இது நீங்கப் பெற்றது நிரோதம். ஸமாதி காலத்தில் பகவானை நினைவுப் படுத்திக் கொள்ளுவதால் அதற்கு நிரோதம் என்று பெயர். அப்போது நிர்பீஜ ஸமாதி உண்டாகும் என்று நம்முடைய மதம் கூறுகின்றது. அதாவது ஒரு இடத்தில் ஆதாரத்தில் லயித்து இருக்கின்றது. மற்றோர் இடத்தில் சுருக்கம் அடையாமல் ஞானம் பரவுகின்றது.

## செய்யுள்:

1. கெட்ட யோகத்தை அப்யாஸம் செய்யும் மல்லர்களுக்கு கூர்மையான பாணமாயும், நல்ல யோகத்தைச் செய்பவர்களுக்கு உயர்ந்த மல்லிகைப் பூக்களையுடையதாயுள்ள யோகவல்லீ இதயத்தில் நிலை பெற்று திருமகள் நாதனைத் தானாகவே அடையச் செய்யும்.

2. மௌத்கல்ய கோத்திரத்தில் தோன்றியவராயும், செல்வத்தை (திவ்விய தம்பதிகளுடைய கடாக்ஷத்தை) உடையவராயும், நாதமுனிகளின் பேரனும் (மகளுடைய பிள்ளை) இருந்த ஸ்ரீரங்கநாதர் என்பவர் நன்கு வளர்ந்த யோகவல்லரியை (வல்லரி=கொடி) இயற்றினார்.

3. நாதமுனிகளால் இயற்றப்பட்டதும், நான்கு காண்டங்களை யுடையதும், ஆன யோகவல்லீயை ரங்கதாஸர் (இரண்டாவது ச்லோகத்தில் குறிப்பிடப்பட்ட ஸ்ரீரங்கநாதர்) சுருக்கமாக யோகவல்லீயை இயற்றினார்.

4. ஸ்ரீ நாதமுனியின் வம்சத்தில் தோன்றியவரும், யோக சாஸ்த்திரத்தை அறிந்தவரும், (யோகப்) பயிற்சியில் தேர்ந்தவரும் ஆன ஸ்ரீமான் தி. கிருஷ்ணமாசார்யர்) இதை (ரங்கநாதர் இயற்றிய யோகவல்லீகையை) சுருக்கமாக இயற்றியுள்ளார்.

5. ஸ்ரீ கிருஷ்ண என்ற பெயரை உடையவரும், நல்ல ஞானத்தை உடையவரும் ஆன இவர் (ஸ்ரீமான் தி. கிருஷ்ணமாசார்யர்) தன்னுடைய யோக மந்திரத்தில் மகிழ்ச்சியுடன் பதஞ்ஜலியால் இயற்றப்பட்ட ஸூத்திரங்களுக்கு உரையை இயற்றினார்.

# அடிக்குறிப்பு

1. मङ्गलानन्तरारम्भप्रश्नकार्त्स्न्येष्वथो अथ।

1. நா.அ. 3.3.247
மங்களம், பிறகு, ஆரம்பம், கேள்வி, முழுமை என்ற பொருள்களைக் குறிப்பதற்கு அதோ, அத என்ற இரண்டு சொற்களும் உபயோகப்படுத்தப்படுகின்றன.

2. அத்யாத்ம என்ற சொல் அதி ஆத்மா என்ற இரு சொற்களால் ஆனது. ஆத்மாவைப் பற்றியது என்று பொருள்.

3. கர்ம சாஸ்திரம் என்பது கர்மங்களைச் செய்யும் வகைகளைப் பற்றியது என்று எடுத்துக் கொள்ளப்படுகின்றது. இது ஸ்ம்ருதிகள் முதலிய தர்மசாஸ்திரங்களைக் குறிக்கும்.

4. க்ருஹ்ய என்பது க்ருஹம் வீடு என்பதைப் பொதுவாகவும் மனைவியுடன் செயல்களைச் செய்வதற்குப் பயன்படும் அக்னியைக் குறிக்கின்றது. இதைப் பற்றிய விவரங்கள் க்ருஹ்ய சூத்திரங்கள் என்ற நூல்களில் காணலாம்.

5. ச்ரௌத என்ற சொல், ச்ருதி அதாவது வேதங்களில் கூறப்பட்டுள்ள கர்மங்களைச் செயல்படுத்தும் முறைகளை விவரிக்கும் ச்ரௌத சூத்திரங்கள் என்ற நூல்களைக் குறிக்கும்.

6. ப்ரதிஞா என்பதற்கு ஓர் கருத்தைப் பற்றி முதன் முதலில் கூறுதல் என்று பொருள்.

7. வ்ருத்தி என்பதற்கு மாறுதல் என்று பொருள்.

8. ப்ரகிருதி மூலகாரணம். அதனின்றும் புத்தி என்பது உண்டாகின்றது. இதனிடமிருந்து அகங்காரம் உண்டாகின்றது.

9. तज्जपस्तदर्थभावनम्। யோ.சூ. 1.28

10. तत्र प्रत्ययैकतानता ध्यानम्। யோ.சூ. 3.2

11. ஆத்மா ஞானமயன். ஏதோ ஒரு பொருளைப் பற்றிய ஞானமானது ஆத்மாவில் உண்டாகின்றது. ஞானமானது ஆத்மாவான ஞானத்திற்கு தர்மமாகிறது.

12. पद्मकोशप्रतीकाशं हृदयं चाप्यधोमुखम्।

நாராயண ஸூக்தம் 2.2.

13. योगस्सन्नहनोपायध्यानसङ्गतियुक्तिषु। நா.அ. 3.3.22

யோகம் என்ற சொல் தயாராக இருத்தல், உபாயம், த்யானம், வெவ்வேறு விஷயங்களைப் பற்றிய வாக்கியங் களுக்குள்ள தொடர்பு, யுக்தி என்ற பொருள்களைக் குறிப்பிடும்படி உபயோகப்படுத்தப்படுகின்றன.

14. தாது என்பது வினைச் சொல்லின் மூலமாகும். தாது பாடம் என்ற தாதுக்களின் தொகுதி பாணினியால் தொகுக்கப்பட் டுள்ளது. ஸமாதி என்ற பொருளைக் கொண்ட யுஜ என்ற தாதுவிலிருந்து யோகம் என்ற சொல் உண்டாயுள்ளது.

15. தியானம் காரணம் சமாதி கார்யம்.

तदेवार्थमात्रनिर्भासं स्वरूपशून्यमिति समाधिः।

16. யோ.சூ. 3.3.

17. சப்தம், ஸ்பர்சம், (உஷ்ணமான) பிரகாசம், ரசம், வாசனை இவை முறையே ஆகாயம், காற்று, நெருப்பு, தண்ணீர், பூமி இவைகளின் சிறப்பான குணங்கள். இக் குணங்களால் ஈர்க்கப்பட்டு மனிதன் ஆகாயம் முதலிய பொருள்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறான். அதனால், விவேகம் குறைந்து, சித்தத்தில் மாறுபாடுகள் உண்டாகின்றன.

8. ज्योतिषामपि तज्ज्योतिस्तमसः परमुच्यते।

ज्ञानं ज्ञेयं ज्ञानगम्यं हृदि सर्वस्य विष्ठितम्॥ ப.கீ. 13.18

சோதிகளுக்குச் சோதியான அவன் இருட்டிற்கு அப்பாற் பட்டவன். அவனே ஞானம், அறிய வேண்டியவன், அறிவால் அடையத் தக்கவன். எல்லா ஜீவன்களுடைய ஹ்ருதயத்தில் நிலைத்துள்ளான்.

19. देहेन्द्रियंमनः प्राणधीभ्योऽन्योऽनन्यसाधनः।

नित्यो व्यापी प्रतिक्षेत्रमात्मा भिन्नः स्वतः सुखी।।
आत्मसिद्धिः

ஆத்மஸித்தி 3

20. வினைகள் சஞ்சிதம் பிராரப்தம் என்று இரு வகைப்படும். பல ஜன்மங்களில் செய்த வினைகளின் பயன்கள் ஒன்றாகச் சேர்ந்துள்ளன. இவைகளுக்கு சஞ்சிதம் என்று பெயர். ஒரு ஜீவன் பிறக்கும் போது எந்த எந்த கர்மங்கள் பயனை அளிக்கத் தொடங்குகின்றனவோ அவை பிராரப்தம் என்று குறிக்கப்படுகின்றன.

21. चित्तं वाव सङ्कल्पाद्भूयो यदा वै चेतयते अथ सङ्कल्पयंते अथ मनस्यति अथ वाचमीरयति तमु नाम्नि ईरयति नाम्नि मन्त्र एकं भवन्ति मन्त्रेषु कर्माणि।।

சா.உ.ப. 7.5.1

22. यत्र योगेश्वरः कृष्णो यत्र पार्थो धनुर्धरः।
तत्र श्रीर्विजयो भूतिर्ध्रुवा नीतिर्मतिर्मम।।

ம.பா. பீஷ்ம 6.40.78

23. अधिष्ठानं तथा कर्ता करणञ्च पृथग्विधम्।
विविधा च पृथक्चेष्टा दैवञ्चैवात्र पञ्चमम्।। ப.கீ. 18.14

ஒவ்வொரு காரியத்துக்கும், ஆதாரம், செய்பவன், காரணம், பல வெவ்வேறு சேஷ்டைகள், தைவம் என்று ஐந்து காரணங்கள் உண்டு.

24. अन्नमयं हि सौम्य मन आपोमयश्च प्राणस्तेजोमयी वागीति भूय एव भगवन् विज्ञापयत्विति, तथा सोम्येति
होवाच। சா.உ.ப. 6.5.4

25. आहारशुद्धौ सत्वशुद्धिः सत्वशुद्धौ ध्रुवा स्मृतिः स्मृतिलम्भे सर्वग्रन्थीनां विप्रमोक्षः।

ஆஹாரம் சுத்தமாயிருப்பின் மனது சுத்தமாக இருக்கும். மனது சுத்தமாக இருந்தால் நினைவு நிலைபெற்றிருக்கும். நினைவு இருந்தால் எல்லா (ஸம்ஸாரத்தைக் கட்டியுள்ள)

முடிச்சுகளும் அவிழ்ந்து விடும்.

26. आयुस्सत्वबलारोग्यसुखप्रीतिविवर्धनाः।
रस्यास्स्निग्धास्स्थिरा हृद्या आहारास्सात्विकप्रियाः।। ப.கீ. 17.8

ஆயுள், திடம், பலம், ஆரோக்கியம், சுகம், மகிழ்ச்சி இவைகளை அதிகரிக்கக் கூடியவையாயும், ரஸமயமாயும், பசையுள்ளவையாயும், போதுமானவையாயும், பிரிய மானதாயும் உள்ள ஆகாரம் ஸாத்விகர்களுக்கு ஏற்றதாக இருக்கும்.

27 धर्मज्ञसमयः प्रमाणं वेदाश्च। ஆபஸ்தம்ப தர்ம சூத்திரம் 1.2

28. सोऽश्नुते सर्वान् कामान् सह ब्रह्मणा विपश्चिता।

தை.உப. 1.2.1

29. வித்யைகளின் தொகுதியில் காண்க.

30. ப்ரதியோகி, ப்ரதி: ஒன்றைக் குறித்து. யோகி – சம்பந்தத்தை உடையது. நாற்காலியில் மனிதன் உட்கார்ந்து இருக்கிறான் என்ற வாக்கியத்தில் நாற்காலிக்கு மனிதனுடன் சம்பந்தம், மனிதனுக்கு நாற்காலியுடன் சம்பந்தம். இதை நாற்காலிக்குப் யோகி மனிதன், மனிதனுக்கு யோகி நாற்காலி என்று சொல்லலாம். நாற்காலி இல்லை என்ற வாக்கியத்தில் இல்லை என்பது இன்மை. எதனுடைய இன்மை என்று கேட்டால் நாற்காலியினுடையது என்று அளிக்க வேண்டும். இந்த இன்மைக்கு நாற்காலியுடன் சம்பந்தம் உண்டு. ஆகையால் இந்த இன்மைக்கு நாற்காலி ப்ரதியோகி என்று சொல்ல வேண்டும். ப்ரதி என்ற சொல்லுக்கு எதிரிடையானது என்ற பொருள் நாற்காலி உள்ளது. இன்மை என்பது இல்லாமையின் நிலையயக் குறிக்கிறது.

31. मनो हि हेतुस्सर्वेषामिन्द्रियाणां प्रवर्तने।
शुभाशुभास्ववस्थासु तच्च मे सुव्यवस्थितम्।। ரா.சு. 11.43

य एष संप्रसादोऽस्माच्छरीरात् समुत्थाय परं ज्योतिरुपसंपद्य स्वेन रूपेणा-
32. भिनिष्पद्यते एष आत्मेति होवाचैतदमृतमभयमेतद्ब्रह्मेति तस्य ह वा एतस्य

ब्रह्मणो नाम सत्यमिति॥ சா.உ.ப. 8.3.

இவ்வாத்மா இவ்வுடலிலிருந்து மேலே கிளம்பி பெரிய சோதியை அடைந்து தன்னுடைய உருவத்தைப் பெறுகிறன். இது மரணமற்றதாயும் பயமற்றதாயும் உள்ள பிரம்மம். அதற்கு ஸத்யம் என்று பெயர்.

33. अहरहर्गच्छन्त इमं ब्रह्लोकं न विदुः। சா.உப. 8.3.4

34. नैषा पश्यति राक्षस्यो नेमान् पुष्पफलद्रुमान्।

एकस्थहृदया नूनं राममेवानुपश्यति॥ ரா.சு. 16.25

35. अत्र ब्रह्म समश्नुते। ப்ரு.உப. 4.47

36. प्रारब्धेतरपूर्वपापमखिलं प्रामादिकञ्चोत्तरं

न्यासेन क्षपयन्नपगतप्रारब्धखण्डञ्च नः। धीपूर्वोत्तरपाम्मनामजननाज्जातेऽपि तन्निष्कृतेः कौटिल्ये सति शिक्षयाप्यनघयन् क्रोडीकरोति प्रभुः॥

ரஹஸ்யத்ரயஸாரம்—18வது அதிகாரம்.

சாமர்த்தியமுள்ள பகவான் சரணமடைந்த நம்முடைய (பிராரப்தத்தைத் தவிர்த்து) ஸஞ்சிதமான பாவங்கள் அனைத்தையும் வருங்காலத்தில் கவனமின்மையால் செய்யும் பாவங்கள் அனைத்தையும், பிராரப்தத்தில் மிகுதியான பாவங்களையும் பிரபத்தியால் நாசம் செய்து கொண்டு, புத்தியுடன் செய்யக் கூடிய பாவங்கள் இல்லாததால், அப்படி அவை ஏற்பட்டாலும் அவைகளுக்குப் ப்ராயச்சித்தம் செய்வதால், ப்ராயச்சித்தம் பண்ணுததால் தண்டனையை அளித்து, நம்மை பாவமற்றவர்களாகச் செய்து தன்னிடத்திற் சேர்த்துக் கொள்ளுகிறன்.

37. பக்திக்கு மூன்று நிலைகள் உண்டு. அவையாவன: பரபக்தி, பரஞானம், பரமபக்தி. பகவானை நேராகப் பார்க்கி வேண்டுமென்ற அவா நிறைந்த பக்தியானது பரபக்தி. என்று கூறப்படுகிறது. பகவானை நேராகக் காண்பது பரஞானம். பகவானை இடைவிடாமல் அனுபவிப்பதற்கு ஏற்படும் ஆசை பரமபக்தி. இதில் கடவுளை நேராகக்

காணலாம். கத்யத்ரய வ்யாக்யானத்தில் (ரஹஸ்யரக்ஷை என்ற தேசிகன் நூலில்) இது குறிப்பிடப்பட்டிருக்கிறது.

आत्मानमरणिं कृत्वा प्रणवञ्चोत्तरारणिम्।

ध्याननिर्मथनाभयासाद्देवं पश्येन्निगूढवत्।। கைவல்யோபநிஷத் 1.11

38. मामुपास्स्व। 3 கௌஷீதகி உப. 3 1.8

40. दह्रं विपाप्मं परवेश्मभूतं यत्पुण्डरीकं पुरमध्यसंस्थम्।

तत्रापि दह्रं गगनं विशोकस्तस्मिन् यदन्तस्तदुपासितव्यम्।।

ம.நா.உப. 12.3

தாமரையின் நடுவில் சிறிய குற்றமற்ற இருப்பிடம் ஒன்றுள்ளது. அங்கு மிகவும் சிறிய ஆகாயமானது குற்றமற்றதாக உள்ளது. அதன் உள்ளிருப்பதை உபாஸிக்க வேண்டும்.

41. धनुर्गृहीत्वौपनिषदं महास्त्रं शरं ह्युपासानिशितं सन्दधीत।

तत्रापि दह्रं गगनं विशोकस्तस्मिन् यदन्तस्तदुपासितव्यम्।।

மு.உப. 2.2.3

42. प्रणवो धनुः शरोह्यात्मा ब्रह्म तल्लक्ष्यमुच्यते।

अप्रमत्तेन वेद्धव्यं शरवत्तन्मयो भवेत्।। மு.உப. 2.2.4

43. 38ல் பார்க்கவும்.

तं दुर्दर्शं गूढमनुप्रविष्टं गुहाहितं गह्वरेष्ठं पुराणम्।

अध्यात्मयोगाधिगमेन देवं मत्वा धीरो हर्षशोकौ जहाति।। க.உப. 2.12

44. தன்னுடைய ஆதமாவைத் த்யானம் செய்வதால், காண்பதற்கரியனாயும், மறைந்திருப்பவனையும், குகையில் நுழைந்து அங்கேயே இருக்கும் புராண தேவனை த்யானம் செய்து, மகிழ்ச்சியையும் துயரத்தையும்விட்டு விடுகிறான்.

45. 40,38,44 இவைகளிற் பார்க்கவும்.

स्वदेहमरणिं कृत्वा प्रणवञ्चोत्तरारणिम्।

ध्याननिर्मथनाभ्यासाद्देवं पश्येन्निगूढवत्।। ச்வேதாச்வதர உபநிஷத் 1.14.

மேலும் 38ல் ஆத்மா என்ற சொல் உள்ளது. அதற்குப் பதிலாக தேகம் என்ற சொல் இங்கு உள்ளது.

46. औत्पत्तिकस्तु शब्दस्यार्थेन संबन्धस्तस्य ज्ञानमुपदेशोऽव्यतिरेकश्चार्थेऽनु- पलब्धे तत्प्रमाणं बादरायणस्यानपेक्षत्वात्।

மீமாம்ஸா சூத்திரம் 1.5

இந்த சூத்திரத்திற்கு ஔத்பத்திக சூத்திரம் என்று பெயர். சொல்லுக்கும் அதன் பொருளுக்கும் உள்ள சம்பந்தமானது நித்யமானது. இது மாருதது என்று கூறப் பட்டுள்ளது. புலன்களுக்கப்பாற்பட்ட பொருள்களின் விஷயத்தில் இதை மறுக்கவொண்ணாது. பாதராயணரும் இதை ஒப்புக் கொண்டிருக்கிருர். இச் சம்பந்தத்தை விளக்குவதற்கு வேறொன்றும் தேவையில்லை. ஔத்பத்திக என்ற சொல்லுக்கு சொல் உண்டாகும் போதே இந்தச் சம்பந்தம் உண்டாகின்றது என்று பொருள்.

47. नाहं प्रकाशस्सर्वस्य योगमायासमावृतः।
मूढोऽयं नाभिजानाति लोको मामजमव्ययम्॥ ப.கீ. 7.25

யோக மாயையால் மூடப்பட்ட நான் எல்லோருக்கும் தோன்ற மாட்டேன். மூடமான உலகமானது என்னை பிறப்பில்லாதவளுகவும், நாசமற்றவளுகவும் தெரிந்து கொள்ளவில்லை.

न चाप्यकृतपरिणामभेदस्याहङ्कारनाम्नो बुद्धिनामधेयस्य वा ज्ञातृत्वं देहस्येवाचेतनत्वपरिणामित्व जडत्व पारार्थ्यत्वादिहेतुभिस्तदनुपपत्तेः॥

48. ஆத்ம ஸித்தி என்ற நூலில் பக்கம் 39ல் யாமுனாசார்யர் என்று மாறுதலை அடையாத அஹங்காரத்திற்கோ புத்தி தத்துவத்திற்கோ, அறியும் திறன் கிடையாது. இவைகளுக்கு உடலுக்குப் போல் அசேதனமாயிருத்தல், மாறுதலை அடைதல், ஜடமாயிருத்தல், பிறருக்காகவேயிருத்தல் போன்ற காரணங்களால் அறியும் திறன் இருக்க முடியாது என்று கூறுகிறார்.

49. இலக்கண சாஸ்திரத்தில் அஹம் என்ற சொல் நான் என்ற பொருளையுடையதாக अस्मद्युत्तमः அஷ்டாத்யாயீ 1.4.107 சூத்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது.

'எவ்விதமான ஆத்மாவை நீரே பார்க்கிறீரே, அதே போல் நானும் பார்க்கிறேன்' என்று சபர ஸ்வாமியின் மீமாம்ஸா பாஷ்யத்தில் கூறப்பட்டுள்ளது. வைசேஷிக சூத்திரங்களை இயற்றிய கணாதரும் 3.2.14

अहमिति प्रत्यगात्मनि भावात् परत्राभावादर्थान्तरप्रत्ययः।

என்ற சூத்திரத்தில் நான் என்பது என்னுள்ளே இருக்கும் ஆத்மாவைக் குறிக்கின்றது. மற்றைய பொருள்களைக் குறிப்பதில்லை. ஆதலால் இது நான் என்று சொல்லுபவனுடைய உடலுக்குள் இருக்கும் ஆத்மாவைத்தான் குறிக்கும். என்று கூறுகிறார்.

50. ருக்வேதம் 7.86.7ல் கராம்யஹம் என்ற வாக்கியத்தை அஹம் கரவாணி –நான் செய்கிறேன் என்று வேத பாஷ்யத்தை இயற்றிய ஸாயணர் விவரித்துள்ளார். மேற்படி வேதத்தில் 10.34.12ல் தஸ்மை க்ருணோமி என்பதை ஸாயணர் அஹம் கரோமி என்று விவரித்துள்ளார். யாகங்கள் செய்யப்படும்போது அஹம் என்று சொல்லுக்கு ஆத்மா என்ற பொருள்தான் பொருந்தும்.

51. ஜீவனும் பகவானும் எல்லாவற்றிற்கும் ஆதாரமானவர்கள் என்று கூறப்படுகிறது. சாந்தோக்ய உபநிஷத்தில் 6.3.2 'இந்த ஜீவனுடன் உட்புகுந்து பெயர்களையும் உருவங்களையும்

(अनेन जीवेनात्मनानुप्रविश्य नामरूपे व्याकरवाणि)

உண்டாக்குகிறேன் என்று பிரம்மம் ஸங்கல்பித்ததாகக் கூறப்பட்டுள்ளது. பகவான் எல்லாவற்றிற்கும் ஆதார மென்றால், ஆத்மாவிற்கும் பகவான் அந்தர்யாமியாக இருப்பதால், ஆத்மாவும் ஆதாரம்தான். ஆத்மாவுடன் கூடியே பிரம்மம் சிருஷ்டி செய்கிறது என்று காட்டப் பட்டுள்ளது.

52. 42ல் பார்க்கவும்

53. ராமாயணம் ஆரண்ய காண்டத்தில் 5, 74 சர்க்கங்களில் சாபங்கர், சபரீ இவர்களுடைய சரிதத்தில் இதைக் காணலாம். விஷ்ணு புராணம் முதல் அம்சம் 12வது அத்யாயத்தில் த்ருவனுடைய சரித்திரம் இதை விளக்குகின்றது.

54. ராமாயணம் ஆரண்ய காண்டம் 5.29.33ல் சரபங்கரை

இஷ்டமான இடத்திற்குச் செல்லுவதற்கும் 74வது சர்க்கம் 33–35 சபரிக்கு நல்ல இடங்களுக்குப் போவதற்கும் ராமன் வழி வகுத்தார். சடாயுவின் விருத்தாந்தத்திலும் ரா.ஆ.68.29.30 இதைக் காணலாம். பாகவதத்தில் 10வது ஸ்கந்தம். 51 அத்தியாயம், 62–64ல் மறுபிறப்பில் முசுகுந்தனைத் தன்னை அடைவதற்குப் பகவான் அனுமதி அளித்ததாகக் கூறப்பட்டுள்ளது. சுதாமாவிற்கு பாகவதம் 10.80 & 81 அத்யாயங்கள் கிருஷ்ணன் அனுக்ரகத்தைக் கொடுத்தார்.

55. குருகாதீசர் என்பவருக்கு குருகை காவலப்பன் என்ற பெயர் உண்டு. இவர் நாதமுனிகளின் ஸகோதரியின் வம்சத்தில் நான்காவது தலைமுறையைச் சேர்ந்தவர்.

56. நவநீத நாட்டியமாடியவர் கிருஷ்ணன்

आविर्भवत्व. . . . . . निभृतान्यपादम्।

दध्ना निमन्थमुखरेण निबद्धतालं नाथस्य नन्दभवने नवनीतना?यम्॥

ஆபரணங்கள் ஒலிக்கும்படி ஒரு காலை முன்பக்கமாக

ஆபரணங்கள் ஒலிக்கும்படி ஒரு காலை முன்பக்கமாக மடக்கி வைத்துக் கொண்டு, மற்றொரு காலை ஒலியில்லாமல் செய்து கொண்டு, தயிர் கடையும் சத்தத்திற்கு ஏற்றவாறு தாளத்துடன் நந்தன் வீட்டில் எம்பெருமானுடைய நவநீத நாட்டியமானது என்முன் தோன்றட்டும்'' என்ற ச்லோகம் ஞாபகப்படுத்திக் கொள்ளத் தக்கது.

57. मत्तः परतरं नास्ति किञ्चिदस्ति धनञ्जय।

मयि सर्वमिदं प्रोतं सूत्रे मणिगणा इव॥ ப.கீ. 7.7.

அர்ச்சுனனே! என்னைக் காட்டிலும் உயர்ந்தது கிடையாது. நூலில் மணிகளின் கூட்டம் போல் என்னிடம் எல்லாம் கோர்க்கப்பட்ட மாதிரி தோன்றுகிறது.

यच्चापि सर्वभूतानां बीजं तदहमर्जुन।

न तदस्ति विना यत्स्यात् मयाभूतं चराचरम्॥ ப.கீ. 10.39

அர்ச்சுனனே! எல்லாவற்றிற்கும் விதை நான். அசையக் கூடியது, அசைவற்றது யாவும் என்னை விட்டுப் பிரிந்திருக்க முடியாது.

58. சபதம் பிரகிருதியிலிருந்து உண்டாகின்றது என்பதால் அசுத்தம். பிரம்மம் இயல்பிலேயே சுத்தம். சப்தப்ரம்பம் இரண்டுங் கலந்தது மிச்ரம்.

59. வித்தைகளில் பார்க்கவும்.

60. வ்யாஸபாஷ்யம்.

61. முதற் காரணம்: நான் என்ற ஞானத்தைப் பற்றிய உபாசனை. இரண்டாவது காரணம்: மேன்மையான வைராக்கியம், பிரகிருதி வேறு புருஷன் வேறு என்ற விவேக ஞானம். மூன்றுவது: சிரத்தை, வீர்யம் முதலியவை. 1–20ல் கூறப்பட்டுள்ளன.
இப்போது கூறப்படும் நான்காவது ஈசுவரனைப் பற்றிய

तद्विषयकधारणाध्यानसमाधित्रयतुल्यादप्यास तमः।

த்யானம் பாவாக கணேசர் என்ற உரையாசிரியர் யோ. சூ. 123ல் த்யானம், தாரணை, சமாதி என்பவை மூன்று என்று கூறியுள்ளார். இவை மூன்றும் யோகங்களே ஒழிய, தனித்தனி காரணங்கள் என்று ஏற்க இயலாது.

62. भिन्ना अभिन्ना च वर्तेऽहं ज्योत्स्नेव हिमदीधितेः।

तावावां तत्त्वमेकन्तु द्विधा भूतो व्यवस्थितौ॥ லக்ஷ்மீ தந்த்ரம் 15.10

நான் விஷ்ணுவிடமிருந்து வேறுபட்டவளாயும் வேறு படாதவளாயும், சந்திரனிடமிருந்து நிலவு போல் இருக்கிறேன். நாங்கள் ஒரே தத்துவம்தான். இரண்டு ரூபமாக விளங்குகிறோம்.

सृष्टिस्थित्यन्तकर्तारो विज्ञानैश्वर्यशक्तयः। லக்ஷ்மீ தந்த்ரம் 4.11

ஞானம், ஐச்வர்யம், சக்தி இவைகள் (என்னைச் சேர்ந்தவை) படைத்தல், காத்தல், அழித்தல் இவைகளைச் செய்கின்றன.

भवद्भावस्वरूपेण तत्त्वमेकमिवोदितौ॥ அஹிர்புத்நியஸம்ஹிதை 3.26

உண்டாவது உண்டான நிலை என்ற உருவில் இருவரும் ஒரே தத்துவம் போல் தோன்றுகிறோம்.

63. மனது, வாக்கு, உடல் இவை மூன்று கருவிகள்,

64. ओमित्यात्मानं युञ्जीत। நா.ம.உப. 24.2

65. उपमायां विकल्पे वेति। நா.அ. 3.3.249

66. நியாயங்களில் பார்க்கவும்.

67. स्युरेवं तु पुनर्वै वेत्यवधारणवाचकाः। நா. 3.4.15

68. अग्न्याधेयं गवालम्भं सन्यासं पलपैतृकम्।

देवरेण सुतोत्पत्ति कलौ पञ्च विवर्जयेत्।। யதி தர்ம சங்கிரகம் பக். 2

நெருப்பை மூட்டுவது, பசுவை அளிப்பது, சன்னியாசம், ச்ராத்தத்தில் மாம்சத்தை அளிப்பது, இளைய மைத்துனன் மூலம் பிள்ளை பெறுவது இவை ஐந்தையும் கலி யுகத்தில் விட வேண்டும்.

69. 42ல் பார்க்கவும்

70. 41ல் பார்க்கவும்

71. 64ல் பார்க்கவும்

72. यत्तदद्रेश्यमग्राह्यमगोत्रमवर्णमचक्षुःश्रोत्रं तदपाणिपादम्।

नित्यं विभुं सर्वगतं सुसूक्ष्मं तदव्ययं यद्भूतयोनिं परिपश्यन्ति धीराः।।

மு.உப. 1.1.6

எது காண முடியாதோ, பிடிக்க முடியாதோ, வேறு ஒன்றுடனும் சம்பந்தப் படாமல் உள்ளதோ, எதை வர்ணிக்க முடியாதோ, கண்ணுக்கும் காதுக்கும் இலக்காதோ, கால், கை இல்லாமல் உள்ளதோ, எங்கும் பரவி உள்ளதோ, எங்கும் செல்ல சக்தி வாய்ந்ததோ, மிகவும் ஸூக்ஷ்மமானதோ, நாசமற்றதோ அவ்விதமான காரணத்தை தைர்யமுள்ளோர் பார்க்கின்றனர்.

73. ईश्वरीं सर्वभूतानां त्वामिहोपह्वये श्रियम। ம.நா.உப. 2.1.11

74. ஆத்யாத்மிகம் ஆத்மாவைப் பற்றி, ஆதி பௌதிகம் பஞ்ச பூதங்களைப் பற்றியது, ஆதி தைவகம் ஆகாயம், (அல்லது) தேவலோகம் இவைகளைப் பற்றியது என்று மூன்று துயரங்கள்.

75. न मां कर्माणि लिम्पन्ति न मे कर्मफले स्पृहा।

इति मां योऽभिजानाति कर्मभिर्न स बध्यते।। ப.கீ. 4.15

76. अपहतपाप्मा विजरो विमृत्युर्विशोको विजिघत्सोऽपिपासस्सत्यकामस्सत्य-
सङ्कल्पः सोन्वेष्टव्यः। சா.உப. 8.7.1

பாபமற்றவன்,, கிழத்தனம் அற்றவன், மரணமற்றவன், துயரற்றவன், பசியற்றவன், தாகமற்றவன், உண்மையான விருப்பங்களையுடையவன், உண்மையான ஸங்கல்பத்தை உடையவன் அவனைத் தேட வேண்டும்.

77. भगवानितिशब्दोऽयं तथा पुरुष इत्यपि।
निरुपाधी च वर्तेते वासुदेवे परात्मनि।।

78. புருஷ சூக்த பாஷ்யம் 22 பக்கம்.

புருஷ சூக்தத்திற்கு பாஷ்யம் இயற்றியவர் ரங்கநாதமுனி.

79. புருஷன் என்ற சொல் ஜீவனையும் குறித்து உபயோகப் படுத்தப்படுகிறது. இச் சொல்லுக்கு முக்கியமான பொருள் ஈச்வரன். ஜீவனைக் குறிக்கும்போது இதற்கு ஔபசாரிகப் பொருள்தான் பொருந்தும். 'மாணவன் சிங்கம்' என்ற வாக்கியத்தில் சிங்கம் என்ற சொல்லுக்கு உள்ள மிருகம் என்ற பொருளை விட்டுவிட்டு, சிங்கத்திற்கு உள்ள தைரியம், தீவிரம் முதலிய குணங்களைக் கொண்டு மாணவனிடம் இவை உள்ளன என்று பொருள் கூற வேண்டும். இவ்விதம் உபயோகப்படுத்தப்படுவது ஔபாசாரிகம் என்று பெயர் கொண்டது.

80. தகரம் என்ற சொல் தஹ்ரம் என்றும் காண்கிறது. சிறிய என்ற பொருளைக் குறிக்கும். இச் சொல் இவ்விருவிதமாக சா.உப. 8.1.1.லும் ம.நா.உப. 12.3லும் காண்கிறது.

81. अनिद्रः सततं रामः सुप्तोऽपि च नरोत्तमः।
सीतेति मधुरां वाणीं व्याहरन् प्रतिबुध्यते।। ரா.சு. 36.44.

82. उत्तमः पुरुषस्त्वन्यः परमात्मेत्युदाहृतः।
यो लोकत्रयमाविश्य बिभर्त्यव्यय ईश्वरः।। ப.கீ. 15.37.

83. यस्मात् क्षरमतीतोऽहमक्षरादपि चोत्तमः।
अतोऽस्मि लोके वेदे च प्रथितः पुरुषोत्तमः।। ப.கீ. 15.38

84. तेजोबलैश्वर्यमहावबोधसुवीर्यशक्त्यादिगुणैकराशिः।
परः पराणां सकला न यत्र क्लेशादयः सन्ति परावरेशे।।

வி.பு. 6.5.85.

85. प्रत्यगानन्दं ब्रह्म प्रणवरूपमकार उकारमकार इति।

நா.உப. 4 (அதர்வ)

86. अङ्गुष्ठमात्रः पुरुषो मध्य आत्मनि तिष्ठति।
ईशानो भूतभव्यस्य न ततो विजुगुप्सते।। एतद्वै तत्।।

கட்டை விரல் அளவிலுள்ள புருஷன் ஆத்மாவின் நடுவில் இருக்கிறான். நிகழ்ந்த காலம் வருங்காலம் இரண்டுக்கும் அதிபதி. ஆகையால் அவன் இகழ மாட்டான். இதுதான் உண்மையாக அது. க.உப. 4.12

87. अङ्गुष्ठमात्रः पुरुषो ज्योतिरिवाधूमकः।
ईशानो भूतभव्यस्य स एवाद्य स उ श्वः।।एतद्वै तत्।।

நிகழ்ந்தவைகளுக்கும் வருபவைகளுக்கும் அதிபதியான கட்டை விரலளவுள்ள புருஷன் புகையில்லாத நெருப்பு (பிரகாசம்)பைப் போல் உள்ளான். இன்னும் நாளையும் இருப்பான். இது உண்மையான அது. க.உப. 2.4.13.

88. ओमित्येतत्सदाविप्रा पठध्वं ध्यात केशवम्।

பராசரபுராணம்.

89.

90. नात्यश्नतस्तु योगोस्ति न चैकान्तमनश्नतः।
न चातिस्वापशीलस्य जाग्रतो नैव चार्जुन।। ப.கீ. 6.16

ஓ அர்சுனனே! அதிகமாக சாப்பிடுபவனுக்கும் சாப்பிடாமலேயே இருப்பவனுக்கும் அதிகமாக தூங்குபவனுக்கும் யோகம் ஸித்திக்காது.

91. प्राणायामेन पवने प्रत्याहारेण चेन्द्रिये।
वशीकृते ततः कुर्यात् स्थितं चैतच्छुभाश्रये।। வி.பு. 6.7.45

92. 85ல் பார்க்கவும்.

93. सहस्रशीर्षा पुरुषः। புருஷ ஸூக்தம் 1.

94. வி:பு. 6.7.

95. கும்பகம் என்பது வெளியிலுள்ள சுத்தமான காற்றை உள்ளே இழுத்து சிறிது நேரம் உள்ளேயே வைத்திருத்தல். இது சூர்யோஜ்ஜாயீ, சீதளீ, பஸ்த்ரீ, சதுர்த்திகா என்று நான்கு விதம். யோக குண்டலீ உபநிஷத் 1.20, 21. இது, சூர்யபேதன, உஜ்ஜாயீ, சீத்காரீ, சீதளீ, பஸ்த்ரிகா, ப்ராமரீ, மூர்ச்சா, ப்லாவிநீ என்று எட்டு விதம் என்று ஹட யோக ப்ரதீபிகையில் (2.87) கூறப்பட்டுள்ளது. சீதளீ லக்ஷணம்:

जिह्वया वायुमाकृष्य पूर्ववत्कुम्भकादनु।
शनैस्तु घ्राणरन्ध्राभ्यां रेचयेदनिलं सुधीः॥

ஸீத்காரீ என்பதின் லக்ஷணம்:

सीत्कां कुर्यात्तथा वक्त्रे घ्राणेनैव विजृम्भिकाम्।

ஹடயோக ப்ரதீபிகா 2.54.

96. வெளியிலுள்ள நல்ல காற்றை ஸ் என்ற சத்தத்துடன் உதடுகள் வழியாக உள்ளுக்குள் இழுக்க வேண்டும். மூக்கு அகலமாகச் செய்து கொள்ள வேண்டும்.

97. ஒரு கலை என்பது 1 நிமிடம் 6 ஸெகண்டுகள்.

98. யாமம் என்பது மூன்று மணி நேரம்.

99. யோ. சூ. 2.29ல் பார்க்கவும்.

100. நிரோதம் அடக்குதல்.

101. விக்ஷேபம்: நிலைமாறி இருத்தல்.

102. प्राणोऽपानः समानश्च उदानो व्यान एव च।
नागः कूर्मश्च कृकरो देवदत्तो धनञ्जयः।

பாத்ம சம்ஹிதை யோக2. 2627.

103. உரையாசிரியரின் குரு ராம் மோஹன பிரம்மசாரி.

தௌதி, பஸ்தி, நேதி, த்ராடகம், நௌலி, கபாலபாதி என்று ஆறு கர்மங்கள் யோகாப்யாசத்தைச் சார்ந்தவை.

104. धौतिर्बस्तिस्तथा नेमिस्त्राटकं नौलिकं तथा।
कपालभातिश्चैतानि षट्कर्माणि प्रचक्षते।।

ஹடயோக ப்ரதீபிகா 2.22

த்ராடகத்தின் லக்ஷணம்.

105. निरीक्षते निश्चलदृष्ट्या सूक्ष्मलक्ष्यं समाहितः।
अश्रुसंपातपर्यन्तमाचायस्त्राटकं स्मृतम्।।

ஹடயோக ப்ரதீபிகா 2.31

கவனத்துடன் சலனமில்லாத பார்வையால், கண்ணீர் விழும்வரை சூக்குமமான இலக்கைப் பார்ப்பது த்ராடகம். என்ற ஆசிரியர்களுடைய கொள்கை.

106.

கௌஷிதகி பிராம்மண உபநிஷத்–4

107. उद्दालको हारुणिः श्वेतकेतुं पुत्रमुवाच स्वप्नान्तं मे विजानीहि।
यत्रैतत्पुरुषः स्वपिति नाम तदा सम्पन्नो भवति स्वमपीतो भवति। तस्मादेनं स्वपित्या- चाक्षते।

சா.உப. 6.2.1.2

உத்தாலக ஆருணி தன் பிள்ளை ச்வேத கேதுவைப் பார்த்துச் சொன்னார், தூங்குகிறவனைப் பற்றி என்னிடமிருந்த தெரிந்து கொள். புருஷன் எங்கு தூங்குகிறானோ, அப்போது ஸம்பத்தைப் பெறுகிறான். தானும் அபீதனாகிறான். ஆகையால் அவனை அபீதி என்று சொல்லுகிறார்கள்.

108. வித்யைகளில் பார்க்கவும்.

109. तत्र प्रत्ययैकतानता ध्यानम्। நா. 1.7.29.

110. ज्ञानाधिकरणमात्मा। தர்க்க சங்கிரகம் பிரத்யக்ஷம்.

111. संस्कारमात्रजन्यं ज्ञानं स्मृतिः।

112. யோக சூத்திரம் 1.42க்கு வ்யாஸர் எழுதிய பாஷ்யத்தில் இதைப் பற்றிக் குறிப்பு ஒன்றும் கிடைக்கவில்லை. விக்ஞான

பிக்ஷு எழுதிய யோக வார்த்திகத்தில் இது குறிப்பிடப் பட்டுள்ளது.

113.

104ல் பார்க்கவும்.

114. समस्ताश्शक्तयश्चैता नृप यत्र प्रतिष्ठिताः।

तद्विश्वरूपवैरूप्यं रूपमन्यद्धरेर्महत्॥

115. तेषामेवानुकम्पार्थमहमज्ञानजं तमः।

नाशयाम्यात्मभावस्थो ज्ञानदीपेन भास्वता॥

அவர்களுக்கு கருணை பொழிவதற்கு நான் அக்ஞானத்திஞல் உண்டான இருட்டை, அவர்களுடைய எண்ணங்களிலிருந்து கொண்டு, பிரகாசிக்கிற ஞானமாகிற விளக்கால் அழித்து விடுகிறேன்.

116.

117.

118. எந்தப் பொருளிலிருந்து ஒரு கார்யம் உண்டாகின்றதோ அக் கார்யத்திற்கு அந்தப் பொருள் உபாதன காரணம். அக் காரியத்தை செய்வதற்கு அப் பொருளைத் தவிர, வேறு ஒரு பொருள் உபயோகப்படுகிறதோ, அந்த வேறு பொருள் அக்காரியத்திற்கு நிமித்த காரணம். உதாரணமாக, மண்ணிலிருந்து குடம் உண்டாகிறது. குடம் உண்டாவதற்கு உபாதான காரணம் மண். சக்கிரம், தண்டம் முதலியவை குடம் உண்டாவதற்கு நிமித்த காரணம். பிரம்மம் உலகத்தின் சிருஷ்டிக்கு உபாதான காரணம், அதுவே நிமித்த காரணம். இக் கொள்கையை ராமானுஜரையும் சங்கரரையும் பின்பற்றுபவர்கள் ஏற்றுக் கொள்ளுகிறார்கள்.

119. निवाते तु यथा दीपो ज्वलेत् स्नेहसम्बन्धतः।

ம.பா. சாந்தி 321.19இல் இதனை ஒப்பிட்டுப் பார்க்கவும்.

120. सुरूपां प्रतिमां विष्णोः प्रसन्नवदनेक्षणाम्।

कृत्वा आत्मनःप्रीतिकरीं सुवर्णरजतादिभिः॥

**तामर्चयेत्तां प्रणमेत्तां यजेत्तां विचिन्तयेत्।**
**विशत्यपास्तदोषस्तु तामेव ब्रह्मरूपिणीम्॥**

விஷ்ணு தர்மம் 106.16.

நல்ல வடிவமுள்ளதாயும், தெளிவான முகம் கண்கள் இவைகளை உள்ளதாயும், தனக்கு மகிழ்ச்சியை அளிக்கக் கூடியதாயும் உள்ள விஷ்ணுவின் ப்ரதிமையை தங்கம் வெள்ளி முதலியவைகளால் செய்து, அதனை அர்ச்சிக்க வேண்டும். அதனை வணங்க வேண்டும். அதற்குப் பூஜை செய்ய வேண்டும். அதனைத் தியானம் செய்யவேண்டும். குற்றங்கள் நீங்கினவனாக பிரம்மத்தின் உருவத்தில் உள்ள அதனுட் புகுகின்றான்.

121. அதிவாஸம் என்பது, பிம்பத்தை ஓரிடத்தில் சில நாட்கள் இருத்தி வைத்தல் என்ற பொருளைக் குறிக்கும். பிம்பத்தில் குற்றங்கள் இருந்தால் இதனால் நீங்கி விடும். தண்ணீர், பால், படுக்கை, மரத்து நிழல் முதலியவிடங்களில் இதைச் செய்யலாம்.

122. ஐந்து சாந்தி மந்த்ரங்கள்: 1. சந்நோமித்ர: 2. சந்நோமித்ர: 3. ஸ்ஹநாவவது 4. நமோவாசேயா சோதிதா 5. தச்சம்யோ ராவ்ருணீமஹே.

123. ஐந்து ஸூக்தங்கள்: 1. புருஷ ஸூக்தம், 2. நாராயண ஸூக்தம், விஷ்ணு ஸூக்தம், 3. ச்ரீ சூக்தம், 4. பூ சூக்தம். 5. நீளா சூக்தம்.

124. விஷ்ணு புராணம் முதல் அம்சம் 22வது அத்யாயம் 76–86 ச்லோகங்களில் உலகம், உலகத்திலுள்ள பொருள்கள் விஷ்ணுவுக்கு ஆயுதங்களாயும், அணிகளாயும் உள்ளன என்று வர்ணிக்கப்பட்டுள்ளது. ஆகையால் இதற்கு பூஷணத்யாயம், அல்லது அஸ்த்ரபூஷணத்யாயம் என்ற

பெயர் விளங்குகிறது.

125. பகவானை வழிபடும்போது அவனுக்கு நாம் செய்ய வேண்டிய உபசாரங்கள் பல உள்ளன. வைகான நூல்களில் 32, 27 முதல் 64 என்ற எண்ணிக்கையுடன் இவை கூறியவை என்று கூறப்பட்டுள்ளது. பாஞ்ராத்ர பாத்மஸம்ஹிதையில் சர்யா பாதம் 5வது அத்யாயத்தில் அவை 16 முதல் 120 வரை உள்ளன என்றும், விஷ்ணு ஸம்ஹிதையில் 20வது அத்யாயத்தில் 11 முதல் 32 வரையுள்ளனவாகக் கூறப்பட்டுள்ளன. பதினாறு உபசாரங்களாவன: ஆவாஹனம், ஆஸநம், அர்க்யம், பாத்யம், உபஸ்பர்சம், ஸ்நானம், வஸ்த்ரம், யக்ஞோபவிதம், கந்தம், பூஷணம், மாலே, தூபம், தீபம், மதுபர்க்கம், பிராபணம், விஸர்ஜநம்.

126. நீராஜனம் என்பது த்ருஷ்டியால் உண்டாகும் தோஷங் களைப் போக்குவதற்குச் செய்ய வேண்டிய கர்மம் தாம்பாளத்திலோ, குடத்தின் மேலேயோ, தீபத்தை வைத்து பகவானுக்கு முன்பு மூன்று தரம் பிரதக்ஷிணமாக சுற்றுவதை இது குறிக்கும். முன் காலங்களில் அரண்மனையில் அரசனுக்கு முன்போ, ஆயுதங்களுக்கு முன்போ, சேனையின் முகாமிலோ இது செய்யப் பட்டு வந்தது.

127. எந்த பதார்த்தங்களை எவ்விதம் எவ்வளவு சேகரிக்க வேண்டும், எவ்விதம் சமையல் செய்ய வேண்டும் என்ற விவரங்கள் வைகானஸ நூலாகிய விமானர்ச்ன கல்பத்தில் 43வது அத்யாயத்திலும், பாஞ்சராத்ரா விஷ்ணு திலகம் 6வது அத்யாயம், பாரமேச்வர ஸம்ஹிதை 18வது அத்தியாயம், சநத்குமார ஸம்ஹிதை சிவராத்ரம் 5வது அத்யாயங்களிலும் கூறப்பட்டு உள்ளன.

128. பிராணப்ரதிஷ்டை என்பது பிரதிஷ்டை செய்வதற்கு ஏற்றதாயுள்ள விக்ரகத்துக்கு உயிரளித்தல். இதற்கு ஒற்றை எழுத்துக்களால் உண்டான மந்திரங்கள் உள்ளன. ஓம்,

ஹாம், ஹ்ரீம், க்ரோம் என்ற நான்கும் பிஜாக்ஷரங்கள். இவைகள் அடிப்படையானவை. யம், ரம், லம், வம் இவை நான்கும் பூதங்களின் சக்தியை உடையன. ஷம், ஸம், சம், ஹோம் இவை நான்கும் அங்க மந்த்ரங்கள்.

129. ஜடீ பந்தன என்பது, விக்ரஹத்தை அதனுடைய பீடத்துடன் இணைத்து, அசையாமல் திடமாக இருப்பதற்கு செய்ய் வேண்டிய கர்மத்திற்குப் பெயர். ஜட என்ற வடமொழிச் சொல்லுக்கு உயிரற்றது, அசைவற்றது என்று பொருள். இங்கு ஜடீ என்ற சொல் அசையாமல் நிலைபெற்றிருக்கும் தன்மையை உண்டாக்குவது என்று பொருள்படும்.

130. இங்கு யந்த்ரம் என்பது தாந்த்ரிக மந்திரத்தால் உண்டாக்கப்படும் உலோகத்தால் செய்யப்படும் தகட்டைக் குறிக்காது. பீடத்துடன் ஜடீ பந்தனம் செய்யப்பெற்ற விக்ரகத்திற்கு அகலமான வேறொரு பீடத்துடன் இணைத்தல் என்று பொருள்.

131. பூர்ணாஹுதி ஒவ்வொரு ஹோமத்திலும் கடைசி நாளில் எல்லாவற்றையும் நெருப்பில் சேர்க்கப்படுவது பூர்ணமான ஆஹுதி.

132. நெய் அல்லது புனிதமான தண்ணீர் இவைகளால் எல்லாவற்றிற்கும் பிரதக்ஷிணமாகத் தெளிக்கும் கர்ம.

இது யோகாப்யசத்தில் 6வது அங்கம்.

133. देशबन्धश्चित्तस्य धारणा।

இதனுடைய லக்ஷணம்: யோக சூ. 3.1. நாபி சக்கரம் முதலான குறிப்பிட்ட இடங்களில் சித்தத்தை நிலைபெறச் செய்வது தாரணை.

134. 104ல் பார்க்கவும்.

135. न सन्दृशे तिष्ठति रूपमस्य न चक्षुषा पश्यति कश्चनैनम्।
हृदा मनीषा मनसाभिक्लृप्तो य एनं विदुरमृतास्ते भवन्ति।।

எவனுடைய பார்வைக்கும் இவன் உருவம் இலக்காகாது. எவனும் கண்களால் இவனைப் பார்ப்பதில்லை. பக்தியுடன் கூடிய மனதால் அடையக் கூடியவன். இவ்விதம் உள்ளவனாக அறிந்தவர்கள் மரணமற்றவர்களாக ஆகிறார்கள். கட.உப. 2.3.9

136. 135ல் பார்க்கவும்.

137. 57ல் பார்க்கவும்.

138. अनेकचित्तविभ्रान्ता मोहजालसमावृताः।
प्रसक्ताः कामभोगेषु पतन्ति नरकेऽशुचौ॥

சித்தத்தில் பலவித குழப்பங்களை அடைந்து மோகம் என்ற வலையில் சிக்கியவர்களாக, போகத்தில் ஈடுபட்டு, அசுத்தமய மான நரகத்தில் விழுகிறார்கள். ப.கீ. 16.16.

139. कालं स पचते तत्र न कालस्तत्र वै प्रभुः।
सकलस्य प्रभू राजन् सर्वस्यापि तथेश्वरः॥ ம.பா. சாந்தி 196.9.

ஓ அரசனே! அவன் காலத்தை வசப்படுத்தியுள்ளான். காலம் அவனிடத்தில் தன் அதிகாரத்தைக் காட்டாது. அவன் காலத்திற்கு அதிபதி, எல்லாவற்றிற்கும் ஈசுவரன்.

140. कला मुहूर्ताः काष्ठाश्च। ம.நா.உப. 1.8.

141.

42ல் பார்க்கவும்.

142.

41ல் பார்க்கவும்.

143.

41ல் பார்க்கவும்.

144.

64ல் பார்க்கவும்.

145. षद्लृ उपवेशने।

போவது என்ற பொருளை உடைய இந்த தாது உட்காருவது என்ற பொருளைக் குறிப்பிடாது. சொல்லுவது என்பதும், நின்று கொண்டிருப்பவன் உட்காரும் போது சிறிது அசைதலைச் செய்ய வேண்டும். ஆகையால் உட்காருவது என்ற பொருளைக் கொண்டதாக இதனை ஏற்கலாம்.

146. अथाध्यात्मम्। प्राणो व्यानोऽपान उदानः समानः।

தை.உப. சிக்ஷை 7.1

147. अशुद्ध्यावरणमलोपेतस्य प्रकाशात्मनः।

யோக பாஷ்யம் 1.47.

148. ऋतञ्च सत्यञ्चाभीद्धात्तपसोध्यजायत।
ततो रात्रिरजायत ततस्समुद्रो अर्णवः।। ம.நா.உப. 5.5.

மானசிகமாயும் பேச்சுமயமாயும் உள்ள செயல்கள் தவத்திலிருந்து உண்டாயின. அவைகளிடமிருந்து இரவு உண்டாயிற்று. பிறகு நீர் நிறைந்த கடல் உண்டாயிற்று.

149. न ह वै स शरीरस्य सतः प्रियाप्रिययोरपहतिरस्ति।
अशरीरं वाव सन्तं न प्रियाप्रिये स्पृशतः।। சா.உப.8.12.1.

150. दैवी ह्येषा गुणमयी मम माया दुरत्यया।
मामेव ये प्रपद्यन्ते मायामेतां तरन्ति ते।। ப.கீ. 7.14.

151. प्रत्यूषं चार्धरात्रं च प्रातर्मध्यन्दिनं निशा।
[illegible]काला इमे प्रोक्ताः। பாத்ம சம்ஹிதை. சர்யா 5.58,59

152. பின்னிரவு, நடுநிசி, விடியற்காலை, நடுப்பகல், இரவு என்ற ஐந்து வேளைகள். 35ல் பார்க்கவும்.

www.kym.org

Rs. 120/-



கிருஷ்ணமாசார்யா யோக மந்திரம்